Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 18-8-2018 Issued: 18-8-2018

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
# (பதினைந்தாவது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
# (FIFTEENTH ASSEMBLY)

திங்கட்கிழமை, மார்ச் 19, 2018—தொகுதி 37—எண் 2

**Monday, the 19th March 2018—Volume 37—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009.**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

D

19-3-2018

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற்குறிப்புகள்—** | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு | 101-102 |
| **2. இரங்கல் தீர்மானம்—** | |
| தேனி மாவட்டம், போடி வட்டம், குரங்கணி மலைப் பகுதி, மலையேற்றம் சென்றவர்கள் காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்தது | 102-103 |
| **3. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 104-146 |
| **4. தகவல் கோரல்—** | |
| (அ) காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவினை விரைவில் அமைத்திட மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுத்தல் | 146-150 |
| திரு. மு.க. ஸ்டாலின் | 147-148 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 148-150 |
| (ஆ) எண்ணிக்கை அடிப்படையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு சட்டமன்றத்தில் பேச வாய்ப்பு வழங்கக் கோருதல் | 160-164 |
| திரு. மு.க. ஸ்டாலின் | 160-161 |
| *திரு. துரைமுருகன் | 162-264 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| தேனி மாவட்டம், போடி வட்டம், குரங்கணி மலைப் பகுதி, மலையேற்றம் சென்றபோது காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குதல் | 150-158 |
| திரு. மு.க. ஸ்டாலின் | 151-152 |
| திரு. கரி. இராமசாமி | 152-153 |
| மாண்புமிகு திரு. எடப்பாடி கே.பழனிசாமி | 153-158 |
| **6. அறிக்கைகள் அளித்தல்—** | 159-160 |
| அரசு உறுதிமொழிக் குழு | |
| **7. வரவு–செலவுத் திட்டம், 2018–2019, பொது விவாதம்—** | 164-292 |
| திரு. ப. ரங்கநாதன் | 165-166, 172-178, 180-182,184, 191-195 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 166-169, 171-172, 175,178, 284-287 |
| *திரு. துரைமுருகன் | 170,182-183, 224 |
| மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 170-171, 175-176, 178,180, 194-195,282 |
| திரு. மு.க. ஸ்டாலின் | 183-184, 188-189, 214, 282 |





| | பக்கங்கள் |
|---|---|
| **7. வரவு–செலவுத் திட்டம், 2018–2019, பொது விவாதம்—** | |
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 185-190, 230,270-273, |
| மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் | 191-192 |
| திரு. என்.டி. வெங்கடாச்சலம் | 196-225 |
| திருமதி எஸ். விஜயதரணி | 225-241 |
| *மாண்புமிகு திரு. இரா. காமராஜ் | 234 |
| *மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 241-242 |
| மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன் | 242-243, 273-274 |
| திரு. எஸ்.எஸ். சரவணன் | 243-255 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 244, 278-279, 281 |
| திரு. பி.வி. பாரதி | 255-264 |
| *திரு. எஸ். ரகுபதி | 264-277, 279,284-292 |
| மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் | 274-278,280 |
| மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் | 281-284 |
| மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் | 287-288 |
| **8. அறிவிப்பு—** | |
| மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் | 197-198 |
| **9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 292-293 |


-----

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஹேவிளம்பி, பங்குனி 5, திருவள்ளுவர் ஆண்டு-2049

## 2018 மார்ச் 19, திங்கட்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின்."*

*ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று எண்ணி, எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதியுடன் இருந்தால், அவர்கள் எண்ணியபடியே அச்செயலில் மிகப் பெரிய வெற்றி அடைவார்கள்.*

## 1. இரங்கற்குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இரங்கற்குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. ந. தனசேகரன் அவர்கள் 26–10–2017 அன்றும், திரு. என். இராஜாங்கம் அவர்கள் 22–1–2018 அன்றும், திரு. எஸ். ஜான் ஜேக்கப் அவர்கள் 3–2–2018 அன்றும், திரு. கா. கந்தசாமி அவர்கள் 11–2–2018 அன்றும் மற்றும் திரு. ப. ஆண்டிவேல் அவர்கள் 14–2–2018 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*திரு. ந. தனசேகரன் அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் தூத்துக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.*

*திரு. என். இராஜாங்கம் அவர்கள் 1962–1967, 1967–1971 மற்றும் 1971–1976 ஆகிய ஆண்டுகளில் குறிஞ்சிப்பாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த*

[2018 மார்ச் 19

முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1974 முதல் 1976 வரை அமைச்சராகவும், 1984–1990 ஆம் ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றினார்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள் 2006–2011 மற்றும் 2011–2016 ஆகிய ஆண்டுகளில் கிள்ளியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பணியாற்றினார்கள்.

திரு. கா. கந்தசாமி அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் சேலம் மாவட்டம், தலைவாசல் தொகுதியிலிருந்தும் மற்றும் 2001–2006 ஆம் ஆண்டுகளில் நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள். மேலும், 1996–1997 ஆம் ஆண்டுகளில் இராசிபுரம் தொகுதி மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றினார்கள்.

திரு. ப. ஆண்டிவேல் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் வேடசந்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால், அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

## 2. இரங்கல் தீர்மானம்

### தேனி மாவட்டம், போடி வட்டம், குரங்கணி மலைப் பகுதி, மலையேற்றம் சென்றவர்கள் காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கல் தீர்மானம். 11–3–2018 அன்று தேனி மாவட்டம், போடி வட்டம், குரங்கணி மலைப் பகுதியில், மலையேற்றம் சென்றவர்கள் திடீரென பிடித்த காட்டுத் தீயில் சிக்கியதில், 17 நபர்கள் துரதிர்ஷ்டவசமாக தங்களது இன்னுயிரை இழந்தனர் என்ற செய்தியினை அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.



2018 மார்ச் 19]

முற்பகல் 10–05

இக்கொடிய விபத்தில் சிக்கியவர்களை பத்திரமாக மீட்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். மேலும், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு வனத் துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை அரசு உயர் அதிகாரிகளுடன் துரிதமாக மேற்கொண்டனர்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/– ரூபாயும் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதோடு, மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களை நேரிலே சென்று சந்தித்து ஆறுதல் கூறினார்கள்.

இத்தீவிபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும், அவர்களைப் பிரிந்து வருந்தும் குடும்பத்தினர்களுக்கு அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது. மேலும், இத்தீவிபத்தில் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என்கின்ற விழைவையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், இத்துயர சம்பவத்தில் தங்களது இன்னுயிரை இழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

*[2018 மார்ச் 19*

## 3. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**41—**

### பெண்கள் மேல்நிலைப் பள்ளி

***27287—திரு. சி.வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளி வட்டம், அரசம்பட்டியில் உள்ள மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து பெண்களுக்கென தனியாக மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளி வட்டம், அரசம்பட்டியில் உள்ள மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து பெண்களுக்கென தனியாக மேல்நிலைப் பள்ளி துவங்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். இதிலே ஒரு திருத்தம். உயர்நிலைப் பள்ளி பெண்களுக்காக 2015–ல் துவங்கப்பட்டு, 71 மாணவிகள் படித்து வருகிறார்கள். வருகின்ற ஆண்டில் இதைப்பற்றி அரசு பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.*

**திரு. சி.வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து மறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் அவருக்கு உற்ற



*2018 மார்ச் 19]*

துணையாக இருந்து தமிழக அரசை வழி நடத்தி வரும் தமிழகத்தின் துணை முதலமைச்சர் அவர்களையும் இந்த அரசு சிறப்பாக நடைபெறுவதற்கு உற்ற துணையாக இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் வணங்குகிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு எந்த அளவுக்குச் சிறப்பு செய்தார்களோ அதே அளவுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதையில் கல்வித் துறையை மேம்படுத்துவதற்காகப் பாடுபட்டுவரும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரசம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியானது 2015 ஆம் ஆண்டு இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியாகவும் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகவும் செயல்பட்டு வருகின்றது. அந்த பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று அந்தப் பகுதியிலே இருக்கின்ற பெற்றோர்களும், மாணவர்களும் தமிழக அரசுக்குக் கோரிக்கை வைத்து, அதற்கான நிதியாக 2 இலட்சம் ரூபாயை அரசு கஜானாவிலே செலுத்தியுள்ளார்கள். பொதுமக்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக இந்த ஆண்டே தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் சட்டமன்றத் தொகுதி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்பதற்கு வித்திட்ட தொகுதி என்ற முறையில் இந்த ஆண்டே அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.*

**திரு. சி.வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட போச்சம்பள்ளி வட்டத்தைச் சார்ந்த வேலம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆயிரம் மாணவர்களுக்கும் அதிகமானோர் படித்து வருகிறார்கள். அந்த மேல்நிலைப் பள்ளியை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியென்றும், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியென்றும் இரண்டாகப் பிரித்துத் தர அரசு முன் வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போச்சம்பள்ளியிலுள்ள பள்ளியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இருபாலர் படிக்கும் மேல்நிலைப் பள்ளியென்று இருந்தால், அதனைப் பிரிப்பது என்பது இயலாத சூழ்நிலையாகும். ஏனென்று சொன்னால், விதிகளுக்குட்பட்டு, உயர்நிலைப் பள்ளியாக இருந்தால் மட்டும்தான் அதனைப் பிரிக்க இயலும். ஆகவே, உறுப்பினர் தொகுதியில் உயர்நிலைப் பள்ளி ஏதேனும் இருந்தால் அதனை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு விதிகளுக்குட்பட்டு இந்த ஆண்டு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ஏதேனும் உயர்நிலைப் பள்ளியில் மாணவிகளின் எண்ணிக்கை அதிகம் இருப்பின் விதிகளுக்குட்பட்டு அடுத்த ஆண்டு அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருச்செந்தூர் செந்தில் முருகன் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 985 மாணவிகளும், 41 ஆசிரியர்களும் உள்ளனர். அந்தப் பள்ளியில் ஆங்கில வழிக் கல்வியும் பயிற்றுவிக்கப்படுகிறது. வகுப்பறைக் கட்டடங்கள்





போதுமானதாக இல்லை. அந்தப் பள்ளியின் மேற்குப் பகுதியில் சேதமடைந்துள்ள ஓட்டுக் கட்டடத்தை இடித்துவிட்டு மாடியுடன் கூடிய கூடுதல் வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டித் தர மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்செந்தூரில் இருக்கிற மேல்நிலைப் பள்ளியின் ஒரு பகுதி கூரைக் கட்டடமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு அந்தப் பள்ளியை நபார்டு திட்டத்தின்கீழ் இணைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**42—**

### துணை மின் நிலையம்

***5533—திரு. வீ. அலெக்சாண்டர்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதியில் 11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அம்பத்தூர் பகுதியில் புதிய துணை மின் நிலையம் வேண்டும்

[2018 மார்ச் 19

என்று கேட்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் மண்ணூர்பேட்டையில் ஒன்றும், ஆவின் பால் பண்ணையின் அருகிலும் புதிதாக துணை மின் நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12–7–2017 அன்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் 33/11 கே.வி. துணை மின் நிலையம் ஜி.வி. ஐயர் தெருவில் அமைப்பது குறித்த வினா எழுப்பியிருந்தேன். 29–6–2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் 32 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலில்கூட ஜி.வி. ஐயர் தெருவில் அமையவிருக்கின்ற துணை மின் நிலையத்திற்காக காவல் துறையைச் சார்ந்த இடத்தை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்திருந்தார். காவல் துறைக்கு ஏற்கெனவே மின்சார வாரியத்திற்குச் சொந்தமான இடத்தை இராயபுரம் பகுதியிலே ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணியை விரைந்து எடுத்து, அந்தப் பகுதி மக்களுக்குச் சீரான மின்சாரம் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே விவரத்தைச் சொல்லிவிட்டார்கள். ஏற்கெனவே காவல் துறைக்கு மின்சார வாரியத்தினுடைய இடத்தைக் கொடுத்திருக்கின்றோம். அதற்கு மாற்று இடமாக மின்சார வாரியத்திற்கு இடத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றோம். அதுகுறித்த கோப்பு சுற்றோட்டத்தில் இருக்கின்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், அருமை அண்ணன் அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் 32 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று



2018 மார்ச் 19]

சொல்லியிருக்கின்றார்கள். மேலும், தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 132 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். பொதுவாக சென்னையைப் பொறுத்தவரையில் இடங்களைத் தேர்வு செய்வதுதான் மிகவும் சிரமமாக இருக்கின்றது. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும், துணை மின் நிலையங்கள் வேண்டும் என்று சொல்கிறார்கள். மின்சார வாரியமும் அதனை அமைப்பதற்குத் தயாராக இருக்கின்றது. ஆனால், அந்தந்தப் பகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் தேவையான இடத்தைத் தேர்வு செய்து தரவேண்டும் என்று நான் பலமுறை கேட்டிருக்கின்றேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் மின்னழுத்தம் சற்று குறைவாக இருக்கின்ற காரணத்தினால் துணை மின் நிலையம் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சொல்லியிருக்கின்றார்கள்; அந்தப் பகுதி பொதுமக்களிடமிருந்தும் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அந்த அடிப்படையிலே, அதற்குண்டான பணியை வேகப்படுத்தி, துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

**டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் செயல் தலைவர் அவர்களை வணங்குகிறேன். செய்யூர் தொகுதிக்குட்பட்ட இடைக்கழிநாடு உள்ளிட்ட பேரூராட்சிக்கென்று ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும். காரணம் அந்தப் பகுதி உப்புக் கழிவகம் நிறைந்த பகுதியாக இருப்பதால், மின் கடத்திக்காகப் பயன்படுத்துகின்ற அலுமினிய மின் இணைப்புகள் அடிக்கடி பழுதடைகின்றன. அந்தப் பகுதி இலகுவான மண், loose soil–ஆக இருப்பதால் பேரிடர் காலங்களிலும், மழை மற்றும் காற்று வீசும் காலங்களிலும் மின் கம்பங்கள் அடிக்கடி சாய்ந்து விடுகின்றன. 21 வார்டுகளை உள்ளடக்கிய இப்பகுதியில் அடிக்கடி மின் தடை ஏற்படுகிற நிலை இருக்கிறது. ஆகவே, இந்த அரசு இடைக்கழிநாடு பேரூராட்சிக்கென்று தனியாக 33 கே.வி. துணை மின் நிலையம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[2018 மார்ச் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய பகுதி loose soil–ஆக இருப்பதால் மின் கம்பங்கள் அடிக்கடி சாய்ந்து விடுகின்றன, அதனால், அந்தப் பேரூராட்சிப் பகுதியில் துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அந்தப் பகுதியில் குறைந்த மின் அழுத்தம் இருந்தால் துணை மின் நிலையம் அமைக்கலாம். ஆனால், மின் கம்பங்கள் சாய்ந்து விடுகின்றன என்று சொன்னால், அதற்கான ஆய்வுகளைச் செய்து சீரான மின்சாரத்தை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். துணை மின் நிலையம் தேவைப்பட்டால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிதாக 132 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளதில், ஒரு துணை மின் நிலையம் அந்தப் பகுதியில் அமைப்பதற்கு இந்த அரசு உத்தேசிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**43—**

## பாதாள சாக்கடைத் திட்டம்

***6199—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தெற்கு தொகுதிக்குட்பட்ட மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?



2018 மார்ச் 19]

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பூர் மாநகராட்சியில், மக்கள் நெருக்கம் நிறைந்த பகுதிகளான மண்டலம் 5, 6, 7, 8, 9, 13, 14, 15, 16 மற்றும் 17 பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த 612 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அம்ருத் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் நடப்பாண்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களின் கனவுகளை நனவாக்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் எனது காலை வணக்கத்தை உரித்தாக்கிக் கொள்கிறேன். தமிழக மக்களின் நலனைக் காப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிற அம்மாவினுடைய அரசு, திருப்பூர் தொகுதியின் சில பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இப்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் சில பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படுகின்ற திட்டத்தையும் சொன்னார். அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய திருப்பூர் தொகுதி மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சில தனியார் layouts மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைப் பகுதிகளில் நிறைய மக்கள் வசிக்கிறார்கள். வெளி மாவட்டங்களிலிருந்து வந்து வசிக்கக்கூடிய மக்கள் எல்லாம் அந்தப் பகுதியில்தான் வசிக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் கழிவுநீர் வாய்க்கால் அமைத்தோ, அந்த இடத்தில் ஒரு டேங்க் போல ஒன்றினை அமைத்தோ, லாரி மூலமாகவோ அல்லது அந்த இடத்தில் ஒரு சுத்திகரிப்பு நிலையம் போன்றோ அமைத்து அந்தத் தண்ணீரை மறுசுழற்சி செய்வதற்குண்டான நடவடிக்கையை மாண்புமிகு அம்மாவின் அரசு திருப்பூர் தொகுதி மக்களுக்காகச் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு அமர்கிறேன்.

[2018 மார்ச் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகராட்சி 159.35 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டதாகும். 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி கிட்டத்தட்ட 8,77,778 ஆகும். தற்போதைய உத்தேச மக்கள் தொகை 10,20,000 ஆகும். மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 2,43,465. மொத்தமுள்ள 60 வார்டுகளில், திருப்பூர் தெற்கு தொகுதியில் 21 வார்டுகள் அமைந்துள்ளன. திருப்பூர் மாநகராட்சி, நகராட்சியாக இருந்தபொழுது புதிய திருப்பூர் தொகுதி மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதியில், இத்திட்டத்தின்கீழ் 69.51 கிலோமீட்டர் நீளத்திற்கு கழிவுநீர் சேகரிப்புக் குழாய்கள் அமைக்கப்பட்டு மொத்தம் 12 வார்டுகள் பயனடைந்துள்ளன.

முற்பகல் 10—20

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் திருப்பூர் மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்க புதிய திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்காக மாநகராட்சியின் நில வடிவமைப்பு 17 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு மத்திய, மாநில அரசு நிதியின்கீழ் அம்ருத் திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து 612 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டம் 50 சதவிகிதம் மைய அரசின் நிதியுதவியுடனும், 20 சதவிகிதம் மாநில அரசின் நிதியுதவியுடனும், மீதம் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடனும் செயல்படுத்தப்படவுள்ளது.

அதேபோல, பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்றால், மத்திய பொது சுகாதாரம், பொறியியல், சுற்றுப்புறச் சூழல் நிறுவனத்தின் வழிகாட்டுதல்படி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 10,000 நபர்கள் இருக்க வேண்டும் என்ற வழிவகை இருக்கிறது. ஆகவே 5, 6, 7, 8, 9, 13, 14, 15, 16 மற்றும் 17 ஆகிய வார்டுகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்த மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு



2018 மார்ச் 19]

உறுப்பினர் அவர்கள் கேட்ட மொத்த வார்டுகளில், 40, 41, 50, 51, 56 ஆகிய வார்டுகளில் ஒரு part ஆக பணியைச் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதேபோல இந்தத் திட்டத்திலே 4 கழிவுநீர் நிலையங்களும், 15 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட சுத்திகரிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரி மூலம் கழிவுநீர் எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். திருப்பூர் (தெற்கு) தொகுதிக்குட்பட்ட 34, 35, 38, 39 ஆகிய நான்கு வார்டுகள் 2011–ல் மாநகராட்சியாக விரிவாக்கம் செய்யப்பட்டபோது இணைக்கப்பட்ட மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதியாகும். இப்பகுதி போதிய மக்கள் நெருக்கமின்றி இருப்பதால், கழிவுநீர் கால்வாய் அமைத்தால், போதிய கழிவு நீர் நீரோட்டம் இல்லாமல் கழிவுநீர் தங்கி, இத்திட்டத்தைச் செயல்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்படும். எனவே, மக்கள் தொகை நெருக்கம் அதிகரித்து, குடிநீர் இணைப்புகள் போதிய அளவு கொடுக்கப்பட்டவுடன் இத்திட்டத்தினை விரிவுபடுத்தி செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கம் கூறினார்கள். இருந்தாலும், எங்களது அங்கீகரிக்கப்படாத புதிய மாநகராட்சியை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலத்திலே ஒருங்கிணைக்கப்பட்ட மாநகராட்சியாக அறிவித்து, 500 கோடி ரூபாய்க்குமேல் கடந்த ஆண்டு பல திட்டங்களுக்காக நிதியொதுக்கீடு செய்ததற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவுகளில், இணைக்கப்பட்ட பகுதிகளில் எல்லாம் மக்கள் இருக்கிறார்கள். 6 வீதி, 7 வீதி என்ற அளவில் மக்கள் வசித்து

[2018 மார்ச் 19

வருகிறார்கள். அவர்களின் வீட்டிற்கு முன்பாக தனித்தனியாக soak pit அமைத்து அதன் மூலமாகக் கழிவு நீரை அகற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்பகுதியில் உள்ள குழந்தைகள் விளையாடுகின்றபோது விபத்து நடக்க வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அந்த அங்கீகரிக்கப்பட்ட பிரிவுகளில், layout பகுதிகளில் கழிவுநீர் வெளியேற்றுவதற்கு disposal point கிடையாது. அதற்காக, அந்தந்தப் பகுதியில் தொட்டிபோன்று அமைத்து, அதன்மூலம் அந்தப் பகுதியிலுள்ள சாக்கடைக் கழிவுகளை ஒன்று திரட்டி, லாரிமூலம் எடுத்தால் ஒவ்வோர் இடத்திலும் soak pit அமைக்க தேவையிருக்காது. அதற்காகத்தான் நான் இந்தக் கேள்வியை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டிருக்கிறேன். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கடந்த ஐந்து வருடங்களாக துணை மேயராக இருந்து, சிறப்பான முறையிலே அந்த மாநகராட்சியிலே பணியாற்றியுள்ளார்கள். அந்த மாநகராட்சியிலுள்ள அனைத்துப் பிரச்சினைகளும் அவருக்கு முழுமையாகத் தெரியும். இருந்தாலும் அந்தத் தொகுதி மக்களுடைய நன்மை கருதி, அந்த தொகுதி மக்களின்மேல் உள்ள அன்பு காரணமாக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இருந்தாலும், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த மீண்டும் அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, சாத்தியக்கூறுகள் இருந்தால் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

**திரு. இ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் செயல் தலைவர் அண்ணன் தளபதி அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பம்மல் நகராட்சி, அனகாபுத்தூர்



2018 மார்ச் 19]

நகராட்சி, திருநீர்மலை பேரூராட்சி, பொழிச்சலூர் ஊராட்சி ஆகிய பகுதிகள் சென்னை புறநகர்ப் பகுதியில் முதல் பகுதிகளாக இருக்கின்றன. 8 இலட்சம் மக்கள்தொகை உள்ள இந்தப் பகுதியில் பல்லாவரம் நகராட்சியில் மட்டும் பாதாள சாக்கடைத் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டது. ஆனால், மற்ற நகராட்சிகளிலுள்ள மக்களெல்லாம் சென்னை பக்கத்தில் உள்ள காரணத்தால் பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக பலமுறை கோரிக்கை வைத்துள்ளார்கள். எனவே, நான் குறிப்பிட்ட இந்தப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியுடன் 42 உள்ளாட்சி அமைப்புகள் இடநெருக்கடி காரணமாக இணைக்கப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் பல்லாவரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கைபடி அங்கே தேவையிருப்பின் கண்டிப்பாக அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குளச்சல் தொகுதிக்குட்பட்ட குளச்சல் நகராட்சி மிகவும் பழமை வாய்ந்த நகராட்சி ஆகும். 25 வார்டுகள் உள்ள நகராட்சி. 50 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட நகராட்சி. அதிலும் 13 வார்டுகள் கடலோரத்தைச் சார்ந்தவை. மீதமுள்ள 12 வார்டுகள் கரையோரத்தைச் சார்ந்தவை. கடலோரத்தைச் சார்ந்த பகுதியில் மீன்கள் அதிகமாகக் கிடைப்பதால், அங்கே மீன் கழிவுகள் அதிகமாக இருக்கின்றன. மேலும் அங்கு சுற்றுச்சூழல் சரியாக இல்லை. AVM Canal

[2018 மார்ச் 19

சரியாகத் தூர் வாரப்படவில்லை. அந்தப் பகுதி முழுமையாக சாக்கடையால் மூழ்கிக் கிடக்கின்றது. இதனை பல்வேறு தடவை நான் சட்டமன்றத்தில் சொல்லியிருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே உடனடியாக பாதாள சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்த முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போது 5 பேரூராட்சிகளில் அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அதன் பின்னர், சுத்திகரிப்பு நிலையங்களுக்கான இடங்களைக் கண்டறிவது மிகப் பெரிய பிரச்சினையாக அந்தப் பேரூராட்சியில் இருந்து வருகின்றது. ஆகவே, Septage Management என்ற கசடு ஏற்றும் திட்டத்தை சில இடங்களில் அறிமுகப்படுத்தி செய்ய இருக்கின்றோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதிகள் துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, வாய்ப்புகள் இருப்பின், அது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் நகராட்சியில் திருநெல்வேலி மாவட்டத்திலேயே திருநெல்வேலி மாநகராட்சிக்கு அடுத்தபடியாக அதிகமான மக்கள்தொகையாக ஒரு இலட்சத்து பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். அங்கே பாதாள சாக்கடைத் திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு, அது விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். எனவே, தயவுகூர்ந்து அங்கே உள்ள சுகாதாரக் கேடு மற்றும் மற்ற பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு கடையநல்லூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றித் தர வேண்டுமெனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



2018 மார்ச் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது, சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் இடங்களில்தான் அதிகமான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நிறைய பேர் நீதிமன்றம் செல்லும் வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும்கூட, அந்தப் பகுதியில் இதுபோன்ற பிரச்சினைகள் எல்லாம் இல்லையென்று நினைக்கிறேன். ஆகவே, கண்டிப்பாக கூடிய விரைவில் துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, வேகமாகச் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**44—**

### மீன் இறங்கு தளம்

***19181—திரு. சே. கருணாஸ்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மோர்பனை பகுதியில் மீன் இறங்கு தளம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் இராமநாதபுரம் மாவட்டம், மோர்பனை கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்திட ரூ.1.26 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, மீன் இறங்குதள கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2018 மார்ச் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

**திரு. சே. கருணாஸ்:** "நாம் யாருக்கும் தாழ்ந்தவரல்ல; நமக்கு யாரும் தாழ்ந்தவரல்ல" என்று கூறிய மனிதநேயத்தின் மகத்துவமான தலைவர் என் தெய்வத் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவாடனை தொகுதிக்குட்பட்ட மோர்பனை பகுதியிலே மீன் இறங்கு தளம் அமைப்பதற்கு ரூபாய் ஒரு கோடியே இருபத்தாறு இலட்சம் நிதி ஒதுக்கியமைக்காக அம்மா அவர்களுடைய அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே தருணத்தில், அந்த வேலை எப்போது நிறைவேற்றப்படும், எப்போது முடிக்கப்படும்? கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக அந்தப் பணி நடந்து கொண்டிருக்கிறது. இதுகுறித்து அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். என்னுடைய திருவாடனை தொகுதி கிட்டத்தட்ட 48 கிலோ மீட்டர் தூரத்திற்கு கடற்கரைப் பகுதிகளைக் கொண்டது என்பதை அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார். அங்கே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன என்பதும் அவருக்குத் தெரியும். ஏகப்பட்ட பிரச்சினைகளை நான் அவரிடத்திலே எடுத்துரைத்திருக்கிறேன் என்பதையும் அவர் நன்கு அறிவார். அந்த நிலையில், முல்லிமுனை வாய்க்கால் என்ற பகுதியிலே கடல் நீர் ஊருக்குள்ளே வந்து மிக மோசமான நிலையில் இருக்கிறது என்பதையும் நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். என்னுடைய திருவாடனை தொகுதியில் உள்ள மீனவ சமுதாய மக்கள் அதிகமாக வாக்களித்து அம்மா அவர்களுடைய ஆட்சி உருவாவதற்கு அடிப்படை அமைத்தவர்கள் என்பதை மறுக்க முடியாது என்ற நன்றி உணர்வோடு, என்னுடைய தொகுதியினுடைய மீனவர்களுடைய பிரச்சினையை அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து, கனிந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக வேண்டுகிறேன். நன்றி.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.



2018 மார்ச் 19]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியைப் பொறுத்தவரையில் மார்ச், 2018–ல் முடிந்துவிடும். அதில் எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை. பொதுவாக, ஓரிடத்திலே கடலரிப்பு ஏற்பட்டு, அதன்மூலம் கடல் நீர் உட்புகும் நிலை ஏற்படும்போது groynes என்று சொல்லக்கூடிய கடலுக்கு நடுவிலே குறுக்குச் சுவர் அமைப்பது அதாவது, T–jetty இல்லையென்றால், பல்வேறு வழிகளில் கடலரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கையாக, கற்களைக் கொட்டி அதன்மூலம் கடலரிப்பைத் தடுப்பது என்பது இயல்பான ஒன்று. ஒரு பக்கம் கற்களைக் கொட்டி கடலரிப்பை நாம் தடுக்கும்போது, மறுபக்கம் கடலரிப்பு ஏற்படுகின்ற நிலையிருக்கின்றது. எனவே, நம்முடைய I.I.T.–Indian Institute of Technology அதேபோன்று N.I.O.T.–National Institute of Ocean Technology இந்த இரண்டு Technology–யும் சேர்ந்து இப்போது modern technology என்ற அடிப்படையிலே, geo–synthetic pipes–ல் மண்ணைப் போட்டு அதன்மூலம் submerged dikes என்று சொல்லக்கூடிய முறை உள்ளது. கடலுக்குள்ளே செல்லும்போது வெளியே அந்தக் கற்கள் தெரியாது. அதை ஆய்வு செய்வது குறித்து இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதனடிப்படையிலே, N.I.O.T. மற்றும் I.I.T.–னுடைய opinion–ஐப் பெற வேண்டும். தமிழ்நாடு 1,060 கிலோ மீட்டர் நீளமுடைய கடற்கரையைக் கொண்டுள்ளது. இந்தக் கடற்கரையில் நம்முடைய மீனவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறார்கள்.

முதலாவதாக, கடல் நீர் உள்ளே புகாமல் முகத்துவாரம் வழியாக உள்ளே போகும்போது, கடலினுடைய நீர்மட்டம் உயரும்போது கடலரிப்பு ஏற்படாது. முகத்துவாரத்தை ஆழப்படுத்துவது என்பது மிக, மிக முக்கியமான விஷயம். எனவே, அனைத்து முகத்துவாரத்தையும் ஆழப்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக, geo–synthetic submerged dikes போட்டு தடுப்பதன்மூலம், முடிந்த அளவிற்கு offshore fishing என்று சொல்லக்கூடிய அண்மைக் கடலில் மீன் வளம் பெருகுகின்ற நிலையும் ஏற்படும்.

மூன்றாவதாக, முகத்துவாரத்தை ஆழப்படுத்தும்போது மீன்குஞ்சுகளில் இனவிருத்தி ஏற்பட்டு, அதன்மூலம் அவை மீண்டும் கடலுக்குச் செல்லும்போது offshore fishing அண்மைக் கடலில் மீன் வளம் பெருகுகின்ற நிலை ஏற்படும். எனவே, இதுபோன்ற முக்கியமான பல அம்சங்கள் இருக்கின்ற காரணத்தினால்,

1,060 கிலோ மீட்டர் நீளமுடைய கடற்கரையில் சில இடங்களில் தங்கு தளம் கட்ட வேண்டும்; சில இடங்களில் சிறிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்க வேண்டும்; சில இடங்களில் பெரிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் தொடர்ச்சியாக வந்தவண்ணம் இருக்கின்றன. இவற்றைச் செய்வதற்கு கிட்டத்தட்ட ரூ.3,000 கோடி ஆகும். ஒரே ஆண்டிலே ரூ.3,000 கோடி நிதி ஒதுக்குவது என்பது நிச்சயமாக எந்த ஓர் அரசாலும் முடியாத காரியம் என்பதால், concrete proposal, தொலைநோக்குப் பார்வையோடு, கால நிலை பசுமை நிதி–Green Climate Fund என்று சொல்வார்கள். அதாவது, கொரியாவில் international அளவில் கூடி, உலகம் வெப்பமயமாவதைத் தடுக்க சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அடிப்படையிலே, ஒரு நிதி உருவாக்கப்பட்டிருக்கின்றது. அந்த நிதிதான் கால நிலை பசுமை நிதி. முதற்கட்டமாக ரூ.1,120 கோடியும், இரண்டாவது கட்டமாக ரூ.2,700 கோடியும் நாம் பெற வேண்டியிருக்கிறது. அந்த நிதியைப் பெறுவதற்கு நம்முடைய அரசு முடிந்த அளவிற்கு ஒப்புதல் கொடுத்து, மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கின்றது. 3 வருட காலங்களில் அந்த நிதி நமக்குக் கிடைக்கும்போது 1,060 கிலோ மீட்டர் நீளமுடைய கடற்கரையில் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் தங்குதளம், கடலரிப்பைத் தடுக்கக்கூடிய நடவடிக்கை, முகத்துவாரத்தை ஆழப்படுத்தும் நடவடிக்கை மற்றும் groynes போடுவது, submerged dikes போடும் பணிகளை நிச்சயமாக நாம் செய்யலாம். எனவே, அதுகுறித்து அரசு கவனத்தில் கொண்டுள்ளது. அரசு நிச்சயமாக, விரைவான நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

**திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து நாம் கவனத்திலேகொள்ள வேண்டியது, திருவாடனை தொகுதி முழுக்க, முழுக்க அதிகமான அளவில் மீனவர்கள் வாழக்கூடிய பகுதியாகும். இன்றைக்கு மீனவர்களுடைய நிலையை உலகம் அறியும். அதுவும் இலங்கைக்கு அருகில் இருக்கிற காரணத்தினால், மீன்பிடித் தொழில் சரியாக நடைபெறுவதில்லை. அதையும் கடந்து நாம் பார்போம் என்றால், இலங்கையிலிருந்து தங்கம் கடத்துவது போன்ற வேலைகள் எல்லாம் அந்தப் பகுதியில் நடந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் உயர்





அதிகாரிகளிடத்தில் செல்வாக்கு உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக, ஏழை மீனவர்களுடைய வாழ்வாதாரத்தை அம்மா அவர்களுடைய அரசு உறுதிப்படுத்த வேண்டும். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பார்கள். தமிழகத்திலே மீனவர்களுடைய பிரச்சினை அதிகமாக இருந்தாலும்கூட, திருவாடனை தொகுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு, அங்கேயிருக்கக்கூடிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக, மாநிலத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் அந்த நடவடிக்கை தொடர வேண்டும். அதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உண்மையான ஆட்சியாக இருக்கும் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 46 கிலோ மீட்டர் நீளமுடைய கடற்கரை என்ற நிலையிலே, நம்முடைய மீனவர்கள் பாதுகாப்பாகத் தொழில் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனுஷ்கோடி, பாம்பன், முகுந்தராயன் சத்திரம், தங்கச்சிமடம், டி. மாரியூர், மெத்தரார் ஆகிய இடங்களில் மீன் தங்கு தளங்களை அமைத்து தற்போது பணிகள் முடிவுற்று, அவை திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10–35

மீனவர்கள் பாதுகாப்பாகத் தொழில் செய்ய வேண்டுமென்பதற்காக, வரும் நிதியாண்டில் 70 கோடி ரூபாய் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள குந்துக்கல்லில் மீன் இறங்கு தளம் அமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மூக்கையூரிலும் புதிய துறைமுகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, மீனவர்களின் நலன் கருதி எந்த அரசும் செய்யாத பணிகளையும், திட்டங்களையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2018 மார்ச் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**45—**

## கூடுதல் வகுப்பறைக் கட்டடம்

***146—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி அரசினர் கலைக் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதியிலுள்ள மன்னை இராஜகோபாலசுவாமி அரசினர் கலைக் கல்லூரிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் ஆட்சி செய்யும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான கழக ஆட்சியில், 2017–2018 ஆம் கல்வியாண்டில், புதிதாக 16 வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுவதற்கும், 5 ஆய்வகங்கள் கட்டுவதற்கும் 4.23 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பெருமை வாய்ந்த மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மன்னை நகரில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், பெரியவர் தஞ்சை பெரியார் மன்னை நாராயணசாமி அவர்களின் பரிந்துரையின்பேரில் 1971 ஆம் ஆண்டு அரசினர் கலைக் கல்லூரி அமைக்கப்பட்டது. மன்னை மட்டுமல்லாமல், திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, பேராவூரணி, ஒரத்தநாடு, வேதாரண்யம் போன்ற பல இடங்களிலிருந்து மாணவ, மாணவியர்கள் இங்கு பயின்று



2018 மார்ச் 19]

வருகின்றனர். தற்போது 12 U.G Departments, 10 P.G. Departments இங்கே செயல்பட்டு வருகின்றன. இது ‘ஏ’ கிரேடு கலைக் கல்லூரியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், தமிழ் பிரிவில் மட்டும் 413 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இதற்குக் குறைந்தபட்சம் 8 வகுப்பறைக் கட்டடங்கள் தேவைப்படுகின்றன. ஆனால், இரண்டே இரண்டு வகுப்பறைக் கட்டடங்கள் மட்டுமே அங்கே செயல்பட்டு வருகின்றன. அதுவும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, கழகத்தைச் சார்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.கே. விஜயன் அவர்கள் தமிழ்ப் பிரிவிற்கு என்று தனியாக ஒரு கட்டடத்தைக் கட்டிக் கொடுத்தார். அதில், ஒரு வகுப்பறைக் கட்டடம் பணியாளர்களுக்கும், ஒரு வகுப்பறைக் கட்டடம் நூலகத்திற்கும், இரண்டு வகுப்பறைக் கட்டடங்கள் மாணவர்கள் படிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மீதமுள்ள மாணவர்கள் அனைவரும், பொதுப் பணித் துறையால் condemn செய்யப்பட்ட கட்டடங்களில் கல்வி பயின்று வருகிறார்கள். இது எந்தவிதத்தில் நியாயம்? வகுப்பறைக் கட்டடங்கள் அங்கே இல்லை. குறைந்தபட்சம் 78 வகுப்பறைக் கட்டடங்கள் அங்கே தேவைப்படுகின்றன. ஆனால், 35 வகுப்பறைக் கட்டடங்கள் மட்டுமே அங்கே தற்போது செயல்பட்டு வருகின்றன. இன்னும், குறைந்தபட்சம் 35 வகுப்பறைக் கட்டடங்கள் மிக மிக அவசியம் தேவைப்படுகின்ற நிலைதான் அங்கே இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், கடந்த 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இதே அவையில், நான் எழுப்பிய கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, புதிதாகக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகத் தெரிவித்திருந்தார். ஏறத்தாழ ஒரு வருடம் கழித்து, இன்றும் அதே பதிலைத்தான் தெரிவித்து இருக்கிறார். அதுவும் 16 வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார். அந்தக் கட்டடங்கள் எப்போது அங்கே அமைக்கப்படும்? எந்த இடத்தில் அந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பது குறித்தும் நீங்கள் தெரிவிக்கவில்லை. இதுவரை ஏன் காலதாமதம் ஏற்பட்டது? புதிதாக 16 வகுப்பறைக் கட்டடங்கள் கட்டப்படும் என்று தெரிவித்துள்ளீர்கள். நிச்சயமாக இது போதுமானதாக இருக்காது. குறைந்தபட்சம் 35 வகுப்பறைக் கட்டடங்களையாவது நீங்கள் அங்கே கட்டிக் கொடுக்க வேண்டும். அதை எப்போது இந்த அரசு கட்டிக் கொடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

[2018 மார்ச் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 35 வகுப்பறைக் கட்டடங்கள் மட்டும்தான் அந்தக் கல்லூரியில் செயல்பட்டு வருவதாக ஒரு தவறான தகவலை இங்கே பதிவு செய்திருக்கிறார். தற்போது, இந்தக் கல்லூரியில் மாணவர்களுடைய பயன்பாட்டிற்கு 46 வகுப்பறைக் கட்டடங்களும், 10 ஆய்வகங்களும் ஒதுக்கப்பட்டு, நல்ல நிலையிலே செயல்பட்டு வருகின்றன என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்லாமல், 1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பழமை வாய்ந்த கல்லூரியிலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்த காலகட்டத்திலேதான் அந்த மாவட்ட மக்களின்பேரில் அக்கறை கொண்டும், ஏற்கெனவே அந்தக் கல்லூரியில் M.Phil. மற்றும் Ph.D. போன்ற பாடப் பிரிவுகள் இல்லை என்பதைக் கருத்திற்கொண்டும், அந்தப் பகுதியில் இருக்கின்ற மாணவ, மாணவியர் பயனடைய வேண்டுமென்பதற்காகவும் 2013–2014 ஆம் கல்வியாண்டிலே, முதுகலையில் 3 பாடப் பிரிவுகளும், Ph.D.–ல் 9 பாடப் பிரிவுகளும், M.Phil.–ல் 7 பாடப் பிரிவுகளும் என 19 பாடப் பிரிவுகளை ஒரே நேரத்தில் துவக்கி வைத்த தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–40

பல்வேறு பாடப் பிரிவுகளைத் தொடங்கி வைத்தாலும்கூட, 2015–2016 ஆம் ஆண்டில் கணிதப் பாடப் பிரிவு வேண்டுமென்ற அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மாணவர்களின் கோரிக்கையை ஏற்று, M.Phil.–லிலே மீண்டும் ஒரு பாடப் பிரிவையும், Ph.D.–யிலே ஒரு பாடப் பிரிவையும் தோற்றுவித்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல அம்மாவின் வழியில் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களிடம் 2017–2018 ஆம் கல்வியாண்டிலே முதுகலை மற்றும் இளங்கலையிலே



2018 மார்ச் 19]

மேலும் ஒரு பாடப் பிரிவு வேண்டுமென்று, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்தார்; நான் படித்த கல்லூரி, அந்தக் கல்லூரிக்கு இந்த பாடப் பிரிவுகள் வேண்டும், கூடுதல் கட்டட வசதியும் வேண்டும் என்று பலமுறை கோரிக்கை வைத்ததன் அடிப்படையிலே புதிதாக அந்த இரண்டு பாடப் பிரிவுகளையும் தோற்றுவித்த பெருமை அம்மா அவர்களுடைய வழியில் நடக்கக்கூடிய இந்த ஆட்சிக்கு இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய தொடர்ச்சியாக RUSA திட்டத்தின் மூலமாக 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த நிதியிலிருந்து 7 வகுப்பறைகள் கட்டுவதற்குண்டான பணிகள் தொடங்கி, நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே நேரத்தில், ஒரு கோடி ரூபாய் செலவில் கணினி வசதிகளுடன்கூடிய 9 smart வகுப்பறைகளும் மற்றும் ceramic board வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு, அந்தப் பணியும் இப்பொழுது நடந்து முடிந்து பயன்பாட்டில் உள்ளது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையிலே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாக் கட்டடங்கள் என்று அழைக்கப்படுகின்ற வகையிலே, 210 கோடி ரூபாயை 68 கல்லூரிகளுக்கு என ஒதுக்கப்பட்ட நிதியில் மன்னார்குடி கல்லூரிக்கு 4 கோடியே 23 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பூர்த்தியாகி, ஒப்பந்ததாரருக்கும் பணி ஆணை வழங்கப்பட்டு, பணி தொடங்குகிறது என்பதை இந்நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து மாணாக்கர்களுக்கு தேவைப்படுகின்ற வகுப்பறைகளுக்கான உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குகின்ற வகையிலேயும், கேட்கின்ற பாடப் பிரிவுகள் கிடைக்கின்ற வகையிலேயும் அம்மாவினுடைய ஆட்சி தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலேதான் தமிழ்நாடு முதலமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையிலே உயர் கல்வித் துறையானது மாணவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2018 மார்ச் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 46 வகுப்பறைகள் அங்கே இருக்கின்றன என்று கூறுகிறார்கள். நான் அங்கேயே இருக்கிறவன். நீங்கள் என்னிடம் சொல்லாதீர்கள். நீங்கள் வந்து பாருங்கள். நேரில் சென்று ஆய்வு செய்வோம். அங்கு உருப்படியாக இருப்பது 35 வகுப்பறைகள்தான். நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் வந்து பாருங்கள். இப்பொழுது condemn செய்யப்பட்ட வகுப்பறைகளில் பாடங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதையும் நீங்கள் சேர்த்து வேண்டுமானால் சொல்லலாம். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதில், இந்த அரசின் மொத்த அறிவிப்புகளும் வெற்றறிக்கை என்று சொல்லும் அளவிற்குத்தான் இந்த அறிவிப்பும் இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஏனென்று நான் சொல்கிறேன். நான் கேட்ட கேள்வி, அந்தக் கல்லூரியில் வகுப்பறைகள் வேண்டும், நீங்கள் கட்டித்தாருங்கள் என்று கேட்டேன். எப்பொழுது கேட்டேன்? 2017 ஆம் ஆண்டில் கேட்டேன். (குறுக்கீடுகள்) இன்று என்ன தேதி? 2017 ஜூன் மாதம் அறிவிக்கப்பட்ட கட்டடங்களுக்கு ஏன் இன்னும் கட்டட வேலைகள்கூட துவங்கவில்லை? ஏன் இடத்தைக்கூடத் தேர்வு செய்யவில்லை? (குறுக்கீடுகள்) அதுமட்டுமல்ல, ஓர் அரசு கலைக் கல்லூரி, 'A' Grade கலைக் கல்லூரி, ஒரு playground கூட அங்கு இல்லை. P.G. Hostel கிடையாது, ஒரு auditorium கிடையாது. Library–கட்டுவதற்கு நான் நிதி கொடுக்கிறேன் என்று சொன்னேன். (குறுக்கீடுகள்) பொறுமையாகக் கேட்டுக்கொண்டு பிறகு பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்களால் முடிந்தால் பதில் சொல்லுங்கள். கேள்வி கேட்கிறேன் அல்லவா? அங்கு கட்டட வசதி இல்லை. நான் 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கினேன். அதை நிராகரிக்கிறீர்கள். அதை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை? நான் அங்கு library கட்டித் தருகிறேன் என்று சொல்கிறேன். ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை? நீங்கள் அறிவித்தது வெற்றறிக்கை என்று நான் சும்மா சொல்லவில்லை. நான் ஆதாரத்துடன் சொல்கிறேன். பல ஆண்டுகளுக்கு முன்பு அங்கு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் உங்களுடைய M.P. 50 இலட்சம் ரூபாய்க்கு நிதி ஒதுக்கி library கட்டித் தருகிறேன் என்று சொன்னார். இன்றுவரையில் அங்கு library வரவில்லை. ஏன் வரவில்லை? இவ்வளவு பேசுகிற நீங்கள் அதைக் கட்டியிருக்கலாமே? M.P. நிதியிலிருந்து கட்டியிருக்கலாம்.



2018 மார்ச் 19]

உங்கள் நிதியிலிருந்து நீங்கள் கட்டியிருக்கலாம். வேண்டாமென்று சொல்லவில்லை. அதையாவது செய்திருக்கலாம். (மணியடிக்கப் பெற்றது) M.P. நிதியிலிருந்து கட்டியிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, இது கேள்வி நேரம், விவாதம் இல்லை. கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அளவிற்கு, அறிவிக்கப்பட்ட எதுவும் எங்கள் மன்னார்குடியில் செயல்படுத்தப்படவில்லை. எந்த ஒரு திட்டமானாலும் மன்னார்குடி முழுமையாகப் புறக்கணிக்கப்படுகிறது, ஓரங்கட்டப்படுகிறது என்பதை இங்கே ஆணித்தரமாகப் பதிவு செய்து, தயவுசெய்து எங்கள் மாணவர்களின் நலனைக் கருதி, உடனடியாக தேவையான 78 வகுப்பறைகளையும் கட்டி, ஒரு நல்ல library, ஒரு நல்ல auditorium, ஒரு நல்ல playground அனைத்தையும் அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள், ஏதோ அரசியல் மேடையில் பேசுவதுபோல் சட்டமன்றத்தில் பேசிக் கொண்டிருக்கின்றார். நான் ஒரு சிலவற்றை இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் அந்த மாவட்ட மக்கள் மீதும், அந்த மாணாக்கர்கள் மீதும், அக்கறைகொண்டு, தேவைப்படுகின்ற பாடப் பிரிவுகள் மற்றும் கட்டட வசதிகளை வழங்குவதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தப்புள்ளிகளை எல்லாம் பரிசீலனை செய்து, அதனை இறுதி செய்த பிறகு, தற்போது பணிகள் தொடங்கப்படவுள்ளன என்பதைத் தெரிவித்திருக்கிறேன்.

1971 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பழமையான அந்தக் கல்லூரிக்கு இந்த அரசு ஒன்றும் செய்யவில்லை, வெற்று அறிக்கையைக் கொடுப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். 1996

முதல் 2001 ஆம் ஆண்டு வரை அவர்களுடைய ஆட்சியில் அந்தக் கல்லூரிக்கு அவர்கள் செய்த பணி என்ன என்பதை அவரால் சொல்ல முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் என்னென்ன பணிகள் நடைபெற்றன என்பதை அவரால் சொல்ல முடியுமா? அப்போது கட்டடப் பணிகள் எதுவும் நடைபெறவில்லை. மேலும், அந்தப் பகுதி மாணாக்கர்கள் படிப்பதற்காக ஒரு M.Phil. பாடப் பிரிவை கொண்டு வந்தோம் என்று அவர்கள் சொல்ல முடியுமா? அதேபோல், ஒரு Ph.D. பாடப் பிரிவைக் கொண்டு வந்தோம் என்று சொல்ல முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எந்தவிதத்திலும் அந்த மாவட்ட மக்கள் மீதும்,. . . (குறுக்கீடு) இவர் ஏழு ஆண்டுகாலமாக சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றார்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு பணியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தபால் கொடுக்கப்பட்ட பிறகு, அவர் அந்தப் பணியை எடுக்க முடியாது என்று திருப்பி அனுப்புகின்ற வாய்ப்பு யாருக்கும் கிடையாது.

ஏனென்று சொன்னால், சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த மரியாதைக்குரிய திரு. டி.கே. ரெங்கராஜன் அவர்கள் 25 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து ஓர் ஆய்வகத்தைக் கட்டித் தந்திருக்கிறார். அதுபோல் இவர் கட்டுவதற்கு, நிதி ஒதுக்க தயாராக இல்லை. தான் கொடுத்த நிதியைத் திருப்பிக் கொடுத்து விட்டார்கள் என்று அவர் தற்போது வாய் அளவில் மட்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆகவே, எந்தச் சூழ்நிலையிலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சிக்காலத்தில், இன்றைக்கு மாவட்ட அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில், அந்தக் கல்லூரி இப்போது பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டு இருக்கிறது. இன்றைக்கு அதை அவர் கேவலப்படுத்திப் பேசுவது சரியானது அல்ல. அந்த மாணாக்கர்களின் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்கின்ற அரசாக, இன்றைக்கு உயர் கல்வித் துறைக்குத் தேவையான பணிகளை முழுமையாகச் செய்யக்கூடிய அரசாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு செயல்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)





இன்றைக்கு condemned building–ல் மாணவர்கள் படித்துக் கொண்டிருப்பதாக அவர் சொன்னார். அதுபோன்ற நிலை அங்கு இல்லை. மாணவர்கள் படிப்பதற்குத் தகுதி வாய்ந்த கட்டடங்களாக இருக்கின்றனவா என்பதை P.W.D.மூலம் பரிசோதனை செய்த பிறகுதான் அங்கு மாணவர்கள் படித்து கொண்டிக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**46—**

## நெல் கொள்முதல் நிலையம்

***14057—திரு. வெ. கணேசன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திட்டக்குடி தொகுதி, ஒரங்கூர் ஊராட்சியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நடப்பு நெல் கொள்முதல் பருவம் 2017–2018 ஆம் ஆண்டில் கடலூர் மாவட்டம், திட்டக்குடி தொகுதிக்குட்பட்ட ஒரங்கூர் ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க, விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் வரப்பெறவில்லை. தேவை ஏற்படின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். கேள்வி நேரத்தில் விவாதம் கிடையாது. இது கேள்வி நேரம். கேள்வி நேரத்தில் மூலக் கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினருக்கு இரண்டு கேள்விகள்

[2018 மார்ச் 19

கேட்க வாய்ப்பு கொடுத்து விட்டேன். இப்போது நேரம் இல்லை. உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மூலக் கேள்வி கேட்டதற்கு இரண்டு துணைக் கேள்விகள் கேட்க அவருக்கு வாய்ப்பு கொடுத்து விட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலும் அளித்து விட்டார். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்தில் அனைவருக்கும் எப்படி நான் வாய்ப்பு கொடுக்க முடியும்? மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், உங்கள் கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் அடுத்த கேள்விக்குப் போய்விட்டேன். (குறுக்கீடுகள்) இல்லை, கேள்வி நேரத்தில் அவர் குற்றச்சாட்டைச் சொன்னார். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் குற்றச்சாட்டைச் சொன்னார், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார். வேறு ஒன்றுமில்லை. அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். கேள்வி நேரத்தை கேள்வி நேரமாக நீங்கள் நடத்தினால், எனக்கு ஒன்றுமில்லை. அதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதை எல்லாம் நீங்கள் விவாதத்தின்போது மாறி மாறி பேசலாம். கேள்வி நேரத்தில் அப்படி எல்லாம் கேட்க முடியாது. கேள்வி நேரத்தில் மூலக் கேள்வி கேட்டவர், கேள்வி கேட்டால் அமைச்சர் பதில் சொல்வார். உறுப்பினர்களுக்கு இரண்டு கேள்விகள் கேட்க வாய்ப்பு கொடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இரண்டு கேள்விகள் கேட்க வாய்ப்பு தரப்பட்டது. (குறுக்கீடுகள்) இரண்டு கேள்விகளை நீங்கள் கேட்க, நான் வாய்ப்பும் கொடுத்து விட்டேன், அவ்வளவுதான். நீங்கள் கேள்வியைக் குற்றச்சாட்டாகக் கேட்டீர்கள். அமைச்சர் அதற்கு பதிலைச் சொல்லியிருக்கிறார். அவ்வளவுதான். சரியாகிவிட்டது. விட்டுவிடுங்கள். மேற்கொண்டு எல்லோருக்கும் வாய்ப்பு தர முடியாது. நான் அடுத்த கேள்விக்குப் போய்விட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், இதில் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. விட்டு விடுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.



2018 மார்ச் 19]

முற்பகல் 10—50

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் சில கேள்விகளைக் கேட்டார். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார். நீங்களே சொன்னீர்கள். அவர் கேட்ட குற்றச்சாட்டுக்கு அவர் விளக்கம் சொல்லியிருக்கிறார். அதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், அதேநேரத்தில் அவர் பதில் சொல்வதோடு மட்டும் நிறுத்தியிருந்தால் பிரச்சினை இல்லை. ஆனால், அவர் எங்களுடைய சட்டமன்ற உறுப்பினரிடத்திலே சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார். குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நீங்கள் நிதி ஒதுக்கி எழுதித் தரவில்லையென்ற ஒரு பயங்கரமான குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார். எனவே, அந்தக் குற்றச்சாட்டுக்கு அவர் பதில் சொல்ல வேண்டும். அதற்குத் தாங்கள் வாய்ப்பு தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு கேள்விகள் கேட்க வாய்ப்பு கொடுத்துவிட்டேன். மீண்டும் வாய்ப்பு வழங்கினால் தவறான முன்னுதாரணமாக மாறிவிடும். (குறுக்கீடு)

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை, இல்லை, குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறாரே! அவர் இதற்குப் பதில் சொல்வாரா என்று அவரே கேள்வி கேட்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் குற்றச்சாட்டு ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடு)

**திரு. மு.க. ஸ்டாலின்:** குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறாரே! அவர் இதற்குப் பதில் சொல்வாரா, பதில் சொல்வாரா என்று அவரே கேள்வி கேட்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் தொகுதியினுடைய கேள்வியோடு நிறுத்தியிருந்தால் பரவாயில்லை. அவர் கேட்டதற்கான பதிலை அமைச்சர் சொன்னார். மாண்புமிகு அமைச்சர் குற்றச்சாட்டு சொல்லியிருந்தால் நான் வாய்ப்புக் கொடுப்பேன். இவர் கேட்டதே...(குறுக்கீடு) அது குற்றச்சாட்டு இல்லை. அவர் கேட்டதற்குப் பதில். நீங்கள் கொடுக்கவில்லையென்று அவர் சொல்லியிருக்கிறார். வேண்டாம். (குறுக்கீடு) கேள்வி நேரத்தில் இப்படியெல்லாம் allow செய்ய முடியாது. கேள்வி நேரத்தில் இப்படியெல்லாம் நான் allow செய்ய முடியாது.

(குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. டி.ஆர்.பி. ராஜா, நீங்கள் அந்தக் கல்லூரிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கியிருந்தால், அந்த விவரங்கள் இருந்தால் என்னிடத்திலே கொண்டு வந்து கொடுங்கள். நான் அமைச்சரை நடவடிக்கை எடுக்கச் சொல்லி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். அதற்குமேல் அதில் ஒன்றும் செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) ஒன்றும் செய்யவில்லையென்று சட்டமன்ற உறுப்பினர் சொன்னார் அல்லவா? அதற்கு அமைச்சர் பதில் சொன்னார். அவர் பேசாமல் இருந்திருந்தார் என்றால் பிரச்சினை இல்லை. நான் கேள்வி கேட்கும்போது திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்களிடத்தில் சொன்னேன். திரு. ராஜா, இது கேள்வி நேரம் என்று சொன்னேன். அவர் அதற்கு மேற்கொண்டும் கேட்டார். பிறகு பதில் வருமில்லையா? நான் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் அடுத்த கேள்விக்குப் போய்விட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இடையில்தான் வந்தேன். அதனால் எனக்குத் தெரியாது. ஆனால், நான் ஒன்றைத் தெரிவிக்கிறேன். எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கிக் கொடுத்து, Collector அதை ஏற்க மாட்டேன் என்று சொல்வது ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டு. அவர் சொல்லியிருக்கிறார். அப்படிச் சொன்னாரா, இல்லையா என்று சொல்லிவிட்டால் போதும். மற்றதெல்லாம் நாங்கள் செய்யவில்லை, நீங்கள் செய்யவில்லை என்று சமமாகச் சொல்லியாகிவிட்டது. ஒரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி கொடுத்தால் Collector அதை ஏற்க மாட்டேன் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பேரவைத் தலைவர். அந்த விவரங்கள் இருந்தால் அதை என்னிடம் கொடுங்கள். நான் அதற்கு நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்கிறேன். (குறுக்கீடு) கொடுங்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடு) சொல்வது விவரமில்லை. எழுத்துப்பூர்வமாக வேண்டுமல்லவா? நிதி ஒதுக்கியதற்கான அத்தாட்சியை கொடுக்கச் சொல்லுங்கள். நான் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கிறேன், அவ்வளவுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.





**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கழகச் செயல் தலைவர் அண்ணன் தளபதி அவர்களை வணங்கி மகிழ்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் மங்களூர் ஒன்றியம் 66 ஊராட்சிகளைக் கொண்டதாகும். இதில் 5,000 வாக்காளர்களைக் கொண்ட மிகப் பெரிய ஊராட்சி ஒரங்கூர் ஊராட்சியாகும். இந்த ஊராட்சியைச் சுற்றி மா. புதூர், மா. கொத்தனூர், பட்டா குறிச்சி, குடிக்காடு மற்றும் ராயர்பாளையம் ஆகிய பெரிய கிராமங்கள் உள்ளன. இங்கு தனியார் இடைத்தரகர்கள், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லை கொள்முதல் செய்யும்போது, ஒரு மூட்டைக்கு சுமார் 5 கிலோ எடையைக் குறைத்தும், 50 ஆயிரம் ரூபாய்வரை குறைத்தும் ஏமாற்றி கொள்முதல் செய்கின்றார்கள். இந்த அரசாங்கம் நெல் கொள்முதல் நிலையங்களை இரண்டு மாதங்களுக்கு மட்டும்தான் சீசனின்போது திறக்கிறது. ஆகவே, ஒரங்கூர் ஊராட்சியில் நெல் கொள்முதல் நிலையத்தைத் திறக்க அவசியம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நெல் கொள்முதல் பருவத்தில், கடலூர் மாவட்டத்தில் மட்டும் 106 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, இதுவரை 27,776 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள ஒரங்கூர் பகுதி விவசாயிகள் அருகாமையிலுள்ள வள்ளிமதுரம், மேலக்கல்பூண்டி, திருக்கல்பூண்டி, சிறுப்பாக்கம் ஆகிய இடங்களில் செயல்படும் கொள்முதல் நிலையங்களில் தங்களுடைய நெல்லை விற்பனை செய்து வருகிறார்கள். எனினும், விவசாயிகளின் தேவை, அந்தப் பகுதியின் நெல் விளைச்சல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, நடப்பு நெல் கொள்முதல் பருவம் அல்லது எதிர்வரும் நெல் கொள்முதல் பருவங்களில் அங்கு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தைத் திறப்பதற்கு

உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எனது திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் மட்டும் காவேரி டெல்டா பகுதிகளைப் போன்று சுமார் 15–க்கும் மேற்பட்ட நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. அதற்குக் காரணம், எனது தொகுதியிலுள்ள வெலிங்டன் ஏரியின் மூலமாக 25 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. கடந்த 2006 ஆம் ஆண்டு, இந்த ஏரியின் கரையில் உடைப்பு ஏற்பட்டு, மிகப் பெரிய ஆபத்து உருவாகிய சூழ்நிலையில், அப்போது முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், ரூ. 10 கோடிக்கு மேற்பட்ட நிதியை ஒதுக்கீடு செய்து அந்தக் கரையை உடனடியாக முழுவதுமாக அப்புறப்படுத்தி, புதிய கரையை உருவாக்கித் தந்தார்கள்; தண்ணீரைத் தேக்கி, விவசாயிகளின் 25 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறக்கூடிய ஒரு நிலையை உருவாக்கித் தந்தவர் தலைவர் கலைஞர் என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். இந்த ஆண்டு எதிர்பாராதவிதமாக அந்த ஏரியில் மீண்டும் ஒரு பெரிய உடைப்பு ஏற்பட்டு, சரிவு ஏற்பட்டதால், இந்த ஆண்டு விவசாயத்திற்குத் தேவையானத் தண்ணீரை தேக்கி வைக்க முடியவில்லை. எனவே, 25 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்கள் இப்போது காய்ந்த நிலையில் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதற்குத் தேவையான நிதியை உடனடியாக ஒதுக்கீடு செய்து, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து கரையைச் சரி செய்து, இந்த ஆண்டிலாவது 25 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஒரங்கூரில் நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதோடு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், துணைக் கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

**திரு. வெ. கணேசன்:** ஒரங்கூரில் நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதோடு, அங்கு 10 ஆயிரம் டன் நெல்லை சேமித்து



வைப்பதற்காக குடோன் ஒன்றையும் அமைக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியிலுள்ள ஏரியைப் பற்றிக் குறிப்பிட்டு கேள்வி எழுப்பினார்கள். அது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லையென்றாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஒரங்கூர் ஊராட்சியிலுள்ள விவசாயிகளின் கோரிக்கை, அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளாகிய சட்டமன்ற உறுப்பினர் போன்றவர்களுடைய கோரிக்கை ஆகியவற்றை ஏற்று, நெல் வரத்து எந்த அளவிற்கு இருக்கிறதோ, அதற்கேற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையத்தைத் திறப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், அந்த நெல்லை சேமித்து வைப்பதற்கான நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் என்பது, சீசனின்போது செய்யப்படும் என்று கூறி, பல நாட்கள் கழித்து நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுவதால், நெல் பயிரிடும் விவசாயிகள் நெல்லை குறைந்த விலையில் விற்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. என்னுடைய திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள விவசாயிகளெல்லாம் மிகக் குறைந்த விலையில் நெல்லை விற்றுவிடுகிறார்கள். நெல் கொள்முதலை அரசு செய்யாததால், வியாபாரிகள் விலை குறைத்து வாங்குகிறார்கள். ஆண்டு முழுவதும் நெல் கொள்முதல் உண்டு என்றால்தான் வியாபாரிகள் நெல்லை விலை குறைத்து

வாங்க மாட்டார்கள். சீசன் நேரத்தில் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ஆண்டு முழுவதும் நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டும் அல்லது சீசன் தொடங்கும்முன் நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டும். அரசாங்கம் கொள்முதல் செய்தால்தான் நெல் விலை ஏறுகிறது. அரசாங்கம் கொள்முதல் செய்யவில்லையென்றால், அதை உடனே வியாபாரிகள் குறைத்து விடுகிறார்கள். ஆகவே, அரசு இதைக் கவனத்திலே கொண்டு, ஆண்டு முழுவதும் நெல்லைக் கொள்முதல் செய்தால்தான் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும். ஆகவே, அதைச் செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நெல் கொள்முதல் பருவத்தில் காவேரியில் போதுமான நீர்வரத்து இல்லாத நிலையிலும், டெல்டா மாவட்டங்களில் 1,133 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும், டெல்டா அல்லாத மாவட்டங்களில் 196 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும் திறக்கப்பட்டு, இதுவரை 5 இலட்சத்து 99 ஆயிரத்து 329 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பருவத்தில் மட்டும் விவசாயிகளுக்கு ரூ.40 கோடி ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது, ஆண்டு முழுவதும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று கேட்டார்கள். நெல் எந்தப் பகுதியில் வந்தாலும் அது இந்த சீசன், அந்த சீசன் என்று பார்ப்பது இல்லை. சீசனில் அதிகமாகத் திறக்கப்படும். நெல் வருமேயானால், அந்தந்தத் தாலுகா தலைமையகத்தில் கண்டிப்பாக நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டுமென்ற உத்தரவு இருக்கிறது. அதன் அடிப்படையில், அந்தப் பகுதியில் மற்ற நேரங்களிலும் நெல் வரும் என்று சொன்னால், உறுதியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அந்தப் பகுதியிலே திறந்து வைக்கும் என்பதனை மாண்புமிகு





பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**47—**

## நெசவு சார்ந்த தொழிற்கூடம்

***12613—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான காமராஜர் நகர் காலனியிலுள்ள தறிப் பட்டறையில் நெசவு சார்ந்த தொழிற்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அனைத்துத் தரப்பு மக்களின் வரவேற்பினையும், பாராட்டுதல்களையும் பெற்றுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் மேலான வழிகாட்டுதலோடு, இப்பேரவைக்கு அளித்த மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், சேலம் தெற்கு தொகுதிக்குட்பட்ட அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான காமராஜர் நகர் காலனியில் உள்ள தறிப் பட்டறையில் நெசவு சார்ந்த தொழிற்கூடம் அமைப்பதற்கான முன்மொழிவு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2018 மார்ச் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

**திரு. எ.பி. சக்திவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் பெருமக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில், கைத்தறிக்கு 200 யூனிட், விசைத்தறிக்கு 750 யூனிட் விலையில்லா மின்சாரம் வழங்கி, நெசவாளர்களுக்கென பசுமை வீடுகள் திட்டம் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கைத்தறித் துணி விற்பனை மீதான தள்ளுபடி மானியத் திட்டத்திற்கான ஒதுக்கீட்டுத் தொகையை ரூ.80 கோடியிலிருந்து ரூ.150 கோடியாக உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை தலைமை ஏற்று வழிநடத்திச் சென்று கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் நெசவாளர் பெருமக்களின் சார்பில் நன்றி கூறி, வணங்கி மகிழ்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆசியாவிலேயே சிறப்பான செயல்பாட்டில் முதலாவது எனப் பெயர் பெற்ற சங்கம் ஆகும். இந்தச் சங்கத்திற்கு சொந்தமான அம்மாப்பேட்டை காமராஜர் காலனியில் உள்ள 12 ஆயிரம் மற்றும் 7,500 கூட்டுப் பரப்பு சதுர அடி உள்ள தறிப் பட்டறையில் 40 விசைத்தறிகள், கோவனி ராட்டை, ஊசி ராட்டைமூலம் காடாத் துணி உற்பத்தி நடைபெற்று வந்தது. தற்போது காலியாக உள்ள இவ்விடத்தில் கைத்தறி உற்பத்திப் பொருட்களில் புதுமை முயற்சிகளையும் பல்வகைப்படுத்தலையும் ஊக்குவிக்க, தற்போது இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசால் புதியதாக அறிவிக்கப்பட்டுள்ள கைத்தறி உதவித் திட்டத்தின்கீழ் மீண்டும் கைத்தறிகள் அமைக்கப்பட்டு, நெசவாளர்களுக்குப் புதிய ரக வடிவமைப்பு உற்பத்தி பயிற்சி கொடுத்து, கைத்தறித் துணி உற்பத்தியைப் பெருக்குவதுடன், நெசவாளர்களை ஊக்குவித்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கிட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2018 மார்ச் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாப்பேட்டை சங்க உறுப்பினர்களிடமிருந்து தொழிற்கூடம் அமைக்க கோரிக்கை பெறப்படின் அதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதுநாள் வரை எந்தக் கோரிக்கையும் வரப்பெறவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

**திரு. எ.பி. சக்திவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் சொன்ன கோரிக்கைக்கு அம்மாப்பேட்டை சங்கத்தின் சார்பாக, கோரிக்கை வரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். காலி இடமாக இருக்கின்ற ஒரு இலட்சம் சதுர அடி பரப்பளவில் இருக்கின்ற இடத்திலே மத்திய, மாநில அரசுகளின் கூட்டு முயற்சியின்கீழ் எழுப்பப்படுகின்ற கைத்தறி குழுமத் திட்டத்தில் சங்கமானது பங்கெடுத்து, அதற்கான தறிக் கூடங்கள் மற்றும் அதற்குண்டான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தந்து, அந்தத் திட்டத்திலே அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்திச் சங்கத்தினுடைய உறுப்பினர்களைப் பதிவு செய்து, அதிலே அவர்கள் பணியாற்றும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இரண்டு திட்டங்களுக்கும் சங்கத்தின் சார்பிலே கோரிக்கை கடிதம் அனுப்பப்படும் நேர்வில், அந்தக் கடிதத்தின்மீது விரைவான நடவடிக்கைகளை எடுக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்ய வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் கைத்தறி

நெசவாளர்களுக்காக, பிரத்யேகமாக ஏற்காடு தொகுதிக்குட்பட்ட அயோத்தியப்பட்டணம் வட்டார கைத்தறி வளர்ச்சிக் குழுமம் ரூ.171.24 இலட்சம் மதிப்பீட்டிலும், எடப்பாடி தொகுதிக்குட்பட்ட நங்கவல்லி வட்டார கைத்தறி வளர்ச்சிக் குழுமம் ரூ.120.38 இலட்சம் மதிப்பீட்டிலும் அரசு நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன. இதுபோன்றதொரு குழுமம் வேண்டுமென்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார். இந்தக் கோரிக்கை சங்க உறுப்பினர்களிடமிருந்து வருகிறபோது, கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**48—**

## சிறு தொழில்கள் வளாகம்

***561—திரு. சபா. ராசேந்திரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதியில் சிறு தொழில்கள் வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதியில் சிறு தொழில்கள் வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*

**திரு. சபா. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழக செயல் தலைவர் அண்ணன் தளபதி





அவர்களை வணங்குகிறேன். நான் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று இந்த மாமன்றத்தில் பேசுகின்ற முதல் கூட்டத்திலேயே நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் பகுதியில் ஒரு சிட்கோ தொழில் வளாகம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தேன். அப்போதைய ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள், 20 ஏக்கர் நிலம் அந்தப் பகுதியில் இருந்தால் ஒரு சிட்கோ வளாகம் அமைப்பதைப் பரிசீலிக்கலாம் என்ற வாக்குறுதியை அளித்தார்கள். நான் உடனடியாக அங்கே 35 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் இருப்பதைச் சுட்டிக்காட்டியவுடன், அப்போதைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'நிச்சயமாக அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்; அந்தத் தொழில் வளாகம் அமைக்கப்படும்' என்ற உறுதியினை அளித்தார்கள். அதனடிப்படையிலே அங்கே சிட்கோ அதிகாரிகள் வருகை தந்து, காடாம்புலியூர் பகுதியை ஆய்வு செய்து, 35 ஏக்கர் நிலத்தைத் தேர்வு செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், இப்போதைய அரசுச் செயலாளர் அவர்களிடமும், அமைச்சர் அவர்களிடமும்கூட இந்தப் பகுதிக்கு தொழில் வளாகம் அமைக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எனவே, அந்தப் பகுதியிலுள்ள தொழில் முனைவோர்களுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுப்பதற்காகவும், அதேபோல படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்காகவும் அந்தப் பகுதியில் இந்தத் தொழில் வளாகத்தை விரைந்து அமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதி, காடாம்புலியூரில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், காடாம்புலியூர் கிராம புல எண் 642/3–ல் 13.95 எக்டேரில் உள்ள நிலம் கல்லாங்குத்து நிலமாக உள்ளது. இங்குள்ள தோப்புகளில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலம் தீர்வை ஏற்படாத புஞ்சை தரிசு நிலமாகும். தொழிற்பேட்டை அமைக்க மேற்படி நிலம் உகந்ததா என்பதைக் கண்டறிய கடலூர் மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து சிட்கோ

[2018 மார்ச் 19

நிறுவனத்தால் புல ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், இந்த இடம் சம நிலையில் இல்லை எனக் கண்டறியப்பட்டுள்ளதாலும், மேலும் தொழிற்பேட்டை அமைக்க அணுகுப் பாதைக்கு (approach road) தனியாரிடமிருந்து நிலம் கையகப்படுத்த வேண்டுமென்பதாலும் மேற்காணும் நிலம் தொழிற்பேட்டை அமைக்க உகந்த இடமாக இல்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது. இருப்பினும், நெய்வேலி தொகுதியில் உரிய நிலங்கள் கண்டறிய கடலூர் மாவட்ட நிருவாகத்துடன் சிட்கோ நிறுவனம் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டு, தொழிற்பேட்டை அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

முற்பகல் 11–10

**திரு. சபா. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்திலேயே நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பண்ருட்டி ஒன்றியப் பகுதியில்தான் அதிகமாக முந்திரி விளைச்சல் இருக்கிறது. அதேபோல, உலகப் புகழ்பெற்ற பண்ருட்டி பலாப் பழமும் இந்தப் பகுதியில்தான் விளைகிறது. இதையெல்லாம் பதப்படுத்துவதற்கும், இதற்கான தொழில்களைத் தொடங்குவதற்கும் பொதுமக்களும், விவசாயிகளும் மிகவும் ஆர்வமாக இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது பதிலில் கூறியவாறு மேற்கண்ட நிலப் பகுதி மேடு பள்ளமாக சம நிலையின்றி இருப்பதெல்லாம் நிச்சயமாக ஒரு பிரச்சினையில்லை என்று நான் கருதுகிறேன். அணுகு சாலை அமைப்பதற்கான நிலத்தை நான் தலையிட்டு பெற்றுத் தர முடியும், நான் அந்த நில உரிமையாளர்களிடம் பேசியிருக்கிறேன். அதுவும் ஒரு பிரச்சினை இல்லை. இந்தத் தொழிற்பேட்டை அமைந்தால் விவசாயிகள், தொழில்முனைவோர், இளைஞர்கள் ஆகியோருக்கு நல்ல வாய்ப்பாக அமையும். அதை அமைத்துத் தருவதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நான் உறுதுணையாக இருந்து அந்தப் பணி முடியும் வரை நிச்சயமாக ஒத்துழைப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்த அரசு வேண்டிய முயற்சிகளை எடுத்து தொழிற்பேட்டை அமைத்துத் தர ஆவன



2018 மார்ச் 19]

செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் பகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைப்பது குறித்து மீண்டும் மாவட்ட நிருவாகத்துடன் விரிவான கள ஆய்வு மேற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**49—**

## வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடம்

***15145—திரு. ஆர். கணேஷ்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் தொகுதி, உதகமண்டலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உதகமண்டலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், செயின்ட் மேரீஸ் ஹில், நசரத் கான்வென்ட் ரோடு, உதகை என்ற தனியார் கட்டடத்தில் 28–10–2013 முதல் இயங்கி வந்தது. தற்போது இவ்வேலைவாய்ப்பு அலுவலகம் 10–4–2017 முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூடுதல் வளாகத்தில் வாடகை இல்லாமல் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, உதகமண்டலம் மாவட்ட

[2018 மார்ச் 19

வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு தனியாக சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**50—**

## பேருந்துப் பணிமனை

***28762—திரு. எஸ். அம்பேத்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, பெரணமல்லூர் பேரூராட்சியில் புதிய பேருந்துப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, பெரணமல்லூரைச் சுற்றியுள்ள கிராமங்கள் அனைத்தும் ஆரணி, செய்யாறு, வந்தவாசி மற்றும் சேத்துப்பட்டு ஆகிய பணிமனைகளில் இருந்து இயக்கப்படும் நகர மற்றும் புறநகரப் பேருந்துகள்மூலம் பகுதி வாரியாகப் பேருந்து வசதி பெற்றுள்ளன. எனவே, பெரணமல்லூரில் பணிமனை அமைக்கும் அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.

**திரு. எஸ். அம்பேத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களின் ஒப்பற்றத் தலைவர்



2018 மார்ச் 19]

அவர்களை வணங்குகிறேன். வருங்காலத் தமிழகம் எங்கள் செயல் தலைவர், போற்றுதலுக்குரிய அண்ணன் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2011 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு வரை பெரணமல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு சட்டமன்றத் தொகுதி இயங்கி வந்தது. பிறகு தொகுதி மறு சீரமைப்பிற்குப் பிறகு 40 சதவிகித மக்கள்தொகை கொண்ட பரப்பளவு போளூர் சட்டமன்றத் தொகுதியிலும், மீதமுள்ள 60 சதவிகித மக்கள்தொகை கொண்ட பரப்பளவு வந்தவாசி சட்டமன்றத் தொகுதியிலும் இணைக்கப்பட்டது. பெரணமல்லூர் பேரூராட்சியில் 12 வார்டுகள், 58 ஊராட்சிகள் என மொத்தம் சுமார் 80,000 மக்கள்தொகை கொண்ட பரப்பளவில் போக்குவரத்து என்பது மிகவும் அவசியமான ஒன்றாகவே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போன்று செய்யாறிலிருந்து, வந்தவாசியிலிருந்து வரும் பேருந்துகள் அனைத்தும் சாலைகள் ஓரமாக நிறுத்தப்படுவதால் அங்குள்ள மக்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். ஆகவே, மக்கள் வசதிக்காக அங்கு ஒரு பணிமனை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–15

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதி, பெரணமல்லூரிலிருந்து சேத்துப்பட்டு பணிமனை 20 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அந்தப் பணிமனையில் வெறும் 24 பேருந்துகள் மட்டுமே பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதேபோல, செய்யாறு பணிமனை 25 கிலோ மீட்டரிலே உள்ளது. 68 பேருந்துகள் உள்ளன. வந்தவாசியிலுள்ள இரண்டு பணிமனைகளில், முதல் பணிமனையிலே 43 பேருந்துகளும், இரண்டாவது பணிமனையிலே 47 பேருந்துகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், ஆரணி பணிமனை 24 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ளது. அதைச் சுற்றி இருக்கக்கூடிய பணிமனைகள் எல்லாம் வரையறுக்கப்பட்டுள்ள தூரங்களிலே அமைந்துள்ள காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற பெரணமல்லூரில் தற்போது பணிமனையை அமைக்கக்கூடிய அவசியம் எழவில்லை. இருந்தபோதிலும், அதை

[2018 மார்ச் 19

ஆய்வு செய்து, தேவை இருக்குமாயின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.

**திரு. எஸ். அம்பேத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூர் பேரூராட்சி ஒரு தாலுகா தலைமையிடமாக இருக்கக்கூடிய அளவுக்கு மக்கள்தொகை நிறைந்த பேரூராட்சி. அதுமட்டுமல்லாமல், பெரணமல்லூர் பேரூராட்சி, ஒரு நகராட்சியாக உயர்த்தக்கூடிய அளவுக்கு மக்கள்தொகை கொண்ட பேரூராட்சி. ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள மாணவர்கள் அதிக அளவு பேருந்தில் பயணம் செய்யக்கூடியவர்களாக உள்ளனர். சில நேரங்களில் பேருந்துகளில் ஏதாவது பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும்போது மாற்றுப் பகுதியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல் ஆரணியிலிருந்தும், செய்யாறிலிருந்தும், வந்தவாசிக்கு வருவதற்குக் காலதாமதம் ஏற்படுவதால், மக்களின் வசதிக்காக உடனடியாக அங்கு ஒரு பணிமனையும், பேருந்து வசதியும் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:**ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 4. தகவல் கோரல்

### (அ) காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவினை விரைவில் அமைத்திட மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் சொன்னதைத்தான் நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் சொன்னதைத்தான் நான் படிக்கிறேன். (குறுக்கீடு) வேறு சப்ஜெக்ட்டா? குரங்கணி தீ விபத்து குறித்து



2018 மார்ச் 19] [பேரவைத் தலைவர்]

என்றால் நான் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பது குறித்து மத்திய அரசுக்கு அழுத்தம் தர வேண்டும் என்ற அடிப்படையிலே கடந்த மாதம் 22 ஆம் தேதி அனைத்து கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அதிலே அனைத்துக் கட்சித் தலைவர்கள், விவசாயச் சங்கங்களினுடைய பிரதிநிதிகள் எல்லோரும் கலந்துகொண்டு ஏகமனதாக ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றி, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து அழுத்தம் தர வேண்டும் என்று ஒரு தீர்மானம் போடப்பட்டது. ஆனால், அதிலே காலதாமதமான ஒரு சூழ்நிலை வந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், சட்டமன்றத்தை அவசரமாகக் கூட்டி, ஒரு சிறப்புத் தீர்மானத்தை, மத்திய அரசுக்கு அழுத்தம் தரக்கூடிய வகையிலே ஒரு தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று சொல்லி, கடந்த 15 ஆம் தேதி இதே அவையிலே அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் ஏக மனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறோம். ஆனால், இதுவரையில் ஏதாவது ஒரு தகவல் நம்முடைய அரசுக்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். மேலும், பக்கத்தில் இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்திலே அந்த மாநிலத்திற்கு ஒரு சிறப்பு அந்தஸ்து தர வேண்டுமென்று சொல்லி, அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் அமைச்சரவையிலிருந்து விலகி ஓர் அழுத்தம் தந்திருக்கிறார். அதுமட்டுமல்ல, இன்று பாராளுமன்றத்தில் 12—00 மணியளவில் ஒரு நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வந்து, அந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதாகவும் அறிவித்து, மாநில உரிமைகளைப் பெற வேண்டும் என்ற நிலையில் அவர் தரக்கூடிய அழுத்தத்தை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையிலே நான் இந்த அவையை, இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, உச்ச நீதிமன்றம் வழங்கிய காலக்கெடு 6 வார காலம். அது வருகிற 29 ஆம் தேதியோடு முடிவடைய இருக்கிறது, இன்னும் இடையிலே 9 நாட்கள் தான் இருக்கின்றன. எனவே, நான் இந்த அரசை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வலியுறுத்தி, வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவது, எப்படி மாநில உரிமைகளைப் பாதுகாக்க பக்கத்தில் இருக்கக்கூடிய மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் எந்த முனைப்போடு அவர் ஈடுபட்டிருக்கிறாரோ, அதே முனைப்போடு மத்திய அரசுக்கு

[திரு. மு.க. ஸ்டாலின்] [2018 மார்ச் 19

அழுத்தம் தரக்கூடிய வகையிலே, இன்று 12–00 மணியளவிலே பாராளுமன்றத்தில் கொண்டு வரக்கூடிய நம்பிக்கையில்லா தீர்மானத்தை இந்த அரசு மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அ.இ.அ.தி.மு.க.–வினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 37 பேர் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு உடனடியாகச் செய்தி அனுப்பி, நீங்கள் அதை ஆதரிக்கக்கூடிய வகையிலே அந்தக் கடமையை ஆற்றிட வேண்டுமென்று நான் ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், மத்திய அரசு ஒன்றும் கவிழ்ந்துவிடப் போவதில்லை. மத்திய அரசு கவிழ்வதற்கு வாய்ப்பே கிடையாது. இருந்தாலும், மத்திய அரசுக்கு ஓர் அழுத்தம் தரக்கூடிய நிலையை இந்த அரசு உருவாக்க வேண்டும். அதற்குரிய விளக்கத்தை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–20

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நதிநீர்ப் பிரச்சினை பல கட்டங்களைக் கடந்து, உச்ச நீதிமன்றம் வரை சென்று, உச்ச நீதிமன்றத்தால் 6 வார காலத்திற்குள் காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவையும் மத்திய அரசு அமைக்க வேண்டும் என்று ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கிடையில், நான்கு மாநில தலைமைச் செயலாளர்களையும் அழைத்து அவர்களுடைய கருத்துகளும் கேட்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய கருத்தாக, தமிழக அரசினுடைய கருத்தாக, 6 வார காலத்திற்குள் அவசியம் மத்திய அரசு காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவையும் அமைக்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையையும், அறிவுரையினையும் பெற்று, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் அந்தக் கருத்தை அக்கூட்டத்தில் ஆணித்தரமாக வலியுறுத்தியிருக்கிறார்கள்.

இது ஒருபுறம் இருக்க, 6 வார காலம் முடிவடைய இன்னும் நேரம் இருக்கிறது. அதுவரை நாம் பொறுமையோடு இருந்துதான் பார்க்க வேண்டும். ஏனென்றால், உச்ச நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப் பெற்றிருக்கிறது. அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தி



2018 மார்ச் 19] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ஒரு தீர்மானமும் நாம் நிறைவேற்றியிருக்கிறோம். இந்த மாதம் 29 ஆம் தேதி வரை நாம் பொறுத்திருந்து பார்ப்போம். பிறகு, அடுத்த கட்ட நடவடிக்கையில் நாம் இறங்குவோம்.

6 வார காலத்திற்குள் உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை அமல்படுத்திடுமாறு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து அங்கே வலியுறுத்தியதன் காரணமாக, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வார காலமாக நாடாளுமன்றமே முடக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை, தமிழக அரசியல் வரலாற்றில், பொதுப் பிரச்சினையை நாடாளுமன்றத்திற்கு எடுத்துக்கொண்டு சென்று, தொடர்ந்து ஒரு வார காலம் முடக்கப்பட்டதாக வரலாறே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வரலாற்றை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கே நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பக்கத்து மாநிலத்தில் ஒரு நல்ல முடிவை எடுத்திருக்கிறார்கள் என்ற கருத்தை இங்கே சொன்னார்கள். அது அந்த மாநிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. அவர்கள் அந்த மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வேண்டுமென்று கேட்கிறார்கள். அது அவர்களுக்குள்ள பிரச்சினை. அதையும், இதையும் முடிச்சுப் போட வேண்டாம் என்று நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் நான்கரை ஆண்டுகள் மத்திய அரசுடன் கூட்டணி அமைத்து, அந்தக் கட்சியுடன் இணைந்திருந்தார்கள். அது அவர்களுடைய பிரச்சினை. இதில், நம்முடைய நதிநீர்ப் பங்கீடு பிரச்சினையை இணைத்து, ஏதோ அவர்கள்தான் தங்களுடைய மாநில உரிமைக்காகப் போராடுகிறார்கள் என்பது போலவும், நாம் அதைச் செய்யவில்லை என்பது போலவும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பெரிய மாயத் தோற்றத்தை இங்கே உருவாக்க முயல்கிறார்கள். ஆனால், அந்த மாயத் தோற்றம் எடுபடாது. நான் ஒன்றைச் சொன்னால், திரு. துரைமுருகன் அவர்கள் கோபித்துக் கொள்வார்கள். ஏனென்று சொன்னால், காவேரி பிரச்சினையில் நாம் அனைவரும் ஆரம்ப காலகட்டத்திலிருந்து எடுத்து வருகின்ற நிகழ்ச்சிகள், நடவடிக்கைகள், அதிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கை, தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமைகளை ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டோம்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 மார்ச் 19

என்று எடுத்த நிலை உள்ளிட்ட அனைத்தும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பதிவை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து நிலைநிறுத்தும் என்பதை மட்டும் நான் இந்த நல்ல நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏனென்றால், உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்திருக்கிறது. அந்தத் தீர்ப்பின்மீது நாம் இப்போது விவாதிக்க முடியாது என்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு, நாம் பொறுமையாக இருப்போம். அப்படி நடக்கவில்லை என்றால் மீண்டும் நாம் அனைவரும் கூடி ஒரு நல்ல முடிவை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. சிறப்புக் கவன ஈர்ப்பு

### தேனி மாவட்டம், போடி வட்டம், குரங்கணி மலைப் பகுதி, மலையேற்றம் சென்றபோது காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேனி மாவட்டம், குரங்கணி மலைப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீ விபத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் தீக்காயம் அடைந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி ஆகியோர் விதி 55–ன்கீழ் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதனை நான் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம். முதலில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.



2018 மார்ச் 19]

முற்பகல் 11–25

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், போடி அருகே குரங்கணி மலைப் பகுதியில் மலையேற்றப் பயிற்சிக்கு சுற்றுலாப் பயணிகளோடு சென்ற கல்லூரி மாணவிகள், வனப் பகுதிக்குள் பரவிய பயங்கர காட்டுத் தீயிலே சிக்கி, அந்தத் தீ விபத்தில் இதுவரையில் 17 பேர் இறந்திருக்கிறார்கள். ஏறக்குறைய 39 பேர் அதில் சிக்கியிருக்கிறார்கள் என்ற செய்தியையும் பார்த்தோம். குரங்கணி மலையில் அடிக்கடி தீ பிடிக்கும் என்பதும், இதுபோன்ற மலையேற்றங்களுக்கு செல்பவர்களுக்கு வழிகாட்டிகள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்பதும் தெரிகிறது. இந்த மலையேற்றப் பயிற்சிக்கு சென்றவர்களில் குரங்கணி காட்டுக்குள் செல்ல நுழைவுக் கட்டணம் நியாயமாகச் செலுத்தி இருக்க வேண்டும். அதையும் அவர்கள் செலுத்தியிருப்பதாகத் தெரிய வந்திருக்கிறது. குறிப்பிட்ட அந்த மலையிலே திடீரென்று பிடித்த தீ குறித்து Forest Survey of India– FSI முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருக்கிறது. குறிப்பாக, SMS மற்றும் e–mail மூலமாக எச்சரிக்கை விடுத்திருக்கிறது. ஆனால், அதிகாரிகள் அனுமதித்தார்களா என்பது தெரியவில்லை. அதுமட்டுமின்றி அப்படிச் சென்றவர்களோடு, காட்டுப் பகுதி குறித்து உரிய வழிகாட்டுதல் அளிக்க Guides அனுப்பப்படவில்லை. இதுபற்றி விசாரிக்க IAS அதிகாரி திரு. அதுல்ய மிஸ்ரா அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்து, 2 மாதத்திற்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள். ஆனால், FSI அளித்த எச்சரிக்கையின்படி, வனத் துறையினர் உடனடியாகச் செயல்பட்டிருந்தால் நிச்சயமாக இந்தத் தீ விபத்தால் ஏற்பட்ட உயிரிழப்பைத் தடுத்திருக்க முடியும். தீ விபத்து இயற்கைப் பேரிடராக இருக்கலாம். ஆனால், குரங்கணி மலையேற்றத்திற்குச் சென்றவர்களுக்கு நிகழ்ந்துள்ள உயிரிழப்பை இயற்கைப் பேரிடர் என்று நாம் எடுத்துக்கொள்ள இயலாது. FSI அதிகாரிகள் அளித்துள்ள பேட்டி ஒன்றில், மற்ற மாநிலங்களில் 2,000–க்கும் மேற்பட்டோர் இதுபோன்ற தீ பற்றிய எச்சரிக்கையை முன்கூட்டியே தெரிந்து கொள்ளக்கூடிய SMS warning பெறுவதற்கு தங்கள் mobile phone–ஐ FSI–உடன் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் 250 பேர் மட்டுமே பதிவு செய்திருக்கிறார்கள் என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, FSI–உடன் SMS warning செய்தி பெறுவதற்கு அனைத்து வனத் துறை ஊழியர்களும் குறிப்பாக, மலைப் பகுதிகள் மற்றும்

காட்டுப் பகுதிகளில் உள்ள ஊழியர்கள் தங்கள் மொபைல் எண்ணை பதிவு செய்துகொள்ள அரசு உத்தரவிட வேண்டும். இதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தி, மலையேற்றப் பயிற்சி மையங்கள் நடத்துபவர்களும் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்பதை licence நிபந்தனைகளில் ஒன்றாக கட்டாயமாக சேர்க்க வேண்டும். மலையேற்றப் பயிற்சி மையங்களை அவ்வப்போது ஆய்வு செய்து, குறிப்பாக மாவட்டங்களில் உள்ள மலைகளில் மலையேற்றத்திற்குச் செல்லக்கூடியவர்கள், அதற்கு முன்பு வனத் துறையைச் சேர்ந்த அரசுச் செயலாளருக்கு தகவல் அளிக்க வேண்டுமென்பது நிபந்தனையாக்கப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, வனத் துறைக்கு மேலும் அதிகமாக களப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, இதுபோன்ற விபத்துகள் குறித்து முன்கூட்டியே கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய நிதியுதவியை அதிகரிக்க வேண்டுமெனவும், மேலும் சிகிச்சை பெற்று வரக்கூடியவர்களுக்கு உயர்தர சிகிச்சை அளிக்கக்கூடிய வகையில் இந்த அரசு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும் இந்த அவையினுடைய கவனத்தை ஈர்த்து நான் அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வனங்களிலே தீ ஏற்படுவது ஒரு சகஜமான நிலைதான். ஆனால், குரங்கணி மலையிலே ஏற்பட்டிருக்கக்கூடிய அசம்பாவிதத்தைப் பொறுத்தமட்டில், மலையேற்றப் பயிற்சியைப் பெறுவதற்காகச் செல்லும்போது அவர்கள் உரிய அனுமதியைப் பெற்றார்களா இல்லையா? மலையேற்றக் குழுவைச் சார்ந்தவர்கள் அனுமதியைப் பெற்றதாகச் சொல்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி பெறவில்லை என்று சொல்கிறார்கள். இன்னொன்று, அந்தப் பயிற்சியிலே ஈடுபட்ட 17 பேர் இறந்திருக்கிறார்கள்; மொத்தம் 39 பேர் அந்தத் தீயிலே சிக்கியிருக்கிறார்கள். வனத் துறையினர் இவர்களுக்குப் போதுமான உதவிகளை ஏன் செய்யவில்லை? வனத் துறையைச் சார்ந்த ஊழியர்கள் போதுமான அளவில் அங்கே இருக்கிறார்களா? இதைத் தொடர் கதையாக ஆகவிடாமல், இந்த அரசு இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்; வனங்கள் காப்பாற்றப்பட வேண்டும். இதிலே, இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும். இதிலே உயிரிழந்தவர்களுக்கு இழப்பீடு வழங்கியிருக்கிறீர்கள்.





இதேபோல, காயமடைந்தவர்களுக்கு உரிய வைத்தியம் செய்ய வேண்டும். அவர்களுக்கும் அரசு உதவி செய்ய வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் அவர்களும், தேனி வனக் கோட்டம், கொட்டக்குடி காப்புக்காட்டில், குரங்கணி பகுதியில் ஏற்பட்டுள்ள தீ விபத்தைப் பற்றி கவன ஈர்ப்பு கொண்டு வந்திருக்கின்றார்கள். அதற்கு நான் விளக்கம் அளிக்கின்றேன்.

2014–2015 ஆம் ஆண்டில் தமிழ்நாடு உயிர்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கும் திட்டத்தின் (Tamil Nadu Bio–diversity Conservation and Greening Project) கீழ் முதுவாக்குடி பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்தின் ஒரு பகுதியாக சூழலியல் மேம்பாட்டுக் குழு அமைத்து, சமுதாயம் சார்ந்த சூழலியல் சுற்றுலா (Community Based Eco Tourism) தொடங்க, 11.4 கிலோ மீட்டர் நீளத்திற்கு, 7 முதல் 10 அடி அகலம் கொண்ட ஒரு மலையேற்றப் பாதை அமைக்கப்பட்டது. இந்த மலையேற்றப் பாதை, போடி சரகத்திலுள்ள கொட்டக்குடி காப்புக்காட்டில் உள்ளது. குரங்கணியில் தொடங்கும் இந்த மலையேற்றப் பாதை தமிழ்நாடு–கேரளா மாநில எல்லையில் உள்ள Top Station வரை செல்கின்றது. இப்பாதையின் மையப் பகுதி மற்றும் Top Station பகுதிகளில் இவ்வனப் பகுதியை நன்கு அறிந்த பழங்குடியினர், சூழலியல் மேம்பாட்டுக் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு, இப்பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உதவிபுரிகின்றனர்.

சுற்றுலாப் பயணிகள் குரங்கணியிலிருந்து Top Station வரை செல்வதற்கும், கேரள மாநிலப் பகுதிகளிலிருந்து Top Station வழியாக குரங்கணி வருவதற்கும், ஒரு நாளைக்கு, ஒரு நபருக்கு 200 ரூபாய் வீதம் நுழைவுச் சீட்டு பெற்றுச் செல்ல வேண்டும். இந்தத் தொகையானது, சூழலியல் மேம்பாட்டுக் குழுவின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, முதுவாக்குடி பழங்குடியினரின் நலனுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

*10–3–2018* அன்று ஈரோடு மற்றும் திருப்பூர் பகுதியினைச் சார்ந்த *12* நபர்கள் கொண்ட குழு ஒன்று, குரங்கணிக்கு வந்துள்ளது. அன்றைக்கே குரங்கணியிலிருந்து Top Station செல்வதற்கு, சூழலியல் மேம்பாட்டுக் குழுவிலிருந்து *12* நுழைவுச் சீட்டுகள் பெற்றுச் சென்றுள்ளனர். ஆனால், இக்குழு மேற்காணும் பகுதிக்குச் செல்வதற்குப் பதிலாக, மலையேற்றத்திற்கு அங்கீகரிக்கப்படாத குரங்கணியிலிருந்து கொட்டக்குடி காப்புக்காடு வழியாக, *7.1* கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள கொழுக்குமலை தனியார் தேயிலைத் தோட்டத்திற்குச் சென்றுள்ளனர். கொழுக்குமலையில் உள்ள தனியார் தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கும், அப்பகுதியில் உள்ள கிராம மக்களுக்கும் மட்டுமே இப்பாதையில் செல்ல அனுமதி உள்ளது. இந்தக் குழுவினர் *10–3–2018* அன்று இரவு, கொழுக்குமலை தனியார் தேயிலைத் தோட்டத்தில் தங்கியுள்ளனர். இவர்கள் பெற்ற நுழைவுச் சீட்டு, *10–3–2018* அன்று மட்டுமே செல்லத்தக்கதாகும். அன்று இரவே அந்த நுழைவுச் சீட்டு காலாவதியாகிவிட்டது. மேலும், இதுபோன்ற குழுக்கள், இப்பகுதியில் இரவில் தங்குவதற்கு அனுமதி கிடையாது. இக்குழுவினர், *11–3–2018* அன்று முன் அனுமதி ஏதுமின்றி, மலையேற்றத்திற்கு அங்கீகரிக்கப்படாத பாதையின் வழியாக, கொழுக்குமலையில் தனியார் தேயிலைத் தோட்டத்திலிருந்து, கொட்டக்குடி காப்புக் காடு வழியாக குரங்கணிக்குச் சென்று கொண்டிருந்தனர்.

இதேபோன்று, சென்னையிலிருந்து *27* நபர்கள் கொண்ட மற்றொரு குழு, சென்னை மலையேற்றச் சங்கம் மூலமாக குரங்கணிக்கு *10–3–2018* அன்று வந்தடைந்தனர். அங்கிருந்து வனத் துறையினரிடம் எந்தவித முன் அனுமதியும் பெறாமல், கொட்டக்குடி காப்புக் காடு வழியாக மலையேற்றத்திற்கு அங்கீகரிக்கப்படாத பாதையில், கொழுக்குமலை தனியார் தேயிலைத் தோட்டத்திற்குச் சென்று, அன்றிரவு அங்கு தங்கியுள்ளனர். இந்தத் தனியார் தேயிலைத் தோட்டம் ஓய்வு இல்லமாகச் செயல்படுவதற்கு அனுமதி ஏதும் பெறப்படவில்லை என்று தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். இக்குழுவிலுள்ள *27* நபர்களில், மூன்று நபர்கள் கேரளாவிற்குச் சென்று விட்டனர். மற்ற *24* நபர்கள், மலையேற்றத்திற்கு அங்கீகரிக்கப்படாத வழிப்பாதைமூலம் கொட்டக்குடி காப்புக் காடு வழியாக *11–3–2018* அன்று மலையேற்றத்தைத் தொடங்கியுள்ளனர். இந்த இரண்டு குழுவினரும் *11–3–2018* அன்று கொழுக்குமலையிலிருந்து குரங்கணிக்குச்





செல்வதற்கு எந்தவிதமான அனுமதியும் பெறவில்லை. இவ்வாறு வரும்பொழுது, எதிர்பாராதவிதமாக அன்றைய தேதியில் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கிக் கொண்டனர்.

*முற்பகல் 11–35*

இந்த இரண்டு குழுக்கள், *10–3–2018* அன்று குரங்கணியிலிருந்து கொழுக்குமலை தனியார் தேயிலைத் தோட்டத்திற்குச் செல்லும்போது தீ ஏதுமில்லை. அதுமட்டுமல்லாமல், களத்தின் தன்மையின் அடிப்படையிலும் மற்றும் இந்திய வன நில அளவை நிறுவன அறிக்கையின்படியும், கொட்டக்குடி காப்புக் காட்டில் கடைசியாக தீ நிகழ்வு ஏற்பட்ட நாள் *15–2–2018* ஆகும். இத்தீ, வனத் துறையால் அணைக்கப்பட்டது. இத்தீ அணைக்கப்படவில்லையென்றால், இந்திய வன நில அளவை நிறுவனத்திடமிருந்து தொடர் எச்சரிக்கை பெறப்பட்டிருக்கும். கடந்த பல நாட்களில், இப்பகுதிகளில் தீ நிகழ்வு குறித்து எச்சரிக்கை எதுவும் அந்நிறுவனத்திடமிருந்து பெறப்படவில்லை.

வனத் துறை களப் பணியாளர்கள் தீ நிகழ்வு ஏற்பட்டதை *11–3–2018* அன்று மதியம் *2–30* மணியளவில் கண்டறிந்தனர். திரு. முத்துப்பாண்டி, வனக் காவலர் மற்றும் மூன்று சூழலியல் மேம்பாட்டுக் குழு உறுப்பினர்கள் தீயினை அணைக்கும் பொருட்டு தீ நிகழ்வு ஏற்பட்ட பகுதிக்கு விரைந்து சென்றுள்ளனர். இவர்கள் இப்பகுதிக்கு மாலை சுமார் *5–00* மணியளவில் சென்றபோதுதான், மலையேற்றக் குழுவினர் தீயில் சிக்கிக் கொண்டது தெரிய வந்தது. இதுமட்டுமல்லாமல், தீ விபத்தில் சிக்கிக் கொண்டவர்கள் *108* ஆம்புலன்ஸ் கட்டுப்பாட்டு மையத்திற்கும், அவர்களது உறவினர்களுக்கும் தகவல் தெரிவித்தனர்.

இதற்கிடையில், போடி வட்டத்தில் அணைக்கரைப்பட்டி பகுதியிலுள்ள சன்னியாசிபுரத்தில், தேனி மாவட்ட ஆட்சியர் தலைமையில் தீ விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், அவருக்கு அத்தீவிபத்து பற்றி தெரியவந்தது. மாவட்ட ஆட்சித் தலைவருடன், அந்நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்த திரு. மகேந்திரன், உதவி வனப் பாதுகாவலர் மற்றும் இதர வனத் துறை களப் பணியாளர்களை, தீ விபத்து நிகழ்ந்த பகுதிக்கு உடனடியாக விரைந்து செல்லும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டார். திரு. மகேந்திரன், பிற வனப் பணியாளர்கள் குழுவுடன் தீ விபத்து நடந்த பகுதிக்கு மாலை சுமார் *6–30* மணியளவில் சென்றார்.

இந்தத் தகவல் கிடைக்கப் பெற்றவுடன், மலைப்பகுதியில் சிக்கியவர்களை பத்திரமாக மீட்க அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டேன். எனது வேண்டுகோளுக்கு இணங்க மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், வனத் துறை உயர் அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர், காவல் துறை கண்காணிப்பாளர், மாவட்ட வன அலுவலர் உள்ளிட்டோர் குரங்கணிக்கு விரைந்து சென்று, மீட்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வந்தனர்.

மலைப்பகுதியில் சிக்கியவர்களை மீட்பதற்கு ஏதுவாக தீயணைப்பு வாகனங்கள், ஆம்புலன்ஸ் ஆகியவை பணியில் ஈடுபடுத்தப்பட்டன. எனது உத்தரவின்பேரில், போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணியை மேற்கொள்ள அருகிலுள்ள மாவட்டங்களிலிருந்து தீயணைப்புத் துறையினர், வனத் துறையினர், வருவாய்த் துறையினர் மற்றும் காவல் துறையினர் தேவையான உபகரணங்களுடன் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மீட்புப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகத்திடமிருந்து தமிழ்நாடு அரசு ஹெலிகாப்டர்களைக் கோரியது. மாண்புமிகு அம்மாவின் அரசு மீட்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து போர்க்கால அடிப்படையில் 11–3–2018 அன்று இரவு முழுவதும் மேற்கொண்டது.

எனது உத்தரவின் பேரில், 12–3–2018 அன்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அரசு முதன்மைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் குரங்கணிக்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை மேற்பார்வையிட்டனர். நானும், மதுரைக்குச் சென்று தீக்காயம் அடைந்தவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினேன்.

காட்டுத் தீயில் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வரும் நபர்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்க மாவட்ட நிருவாகத்திற்கும், மருத்துவத் துறையினருக்கும் நான் உத்தரவிட்டேன்.

மலை ஏற்றத்தில் ஈடுபட்ட 36 நபர்களில், 10 நபர்கள் காயமின்றி மீட்கப்பட்டனர். 17 நபர்களுக்கு பலத்த தீக்காயங்கள்





ஏற்பட்டன. மீதம் 9 நபர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டனர். இறந்தவர்களின் உடல்கள் பாதுகாப்புத் துறையின் ஹெலிகாப்டர்கள் மூலம் 12–3–2018 அன்று எடுத்து வரப்பட்டது. தீக்காயம் அடைந்தவர்களை மீட்டு, குரங்கணியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதல் உதவி அளிக்கப்பட்டு, பின்னர் தேனியில் உள்ள பல்வேறு அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மிகவும் பலத்த தீக்காயம் அடைந்தவர்களுக்கு மதுரையிலுள்ள அரசு மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை வழங்கப்பட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் நிஷா என்பவர் 12–3–2018 அன்று உயிரிழந்தார்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த 10 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டேன்.

மேலும், காட்டுத் தீ சம்பவம் தொடர்பாக, உரிய விசாரணை மேற்கொள்ளவும், வனத் துறையினரிடம் உரிய அனுமதி பெறாமல் மலையேற்றத்திற்கு அழைத்துச் சென்றவர்கள்மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கவும் நான் உத்தரவிட்டேன்.

இந்தத் துயர சம்பவத்தில் உயிரிழந்த 10 நபர்களின் குடும்பத்திற்கு தலா 4 இலட்சம் ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 1 இலட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

உயரிய சிகிச்சை அளிக்கப்பட்டும், தீக்காயம் அதிகமாக இருந்த காரணத்தினால், சிகிச்சை பலனின்றி திரு. விபின் என்பவரின் மனைவி திவ்யா, திரு. விவேக் என்பவரின் மனைவி திவ்யா, திரு. பழனிச்சாமி என்பவரின் மகள் தேவி, திரு. முத்துமாலை என்பவரின் மகள் அனுவித்யா, திரு. கிரி என்பவரின் மகன் கண்ணன், திரு. சரவணன் என்பவரின் மனைவி சக்தியகலா மற்றும் திரு. ராமசாமி என்பவரின் மகன் திரு. சதீஷ்குமார் ஆகிய 7 நபர்கள் இறந்துள்ளனர். இவர்களது குடும்பத்தினருக்கும் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தலா 4 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும்.

விபத்து நடந்த பகுதியில், எண்ணெய் பதம் கொண்ட உயர்ந்து வளர்ந்த சுக்குநாரி புற்கள் அதிகம் இருந்ததால் தீ

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 மார்ச் 19

மிகவும் விரைவாகப் பரவியுள்ளது. இக்குழுவினருக்கு தீ விபத்து ஏற்பட்டபோது, அவர்கள் மதிய உணவுக்குப் பின்னர் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தனர்.

முற்பகல் 11–40

Top Station–ல் இருந்து குரங்கணிக்கு மலையேற்றம் செல்வதற்கு நுழைவுச் சீட்டு பெற்றிருந்தும், 12 நபர்கள் அங்கீகரிக்கப்படாத வேறு பாதையில் கொழுக்குமலைக்குச் செல்வது தொடர்பான தகவல் திரு. ஜெயசிங், வனவருக்கு கிடைக்கப் பெற்றது என்பது வனத் துறையின் முதற்கட்ட விசாரணையின்போது தெரிய வந்தது. அந்த வனவரும், விசாரணையின்போது இதனை ஏற்றுக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளார். எனவே, அவர் 12–3–2018 அன்றே தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அனுமதியின்றி 12 நபர்களை காப்புக் காடு பகுதிக்குள் அழைத்துச் சென்ற காரணத்தினால், போடி வட்டம், முந்தல் பகுதியைச் சேர்ந்த திரு. கணேசன் மகன் திரு. ரஞ்சித்குமார் என்பவர் மீது தமிழ்நாடு வனச் சட்டம், 1882, பிரிவு 21, உட்பிரிவு (டி)–ன்படி 12–3–2018 அன்று போடி வனச் சரக வனக் குற்ற எண் 13/2018–ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு விதிமீறல்களுக்கு, சென்னை மலையேற்றச் சங்கம் மற்றும் ஈரோட்டில் உள்ள Tour de India ஆகிய நிறுவனங்களின்மீது காவல் துறையும் சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தத் தீ விபத்து குறித்தும், மலையேற்ற சுற்றுலாவை ஏற்பாடு செய்யும் நிறுவனங்கள் மற்றும் வனத் துறை அலுவலர்களால் ஏற்பட்ட குறைபாடுகள் குறித்தும், மலையேற்றத்திற்கு அனுமதி வழங்குவது குறித்து மறு ஆய்வு செய்வதற்கும், எதிர்காலங்களில் இதுபோன்ற நிகழ்வு ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பரிந்துரைகளை வழங்கவும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, ஐ.ஏ.எஸ்., அவர்கள் விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். இரண்டு மாத காலங்களில் அவர் தனது அறிக்கையினைச் சமர்ப்பிக்க தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2018 மார்ச் 19]

## 6. அறிக்கைகள் அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (குறுக்கீடுகள்)

(திரு. எம். தமிமுன் அன்சாரி, திரு. சே. கருணாஸ், திரு. உ. தனியரசு மற்றும் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் ஆகியோர் எழுந்து நின்று பேச முயன்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையெல்லாம் எனது ஆய்வில் இருக்கின்றன, உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. இன்று காலையில்தான் வந்து கொடுத்திருக்கிறீர்கள். அது குறித்து நான் ஆய்வு செய்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுவதெல்லாம் ரெக்கார்டு ஆகாது. அவையெல்லாம் பதிவாகாது. காலையில் நீங்கள் 9–50 மணிக்கு என்னிடத்தில் கொடுத்திருக்கிறீர்கள். அரசுக்கு அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தால் நான் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்கு என்ன செய்வது? இப்பொழுதுதானே என்னிடம் வந்து கொண்டுவந்து கொடுத்திருக்கிறீர்கள்? அரசிடமிருந்து எனக்கு பதில் வர வேண்டும் இல்லையா? அரசிடமிருந்து எனக்கு பதில் வரட்டும். (குறுக்கீடு) திரு. தமிமுன் அன்சாரி, நீங்கள் இன்று காலையில் 10–30 மணிக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அதனை அரசுக்கு அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தால் நான் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

(உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி அவர்கள் அவையிலிருந்து வெளியேறினார்.)

**திரு. சி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை சிறப்பாக வழிநடத்தி வரும் எனது அரசியல் ஆசான்

[திரு. சி. ராஜா] [2018 மார்ச் 19

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

(திரு. சே. கருணாஸ், திரு. உ. தனியரசு மற்றும் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2016–2018 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது மற்றும் நான்காவது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். வணக்கம். (குறுக்கீடு)

## 4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

### (ஆ) எண்ணிக்கை அடிப்படையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு சட்டமன்றத்தில் பேச வாய்ப்பு வழங்கக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திலே பங்கேற்று உரையாற்றவிருக்கிறவர்களுடைய பட்டியலை நான் பார்த்தேன். அதிலே ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க.–விற்கு 3 உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 2 உறுப்பினர்களுக்கும் பேசுவதற்கு நீங்கள் அனுமதி தந்திருக்கிறீர்கள். நான் கேட்க விரும்புவது என்னவென்றால், ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க.–வைப் பொறுத்தவரையில், அமைச்சர்களின் எண்ணிக்கையைக் கழித்து, 77 பேர் சட்டமன்ற உறுப்பினர்கள். எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் 89 பேர். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கணக்கை ஏற்கெனவே இதே அவையில் நடந்து முடிந்த ஆளுநர் உரையின்மீது நடைபெற்ற விவாதத்திலே, அப்போது நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே நாங்கள் தங்களிடத்தில் இந்தக் கருத்தை எடுத்துச் சொன்ன நேரத்தில், ஆளுங்கட்சி சார்பாக 2 உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சி சார்பாக 2 உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு வழங்க நீங்கள் சம்மதம் தந்து, அந்த அடிப்படையில்தான் கவர்னர் உரைமீது விவாதம் நடந்து முடிந்திருக்கிறது. ஆனால், இப்போது



2018 மார்ச் 19] [திரு. மு.க. ஸ்டாலின்]

நிதிநிலை அறிக்கை மீது நடைபெறவிருக்கிற விவாதத்திலே இந்த மாற்றம் செய்யப்பட்டிருப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம்.

முற்பகல் 11–45

எனவே. ஆளுங்கட்சியைச் சேர்ந்த 3 உறுப்பினர்களுக்கு வாய்ப்பளித்தால், எங்கள் கட்சியிலும் 3 உறுப்பினர்களுக்கு தயவுகூர்ந்து வாய்ப்பளிக்க வேண்டும். இல்லையென்று சொன்னால், எங்கள் கட்சியின் சார்பாக 2 உறுப்பினர்களுக்குத்தான் பேசுவதற்கு வாய்ப்பளிக்க முடியும் என்று சொன்னால், ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய அவர்களுக்கும், அவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இரண்டு உறுப்பினர்களுக்கு மட்டும்தான் வாய்ப்பளிப்பது முறையாக இருக்கும் என்பதை நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பியிருக்கும் இந்த வினாவைப் பொறுத்தவரையில், பொதுவாக உறுப்பினர்களின் அடிப்படையில்தான், எத்தனை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள் என்ற அடிப்படையில்தான் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று வருகிறது. ஆளுங்கட்சியின் உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை, அமைச்சர்களுடைய எண்ணிக்கையைக் கழித்து என்றைக்கும் கணக்கிட்டது கிடையாது. அப்படிக் கணக்கிடுவது முறையல்ல. (குறுக்கீடு) இல்லை. ஆளுநர் உரை விவாதத்தின்போது நீங்கள் எல்லாம் வைத்த வேண்டுகோள், சூழ்நிலை கருதி, அன்றைக்கு இருந்த சூழ்நிலைக்கு நான் அவர்களிடம் வேண்டுகோள் வைத்தேன். பரவாயில்லை, இரண்டு பேர் பேசி முடித்து விடுங்கள் என்று நான் request செய்ததால் அவ்வாறு நடந்தது. அதே முறையைப் பின்பற்ற முடியாது, ஒன்று.

இரண்டாவதாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த அவையில் நடக்கின்ற விவாதங்களைப் பார்த்தீர்களென்று சொன்னால், அந்தப் பக்கம் ஆளுங்கட்சியில் மூன்று பேர் என்று இருந்தாலும், 40 நிமிடம், 45 நிமிடங்களுக்குமேல் அவர்களுடைய விவாதம் போவதில்லை. ஆனால், பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இரண்டு பேரை பேச அனுமதிக்கிறோம். அவ்வாறு அனுமதித்தால் குறைந்தது முக்கால்

மணி நேரம், ஒரு மணி நேரம், ஒன்றேகால் மணி நேரம் எல்லாம் ஓர் உறுப்பினர் பேசியிருக்கிறார். நான் அனுமதி அளித்திருக்கிறேன். ஆகவே, நேரம்தான் எனக்கு முக்கியம். (குறுக்கீடு) இல்லை, இல்லை. இதில் பேசுவதற்கு அனுமதிப்பதிலே எனக்கு நேரம்தான் முக்கியம். ஆளுங்கட்சி என்றால் அதற்குரிய அந்தஸ்தை நான் வழங்க வேண்டும். எதிர்க்கட்சி என்றால் அதற்குரிய அந்தஸ்து. என்றைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அடிப்படையில்தான் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை பதிவாகிறதேயொழிய, அமைச்சர்களைக் கழித்துக்கொண்டு கணக்கு போடுவது சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் முதலில் சொன்னீர்களே, அதையே நான் ** இந்த அவையில் எல்லோருக்கும் ஒரே அந்தஸ்துதான். (மேசையைத் தட்டும் ஒலி) ** இரண்டாவதாக, அன்றைக்கு இருக்கிற சூழ்நிலை என்றால், அது என்ன? இன்றைக்கு என்ன சூழ்நிலை? (குறுக்கீடு) நீங்கள் அன்றைக்கு விட்டுவிட்டீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அன்றைக்கே சொன்னேன். (குறுக்கீடு) தற்காலிகமாக நான் இன்றைக்கு அவர்களில் மூன்று பேரை பேசுவதற்கு அனுமதித்திருந்தாலும், நேரத்தின் அருமை கருதி, அதில் ஒருவரை எடுத்துவிட்டு நான் பேசச் சொல்கிறேன் என்று அன்றைக்கே சொன்னேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரை மணி நேரம், ஒரு மணி நேரம் என்று சொல்கிறீர்களே, நாங்கள் பேசுவதற்கு 10 நிமிடம் கொடுப்பீர்கள். அந்த 10 நிமிடத்திற்குள் 12 மந்திரிகள் அவர்கள் இஷ்டத்திற்கு படியோ படி என்று படிக்கிறார்கள், பேசுகிறார்கள். அப்புறம் திடீரென்று ஐந்து நிமிடத்தில் பேசி முடியுங்கள் என்று நீங்கள் சொல்கிறீர்கள். குறுக்கீடுகள் இல்லை என்றால், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்திற்குமேல் பேசுகிறார்களா என்று பந்தயம் கட்டலாமா? எல்லாம் அமைச்சர்கள்தான் பேசுகிறார்கள்; எங்கள் தலைமேல் விழுகிறது. அதை ஒப்புக்கொள்ள முடியாது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு தெரியாதது இல்லை. உங்களுக்கு இந்த அவையில் நீண்ட அனுபவம் இருக்கிறது. (குறுக்கீடு) நான் சொல்கிறேன், எனக்கு இந்த அவையை நடத்துவதில் இருக்கின்ற சூழ்நிலை, நேரத்தின் அருமை கருதி சில முடிவுகளை நான் எடுக்க வேண்டியதிருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில்தான் நான் சிலவற்றை ஒப்புக்கொள்கிறேன். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்பு தரக் கூடாது என்பது அல்ல. உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் கேட்கிற கேள்விகளுக்கு பல நேரங்களில் அமைச்சர்கள் 2 பேர், 3 பேர் பதில் சொல்ல வேண்டிய சூழ்நிலை வருகிறது, விளக்கம் சொல்ல வேண்டியது வருகிறது. அதற்கு நான் ஒன்றும் சொல்ல முடியாது. நான் முழுக்க முழுக்க ஆளுங்கட்சிக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறேனோ, அதே அளவிற்கு எதிர்க்கட்சியான உங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறேன். இன்னும் சொல்லப்போனால், நேரத்தைப் பொறுத்தவரை அவர்களைவிட உங்களுக்குக் கூடுதலான நேரத்தை நான் நிறைய ஒதுக்கித் தந்திருக்கிறேன். ஆகவே, இதை ஏற்று நீங்கள் எனக்கு ஒத்துழைக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இந்த அந்தஸ்து பற்றி எல்லாம் சொன்னீர்கள், அதெல்லாம் ஒன்றும் இல்லை. எல்லா உறுப்பினர்களும் சமமான உறுப்பினர்கள்தான். அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. அவர்கள் ஆளுங்கட்சியில் இருக்கிறார்கள், நீங்கள் எதிர்க்கட்சியில் இருக்கிறீர்கள்; அவ்வளவுதான். எல்லா உறுப்பினர்களும் இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சமமான உறுப்பினர்கள்தான்.

*முற்பகல் 11–50*

பேரவைத் தலைவரைப் பொறுத்தவரை, எல்லா உறுப்பினர்களுக்கும் என்னிடத்தில் ஒரே சம அளவில் மரியாதைதான் உள்ளது. ஆகவே, அதைப் பெரிதுபடுத்த வேண்டாம். நீங்கள் எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே…

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மைக் கொடுங்கள். (குறுக்கீடு) அவர் பேச மைக் கொடுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஏன் இதற்கு தகராறு? உங்களுக்கு இவ்வளவு நேரம்,

[திரு. துரைமுருகன்] [2018 மார்ச் 19

அவ்வளவு நேரம் என்று தயவுசெய்து பங்கிட்டுக் கொடுங்கள். நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். இவ்வளவு நேரம் பேச வேண்டும் என்று time கொடுத்து பேச allow பண்ணுங்கள். பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எவ்வளவு நேரம் பேசலாம் என்று சொல்லிவிடுங்கள். நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் குறிப்பிடுவதுபோல் காலச் சூழ்நிலை அதற்கு ஒத்துவராது.

**திரு. துரைமுருகன்:** அங்குதான் நீங்கள் தயங்குகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 25 நிமிடங்கள் பேச வேண்டும் என்று நேரம் ஒதுக்குகிறேன். மாண்புமிகு அமைச்சர்களின் குறுக்கீடுகள் அதிகம் இருந்தால், நானே கூடுதல் நேரம் கொடுத்து பேச allow பண்ணுகிறேன். உறுப்பினர்கள் பேசி முடிக்கட்டும், பேசி முடிக்கும் வரை நான் அனுமதித்து இருக்கிறேன். அதனால், நான் சூழ்நிலைக்கு ஏற்றவாறு பேச அனுமதியளிக்கிறேன். இப்போது நான் பேச நேரம் ஒதுக்கி allow செய்த பிறகு, நானே உறுப்பினரை உட்கார வைக்க வேண்டிய சூழ்நிலை வரும். அதெல்லாம் சரியாக வராது. எனவே, இந்தப் பிரச்சினையை விட்டுவிடுங்கள். சூழ்நிலைக்கு ஏற்றவாறு நான் பேச அனுமதி அளிப்பேன். உங்களுடைய உரிமைகள் அனைத்தையும் நான் பாதுகாப்பேன் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு, நீங்கள் பேசும்போது** என்ற ஒரு வார்த்தையைச் சொன்னீர்கள், அந்த வார்த்தை வேண்டாம். All are equal. அதனாலே, அந்த வார்த்தையை மட்டும் நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

## 7. வரவு–செலவுத் திட்டம், 2018–2019, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2018–2019 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள். நான் உங்களுக்கு 25 நிமிடங்கள் பேச வாய்ப்புத் தருகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 மார்ச் 19]

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மெதுவாக பேசினாலே நன்றாக கேட்கும். மைக் இல்லாமல் நீங்கள் பேசினாலே எல்லோருக்கும் கேட்கும். (சிரிப்பு)

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய கழகத்தினுடைய தலைவர், சமூக நீதியினுடைய போராளி, திராவிட பேரியக்கத்தினுடைய விடிவெள்ளி, கழகத்தினுடைய தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) வருங்கால தமிழகம், சட்டப் பேரவையினுடைய எதிர்க்கட்சித் தலைவர், கழகத்தினுடைய செயல் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும் எனது வணக்கத்தையும், நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2018–2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருத்துகளை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சராக உள்ள துணை முதலமைச்சர் அவர்கள் 15–3–2018 அன்று இந்த அவையில் நிதிநிலை அறிக்கையை வாசித்தார். மொத்தம் 138 பத்திகளும், 96 பக்கங்களும் உள்ளன. அதிலே, பக்க எண் 94–ல், அடுத்த ஆண்டு அ.தி.மு.க. அரசு எதிர்பார்த்து, 31–3–2019 வரையில் தமிழகத்தின் மொத்தக் கடன் ரூபாய் 3 இலட்சத்து 55 ஆயிரத்து 845 கோடியாக உயரும் என்று இவரே கணித்துச் சொல்லியிருக்கிறார். 2017–2018 ஆம் நிதியாண்டு முடிவதற்கு இன்னும் 12 நாட்கள் இருக்கின்றன. அதனுடைய கடனை இந்தப் பக்கத்திலே அவர் வெளியிடவில்லை. கடந்த ஆண்டு புத்தகத்திலேயே 3 இலட்சத்து 14 ஆயிரத்து 366 கோடி ரூபாய் இந்த நிதியாண்டு முடிகின்றபோது கடன் இருக்கும் என்று அறிவித்திருக்கிறார்.

முற்பகல் 11–55

பேஸ்புக், வாட்ஸ்அப், டிவிட்டர் இதுபோன்ற சமூக ஊடகங்களில் ஒரு செய்தி வந்தது. அது என்னவென்றால், கடன்

[திரு. ப. ரங்கநாதன்] [2018 மார்ச் 19

வாங்கி, ** சமூக ஊடகங்களில், வலைதளங்களில் செய்திகள் பரவி இருக்கின்றன. கடன் உயர்வதற்குக் காரணமே இதுபோன்ற பணிகளால்தான். இதுபோன்ற பணிகளுக்காகத்தான் இந்த ஆண்டு கடன் உயர்ந்திருக்கின்றது, வருகின்ற நிதியாண்டிலும் உச்சபட்சமாக 3,55,845 கோடி ரூபாய் அளவுக்குக் கடன் உயரும் என்று எதிர்பார்த்து அறிவித்திருக்கின்றார்கள். ஆனால், எப்போதும் யாராவது கடன் வாங்கி ஒரு தொழில் துவங்கினாலோ, கல்யாணம் அல்லது வேறு ஏதாவது வேலையைச் செய்தாலோ, அடுத்த ஆண்டு வருவதற்குள் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்திவிடுவார்கள். ஆனால், 3 ஆண்டுகளாக அ.தி.மு.க. ஆட்சியில் கடன் அளவு சொல்லப்படுகிறது. 2016–2017 ஆண்டுக்கு மட்டும் கடன் அளவு 2,52,431 கோடி ரூபாய். அதில் அந்த ஆண்டு பற்றாக்குறை 40,529 கோடி ரூபாய் ஆகும். அதற்கு வட்டி 21,715.67 கோடி ரூபாய். இந்த 40 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கி, மூலதனப் பணிகளுக்காக செலவு செய்த தொகை வெறும் 22,362 கோடி ரூபாய். இது 2016–2017 ஆம் ஆண்டில். 2017–2018 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை 38,525 கோடி ரூபாய், மூலதனக் கணக்கில் செலவு 27,789 கோடி ரூபாய் என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த ஆண்டு 31 மார்ச் மாத இறுதிவரையில் கடன் தொகை 3,14,366 கோடி ரூபாய் ஆகும். தமிழக மக்கள் ஒவ்வொருவர் தலையிலும் ஏறத்தாழ 45 ஆயிரம் ரூபாய் கடனை சுமத்தி உள்ளார்கள், உயர்த்தி உள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் அரசு பெற்ற கடன்களைப் பற்றி ஒரு நீண்ட, நெடிய விளக்கத்தினை அவருக்கே உரிய பாணியில் சொன்னார்கள். உச்சந்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போட எண்ணி எதை எதையோ தொட்டு, துழாவி பல கருத்துகளை இங்கே சொல்கின்றார். மொத்தக் கடனை அவர் சொல்லி, 'நீங்கள் மூலதனக் கணக்கிற்கு குறைவாகச் செலவிட்டிருக்கின்றீர்கள்' என்ற கருத்தையும் இங்கே பதிய வைக்கின்றார். அது தவறு. பொதுவாகவே நீண்ட விளக்கங்களைச் சொன்னால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கோபித்துக்கொள்வார்கள் என்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 மார்ச் 19] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கருதி இங்கே சுருக்கமாக நான் சொல்கின்றேன். பொதுவாக உலக அளவில் பல்வேறு நாடுகளும், மத்திய அரசும், மாநில அரசும் ஆண்டுதோறும் கடன் பெறுவதும், பெற்ற கடனை அரசுப் பணிகளுக்கு பயன்படுத்துவதும் நடைமுறையில் உள்ள வழக்கம்தான். எந்தக் கட்சி ஆண்டாலும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும், மற்ற பிற கட்சிகளாக இருந்தாலும், பிற மாநில அரசுகளாக இருந்தாலும், மத்திய அரசாக இருந்தாலும் இதுதான் பொதுவான நடைமுறையாக, கடைபிடித்து வருகின்ற உண்மை நிலையாகும். 2015–2016 ஆம் ஆண்டு இறுதியில் தமிழக அரசினுடைய மொத்த நிலுவைக் கடன் 2.11 இலட்சம் கோடி ரூபாயாகத்தான் இருந்தது. இது 2016–2017 ஆம் ஆண்டு இறுதியில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தினுடைய கடன் 22,815 கோடி ரூபாயை அரசு ஏற்றுக்கொண்டதன் விளைவாக, மொத்த நிலுவைக் கடன் அளவு 2.71 இலட்சம் கோடி ரூபாயாக உயர்ந்தது.

நண்பகல் 12–00

2017–2018 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளின்படி, நடப்பாண்டின் இறுதியில் நிலுவைக் கடன் 3.12 இலட்சம் கோடி ரூபாயாகவும், 2018–2019 ஆம் ஆண்டு இறுதியில் 3.56 இலட்சம் கோடி ரூபாயாக இருக்கும் என்றும் கணக்கிடப்பட்டு, நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுக் கடனை ரூபாய் மதிப்பளவில் பார்ப்பது சரியன்று. மாநிலத்தினுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் கடனின் விகிதாச்சார அளவே, கடன் அளவைக் குறிப்பிடும் அளவுகோலாகும். (குறுக்கீடு) இங்கே கவனியுங்கள். ஏனெனில், ஆண்டுதோறும் பொருளாதார உற்பத்தி மதிப்பு உயர்ந்து வரும் நிலையில், கடனை திருப்பிச் செலுத்துவதற்கான அரசின் திறனும் அதிகரித்தவண்ணம் இருக்கும். எனவே, கடனைப் பொறுத்தவரையில், மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 25 சதவிகிதத்திற்குள் இருக்க வேண்டுமென்று மத்திய நிதிக் குழு ஒரு வழிமுறையை வகுத்து, அந்தந்த மாநிலங்களுடைய உள்நாட்டு உற்பத்தி மதிப்பிற்கேற்றவாறு அனைத்து மாநிலங்களுக்கும் தந்துள்ளது. இந்த விகிதாச்சாரம் தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரையில், 2015–2016 ஆம் ஆண்டில் 17.41 சதவிகிதமாகவும், 2016–2017 ஆம் ஆண்டில் 20.27 சதவிகிதமாகவும், 2017–2018 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் 21.58 சதவிகிதமாகவும், 2018–2019 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 22.29 சதவிகிதமாகவும் இருக்கும் எனவும் கணித்திருக்கிறார்கள்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 மார்ச் 19

மத்திய அரசும், பிற மாநில அரசுகளும் பொதுக் கடன் பெற்றுத்தான் மூலதன செலவினங்கள் உட்பட பிற செலவினங்களை மேற்கொள்கின்றன. உதாரணமாக, மத்திய அரசு 2018–2019 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், 2018–2019 ஆம் ஆண்டு இறுதியில் மொத்த நிலுவைக் கடன் 89.58 இலட்சம் கோடி ரூபாயாக அதாவது, நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 48.80 சதவிகிதமாக இருக்குமென மதிப்பிட்டுள்ளது. மொத்தக் கடன் நிலுவைக்கும், மொத்த மாநில உற்பத்தி மதிப்பிற்குமான விகிதாச்சாரம் 2018–2019 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, ஆந்திரப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில், 24.09 சதவிகிதமாகவும், மத்தியப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில், 26.34 சதவிகிதமாகவும், கேரளத்தைப் பொறுத்தவரையில், 30.70 சதவிகிதமாகவும், உத்தரப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில், 29.78 சதவிகிதமாகவும், மேற்கு வங்கத்தைப் பொறுத்தவரையில், 37.63 சதவிகிதமாகவும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 2017–2018 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளின்படி, 21.58 சதவிகிதமாகவும், 2018–2019 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தின்படி, 22.29 சதவிகிதமாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

2016–2017 ஆம் ஆண்டில் நிகரக் கடன் அளவு 20.27 சதவிகித அளவிற்கு உயர்ந்ததற்கு முக்கிய காரணம், உதய் திட்டம்தான். உதய் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் கடன் 22,815 கோடி ரூபாயை அரசு ஏற்றுக்கொண்டதன் விளைவாக, அந்த ஆண்டில் மட்டும் 60,298.09 கோடி ரூபாய் அளவிற்கு நாம் கடன் பெற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதில் 37,483 கோடி ரூபாய் மூலதனத் திட்டங்களுக்காகவும், பிற மக்கள் நலத் திட்டங்களுக்காகவும், திட்டச் செலவினங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டு, மீதமுள்ள 22,815 கோடி ரூபாய் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திற்குக் கடனாக வழங்கப்பட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

2017–2018 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளிலும், 2018–2019 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளிலும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் கடனின் விகிதாச்சாரம் அதிகரித்து வருவதற்கான முக்கிய காரணம். . . (குறுக்கீடு) நீங்கள் சொன்ன அனைத்தையும் பொறுமையாகக் கேட்டுவிட்டு, இந்த



2018 மார்ச் 19] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பதிலை நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் குற்றச்சாட்டாக சொல்லிக்கொண்டே போனீர்கள்! (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடித்த பிறகு பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பதில் சொல்லி முடித்த பிறகு பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

பிற்பகல் 12–05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) இப்படி அர்த்தமில்லாமல் பேசினால் எப்படி? என்ன பேசுகிறீர்கள் என்று தெரிந்து பேசுங்கள். (குறுக்கீடு) இப்படி அர்த்தமில்லாமல் பேசினால் எப்படி? (குறுக்கீடு) இப்படி மரியாதை இல்லாமல் பேசினால் எப்படி? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், இப்படியெல்லாம் செய்வது சரியில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** எல்லோருக்கும் வாய் இருக்கிறது. (குறுக்கீடு) உங்களுக்கு மட்டும்தான் வாய் இருக்கிறது என்று நினைத்துக் கொள்ளாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், நீங்கள் இப்படிப் பேசுவதெல்லாம் சரியில்லை. (குறுக்கீடு) நீங்கள் பேசாமல் உட்காருங்கள். (குறுக்கீடு) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் விளக்கம்தானே தந்து கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) நீங்கள்

உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தினைத் தெரிவித்தார். அது ஒரு சாதாரணமான கருத்துதான். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரே வரியில் பதிலைத் தெரிவித்திருக்கலாம். (குறுக்கீடு) அவர் ஒரு நீண்ட விளக்கத்தை அளிப்பதால் வந்த வினைதான் இது. மாண்புமிகு அமைச்சர்களிடம் பதிலை கொஞ்சம் சுருக்கமாகத் தெரிவிக்கச் சொல்லுங்கள்; எல்லாம் முடிந்துவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள் ஒரு கடுமையான குற்றச்சாட்டை இங்கே சொல்லிக் கொண்டிருந்தார். எதற்கெல்லாம் செலவு செய்ய வேண்டுமென்பதைப்பற்றி, ஒரு புள்ளிவிவரத்தோடு இங்கே சொல்லிக்கொண்டிருந்த அந்த வேளையில்தான், அதற்குரிய பதிலை சொல்வதற்குத்தான் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் விளக்கமாக பதிலைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். அவர் அரசினுடைய நிலைப்பாட்டினைத் தெளிவாகத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். இது அரசினுடைய கடமை. நீங்கள் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். அதற்குரிய பதிலைத்தான் நாங்கள் தெரிவிக்கிறோம். நாங்கள் பதிலைத் தெரிவிக்கும்போது, உட்காருங்கள் உட்காருங்கள் என்று சொன்னால் எந்தவிதத்தில் சரியாக இருக்கும்? எங்களிடம் பதிலைப் பெறுவதற்காகத்தான் நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள். அதற்குரிய பதிலாகத்தான் எந்தெந்த மாநிலத்தில் எவ்வளவு கடன் சுமை இருக்கிறது என்ற புள்ளிவிவரங்களோடு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். இதில் ஒன்றும் தவறு கிடையாது. வேண்டுமென்றே மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள் எதற்கெடுத்தாலும் குறுக்கிட்டுக் கொண்டே இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் என்ன கேள்வி கேட்டிருக்கிறாரோ அதற்குத்தான் உரிய பதிலை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொல்லிக்





கொண்டிருக்கிறார். இடையிலே திரு. ஜெ. அன்பழகன் ஏன் இடைமறித்து பேசுகிறார் என்பதுதான் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. ப. ரங்கநாதன், நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள், நீங்கள் உங்களுடைய பதிலுரையில் தெரிவிக்கலாமே என்று சொன்னார். பதிலுரை அளிப்பதற்கு இன்னும் 3 நாட்கள் இருக்கின்றன. அதற்குள் இந்த விஷயம் பற்றியும், அதற்குரிய பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவில்லை என்றும் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகிவிடும் என்பதால்தான் உடனுக்குடன் சுடச்சுட பதிலை நாங்கள் உங்களுக்குத் தந்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், நன்றாகக் கேளுங்கள். நீங்களாக பேசிக் கொண்டிருந்தால் பதில் சொல்வதை எப்படி நீங்கள் புரிந்துகொள்வீர்கள்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வருடம் 2017–2018 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளிலும், 2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளிலும், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் கடனின் விகிதாச்சாரம் அதிகரித்து வருவதற்கான முக்கிய காரணம், ஊதியத் திருத்தங்களால் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியப் பலன்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பெருமளவு தொகையினால்தான். இந்தச் செலவினங்களால் ஏற்பட்டுள்ள நிலையைச் சமாளிப்பதற்கு வருவாய் வரவினங்களில் உயர்வு இல்லை. அதனால்தான், கடன் அளவு இந்த இரண்டு ஆண்டுகளிலும் அதிகரித்துள்ளது. மேலும், வருவாய் வரவினங்களில், குறிப்பாக மதுபானக் கடைகள் மூலமாகக் கிடைக்கப்பெறும் வணிக வரிகளிலும், ஆயத் தீர்வைகளின் வளர்ச்சி விகிதங்களிலும் கணிக்கப்பட்ட அளவிற்கு வருவாய் இல்லாததால் கடன் சுமை அதிகரித்துள்ளது. பொதுவாக, மற்ற மாநிலங்களிலும் ஊதிய திருத்தங்களால் நிதிப் பற்றாக்குறை அதிகரித்துள்ளது. மேலும், பொருளாதாரச் சூழ்நிலையில் நல்ல மாற்றம் ஏற்பட்டுவரும் நிலையில், வருவாய் வரவினங்களின் வளர்ச்சி விகிதங்கள் அதிகரித்து, பெறப்படும் கடன் அளவு எதிர்காலத்தில் குறைய வாய்ப்புள்ளது. இதனால் நிதிப்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 மார்ச் 19

பற்றாக்குறையும், நிலுவைக் கடனும், ரூபாய் மதிப்பின் அளவில் அதிகரித்தாலும், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதமும், நிலுவைக் கடன் விகிதமும் மத்திய அரசு விதித்த கட்டுப்பாட்டிற்குள்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், சொல்லுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் நிதியமைச்சர் அவர்கள் ரொம்ப விவரமானவர், நிதானமானவர், பொறுமையானவர், கடவுள் பக்தி உள்ளவர். அவர் பேசத் தொடங்கும்போது பழமொழி ஒன்று சொன்னார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்கூட சிரிக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். நான் உங்களைப் பார்த்துதான் சிரிக்கிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நன்றாகப் பேசுவார். அவர் பழமொழி ஒன்று சொன்னார்; உச்சந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு என்று சொன்னார். அது அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுடைய பழமொழி. ஆனால், உண்மையிலே மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போடக் கூடாது என்றுதான் பெரியோர்கள் சொல்வார்கள். ஆனால், அண்ணன் சொன்ன பழமொழி நல்ல பழமொழி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்களுக்கு நான் சொன்ன பழமொழிக்கு அர்த்தம் என்னவென்று சொல்லிவிடுகிறேன். உச்சந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுபோட நீங்கள் முயல்கிறீர்கள். உச்சந்தலையில் முடியே இல்லை என்பதைத்தான் நான் மறைமுகமாக சொன்னேன்.

பிற்பகல் 12–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள்.



2018 மார்ச் 19]

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2019 ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கை பற்றி ஒரு provision கொடுத்துள்ளீர்கள். இதில் என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்றால், வரி இல்லாத வருவாய் 11,301 கோடி ரூபாய் ஆகும். இது எப்பொழுது என்றால், 2018–2019 ஆம் ஆண்டிற்கு. அதே நேரத்தில், கடந்த ஆண்டு வரியில்லாத வருவாய் 2017–2018 ஆம் ஆண்டில் 12,318 கோடி ரூபாய் ஆகும். கிட்டத்தட்ட ஆயிரம் கோடி ரூபாய் இப்பொழுது குறைந்து உள்ளது. நீங்களே ஒப்புதல் கொடுத்துள்ளீர்கள். நான் சொல்லவில்லை. நீங்கள் அளித்த நிதிநிலை அறிக்கை புத்தகத்தில் உள்ளது. அது என்னவென்று பார்த்து திருத்திக்கொள்ளுங்கள்.

அடுத்ததாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் அவர்கள் பேசும்பொழுது சொன்னார், 22.59 சதவிகிதம் மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் கடன் வாங்கலாம் என்று சொன்னார். 2018–2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை புத்தகம், பக்கம் 94–ல், 6–வது பத்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அதில் குறிப்பிடாதது, மாநிலத்தினுடைய மொத்த உற்பத்தி மதிப்பு எவ்வளவு? அதை ஏன் இந்த நிதிநிலை அறிக்கை புத்தகத்தில் போடவில்லை? GDP போடவேயில்லையே நீங்கள்? GDP போடாமல் கடன் மட்டும் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கலாம் என்று சொல்வது எப்படி நியாயம் ஆகும்? தயவுசெய்து அண்ணன் அவர்களின் பதிலுரையில் விளக்க வேண்டும்.

அடுத்து, 2016–2017, 2017–2018 மற்றும் 2018–2019 ஆகிய மூன்றாண்டுகளில் மொத்தக் கடன் 1 இலட்சத்து 23 ஆயிரத்து 540 கோடி ரூபாய். அதேபோன்று, இந்த மூன்று ஆண்டுகளுக்கும் அதாவது மூலதனப் பணிகள் என்று ஒன்று இருக்கிறது. எப்பொழுதுமே கடன் வாங்கினால், யாராக இருந்தாலும் மூலதனப் பணியில்தான் செலவு செய்வார்கள். குடும்பத்திற்கு கடன் வாங்குவார்கள், வீடு கட்டுவதற்கு வங்கியில் கடன் வாங்குவார்கள், வேறு ஏதேனும் சொந்தப் பணிகளுக்காக, வியாபாரத்திற்காகக் கடன் வாங்குவார்கள். அதுபோல கடன் வாங்கி, மூலதனக் கணக்கில் மூன்று வருடங்களுக்கு எவ்வளவு ஒதுக்கியுள்ளீர்கள் என்று சொன்னால், 78,438.76 கோடியாகும். ஆக 46 ஆயிரம் கோடி ரூபாய் எங்கே சென்றது? இந்த மூன்று ஆண்டுகளில் 46 ஆயிரம் கோடி ரூபாய் வாங்கிய கடன் எங்கே சென்றுள்ளது, யாருக்குச் சென்றது, எப்படிச் சென்றது என்பதை பதிலுரையிலே தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*[திரு. ப. ரங்கநாதன்]* [*2018 மார்ச் 19*

அடுத்து, காவலர் வீட்டு வசதி வாரியம். (குறுக்கீடு) அண்ணன், அடுத்த Page–க்குப் போய்விட்டேன். அடுத்ததாக இந்தியாவில் ஊழல் பெருகிப்போய்விட்டது என்று இந்தியாவில் வசிக்கின்ற அன்னாஹசாரே போன்ற பெரியவர்கள் எல்லாம் மிகப் பெரிய போராட்டத்தை டெல்லியில் நடத்தினார்கள். அதையொட்டி 21 மாநிலங்களில் Lok Ayukta அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. 2016 ஜூன் 16 ஆம் தேதி இதே சட்டப் பேரவையில் அன்றைய ஆளுநர் மேதகு ரோசய்யா அவர்கள் ஆளுநர் உரை பக்கம் 4–ல் அறிவித்தார்கள். அப்பொழுது இங்கே, அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் இருக்கின்ற இடத்தில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இருந்தார்கள். அவர்களை வைத்துக்கொண்டு, அவர்களின் முன்னிலையில் அன்றைய ஆளுநர் மேதகு ரோசய்யா அவர்கள் அறிவித்தார்கள். Lok Ayukta அமைப்பு வெகு விரைவில் இந்த மாநிலத்தில் அமைக்கப்படும் என்று 2016 ஜூன் 16 ஆம் தேதி அறிவித்தார்கள். இதுவரையில் ஏன் நீங்கள் Lok Ayukta அமைப்பை தமிழகத்தில் கொண்டு வரவில்லை, நிறைவேற்றவில்லை என்பதை பதிலுரையிலே தெளிவுபடுத்த வேண்டும்.

அடுத்ததாக, காவலர் வீட்டு வசதி வாரியம். கடந்த ஆண்டு 2017–2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரினார்கள். ஆயிரம் விளக்கு தொகுதி, கிரீம்ஸ் சாலை, அப்பல்லோ மருத்துவமனை அருகில் 159 கோடி ரூபாய் மற்றும் புதுப்பேட்டை பகுதியில் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வீடுகள் கட்டுவதற்கு ஒப்பந்தம் விடப்பட்டது. நான்கு ஒப்பந்ததாரர்கள் பங்கு பெறுகிறார்கள். அதில் பி.என்.சி. கட்டுமான நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி எல்.1 ஆக வருகின்றது. என்.ஆர். அண்ட் கோ கட்டுமான நிறுவனத்தை ஆர்.சி.சி. என புதிதாகப் பெயர் மாற்றியிருக்கிறார்கள்; எல்.2 ஆக போட்டியிடுகிறது. இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் இடையே போட்டி ஏற்படுகின்றது. எல்.1–க்கு பதிலாக, எல்.2–க்கு டெண்டர் வழங்குவதாக முடிவு செய்கிறார்கள். எனவே, எல்.1 ஆக வந்த பி.என்.சி. கட்டுமான நிறுவனம் நீதிமன்றத்திற்குச் சென்று, அவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு பெறுகிறது. ஆனால், **

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இப்படியெல்லாம் கூறுவது சரியல்ல.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



*2018 மார்ச் 19*]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் அப்பீலில் இருக்கின்ற ஒரு பொருள் பற்றி சட்டத்திற்கு புறம்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசலாமா? அதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீதிமன்றத்தில் இருக்கின்ற ஒரு பொருள் பற்றி நீங்கள் பேசலாமா? நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொன்னீர்கள். அதோடு விட்டுவிடுங்கள். தேவையில்லாத வார்த்தைகளை எல்லாம் பேசுவது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அந்த வார்த்தைகள் அனைத்தும் நீக்கப்படுகின்றன. நீதிமன்றத்தில் இருப்பது குறித்துப் பேசாமல் அதோடு விட்டு விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. ப. ரங்கநாதன்:** நன்றாகச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்த விதிமுறைகளை திரு. ப. ரங்கநாதன் நன்றாக தெரிந்துகொள்ள வேண்டும். தகுதியிருந்தால், யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னார், இன்னார்தான் போட்டியிட வேண்டுமென்று எந்த விதிகளிலும், நாம் அறிவிக்கவில்லை.** தகுதியிருந்தால் சட்டப்படி ஒப்பந்தப்புள்ளி வழங்கலாம் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டத்திற்குப் புறம்பாக ஒப்பந்தப்புள்ளிகளை வழங்கினால்தான் தவறு. ஆகவே, ** என்று எங்கேயும் சட்டத்தில் இல்லை. ** எங்களிடமும் அந்தப் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேற்கொண்டு இதுகுறித்து விவாதம் வேண்டாம்.

**திரு. ப. ரங்கநாதன்:** ஆமாம், அது தவறு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் முதலமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** பற்றிப் பேசியதை நான் ஏற்கெனவே அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரும்பவும் அதை நீங்கள் ரெக்கார்டு செய்ய பார்க்கிறீர்கள். வேண்டாம், அதை விட்டு விடுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளித்து விட்டார்கள். (குறுக்கீடு)

**திரு. ப. ரங்கநாதன்:** ** அதை நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது என்று சொன்னதோடு நிறுத்துங்கள். மேற்கொண்டு அங்கு சொன்னார்கள், இங்கு சொன்னார்கள் என்று சொல்லக் கூடாது. அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையற்ற ஒரு கருத்தைச் சொல்லி, அவையின் நேரத்தை வீணடிக்கக் கூடாது. எல்லோருக்கும் தெரியும். யார் யாரெல்லாம் தொழில் செய்கிறார்கள் என்பது போன்ற விவரங்கள் எங்களிடம் இருக்கின்றன. தேவையில்லாத விவாதமெல்லாம் வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டப்படி இருந்தால் அது தவறு அல்ல. சட்டத்திற்குப் புறம்பாக இருந்தால் நீங்கள் சொல்லலாம். ஆகவே, நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்றது. அவர்கள் எப்போது டெண்டர் போட்டார்கள் என்பது எல்லாம் உங்களுக்குத் தெரியாது. ஆகவே, டெண்டர் போட்டது தவறு என்று சொல்வது நியாயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்தபிறகு அதுகுறித்து உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேறு சப்ஜெக்ட்டில்தான் பேசப் போகிறேன். அடிக்கடி வேறு சப்ஜெக்ட் என்று கூறிக்கொண்டிருக்கிறீர்கள். அதையே சொல்கிறீர்களே? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காவலர் வீட்டு வசதி வாரியத்தில் எல்.1–க்கு டெண்டர் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) எல்.1, பி.என்.சி. என்பது அவர்களுக்குத் தெரியும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





பிற்பகல் 12–20

அடுத்து, காவல் துறை. தமிழகத்தில் உயிருக்கும், உடைமைக்கும், பொருளுக்கும், மக்களுக்கும், பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் இந்தத் தேசத்திற்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், V.I.P.–களுக்கும் பாதுகாப்பு தருவது காவல் துறை. ஆனால், மக்களுடைய வரிப் பணத்தில் இயங்குகின்ற காவல் துறை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு சிறிய விளக்கம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, ** அது தேவையில்லை, மற்றபடி யார் வேண்டுமானாலும் டெண்டர் போடலாம், வரலாம் என்று இருக்கிறது. ** உறவினர்கள் எல்லாம் போடலாம், ** என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) ** உறவினர்கள் எல்லாம் போடலாம். அதைப்பற்றி ஒன்றுமில்லை. ** என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைக் கொடுங்கள். ** உங்களுக்குப் பாராட்டு. அடுத்து, இந்தக் காவல் துறையில் கடந்த 6 ஆண்டுகளாக காவலர்கள் தேர்வு செய்யப்படவில்லை. ஏறத்தாழ 20,000 காவலர் பணியிடங்கள் பல நிலைகளில் காலியாக உள்ளன. தேர்வு செய்யப்படவில்லை. அதன்பிறகு, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், காவல் துறை இந்த 4, 5 ஆண்டுகளாகவே ** நிலையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் பட்ஜெட்மீது பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் புதிது புதிதாக தேவையில்லாததைப் பேசி விவாதம் வேறு எங்கேயோ போகிறது. அவையெல்லாம் நீக்கப்படுகின்றன.

**திரு. ப. ரங்கநாதன்:** ஒன்றும் கிடையாது. சொல்கிறேன். நீங்கள் அவசரப்படுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவசரப்படவில்லை. விவாதத்தை நல்லபடியாகக் கொண்டு செல்லுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** உங்களுடைய நன்மைக்காகத்தான் இதெல்லாம் பேசுகிறேன். எனக்காகவா பேசுகிறேன்! கொஞ்சம் பொறுங்கள். அதாவது. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2018 மார்ச் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய உரையில் குற்றச்சாட்டாக ஏதாவது ஒரு சம்பவத்தைச் சொல்லி சட்டம்—ஒழுங்கு சீர்கெட்டுக் கிடக்கிறது, காவல் துறை சரியாகச் செயல்படவில்லையென்று சொல்லி ** என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். நீங்கள் இவ்வார்த்தையைப் பயன்படுத்தலாம், அது ஆதாரப்பூர்வமாக இருந்தால். ஆனால், பொத்தாம்பொதுவாக எந்தவிதச் சம்பவத்தையும் சொல்லாமல், சட்டம்—ஒழுங்குப் பிரச்சினையைப் பற்றி சொல்லாமல், ** என்று சொன்னால், ஒட்டுமொத்தமாக காவல் துறையே ** என்று பொருள்படும். ஆகவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் வேண்டாம். விடுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** சரி, சரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆதாரம் ஏதாவது இருந்தால் என்னிடத்தில் கொடுங்கள். நான் அனுமதிக்கிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** நிறைய ஆதாரம் இருக்கிறது. பெட்டியில் வைத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னிடம் ஆதாரத்தைக் கொடுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கிறேன். அதாவது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றச்சாட்டைச் சொன்னார். அதற்கு விளக்கம் தருகிறேன். தமிழ்நாட்டில் சட்டம்—ஒழுங்கு மிகச் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருவதன் காரணமாகத்தான் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின்படி, அகில இந்திய அளவில் உள்ள பெரிய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 மார்ச் 19] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மாநிலங்களில் பெண்கள் பாதுகாப்பாக வாழ உகந்த முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான பெருநகரங்களில் கோயம்புத்தூர் முதலாவதாகவும், மெட்ரோ நகரில் சென்னை மாநகரம் முதலாவதாகவும் உள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 2016 ஆம் ஆண்டு பெண்களுக்கு எதிரான மொத்த குற்றங்களில் தமிழ்நாட்டின் குற்ற விகிதம் 10.7 ஆகும். இதனை தேசிய சராசரியான 51.4 சதவிகிதத்துடன் ஒப்பிடும்போது 40.7 புள்ளிகள் குறைவாக உள்ளன. ஆகவே, சட்டம்—ஒழுங்கு எந்த அளவிற்குச் சிறப்பாக இருக்கிறது என்பதற்கு இதெல்லாம் புள்ளிவிவரம்.

அதேபோல, இந்திய தர நிர்ணயக் குழு, ஒன்றல்ல, இரண்டல்ல, பல்வேறுவிதமான காரணிகளின் அடிப்படையில் 80 மதிப்பெண்கள் அளித்து இந்தியாவில் உள்ள 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவல் நிலையங்களில் மிகச் சிறந்த 10 காவல் நிலையங்களைத் தேர்ந்தெடுத்து, அதில் இந்தியாவிலேயே கோவை மாநகரில் உள்ள ஆர்.எஸ். புரம் காவல் நிலையம் முதல் காவல் நிலையமாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகரில் உள்ள அண்ணா நகர் காவல் நிலையம் ஐந்தாவது காவல் நிலையமாகவும் தேர்வு செய்யப்பட்டு விருதுகளைப் பெற்றுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் துயர் துடைத்து, அவர்களுடைய புகார்களுக்கு பிரத்யேகமாக தீர்வுகாணும்பொருட்டு நாட்டிலேயே அதிகபட்சமாக பெண்களுக்கென்று 200 காவல் நிலையங்கள் திறக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாட்டின் ஒட்டுமொத்த எண்ணிக்கையில் 40 விழுக்காடு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் நமது மாநிலத்தில்தான் உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—25

நாட்டிலேயே அதிக காவல் நிலையங்களைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடு ஆகும். 1,832 காவல் நிலையங்களைக் கொண்டு நாட்டிலேயே முதலாவதாக தமிழ்நாடு விளங்குகிறது. தமிழ்நாட்டைவிட அதிக மக்கள் தொகை கொண்ட உத்தரப்பிரதேசம் 1,525 காவல் நிலையங்களைக் கொண்டு இரண்டாம் இடத்தில் உள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 மார்ச் 19

அதேபோன்று, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக கடந்த ஓராண்டில் மட்டும் 12,535 இரண்டாம் நிலைக் காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த வருடம் மொத்தம் 21,919 பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாடு காவல் துறையில்தான் திருநங்கைகள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். பணி நியமனம் செய்யப்பட்ட 33 துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர். காவல் துறையில் முதல் நிலைக் காவலர் முதல் காவல் துறை இயக்குநர் வரையிலான பல்வேறு பதவிகளில், மொத்தம் 5,235 பணியிடங்கள் பதவி உயர்வுகள்மூலம் நிரப்பப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு 244.32 கோடி ரூபாய் செலவில், 2,047 காவலர் குடியிருப்புகளும், 51.53 கோடி ரூபாய் செலவில் 85 காவல் நிலையங்களும், 83.85 கோடி ரூபாய் செலவில் 56 இதர காவல் நிலையக் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எனவே, ‘பணியிடங்கள் நிரப்பப்படவில்லை’ என்ற குற்றச்சாட்டு தவறானது; பணியிடங்கள் பெரும்பாலும் நிரப்பப்பட்டுள்ளன. ஒவ்வோராண்டும் காலிப் பணியிடங்கள் ஏற்படுகின்றன. அந்தக் காலிப் பணியிடங்களெல்லாம் ஒவ்வோராண்டும் குறிப்பிட்ட அளவு நிரப்பப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வில்லிவாக்கம் தொகுதியிலுள்ள அயனாவரம் பகுதியில் கே.2 காவல் நிலையம் உள்ளது. அங்கு பணிபுரிந்த ஒரு நேர்மையான அதிகாரி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், நீங்கள் நிதிநிலை அறிக்கையில் பேசுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** இது குற்றச்சாட்டு அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நிதிநிலை அறிக்கையில் பேசுங்கள். நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காவல் துறை பற்றிப் பேசினால், அவர்கள் பதில் சொல்ல நேரிடும்.



2018 மார்ச் 19]

**திரு. ப. ரங்கநாதன்:** நீங்கள் சொல்வது சரிதான். இது குற்றச்சாட்டு அல்ல. இது என் தொகுதியில் நடந்த சம்பவம். ஒன்றே ஒன்றுதான், சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். உங்களைப் பேசக் கூடாது என்று சொல்லவில்லை. குற்றச்சாட்டாகப் பேசினால் பதில் வரும்.

**திரு. ப. ரங்கநாதன்:** அங்கு பணிபுரிந்த உதவி ஆய்வாளர் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொண்டார். அவர் நேர்மையான உதவி ஆய்வாளர். அதேபோன்று மெரினா பீச்சில் முன்னாள் முதலமைச்சர் அவர்களுடைய சமாதியில் பாதுகாப்பிற்காக இருந்த காவலரும், சமாதியின் அருகிலேயே தற்கொலை செய்து கொண்டுவிட்டார். இதையெல்லாம் சொல்லாமல் நான் வேறு எதைச் சொல்வது? எதிர்க்கட்சியை எதை சொல்லச் சொல்கிறீர்கள்? நான் அவருக்கு ஜால்ராவா போட வேண்டும்? முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் நீங்கள் ஆதாரத்தோடு பேச வேண்டும். ஏற்கெனவே இதுகுறித்து இங்கே நடைபெற்றது சம்பந்தமான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீங்களாகவே ஆதாரமின்றிப் பேசினால் எப்படி? பொத்தாம்பொதுவாகப் பேச வேண்டாம். அதை நீக்குகிறேன். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அதுகுறித்து நாம் ஏற்கெனவே பேசிவிட்டோம். இதுகுறித்த வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) அதுகுறித்துப் பேச வேண்டாம், விட்டுவிடுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** நான் ** சொல்லவில்லையே! அவர் நல்லவர் பாவம். நான் அவர் பெயரைச் சொல்லவில்லை. நான் முதலமைச்சரைப் பற்றிச் சொல்லவில்லை, இந்த ஆட்சியைப் பற்றிச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிறகு வேறு என்ன சொல்கிறீர்கள்? பொத்தாம்பொதுவாகச் சொல்கிறீர்கள். ஆதாரத்தோடு சொல்லுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2018 மார்ச் 19

**திரு. ப. ரங்கநாதன்:** நான் ஆட்சியைப் பற்றிச் சொல்லவில்லை. காவல் துறையைப் பற்றிச் சொல்கிறேன். ** என்ன பேசுகிறீர்கள் நீங்கள்? பிறகு நான் எதைத்தான் பேசுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதிநிலை அறிக்கையின்மீது பேசுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிதிநிலை அறிக்கையில் பேசுகிறேன். (குறுக்கீடு) திரு. தங்கமணி அண்ணன், நான் உங்கள் துறை சம்பந்தப்பட்ட பிரச்சினை பற்றி இன்னும் பேசவில்லை. உங்கள் துறை சம்பந்தப்பட்ட பிரச்சினையை நான் இன்னும் பேசவில்லை. மின்சாரத் துறை சம்பந்தப்பட்ட பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது, நீங்கள் பேசுங்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர்களையெல்லாம் உட்காருங்கள் என்று நீங்கள் சொல்லக் கூடாது.

**திரு. ப. ரங்கநாதன்:** திரு. தங்கமணி அண்ணன் எனக்கு வேண்டியவர். அண்ணே, நீங்கள் எனக்கு வேண்டியவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு வெளியில் நீங்கள் என்ன வேண்டுமென்றாலும் பேசிக்கொள்ளுங்கள். பேரவைக்குள் இதுபோன்று பேசக் கூடாது.

**திரு. ப. ரங்கநாதன்:** திரு. தங்கமணி அண்ணன், சொல்லுங்கள். அவர் மிகவும் நல்லவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஓர் உறுப்பினர் நாட்டில் இருக்கக்கூடிய நிலைமைகளை சபையில் சொல்வார். எல்லாவற்றிற்கும் ஆதாரம் காட்ட முடியாது. நிலைமைகளை இப்படி, இப்படி இருக்கிறது என்று சொல்லலாம். சரியென்று, ஆதாரம் கொண்டு வந்து காண்பிக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள், **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 மார்ச் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுகுறித்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. (குறுக்கீடு) அதுகுறித்த வழக்குதான் நீதிமன்றத்தில் இருக்கிறது.

**திரு. துரைமுருகன்:** ஓர் உறுப்பினர் நிலைமைகளைச் சொல்வார், எல்லாவற்றிற்கும் ஆதாரம் கேட்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவற்றையெல்லாம் நீக்கம் செய்துவிட்டேன். நீதிமன்றத்தில் உள்ள பொருள் குறித்து எதற்காகப் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) இல்லை, அதற்காகத்தான் அவை உரிமைக் குழுவிற்குச் சென்றது. அவை உரிமைக் குழுவை எதிர்த்து நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீதிமன்றத்தில் இருப்பது எதற்கு? (குறுக்கீடு) அது தவறு என்று சொல்லித்தானே அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பினோம்.

பிற்பகல் 12–30

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** நான் கொண்டுவந்து காட்டிய பிரச்சினைதான் நீதிமன்றத்தில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரம் இல்லாமல் தடை செய்யப்பட்ட பொருளை நீங்கள் சட்டமன்றத்தில் கொண்டுவந்து காட்டியதால்தான் அது தவறு என்று சொல்லி, நான் அதை அவை உரிமைக் குழுவிற்கு அப்போது அனுப்பினேன். அதோடு விட்டுவிடுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை, ஆதாரத்தைத்தான் காண்பித்தேன். எந்தக் கடை, எந்த நம்பர், யார் முதலாளி, எல்லா ஆதாரத்தோடும்தான் வந்தேன். நீங்கள் அனுமதிக்கவில்லை. சரி விட்டுவிடுங்கள். அந்தப் பிரச்சினைக்கு நான் வரவில்லை. இப்போது எங்கள் உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் பேசுகிறார் என்று சொன்னால், தினம் தினம் பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கின்ற செய்திகள், தொலைக்காட்சிகளில் வந்து கொண்டிருக்கின்ற செய்திகள். காவல் துறையினரே சென்று பறிமுதல் செய்து, சம்பந்தப்பட்டவர்களை தொடர்ந்து கைது செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, ** இன்றைக்கு பரவலாக விற்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதைத்தான் அவர் இங்கே எடுத்துச் சொல்கிறார். எனவே, அதை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2018 மார்ச் 19

நீக்குவது எப்படி மரபாகும்? அது எப்படி முறையாகும்? நான் எடுத்துவந்த பிரச்சினைதான் நீதிமன்றத்தில் இருக்கிறது. அதனால் இப்போது அதைப் பேசவில்லை. சட்டம்–ஒழுங்கு என்ன நிலையில் இருக்கிறது என்பதற்காக காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கிறார்கள். தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. யார் அதற்கு உடந்தை? யார், என்ன கண்டுபிடித்திருக்கிறீர்கள்? அந்த அடிப்படையில்தான் அவர் அந்தப் பிரச்சினையை எழுப்புகிறாரே தவிர, வேறு எந்த நோக்கத்தோடும் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன், நீங்கள் நிதிநிலை அறிக்கைக்கு வாருங்கள்; சட்டம்–ஒழுங்கு பற்றி பேசியது போதும். இப்போது நேரம் இல்லை. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** சரி, நான் நிதிநிலை அறிக்கையிலேயே பேசுகிறேன். உங்களுடைய பேச்சுப்படியே வருகிறேன். உயர் கல்வித் துறையிலே அண்ணன் நிதியமைச்சர் அவர்கள் அதிகமான நிதியை எல்லாம் ஒதுக்கி, அதனை மேன்மையான நிலைக்குக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்திருக்கிறார்கள். அவருக்கு பாராட்டுகள். ஆனால், பெரியார் பல்கலைக்கழகத்தினுடைய முன்னாள் துணைவேந்தர் டாக்டர் அங்கமுத்து நல்லவர், யோக்கியமானவர், திடீரென்று தற்கொலை செய்துகொள்கிறார். வேலூர், திருவள்ளூர் பல்கலைக்கழகத்தினுடைய முன்னாள் பதிவாளர் சென்ற மாதம் தற்கொலை செய்துகொண்டார். பாவம் எல்லோருமே தற்கொலைதான். இதற்கெல்லாம் என்ன காரணம் என்று தெரியவில்லை. அதாவது உயர் கல்வித் துறை. . . (குறுக்கீடு) நான் பேசிய பிறகு, தவறு இருந்தால் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொன்னால், நான் ஏற்றுக்கொள்கிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம், அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ஒரு துறையைப் பற்றி நீங்கள் உங்கள் சௌகரியத்திற்கு வார்த்தைகள் போட்டுப் பேசக் கூடாது. அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 மார்ச் 19]

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை விவாதத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் ஆரம்பிக்கின்றபோதே ஒரு கோரிக்கையை வைத்தார்கள். ஆளும் கட்சியிலே உறுப்பினர்கள் குறைவாக இருக்கின்றார்கள், எதிர்க்கட்சியிலே உறுப்பினர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். அதனால் அதிக உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு சட்டமன்றப் பேரவைத் தலைவராகிய நீங்கள், 'உங்களுக்கு நேரம் அதிகமாக ஒதுக்கி இருக்கிறோம், உங்களுக்குண்டான நேரத்தை நாங்கள் ஒதுக்குகிறோம்' என்று சொல்லியிருந்தீர்கள். அவர்களும் அதைக் கேட்டுக்கொண்டு அமர்ந்தார்கள். உறுப்பினர் விவாதத்தை ஆரம்பிக்கின்றபோதே, இந்த விவாதத்தை திசை திருப்ப வேண்டுமென்பதற்காக எடுத்தவுடன் கடன் ஆகிவிட்டது, கடன் ஆனது WhatsApp–ல் வருகிறது, Twitter–ல் வருகின்றது என்று சொன்னார். ** முதலில் அதை நீக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இன்றையதினம் ஒன்றேகால் ஆண்டு ஆகிவிட்டது, மாண்புமிகு அம்மா அவர்கள் மறைந்து. யாரும் வண்டி வைத்துக்கொண்டு கூட்டிக்கொண்டு வரவில்லை. மொத்தம் இரண்டு கோடி பேர், தினமும் ஆயிரக்கணக்கான பேர் அங்கே சென்று பார்த்துக்கொண்டிருக்கிற ஒரு தலைவருக்கு நினைவு மண்டபம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை கொச்சைப்படுத்துகின்ற வகையில் சட்டமன்ற உறுப்பினர் பேசியதே முதலில் தவறு. ஒரு தலைவருக்கு நினைவு மண்டபம் கட்டுகின்றோம். நினைவு மண்டபம் கட்டுவதைப் பேசுகின்றார் என்று சொன்னால். . . (குறுக்கீடு) அப்போது நான் சொல்கிறேன். செம்மொழி மாநாட்டை நீங்கள் கடன் வாங்கித்தானே நடத்தினீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எதிலே நடத்தினீர்கள்? அரசு, எல்லா துறைகளுக்கும் பணம் ஒதுக்குகின்றது. அதிலே ஒரு தலைவருக்கு நினைவிடம் கட்டுவதை இந்தளவுக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினர் பேசுவது, இன்றைக்கு ஏழரை கோடி தமிழக மக்கள். . . (குறுக்கீடு) அதுமட்டுமல்லாமல், அனைத்துத் தமிழ் மக்களுடைய ஒட்டுமொத்த தலைவராக இருக்கின்றார். நான் இதைச் சொல்லக் கூடாது என்று நினைத்தேன். அதேபோல** பேசுகின்றபோது சொன்னார், அவர் இன்றையதினம்தான் சம்பந்தி. அவர் 20 ஆண்டுகாலமாக ஒப்பந்தக்காரராகப் பணியாற்றிக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. பி. தங்கமணி] [2018 மார்ச் 19

கொண்டிருக்கின்றார். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, அவர் ஆந்திராவில் செய்கின்றார், கர்நாடகாவில் செய்கின்றார், ஒப்பந்ததாரர்கள் யார் வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் பணி எடுக்கலாம். அதற்காக உறவினராக இருந்தால், ஒரு குற்றச்சாட்டைச் சொல்வதா? இப்போது காவல் துறையைச் சொன்னார். நீங்கள் காவல் துறையைப் பற்றிச் சொன்னதனால் நான் சொல்ல வேண்டிய சூழ்நிலை.

பிற்பகல் 12–35

உங்கள் ஆட்சிக் காலத்தில் சேலத்தில் இருந்த ஓர் ஓய்வு பெற்ற காவலர் திரு. குப்புசாமி என்பவருடைய குடும்பத்தில் 6 பேரை வெட்டிக் கொன்றது, உங்களுடைய கழகத்தைச் சேர்ந்தவரா, இல்லையா? யாருடைய ஆட்சியிலே சட்டம்–ஒழுங்கு கெட்டது? (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஆதாரத்தோடு நான் சொல்கின்றேன். (குறுக்கீடுகள்) கோர்ட்டிலிருந்து அவர். . . (குறுக்கீடுகள்) இல்லை, சொல்லுங்கள். நான் இதைச் சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அவரை அரெஸ்ட் செய்தார்கள். பாப்பாரப்பட்டி சுரேஷ் கைதாகி ஜெயிலிலிருந்து மூன்று மாதங்கள் கழித்து வெளியே வந்து, இப்போது வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) யார் சொன்னது? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எப்படி நியாயம்? (குறுக்கீடுகள்) எப்படி நியாயம் என்பதைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் இங்கே பேசக் கூடாது என்றுதான் இருந்தேன். (குறுக்கீடுகள்) நான் இங்கே பேச வேண்டுமென்ற அவசியம்கூட இல்லை. (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்து விடுகிறேன். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்து விடுகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து எடுக்கச் சொல்லுங்கள், நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அதை அவைக் குறிப்பிலிருந்துகூட எடுத்திடச் சொல்லுங்கள், நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. நீங்கள் பேசியதற்காக நான் இதைச் சொல்கிறேன். சட்டம்–ஒழுங்கைப் பற்றிப் பேசிய உறுப்பினர், நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசியிருக்கலாம். (குறுக்கீடுகள்) நிதிநிலை அறிக்கையை விட்டு விட்டு, காவல் துறையை பற்றிப் பேசுகிறார். (குறுக்கீடுகள்) ** என்று போட்டிருக்கிறதா? (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுங்கள், ** போட்டிருக்கிறதா? (மேசையைத் தட்டும் ஒலி) எங்கே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 மார்ச் 19] [திரு. பி. தங்கமணி]

போட்டிருக்கிறது என்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், அதைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், அதை அவைக் குறிப்பிலிருந்து வேண்டுமானால் எடுக்கச் சொல்லுங்கள், எனக்கு ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசியதனால்தான், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் வேண்டாம்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நான் பேசி முடித்துவிடுகிறேன். நான் பேசி முடித்த பிறகு, நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதில் தவறு இருந்தால் சொல்லுங்கள். நான் சொல்லியதில் தவறு இருந்தால் அதை நான் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கின்றேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் நீங்கள் பேச வாய்ப்பு கேளுங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்பு தரச் சொல்கிறேன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்பு தரச் சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு வாய்ப்பு தரச் சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு பேச வாய்ப்பு தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு, உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** நான் பேசி முடித்ததற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்பு தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர், நீங்கள் பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** அவர்கள் பேச விட்டால்தானே பேசுவதற்கு? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உங்களுக்குப் பேச வாய்ப்பு தருகிறேன், பேசலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் அதைப் பேசலாம். (குறுக்கீடுகள்) அதுதான், நான் அவரைப் பேச அனுமதிக்கிறேன் என்று சொல்லிவிட்டேன் அல்லவா?

[2018 மார்ச் 19

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு, நான் பேசியதில் தவறு இருந்தால், நீங்கள் கேளுங்கள். நான் சொல்வது தவறாக இருந்தால் சொல்லுங்கள். அன்றையதினம், உங்களுடைய அமைச்சர் கொடி கட்டிய காரில் சேலம் சென்ட்ரல் ஜெயிலில் சென்று பார்த்தாரா, இல்லையா? சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பார்த்தாரா, இல்லையா, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உண்டா, இல்லையா என்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அன்றையதினம், சட்டமன்றத்திலே நாங்கள் கேட்டோம். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள், பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள், பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்தபிறகு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** நீங்கள் பிறகு பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அமைச்சர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் முன்பே பேசியதும் நான் ஏற்கெனவே பதிவு செய்திருக்கிறேன். இரண்டு பேர் பேசிய குற்றச்சாட்டுகளுக்கும் பதிலுரை ஆகிவிட்டது. அதோடு, அதை விட்டு விடுங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. அதை அதோடு விட்டு விடுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் பேசியதில் உங்களுக்கு ஏதாவது மாறுபட்ட கருத்து இருந்தால், தேவையான அளவுக்கு நீங்கள் பேசுவதாக இருந்தால் நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) அதைப்பற்றி இல்லை. ஆனால், நீங்கள் விளக்கம்தான் சொல்லலாம். (குறுக்கீடுகள்) விளக்கம்தான் சொல்லலாம். மேற்கொண்டு, நீங்கள் புது விஷயத்தைப் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் பேசியதற்கு நீங்கள் விளக்கம் இருந்தால் சொல்லுங்கள், அவ்வளவுதான். புதிதாக ஏதாவது பேசினால் அது இன்னும் புதிய பிரச்சினைகளை உருவாக்கும். நீங்கள் விளக்கம் மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் விளக்கம் சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மின் துறை அமைச்சர் அவர்கள் எப்போதுமே கொஞ்சம் நிதானமாக, பொறுமையாக பேசக்கூடியவர்



2018 மார்ச் 19] [திரு. மு.க. ஸ்டாலின்]

என்பதைத்தான் நான் அறிந்து கொண்டிருந்தேன். ஆனால், இன்றைக்கு இந்த அவையிலே தேவையில்லாத ஒரு சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறார். ஆக, காவல் துறை, சட்டம்–ஒழுங்கைப் பற்றிச் சொல்கிறபோது, உறுப்பினர் சொன்னதற்குப் பதில் சொல்லட்டும், நான் மறுக்கவில்லை. அது தவறு என்றுகூட நான் வாதிடத் தயாராக இல்லை. ஆனால், சேலத்தில் நடந்த ஒரு கொலையை சொல்லி, 6 கொலைகள் செய்தது பாப்பாரப்பட்டி சுரேஷ் என்று சொல்லி, அதை இங்கே தெளிவாகப் பதிவு செய்திருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதற்கு என்ன விளக்கமோ, விளக்கம் சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** அவர்மீது குற்றம் சுமத்தப்பட்டது உண்மைதான். ஆனால், அவர் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று உயர் நீதிமன்றத்திலும் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை எதிர்த்து அரசு அப்பீலுக்கும் சென்று, உச்ச நீதிமன்றத்திலும் அவர் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று விடுதலையாகி தீர்ப்பு வந்திருக்கிறது. எனவே, இந்த அவையிலே அது தவறாக பதிவாகி இருக்கிறது. அதற்கு நான் பதில் சொல்ல வேண்டும். ஒன்று அதை நீக்க வேண்டும். இல்லையெனில், நான் சொன்னதையும் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

பிற்பகல் 12–40

அடுத்து இன்னொன்று, சேலம், திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் சிறைக்குப் போய் பார்த்தார்கள் என்று சொல்கிறார்கள். ஏன் உங்களுடைய அம்மையார், முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கைதாகி சிறையிலிருந்த நேரத்தில் பெங்களூரு சிறைக்குப் போய் நீங்கள் எல்லோரும் பார்க்கவில்லையா? அரசு அதிகாரிகள் போய்ப் பார்க்கவில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) என்ன தவறு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். மாண்புமிகு மின் துறை அமைச்சர், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் புண்படுத்த வேண்டும் என்று நான் பேசவில்லை.

அவர் பேசுகின்றபோது, இந்த ஆட்சியில் நடைபெற்றதைச் சொன்னார். அதற்காக கடந்த ஆட்சியில் என்ன நடந்தது என்று நான் சொன்னேன். இப்பொழுது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு வீரபாண்டியார் அவர்கள் சென்று பார்த்ததைச் சொன்னபோது அதை ஒத்துக்கொண்டார். ஆனால், நாங்கள் சென்று பார்த்தோம் என்பதற்கு ஏதாவது ஆதாரத்தைக் கொடுங்கள், நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். எங்கே சென்று பார்த்தோம்? எப்பொழுது பார்த்தோம்? (குறுக்கீடு) ஆதாரத்தைக் கொடுங்கள், நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். (குறுக்கீடு) ஆதாரத்தைக் கொடுங்கள், நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். யார் போனார்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்கள் வருகிற அன்றைக்குப் போய் வரவேற்பு கொடுத்தோம். யார் உள்ளே போய் பார்த்தார்கள் என்று சொல்லுங்கள். ஒரு ஆதாரத்தையாவது கொடுங்கள், நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். நாங்கள் இல்லை என்று சொல்லவில்லையே! (குறுக்கீடு) நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியே வருகின்றபோது நாங்கள் அனைவரும் சென்று வரவேற்பு கொடுத்தோம். ஆக, இந்த அவையில் விவாதத்தை, பட்ஜெட் விவாதமாக எடுத்துச் சென்றால் சிறப்பாக இருக்கும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களையும் நான் புண்படுத்த வேண்டுமென்று பேசவில்லை. உறுப்பினர் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவிடத்தைக் கொச்சைப்படுத்திப் பேசுகின்றபோது, நீங்கள் யாராவது சொல்வீர்கள் என்று எதிர்பார்த்தேன். அதைச் சொல்லாத காரணத்தினால் எங்களுடைய தலைவர், நாங்கள் போற்றக்கூடிய தலைவர், தமிழக மக்களுடைய தலைவர் அவருக்கு நினைவிடம் கட்டுவதைக் கொச்சைப்படுத்துகின்றபோது, அனைத்திந்திய அண்ணா தி.மு.க.–வினுடைய இரத்தம் ஓடுகின்றவர்கள் ஒவ்வொருவருக்கும் அந்த உணர்வு இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உணர்வை வெளிக்காட்டுகின்ற வகையிலேதான் நான் இன்றையதினம் இந்தக் கருத்துகளைச் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களையும் புண்படுத்த வேண்டும் என்று நான் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதற்கும், எதிர்க்கட்சித்





தலைவர் அவர்கள் சொன்னதற்கும் பதில் சொல்லியாகிவிட்டது. விளக்கம் சொல்லியாகிவிட்டது. இரண்டும் பதிவாகி இருக்கிறது. திரு. ரங்கநாதன், நீங்கள் ஒரேயொரு நிமிடத்தில் நிதிநிலை அறிக்கைமீது பேசி உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அன்பழகன், உட்காருங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், (குறுக்கீடு) அவர்தான், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் லோக் ஆயுக்தா ஏன் அமைக்கப்படவில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். லோக் பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம், 2013 என்ற சட்டம் மத்திய அரசால் 2014 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாள் முதல் அமல்படுத்தப்பட்டது. லோக் ஆயுக்தா அமைப்பினை தமிழ்நாட்டில் அமைப்பது தொடர்பான பல்வேறு கூறுகளை விவாதித்திட தலைமைச் செயலாளர் தலைமையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு தமிழ்நாட்டிற்கென லோக் ஆயுக்தா அமைப்பினை ஏற்படுத்த லோக் பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம், 2013–ஐ விரிவாக ஆய்வு செய்து, ஒரு வரைவுக் கட்டமைப்பை அதாவது draft framework–ஐ உருவாக்கியது. 19–12–2014 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில், அவ்வரைவுக் கட்டமைப்பு draft framework ஆய்வு செய்யப்பட்டது. இந்நிலையில், மத்திய அரசு லோக் பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம், 2013–க்கு பல்வேறு திருத்தங்களை மேற்கொள்ள உத்தேசித்தது. எனவே, மாநிலத்தில் லோக் ஆயுக்தா அமைப்பினை ஏற்படுத்த மத்திய அரசில் நிலுவையில் உள்ள லோக் பால் சட்டத்தில் திருத்தங்களை எதிர்நோக்கலாம் என்று 14–2–2016–ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிலையில் லோக் ஆயுக்தா வரைவுச் சட்டத்தை மேலும் செம்மைப்படுத்தும் விதமாக அவ்வரைவுச் சட்டம் பிற மாநிலங்களில் நடைமுறையில் உள்ள லோக் ஆயுக்தா

[திரு. டி. ஜெயக்குமார்] [2018 மார்ச் 19

சட்டங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டு வருகிறது. ஆக, லோக் பால் சட்டத் திருத்த மசோதா மத்திய அரசில் நிலுவையில் உள்ளதால், முதன்மைச் சட்டமான லோக் பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம், 2013–க்கு முரண்பாடு ஏற்படுவதைத் தவிர்த்திடும் பொருட்டு, முதன்மைச் சட்டத்துடன் அது தொடர்பான திருத்தங்களையும் கவனத்தில் கொண்டு இம்மாநிலத்திற்கான லோக் ஆயுக்தா சட்டமுன்வடிவு இயற்றப்படும் என்பதை இப்பேரவைக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், நீங்கள் 11–52 மணிக்குப் பேச ஆரம்பித்தீர்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** எல்லாம் அவர்களே பேசிவிட்டார்கள். என்ன, நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். நீங்கள் பெரியவர், இப்படியெல்லாம் பேசக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதெல்லாம் ஒரு argument இல்லை. திரு. ரங்கநாதன், நீங்கள் 11–52 மணிக்குப் பேச ஆரம்பித்து, இப்போது 12–44 மணி ஆகிவிட்டது.

**திரு. ப. ரங்கநாதன்:** நீங்கள் எல்லோரும் பெரியவர்கள், இப்படிச் சொல்லலாமா? தயவுசெய்து இப்படியெல்லாம் சொல்லாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், நான் சொல்வதைக் கேளுங்கள். இன்னும் 5 பேர் பேச வேண்டும். உங்களுடைய கட்சியின் சார்பில் இன்னொருவர் பேச வேண்டும். ஆகவே, நேரமில்லை. நீங்கள் ஒரே நிமிடத்தில் உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் நேரம் கொடுங்கள், உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** இருங்கள், அவசரப்படாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. ரங்கநாதன், உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** நான் உரையை முடிக்க முடியாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதெல்லாம் முடிக்க முடியாது. நீங்கள் அப்படியெல்லாம் பேசக் கூடாது.



2018 மார்ச் 19] [திரு. ப. ரங்கநாதன்]

அவசரப்படாதீர்கள். இவ்வளவு அன்பாக இருக்கிறீர்கள். உங்களிடம் எவ்வளவு அன்பாக இருக்கிறேன். வரும்போது எழுந்து நிற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவசரப்படவில்லை, எனக்கு நேரம் இல்லை. எனக்கு நேரம் இருந்தால், திரு. ரங்கநாதன் அவர்களை முழுவதுமாகப் பேசவிட்டிருப்பேன். இன்னும், 5 பேர் பேச வேண்டும்.

பிற்பகல் 12–45

**திரு. ப. ரங்கநாதன்:** திரு. இ.பி.எஸ். அவர்களும் வேண்டியவர்; திரு. ஓ.பி.எஸ். அவர்களும் வேண்டியவர்; திரு. தங்கமணி அவர்களும் வேண்டியவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோருமே வேண்டியவர்கள்தான். அவற்றையெல்லாம் வெளியில் வைத்துக்கொள்ளலாம். இன்று அவையில் இன்னும் 5 பேர் பேச வேண்டும்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சகோதரர் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். பரவாயில்லை. அதில் ஒன்றும் தவறில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது குற்றச்சாட்டு இல்லை. அது விளக்கம்.

**திரு. ப. ரங்கநாதன்:** சரி. விளக்கம்தான். ஆனால், அதுபோன்ற குற்றச்சாட்டுகளில் நான் செய்திகளைச் சொல்ல ஆரம்பித்தால், அண்ணன் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தம்பி மீதுகூட ஒரு கொலை கேஸ் பதிவு செய்தார்கள். அதற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சரே. . . (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர்மீது கூட கொலை வழக்கு பதிவு செய்தார்கள். அது வேண்டாம். கொலை வழக்கு என்பது வேறு. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதற்கு விளக்கம் சொல்லிவிட்டார்கள். இரண்டும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதோடு விட்டுவிட வேண்டும். (குறுக்கீடு) மேற்கொண்டு பேசக் கூடாது.

[2018 மார்ச் 19

**திரு. ப. ரங்கநாதன்:** சரி, விட்டுவிடுகிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கோபித்துக்கொள்ள வேண்டாம். விட்டுவிடுங்கள். அடுத்து புதிய Subject–க்கு வருகிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், விவாதத்தை நீங்கள் முடிப்பதுபோல் தெரியவில்லை. (குறுக்கீடு) வேறு வழியில்லை. சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) புதிய Subject–ல் நீங்கள் பேசினால் அதற்கு மாண்புமிகு அமைச்சர்கள் விளக்கம் சொல்ல வேண்டியிருக்கும். அதற்கு நேரமில்லை. உரையை முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** உரையை முடித்துவிடுகிறேன். துணை வேந்தர் ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேற்கொண்டு இதுகுறித்துப் பேச வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள். (குறுக்கீடு) குற்றச்சாட்டுகளாக திரு. ரங்கநாதன் அவர்கள் சொன்ன அனைத்தையும் நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். இப்பொழுது கோயம்புத்தூர் மாவட்டம் சம்பந்தமாகப் பேசியதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் பேசுகின்றபோது, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் தற்கொலை செய்துகொள்வது பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். அதுகுறித்து சில கருத்துகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். காவல் துறையில் பணிபுரிந்துவரும் காவல் ஆளிநர்கள் குடும்பப் பிரச்சினை, உடல் நலக் கோளாறு, காதல் விவகாரம் உள்ளிட்ட சில தனிப்பட்ட காரணங்களால் மனமுடைந்து தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்களைத் தடுக்கும் பொருட்டு காவல் துறையில் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன. அண்மையில், சென்னைப் பெருநகர ஆயுதப் படையில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. அருண்ராஜ் என்பவர் 4–3–2018 அன்று அதிகாலை மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் நினைவிடத்தில் பாதுகாப்புப் பணியில் இருந்தார். தான் பணியிலிருந்தபோது வைத்திருந்த துப்பாக்கியைப் பயன்படுத்தி, தனக்குத் தானே சுட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 மார்ச் 19] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

இதேபோன்று, சென்னை, அயனாவரம் காவல் நிலையத்தில் சட்டம்–ஒழுங்கு காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. சதீஷ்குமார் என்பவர் கடந்த 7–3–2018 அன்று அதிகாலை, அயனாவரம் காவல் நிலைய வளாகத்தில் தனது அலுவலக துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார். இவ்விரண்டு சம்பவங்களும் அவர்களுக்கு இருக்கும் தனிப்பட்ட பிரச்சினை காரணமாக தற்கொலை செய்து கொண்டார்கள் என்பது விசாரணையில் தெரிய வருகிறது.

எனினும், காவல் ஆளிநர்களுக்கு பணிச் சுமை காரணமாக ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைப்பதிலும், ஆரோக்கியத்தைப் பேணிக் காப்பதிலும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. காவல் ஆளிநர்கள் அனைவருக்கும் கூடுமானவரையில் வாராந்திர ஓய்வு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாநகரில் பணி நேரம் வரைமுறைப்படுத்தப்பட்டு, இயன்றவரை 8 மணி நேரம் பணி அளிக்கப்பட்டு வருகிறது. அனைத்துக் காவல் நிலையங்களிலும் காவல் ஆளிநர்கள் மற்றும் அதிகாரிகளின் உடல் நலத்தைப் பேணிக் காக்க, அவர்களுக்கு வாராந்திர கவாத்து பயிற்சியுடன், யோகாசனம் மற்றும் உடற்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்துடன், பிரபல தனியார் மருத்துவமனைமூலம் அவ்வப்போது காவல் அலுவலகம் மற்றும் காவலர் குடியிருப்புகளில் காவல் ஆளிநர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதுபோன்று இன்னும் நிறைய விவரங்கள் இருக்கின்றன. ஆகவே, காவலர்கள் அவர்களுடைய தனிப்பட்ட பிரச்சினையின் காரணமாகத்தான் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என விசாரணையில் தெரிய வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், நேரமில்லை. உரையை முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூர் அனல் மின் நிலையத்தில் விரிவாக்கப் பணி. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** இது முக்கியமான விஷயம். ஒரு நிமிடம் கொடுங்கள்.

[2018 மார்ச் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாமே முக்கியமான விஷயங்கள்தான். உங்கள் கட்சி உறுப்பினர் அடுத்து பேசவிருக்கிறார். (குறுக்கீடு) முக்கியமானவற்றை அவரிடம் சொல்லி பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு) இப்போது நேரம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், நீங்கள் பேசுங்கள்.

*பிற்பகல் 12–50*

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி"

என்று சொன்னார் வள்ளுவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொருமுறை பேசிக்கொள்ளலாம், உட்காருங்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவதுபோல. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுவதற்கு நேரமில்லை. மணி 12–50 ஆகிவிட்டது. ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) நேரமில்லை. அடுத்து பேசலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. என்.டி. வெங்கடாச்சலம், பேசுங்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவதுபோல, ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது என வள்ளுவர் சுட்டிக்காட்டிய நெறியில், தமிழக மக்களுக்கு கடந்த ஓர் ஆண்டாக நல்லாட்சி தந்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், சக சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2018 மார்ச் 19] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு"

என்று சொன்னார் வள்ளுவர். காலம் தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும் நாடாளுகிறவர்களுக்கு தேவையானவையும் நீங்காமல் நிலைத்திருக்க வேண்டிய பண்புகளாகும் என்கிற வள்ளுவரின் கூற்றின்படி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை தமிழக அரசு சிறப்போடு நிறைவேற்றி வருகிறது. நல்லவர்களால்தான் நல்லாட்சி தர முடியும் என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கூறியதைப்போல தமிழகத்தில் எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்று நமக்கெல்லாம் வழிகாட்டிய அம்மா அவர்கள் வழியிலே இன்றைக்கு நல்லாட்சி நடந்து வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் மண்ணை விட்டு மறைந்தாலும் மக்கள் மனதை விட்டு மறையவில்லை. அலெக்சாண்டரைப்போல வீரத்தையும், இயேசுவைப்போல அன்பையும், புத்தரைப்போல ஞானத்தையும், காந்தியைப் போன்ற சமூக மனிதநேய ஒற்றுமையையும் ஒருங்கே அமையப் பெற்றவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மடங்கா வீரமும், அடங்கா ஆற்றலும் ஒருங்கே அமையப் பெற்ற அம்மா அவர்கள் இன்றைக்கு நம்மிடத்தில் இல்லை. காலத்தை வென்றவர், காவியமானவர், வேதனை தீர்த்தவர், விழிகளில் நிறைந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காலத்தை வென்று கலங்கரை விளக்கமாக விளங்குவதே வரலாறு. பூக்கும் மலர்கள் எல்லாம் பூஜைக்குப் போவதில்லை. பூமியில் பிறந்தவர்கள் எல்லாம் புதிய வரலாறு படைக்க முடிவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் நிரந்தரமானவர். அழிவதில்லை. எந்த நிலையிலும் அம்மா அவர்களுக்கு மரணமில்லை.

## 8. அறிவிப்பு

### மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம் இருங்கள். பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்தில் பணியாற்ற 3 சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு

[பேரவைத் தலைவர்] [2018 மார்ச் 19

கோரிக்கை வரப்பெற்றுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள வாரியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக பதவியைத் தொடரும்வரை ஆகும். தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் வேட்பாளர்கள் தங்கள் வேட்புத் தாளினை 20–3–2018 செவ்வாய்க்கிழமை பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்புத் தாள்கள் 21–3–2018 புதன்கிழமை பிற்பகல் 3–00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 21–3–2018 அன்று புதன்கிழமை பிற்பகல் 5–00 மணிக்குள் தங்களது வேட்புத் தாளினைத் திரும்பப் பெறலாம். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்நாளோடு அவ்வாரியத்தில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும். செல்லத்தக்க வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் அவ்வாரியத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

## 7. வரவு-செலவுத் திட்டம், 2018–2019, பொது விவாதம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய உரையைத் தொடரலாம்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் என்றைக்கும் நிரந்தரமானவர். அம்மா அவர்களுக்கு எந்த நிலையிலும் மரணமில்லை. அம்மா அவர்கள் இன்றைக்கும் மக்களுடைய எண்ணங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார். இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய மறைவுக்குப் பின்னாலே கொட்டிக் கிடந்த செங்கற்குவியலாக இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை தனது அறிவாற்றலாலும், சலியாத உழைப்பாலும் மாளிகையாகக் கட்டி எழுப்பியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.



2018 மார்ச் 19] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

பிற்பகல் 12–55

எங்களிடையே இலட்சியம் என்னும் விதையை விதைத்து, நம்பிக்கை என்னும் உரமிட்டு, முயற்சி என்னும் நீர் ஊற்றி, வெற்றி என்னும் பயிரை விளைவிப்பது எப்படி என்று காண்பித்துச் சென்றுள்ளார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று வானளாவிய கட்டடமாக உயர்ந்து நிற்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்னும் கட்டடத்திற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், புரட்சித் தலைவி அம்மா அவர்களும் அஸ்திவாரமாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

திருவரங்கத்திலே மென்மையான பட்டாம் பூச்சிக்கும் பூங்கா அமைத்த அம்மா அவர்கள், கத்திரி வெயிலிலே காய்ந்து, கார்கால மழையிலே நனைந்து, கையே தலையணையாய், கட்டாந்தரையே வாழ்க்கையாய், காய்ந்த வயிறே தோழனாக வாழும் மக்களை நினைத்துப் பார்த்தார்கள். "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என வாழ்ந்து சரித்திரம் படைத்தார்கள், திட்டங்களை வகுத்தார்கள்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

அப்படி வாழ்ந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அடியொற்றி, அம்மாவின் புகழ்பாடும் வானம்பாடிகளாக, செயல் வீரர்களாக நமது மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் தொடர்ந்து அம்மாவினுடைய ஆட்சியை சிறப்போடு வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சேலம் மாவட்டம், சிறந்த கனிம வளங்களை உள்ளடக்கிய ஒரு மாவட்டம். கஞ்சமலையில் கணிசமான அளவிலே இரும்புத் தாது கிடைக்கின்றது. உருக்கு, நெடுங்காலத்திற்கு முன்னரே உள்நாட்டு தொழில்நுட்பத்துடன் அங்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. திப்பு சுல்தான் போர் வாள்கள் இங்கு செய்யப்பட்டதாக வரலாறு கூறுகிறது. அம்மாவின் போர் வாள் எடப்பாடியிலேதான் உருவாக்கப்பட்டதாக இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் போர் வாளாக இருந்து, படிப்படியாக

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [*2018 மார்ச் 19*

உயர்ந்த மாண்புமிகு முதல்வரும் சேலம் மாவட்டத்திலேயிருந்து வந்தவர்தான். இராஜாஜி போன்ற தலைவரை தமிழகத்தின் முதல்வராக *60* ஆண்டுகளுக்கு முன்பே தந்தது அதே சேலம் மாவட்டம்தான். அதே மாவட்டத்திலிருந்து மீண்டும் ஒருவராக, அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தமிழகத்தின் மாண்புமிகு முதல்வராக இன்றைக்கு அமர்ந்திருக்கின்றார்கள்.

பல்லவ அரசன் மகேந்திர பல்லவனை, சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி தோற்கடித்து, காஞ்சியை அழித்தான். அவனது மகன் மாமல்லன் எனப் பெயர் பெற்ற நரசிம்மப் பல்லவன் காலத்திலும், மீண்டும் பல்லவ தலைநகர் காஞ்சிமீது படையெடுத்தான். அவனுக்குப் பாடம் புகட்ட விரும்பிய நரசிம்மப் பல்லவன், வீரமும், போர் குணமும் கொண்ட தளபதி பரஞ்ஜோதி தலைமையிலே பெரும் படையை அனுப்பினார். பரஞ்ஜோதி, சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியை, அவனது தலைநகர் வாதாபி வரை துரத்திச் சென்று அழித்ததுடன், வாதாபி தலைநகரையும் தீக்கிரையாக்கினார். தளபதி பரஞ்ஜோதியைப் போன்று வீரமிகு பல தளபதிகளை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை அரணாகக் காப்பாற்ற விட்டுச் சென்றுள்ளார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வாதாபியிலிருந்து திரும்பி வருகிறபோது, வெற்றியின் அடையாளமாக வாதாபி கணபதியை, விக்கிரகத்தை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து, விநாயகர் வழிபாட்டை தமிழகத்திலே அறிமுகப்படுத்தினார்.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சிதர், வாதாபி கணபதிம் என்கின்ற புகழ்பெற்ற கீர்த்தனையைப் பாடியுள்ளார்கள். எந்தவொரு சங்கீத வித்வானும், எந்தவொரு நாதஸ்வர கலைஞரும் தனது இசைக் கச்சேரியை ஆரம்பிப்பதற்கு முன்னாலே, இந்தக் கீர்த்தனையை மரியாதையுடன் வணங்கி ஆரம்பிப்பது தொன்றுதொட்டு இருக்கின்ற வழக்கம். நானும், வாதாபி கணபதியை வணங்கி, பொது விவாதத்திலே பங்கேற்பதிலே பெருமைப்படுகிறேன்.

ஆட்சி அதிகாரத்தை அளிப்பவர்கள் மக்கள். அந்த ஆட்சி என்ற வண்டிக்கு அச்சாணியாக சட்டமன்றப் பேரவையும், ஆரக்கால்களைக் கொண்ட சக்கரமாக நிருவாகமும் இருக்கின்றது. மக்களை சுதந்திரமாக, அச்சமின்றி, அனைத்து அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்து, நலமுடன் வாழவைக்க வேண்டும் என்பதுதான் ஜனநாயக அரசினுடைய கடமை. இதைத்தான்



*2018 மார்ச் 19*] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

Welfare State என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். காற்று எவ்வாறு பாகுபாடு இல்லாமல் அனைவருக்கும் பலனளிக்கிறதோ, நதி எவ்வாறு பாகுபாடு பார்ப்பதில்லையோ, நிழல் தரும் மரம் எவ்வாறு பாகுபாடு பார்ப்பதில்லையோ, அதுபோல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பாகுபாடில்லாமல், அனைவரையும் சமமாகப் பாவித்து, மரம், காற்று, நதி போல அனைத்து மக்களுக்குமான சிறந்த அரசாக தமிழகத்திலே அம்மா அவர்களுடைய அரசு செயல்பட்டு வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தங்கச் சுரங்கமேயானாலும் சரியான நிருவாகம் இல்லையென்றால் நட்டமே ஏற்படும்; அதற்காகத்தான் நிதிநிலை அறிக்கை. நிதி இருந்தால்தான் ஏழை, எளிய மக்களுடைய கோரிக்கைகளுக்கு நீதி கிடைக்கும் என்பதால் நிதிநிலை அறிக்கையிலே திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. அழகிய பூந்தோட்டத்திலிருந்து அன்றலர்ந்த மலர்களைப் பறித்து, பூமாலையாகத் தொடுத்து, மகேசனுக்கு அணிவிப்பதற்கு ஒப்ப, மக்களுக்கு செய்யும் தொண்டே மகேசனுக்கு செய்யும் தொண்டு என சுவாமி விவேகானந்தர் அவர்கள் கூறியதைப் போல, நிதிநிலை அறிக்கையிலே பல நல்ல திட்டங்களுக்கு நிதியாதாரத்தைப் பெருக்கி பூமாலையாக இன்றைக்கு மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், துணை முதல்வர் அவர்களும் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–00*

பள்ளிக் கல்வித் துறையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாறி வரும் சூழலுக்கேற்ப ஓர் அமைதிப் புரட்சியை இன்றைக்கு தமிழகத்திலே ஏற்படுத்தி வருகிறது. நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், பள்ளி செல்லா குழந்தைகளைக் கண்டறிந்து பள்ளிக்கு அனுப்புதல், நபார்டு வங்கி உதவியுடன் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், பள்ளிகளினுடைய கழிவறைகளை தூய்மையான சுகாதாரத்துடன் பராமரித்தல், மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள், சைக்கிள் உள்ளிட்ட விலையில்லாத பொருட்கள் வழங்குதல், மாணவ, மாணவிகளுக்கு இடை நிற்றலைக் குறைக்க சிறப்பு ஊக்கத் தொகை வழங்குதல் என இந்தியாவுக்கே முன்மாதிரியாக இன்றைக்கு பள்ளிக் கல்வித்

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2018 மார்ச் 19

துறை விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் ஆணித்தரமாக உறுதிப்படுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

Ph.D. முடித்தவர்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு இன்றைக்குக் கல்வித் துறையிலே அம்மா அவர்களுடைய அடியொற்றி, இந்தத் துறையை வழிநடத்திக் கொண்டிருக்கிற அண்ணன் திரு. செங்கோட்டையன் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதவிர இணையவழி மூலமாக கற்கும் வகுப்பறைகள், திறன்மிகு வகுப்பறைகள், கணினிகளுடன் கூடிய உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் என பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.27,206 கோடியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறது.

புரட்சித் தலைவருடைய பாடல் வரிகளிலிருந்து நாம் கூறவேண்டுமென்று சொன்னால்,

"நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே,
நம் நாடு என்னும் தோட்டத்திலே
நாளை மலரும் முல்லைகளே"

என்ற பாடலும்,

"நல்ல நல்ல நிலம் பார்த்து, நாமும் விதை விதைக்கணும்,
நாட்டு மக்கள் மனங்களிலே நாணயத்தை வளர்க்கணும்,
பள்ளி என்ற நிலந்தனிலே கல்விதனை விதைக்கணும்,
பிள்ளைகளை சீர்திருத்தி பெரியவர்கள் ஆக்கணும்"

என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வழிவந்த அம்மா அவர்களுடைய அரசு, இன்றைக்குக் குழந்தைகளுக்கான கல்வி நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது. இன்றைய தமிழ்நாட்டு மாணவர்களை 'நீட்' தேர்வு மட்டுமல்லாமல், எந்தவொரு போட்டித் தேர்வையும் எழுதும் வகையில் பாடத் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டு சிறப்பான ஓர் ஆட்சியை அம்மா அவர்களுடைய அரசு தந்து கொண்டிருக்கிறது.

இராமேஸ்வரத்திலிருந்து ஏவுகணை விஞ்ஞானி அப்துல் கலாம் உருவானதைப்போல, அம்மா அவர்களுடைய அரசு, கல்வித் துறையிலே கொண்டு வருகிற அளப்பரிய மாற்றங்கள் காரணமாக எதிர்காலத்திலே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் அப்துல் கலாம்



2018 மார்ச் 19] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

உருவாவார்கள் என்பதை நான் ஆணித்தரமாக சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளியின் முதல் வகுப்பிலே 10 இலட்சம் மாணவர்கள் சேர்ந்தால், அந்த 10 இலட்சம் மாணவர்களும் இடை நிற்றல் இன்றி பள்ளி இறுதி வரை கல்வி பயில்வதை இன்றைக்கு அம்மா அவர்களுடைய அரசு உறுதி செய்வதை இலட்சியமாகக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வியிலேயிருந்து உயர் கல்விக்குச் செல்லக்கூடிய மாணவர்களுடைய விகிதம் 2011 ஆம் ஆண்டிலே 24 சதவிகிதம். இன்றைக்கு அம்மா அவர்களுடைய அரசு எடுத்த சீரிய நடவடிக்கை காரணமாக இந்த 7 ஆண்டுக் காலத்திலே 24 சதவிகிதத்திலேயிருந்து 47 சதவிகிதமாக தமிழகத்திலே உயர்ந்திருக்கிறதென்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய அளவிலே கல்வித் துறையிலே மிகப்பெரிய மாற்றத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்திருக்கிறதென்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

உயர் கல்வித் துறையிலே 2017–2018 ஆம் ஆண்டுகளில் 186.7 கோடி ரூபாய் செலவிலே 8 புதிய அரசு கலை அறிவியல் கல்லூரிகளும், 3 புதிய பல்கலை உறுப்பு கலை அறிவியல் கல்லூரிகளும், ஒரு பாலிடெக்னிக் கல்லூரியும் தொடங்க அம்மா அவர்களுடைய அரசு அனுமதித்துள்ளது. இது எதைக் காட்டுகிறதென்று சொன்னால், கிராமப்புற ஏழையெளிய மாணவர்கள் பள்ளிக் கல்வியுடன் நின்றுவிடாமல், உயர் கல்வி பயில வழிவகை செய்யும் நிலையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மட்டுமே சாதித்திருக்கிறது; நாங்கள் சாதித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை ஆணித்தரமாக இங்கு பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழையெளிய மக்கள் உயர் கல்வி பெற வேண்டும் என அம்மா அவர்கள் மிகவும் விரும்பினார்கள். மாவட்டத்திற்கு ஒரு கல்லூரியையாவது தர வேண்டும் என இலட்சியமாக வைத்திருந்த அம்மா அவர்கள், தன்னுடைய இடைவிடாத முயற்சியால் தொகுதிக்கு ஒரு கல்லூரி என்கிற ஒரு சரித்திர சாதனையை இன்றைக்கு தமிழகத்திலே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தவகையிலே, உயர் கல்வித் துறையிலே, மாவட்டந்தோறும் ஐ.டி.ஐ. கல்லூரி, மாவட்டந்தோறும் பாலிடெக்னிக் கல்லூரி, மாவட்டந்தோறும் கலை அறிவியல் கல்லூரிகளைத் துவக்கிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைச்

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [*2018 மார்ச் 19*

சாரும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–05*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், தேசிய அளவிலே முன்மாதிரியான துறையாக பீடு நடைபோட்டுக் கொண்டிருக்கிற துறை என்று சொன்னால், நமது சுகாதாரத் துறைதான் என்பதை நான் அழுத்தமாகப் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வறுமையுடன்கூடிய நோய் மிகவும் கொடியது. மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'குதிரை கொள் என்று சொன்னால், வாயைத் திறக்கும், கடிவாளம் என்று சொன்னால், வாயை மூடிக்கொள்ளும்' என்று கிராமத்தில் பழமொழியாகச் சொல்வார்கள். அதைப்போல பணமிருந்தால் மட்டுமே சகல வசதி படைத்த தனியார் மருத்துவமனைகளுடைய இரும்புக் கதவும், இரும்பு நெஞ்சமும் திறக்கும். பணமில்லை என்று சொன்னால், அந்தக் கதவும் மூடிக்கொள்ளும். இதுதான் தமிழகத்தில் இருக்கிற தனியார் மருத்துவமனைகளுடைய நிலை. இதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணையோடு சிந்தித்தார்கள். ஏழை மக்களுக்கான விரிவுபடுத்தப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அரசு இன்சூரன்ஸ் நிறுவனம் மூலமாக அறிமுகப்படுத்தி வெற்றி கண்டவர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அரசு மருத்துவமனைகளிலே மட்டுமல்ல, தனியார் மருத்துவமனைகளிலும் இந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருவது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு ஒரு மணிமகுட சாதனையாக உள்ளது என்பதை இந்த அவையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுகாதாரத் துறைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு, 2018–2019 ஆம் ஆண்டிலே, ரூ.1,361.60 கோடி நிதியை மக்கள் நலனுக்காக ஒதுக்கீடு செய்திருக்கிறார் என்று சொன்னால், இது தமிழக மக்கள்மீது இந்த அரசுக்குள்ள அக்கறையைக் காட்டுகிறது என்பதை நான் இங்கு பதிவு செய்ய ஆசைப்படுகிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, சென்னை வெள்ளத்தின்போது தொற்றுநோய் பரவாமல் மக்களைப் பாதுகாக்க எடுத்த



*2018 மார்ச் 19*] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

நடவடிக்கையானது மிக முக்கியமான நிருவாகத் திறமைக்கும், ஒருங்கிணைப்புத் திறமைக்கும் சான்றாக மக்களால் இன்றைக்கும் பேசப்படுவதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில் பல்வேறு சாதனைகளை செய்து வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது. . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, ரூ.1,361.60 கோடி என்று சொல்லியிருக்கிறீர்கள். ரூ.11,638.44 கோடி என்று மாற்றிச் சொல்லுங்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** சரி, ரூ.11,638.44 கோடி என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது, பிறந்த குழந்தைகளுக்காக ஓர் அற்புதமான திட்டத்தை இந்திய அளவிலே முதன்முதலாக தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தினார்கள். அதுதான் பிறந்த குழந்தைகளுக்கு பரிசுப் பெட்டகம் தருவிக்கக்கூடிய அற்புதமான ஒரு நிகழ்வு. இந்தத் திட்டத்தினுடைய வெற்றியை கடந்த தேர்தலில் மக்கள் எங்களுக்கு அங்கீகாரமாகத் தந்தார்கள். அது மக்கள் மத்தியிலே மிகப்பெரிய வெற்றி பெற்றதற்குண்டான அத்தாட்சியாகத்தான் இந்தத் தேர்தலில் மீண்டும் அம்மா அவர்களுடைய ஆட்சி தமிழகத்தில் அமைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை விஞ்சுகிற வகையிலே, இப்பொழுது பிறக்கிற குழந்தைகளுடைய எண்ணிக்கையில், பிறக்கிற குழந்தைகள் எத்தனைபேர் உயிரோடு வாழ்கிறார்கள், எத்தனை பேர் இறக்கிறார்கள் என்பது தொடர்பான சதவிகிதத்தைக் குறைக்க வேண்டும் என்கிற அடிப்படையில் தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே இருக்கிற அம்மா அவர்களுடைய அரசு 'தாய்–சேய் நலப் பெட்டகம்' வழங்கக்கூடிய ஓர் அற்புதமான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, குழந்தை கருவிலே இருக்கிறபொழுதே, அவர்களுக்குத் தரமான ஊட்டச்சத்து வழங்க வேண்டுமென்று கருதி, இந்தியாவிலே எந்த மாநிலமும் நினைத்துப் பார்க்க முடியாத ஓர் அற்புதமான திட்டத்தைத் தமிழகத்திலே இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின் வெற்றியாகத்தான் 2010 ஆம் ஆண்டிலே

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2018 மார்ச் 19

பச்சிளம் குழந்தைகளுடைய இறப்பு, 1000 குழந்தைகள் பிறந்தால் 24 குழந்தைகள் இறப்பு என்று இருந்த நிலை மாறி, 2016 ஆம் ஆண்டில், இறப்பு 24 குழந்தைகள் என்றிருந்ததை, தற்போது 17 ஆகக் குறைத்து சாதனை படைத்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு அந்த சாதனையை விஞ்சுகிற அளவிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, 24 குழந்தைகள் இறப்பு என்றிருந்ததை 17 ஆகக் குறைத்து மிகப் பெரிய சாதனையை இன்றைக்கு சுகாதாரத் துறை செய்திருக்கிறது. இவ்வளவு சிறப்பான திட்டங்களை சுகாதாரத் துறையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சென்னையிலே super speciality மருத்துவமனை துவங்கப்பட்டு அனைத்து உயர் சிகிச்சைகளும் உலகத் தரத்துடன் ஏழையெளிய மக்களுக்குக் கிடைத்திட இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழி செய்திருக்கிறார்கள். பெருகிவரும் நோய்களுக்கு சிகிச்சை அளிக்க போதிய மருத்துவர்களை நியமிக்கவும், மக்களுக்கு உலகத் தரம் வாய்ந்த சிகிச்சை அளித்தல் உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களை நிறைவேற்ற 4 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 345 புதிய மருத்துவ இடங்களை இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உருவாக்கியிருக்கிறது என்பதை அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–10*

மருத்துவ நிதியுதவியைப் பொறுத்தவரையில், கடந்த காலத்தில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் நினைவாக கருவுற்ற நபர் ஒருவருக்கு 12,000 ரூபாய் என்று வழங்கப்பட்ட உதவித் தொகையை இன்றைக்கு 18,000 ரூபாயாக உயர்த்தி வழங்கி, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி ஒரு சிறந்த நிருவாகத்தை அம்மாவின் அரசு வழங்கி வருகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் நினைவாக இந்தத் திட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. பொன்னேரி மற்றும் நசரத்பேட்டையிலே விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுகளை துவக்குதல், நான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலே புற்றுநோய் சிகிச்சைக்கான அலகுகள் துவக்குதல் என பணிகள் துவக்கப்படுவது இந்த நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சம் என்பதை இந்த நேரத்திலே நான் பதியவைக்க ஆசைப்படுகிறேன்.



2018 மார்ச் 19] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

மருத்துவத் துறை என்பது 24 மணிநேரப் பணியாகும். டெங்கு காய்ச்சல் போன்றவை எதிர் நாட்டவர்களைப்போல திடீர் தாக்குதல் நடத்துகிறது. நமது மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் தனது முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தனைப்போல சுழன்று பணியாற்றி தீ போல பரவும் நோய்களைக் கட்டுக்குள் கொண்டு வரக்கூடிய மிகச் சிறப்பான நிருவாகத்தை இன்றைக்கு தந்து கொண்டிருக்கிறார் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, யானைக்கு கவளம் கவளமாகச் சோறு உருட்டிக் கொடுக்கும்போது ஒருசில பருக்கைகள் கீழே சிந்தத்தான் செய்யும். அதேப்போல அரசின் சில நடைமுறைச் சிக்கல்களை, ஒருசில குறைகளை ஒருசிலர் விமர்சனம் செய்வது ஈரைப் பேனாக்கி மிகைப்படுத்திப் பார்க்கப்படுவது போன்றது. அவ்வாறு மிகைப்படுத்திப் பார்க்க வேண்டாம் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

டெங்கு, சிக்–குன்–குனியா, வைரஸ் போன்ற காய்ச்சலுக்கு கசப்பான நில வேம்புக் கஷாயம் குடிக்கச் சொல்லும் நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பெருந்துறையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமையும் என்கிற இனிப்பான செய்தியை மாண்புமிகு முலமைச்சரோடு கலந்துபேசி செய்ய வேண்டுமென்கிற கோரிக்கையை நான் வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கிடைக்கும்' என்பதற்கேற்ப இன்றைக்கு வருவாய்த் துறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. பட்டா கொடுப்பதற்கு இலக்கை நிர்ணயிப்பதும், அத்துறை நிர்ணயித்த இலக்கை மீறி பட்டா வழங்குவதும் அத்துறையின் தொடர்ந்த சாதனை. அந்த வகையில் 2018–2019 ஆம் ஆண்டிற்கு 3 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்க இருக்கிறது. 'குருவிக்கும் ஒரு கூடு உண்டு, மனிதா உனக்கு ஒரு வீடில்லையா கேள்' எனக் குறிப்பிடுவதைப்போல மக்கள் அனைவருக்கும் படிப்படியாக வீட்டு மனைகளை வழங்க வேண்டியது ஓர் அரசினுடைய கடமை. ஆனால், தொழிற்சாலைகளில் கார்களை உற்பத்தி செய்வதைப்போல நிலத்தை உற்பத்தி செய்ய முடியாது. மூன்றுபுறம் கடல் சூழ்ந்த தமிழகத்திலே வனப் பகுதி, விவசாயப் பகுதி, நீர்நிலைப் பகுதி உள்ளிட்ட பல பகுதிகளைத் தவிர்த்துப் பார்த்தால் நிலத்தைத் தேடத்தான்

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2018 மார்ச் 19

வேண்டும். அத்தகைய நிலங்களைத் தேடிக் கண்டுபிடித்து பட்டா வழங்குவதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில், 'நீர்நிலைப் பாதை போன்ற புறம்போக்கு நிலங்களில் வாழும் மக்களுக்கு தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி இலவச பட்டா போட்டு ஊரக வளர்ச்சித் துறை மூலமாக விதிமுறைகளுக்குட்பட்டு வீட்டு வசதி வழங்கப்படும்' என்று குறிப்பிட்டுள்ளதை, பல ஆண்டுகளாக போக்கிடம் இல்லாமல் நீர்நிலைப் புறம்போக்கு இடங்களிலே வாழ்ந்து வருகிற ஏழையெளிய மக்கள் வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது, வல்லவனாகவும் இருக்க வேண்டும்' என்று சொன்னார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அந்த வகையிலே நல்லவனாகவும், வல்லவனாகவும் அனைவரையும் ஒருங்கிணைத்து ஆட்சி செலுத்திவரும் நமது அன்புக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சிறப்பான நிருவாகத்திலே ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கையினை நிறுவிட 10 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மாவின் அரசு இன்றைக்கு ஒதுக்கியிருக்கிறது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது தமிழ் ஆர்வலர்களிடையே மிகப் பெரிய மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. ஹார்வர்டு பல்கலைக்கழகம் அமெரிக்காவில் உள்ள உலகப் புகழ் பெற்ற ஒரு பல்கலைக்கழகம். இந்தப் பல்கலைக்கழகத்திலே படித்துப் பட்டம் பெற்றவர்கள், விஞ்ஞானிகள் என 150 பேர் இன்றைக்கு நோபல் பரிசு பெற்றுள்ளார்கள் என்பதை கூடுதல் தகவலாக நான் இங்கே பதிவுசெய்ய கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறிது காலத்திற்கு முன்பு வெளிவந்த 'மெர்சல்' என்கிற ஒரு திரைப்படம். அந்தத் திரைப்படத்திலே ஒரு popular–ஆன பாடல். "ஆளப் போறான் தமிழன்" என்று அந்தப் பாடலிலே வரும். இப்போது ஆண்டு கொண்டிருப்பவரே ஒரு பச்சைத் தமிழன்தானே என்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பல தலைவர்களும் தமிழ்நாட்டை தமிழன்தான் ஆள வேண்டும் என்று



2018 மார்ச் 19] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

சொல்கிறார்கள். இப்பொழுது கழக ஆட்சியை வழிநடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்கள் சிங்கள தேசத்திலிருந்து வந்தவரா? இன்று பச்சைத் தமிழனின் தலைமையில்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–15

பள்ளிக் கூடத்திலே முதல் மார்க் மாணவனுடன் சேர்ந்து இருந்தால் நன்றாகப் படிக்கலாம் என்ற வகையிலே, 'முதல்வனாக இரு, இல்லையேல் முதல்வனோடு இரு' என்று ஆசிரியர் அறிவுரை கூறுவார். அந்தவகையிலே நாங்கள் தமிழக ஆட்சியிலே முதல்வரோடு இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளிலே பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் ரூபாய் 614.84 கோடி உள்பட நகராட்சி நிருவாகத் துறைக்கு ரூபாய் 13,896 கோடியை இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். குடிநீர் வழங்கல் பணிகளுக்காக 1,853.38 கோடி ரூபாயை அடிப்படை வசதிகள் மேம்பாட்டிற்காக அம்மா அவர்களின் அரசு இன்றைக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறது.

கடந்த காலங்களிலெல்லாம், ஓர் ஆட்சி ஐந்து ஆண்டுகள் நடந்தது என்று சொன்னால், அந்த ஐந்து ஆண்டுகளிலே, ஏதாவது ஓர் ஆண்டிலே மழைப் பொழிவு குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே குடிநீர்ப் பஞ்சம் ஏற்படும். இப்போது வருடந்தோறும் மழைப் பொழிவு குறைவாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, வருடந்தோறும் குடிநீர்ப் பற்றாக்குறையை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இது நமக்கு ஒரு சவாலாக இருக்கிறது. இது ஒரு சவாலாக இருந்தாலும், அந்தச் சவாலை முறியடித்து அம்மா அவர்களின் அரசு தமிழகத்திலே தண்ணீர்ப் பஞ்சம் இல்லாத அரசாக இன்றைக்கு வழிநடத்திச் சென்று கொண்டிருக்கிறது என்பதை நான் அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

போர் முனையிலே பிரஞ்சு பேரரசன் நெப்போலியன், குதிரையின்மீது தூங்கி போர் முனையிலே வெற்றி பெற்றதாக சரித்திரம் சொல்கிறது. அப்படி குடிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்த்து

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [*2018 மார்ச் 19*

வருகிறார் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் திரு. வேலுமணி அவர்கள். அவரை கோவையினுடைய நெப்போலியன் என்றுகூடச் சொல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிலே இன்றைக்கு உள்ளாட்சித் துறை மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

சென்னையிலே, குடிநீர்ப் பிரச்சினை வருடந்தோறும் கேள்விக்குறியாக மாறியபோது புதிய வீராணம் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி, எந்தக் காலத்திற்கும் சென்னை மாநகரில் குடிநீர்ப் பிரச்சினை இல்லை என்கின்ற நிருவாகத்தைத் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

“அண்ணாந்து பார்க்கின்ற மாளிகை கட்டி
அதன் அருகினில் ஓலை குடிசை கட்டி
பொன்னான உலகு என்று பெயருமிட்டால்
இந்த பூமி சிரிக்கும், அந்த சாமி சிரிக்கும்”

என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏழையெளிய மக்களுக்கான வீட்டைப் பற்றி அந்தக் காலத்திலேயே திரைப்படங்களில் வருத்தத்தோடு பாடியிருப்பார்கள்.

‘குடிசையெல்லாம் வீடாகும் நேரத்துலே
நாங்கள் தெருவோரம் குடியேற தேவையில்லே
சர்க்காரு ஏழை பக்கம் இருக்கையிலே
நாங்க சட்டதிட்டம் மீறி இங்கே நடப்பதில்லே’

அம்மா சர்க்கார் ஏழை பக்கம் இருப்பதனால் நாங்கள் சட்ட திட்டம் மீறி நடப்பதில்லை என்று மக்கள் இன்றைக்கு ஆனந்தமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஏதோ மிட்டா மிராசுகளுக்கும், பட்டயக்காரர்களுக்கும், பாளையக்காரர்களுக்கும் துவக்கப்பட்ட இயக்கம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களால், ஏழையெளிய மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்காக பெண்களைக் கைதூக்கி விடுவதற்காக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் விதை போட்டு துவக்கப்பட்ட இயக்கம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற இயக்கம். அந்த இயக்கம் இன்றைக்கு அம்மா அவர்களால் மெருகேற்றப்பட்டிருக்கிறது.



*2018 மார்ச் 19*] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

இந்த மக்களுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த முதலமைச்சரின் சூரிய ஒளி மின் வசதியுடன்கூடிய பசுமை வீடுகள் மின் திட்டத்திற்கு இன்றைக்கு மக்களிடையே பெருத்த வரவேற்பு இருந்து கொண்டிருக்கிறது. 2018–2019 ஆம் ஆண்டில் ரூபாய் 420 கோடி மதிப்பில் 20,000 வீடுகள் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இன்றைக்கு தீர்மானித்துள்ளது. இது மக்கள் மத்தியிலே மிகப்பெரிய மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இதைப்போல பிரதம மந்திரியின் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ஒரு கோடியே 30 இலட்சம் வீடுகள் கட்டவும், நகர்ப்புறப் பகுதியில் ஒரு இலட்சம் குடியிருப்புகள் கட்டவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தீர்மானித்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கற்பூரம் உடனே தீ பிடிக்கும், கரித்துண்டு ஊதினால்தான் தீ பிடிக்கும், வாழைத்தண்டு தீ பிடிக்கவே பிடிக்காது. ஏனெனில் அதில் ஈரம் இருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமைத்துத் தந்துள்ள இந்த அற்புதமான அரசு கற்பூர புத்தியுள்ள அரசு. இந்த அரசிலே மின் துறையும், மீன் துறையும் வைத்துள்ள அமைச்சர்கள் மிகவும் சுறுசுறுப்பானவர்கள். தூக்கத்திலே எழுப்பிக் கேட்டாலும் தங்கள் துறை சார்ந்த பதிலை உடனே சொல்லக்கூடிய சிறப்பான அமைச்சர்கள் இந்தத் துறையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மின் துறையைப் பொறுத்தவரை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 100 யூனிட் மின்சாரம் வீடுகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என்று எங்கள் பெருந்துறையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சொன்னார்கள். அதற்கு உத்தரவும் பிறப்பித்து, அம்மா அவர்களுடைய அரசு தமிழகத்திலே அந்த உத்தரவை தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. இதனால் தமிழகம் முழுவதும் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் மொத்த மின் தொகையில் ரூ.300 வரை குறைவாகச் செலுத்தி, இந்தச் சபையிலே இருக்கிற எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அதிலே பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே ஆணித்தரமாக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2018 மார்ச் 19

பிற்பகல் 1–20

இன்று தமிழகம் மின் மிகை மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. தமிழகத்திலே மின்சார வெட்டு என்ற பேச்சுக்கே இடம் கிடையாது. எண்ணூர் விரிவாக்கத் திட்டம், எண்ணூர் சிறப்புப் பொருளாதாரத் திட்டத்தில் உள்ள 2 அலகுகள், வடசென்னை அனல் மின் திட்டம், உப்பூர் மின் திட்டம் மற்றும் அதனுடைய இரண்டு அலகுகள், உடன்குடி அனல் மின் திட்டம் என 5,040 மெகா வாட் மின் உற்பத்தி செய்வதற்கான பணிகளை இன்றைக்கு தமிழகத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இருக்கக்கூடிய அம்மா அவர்களுடைய அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது என்பதை அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழகம் மின் மிகை மாநிலமாக மாறியதன் காரணமாக, தொழில் துறையினர் புதிய தொழில்களைத் தொடங்குவதற்காக இன்றைக்கு அகில உலகத்திலிருந்து தமிழகத்தைத் தேடி வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் நிதர்சனமான உண்மை. வேலைவாய்ப்புகள் பெருகுவதற்குண்டான கதவுகளை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு திறந்து விட்டிருக்கிறது என்பதை நான் ஆணித்தரமாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மீன் ஆனது, உப்புத் தண்ணீர் உள்ள கடலில்தான் உயிர் வாழ்கிறது. உப்புத் தண்ணீரைத்தான் மீன் அருந்துகிறது. ஆனால், மீனின் உடலில் உப்பில்லை. மீனை சமைக்கிறபொழுது நாம் உப்பு சேர்த்து சமைக்க வேண்டும். ஏனென்று சொன்னால், உப்பை தன்னுடலில் சேர்க்காத மீனைப்போல, பற்றற்று வாழ கற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்வார்கள். அதனடிப்படையிலே, 'தரைமேல் பிறக்க வைத்தான், எங்களைத் தண்ணீரில் மிதக்க வைத்தான்'; 'ஒரு நாள் போவார், ஒரு நாள் வருவார்; ஒவ்வொரு நாளும் துயரம்' என்று மீனவர்களைப் பற்றி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு திரைப்படத்திலே பாடியிருப்பார். அப்படிப்பட்ட நிலையை மாற்றி, இன்றைக்கு தமிழகத்திலே மீனவர்களுடைய நிலையை உச்சத்திற்குக் கொண்டு சென்றிருக்கின்ற அரசு, அம்மா அவர்களுடைய அரசு என்பதை நான் பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மீனவர்களுக்காக பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி, தமிழ்நாட்டிலே அம்மா அவர்களுடைய



2018 மார்ச் 19] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

அரசு மீனவ நண்பனாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மீன்பிடி தடைக் காலத்திற்கான உதவித் தொகை ரூ.5,000/– தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. குளச்சல், தேங்காய்ப்பட்டினம், சின்னமுட்டம், வெள்ளப்பள்ளம், தரங்கம்பாடி மற்றும் பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகங்கள் இன்றைக்கு அமைக்கப்பட உள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம், குத்துக்கல் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், குரும்பனை, பொழிக்கரை, கேசவன்புத்தன்துறை, பள்ளம்துறை ஆகிய இடங்களிலே மீன் இறங்கு தளங்கள் என மொத்தம் ரூ.1,100 கோடி அளவில் பணிகளை மேற்கொள்ள அம்மா அவர்களுடைய அரசு திட்டமிட்டுள்ளது. கன்னியாகுமரியைத் தாக்கிய 'ஒகி' புயலினால் காணாமல் போன 3,506 மீனவர்களும், 288 மீன்பிடிப் படகுகளும் இன்றைக்கு அம்மா அவர்களுடைய அரசால் பாதுகாப்பாக மீட்கப்பட்டு, சாதனை படைத்துள்ளது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மீட்க வாய்ப்பில்லாத 177 மீனவர்களுடைய குடும்பத்திற்கு தலா ரூ.20 இலட்சத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு இன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமெரிக்காவினுடைய ஜனாதிபதியாக இருந்த Jimmy Carter, ஒரு கடலை விவசாயி. அவரது அக்கா சிறு வயதாக இருக்கிறபொழுது, அவரிடம் 'தம்பி, நீ எத்தனை மணிக்கு எழுந்திருக்கிறாய்' என்று கேட்டார். அதற்கு Jimmy Carter, 'நான் காலை 6 மணிக்கு எழுந்திருக்கிறேன்' என்று சொன்னார். அதற்கு அவரது அக்கா, 'நீ 4 மணிக்கு எழுந்திருந்தால், அமெரிக்க நாட்டினுடைய ஜனாதிபதியாகக்கூட ஆகலாம்' என்று நம்பிக்கை ஊட்டினார். அதைப்போலவே, Jimmy Carter எதிர்காலத்தில் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி ஆனார். அப்போதும் Jimmy Carter காலையில் 4 மணிக்கு எழுந்திருப்பதை பழக்கமாக வைத்திருந்தார்.

அமெரிக்காவிலே ஒரு கடலை விவசாயி ஜனாதிபதி ஆனதைப்போல, இப்பொழுது தமிழ்நாட்டில் எடப்பாடியைச் சேர்ந்த ஒரு விவசாயினுடைய மகன் முதல்வராகி உள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இது விவசாயி வழி நடத்துகிற ஓர் அற்புதமான ஆட்சி. இந்த விவசாயிதான் ஓராண்டில் 5,000–க்கும் மேற்பட்ட கோப்புகளுக்கு உடனுக்குடன் ஒப்புதல்

வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) கோப்புகளே தேக்கமில்லை என்ற நிலையை தமிழ்நாட்டிலே உருவாக்கிக் காட்டியிருக்கிறார்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ** ஆனால், அரசியலைப் பொறுத்தவரையில், அவர் ஓர் எலி. நமது முதல்வர் அவர்களுக்கு ** எப்போது வருவேன், எப்படி வருவேன், எதற்காக வருவேன் என டயலாக் எல்லாம் பேசத் தெரியாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு அவைக்கு வெளியில் இருக்கக்கூடியவர்களின் பெயர்களை எல்லாம் குறிப்பிட்டுப் பேசுவது மரபல்ல என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள், வெளியில் இருப்பவரின் பெயரைச் சொல்லிப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

பிற்பகல் 1–25

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, அந்தப் பெயர்களை மட்டும் நீங்கள் எடுத்துவிடுங்கள். பொதுவாகவே யார் வேண்டுமானாலும் அரசியலில் புலியாக இருக்கலாம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு மாற்றாக இருப்பவர்கள் எல்லோரும், அரசியலில் எங்களைப் பொறுத்தவரையில் எலியாகத்தான் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, ‘எப்போது வருவேன், எப்படி வருவேன்’ என்று வசனம் எல்லாம் பேச வராது. தசாவதாரமும் எடுக்கத் தெரியாது. தனக்கும் புரியாமல், மற்றவர்களுக்கும் புரியாமல் பேசவும் தெரியாது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முல்லை, மருதம், குறிஞ்சி, பாலை மற்றும் நெய்தல் என்ற ஐவகை மண்ணில் வாழும் மக்களின் வாழ்க்கை தெரியும்,

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





கஷ்டம் புரியும். அதனால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தென்னை விவசாயிகளைக் காக்கும் வகையில் “நீரா” பானம் தயாரிக்க இன்றைக்கு அனுமதித்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) இது தென்னை விவசாயிகளிடையே மிகப்பெரிய வரவேற்பையும்,பாராட்டையும்பெற்றுள்ளது.கடந்த 50 ஆண்டுகளில் எந்த ஓர் அரசும் விவசாயிகளிடமிருந்து பாராட்டுப் பெற்றதாக சரித்திரம் கிடையாது. அந்தப் பாராட்டுகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்குப் பெற்றிருக்கிறது. ஏனென்று சொன்னால், ‘உழுதவன் கணக்குப் பார்த்தால், உழக்குக்கூட மிஞ்சாது’ என்று கிராமத்தில் சொல்வார்கள். விவசாயி மகன் என்றால் பெண் கொடுப்பதற்குக்கூட தயங்குவார்கள். ஏர் ஓட்டுபவன் இளப்பமாக இருந்தால், எருதுகூட மதிக்காது என்று பழமொழி சொல்வார்கள். அந்த நிலை தமிழ்நாட்டிலே இன்றைக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

விவசாயத் துறையில் புதிய முயற்சியாக, திண்டிவனம் பெலாக்குப்பம் கிராமத்தில் 450 ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய உணவுப் பதப்படுத்தும் பூங்கா அமையவிருப்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் பெருமைக்கு ஒரு சாட்சியாக இருந்து கொண்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து ஈரோடு, தேனி, விருதுநகர், தூத்துக்குடி, கடலூர், சேலம், திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பதப்படுத்தும் பூங்காக்களை உருவாக்கவும், அதில் தனியார் நிறுவனங்கள் முதலீடு செய்ய ஊக்குவிக்கப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் அறிவித்திருப்பது விவசாயிகளிடையே மிகப்பெரிய மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இதுதவிர, காய்கறி பழங்களுக்கான குளிர்பதன சேமிப்புக் கிடங்குகளை அந்தந்த கூட்டுறவு விவசாயச் சங்கங்கள்மூலம் உருவாக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எனது பெருந்துறை தொகுதியில் உள்ள தினசரி மார்க்கெட் மற்றும் வாரச் சந்தை மார்க்கெட், மாவட்டத்திலேயே மிகப்பெரிய மார்க்கெட்டாகும். தக்காளியை எடுத்துக்கொண்டால் கிலோ ஒன்று 50 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது; சில நேரங்களில் ஒரு கிலோ 5 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இந்த நேரத்தில் பறிக்கும் கூலிகூட கிடைக்காமல், சிறு வியாபாரிகள் வருத்தத்தில் இருக்கிறார்கள். குளிர்பதனக் கிடங்குகள் அமைத்தால், விவசாயிகளுக்குக் கிடைக்க

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2018 மார்ச் 19

வேண்டிய விலை சிறிது காலதாமதப்பட்டாலும், அவர்களுக்கு உரிய விலை கிடைக்கக்கூடிய நிலை உருவாகும் என்பதை கோரிக்கையாக நான் வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அம்மாவின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழகத்தில் வனப் பரப்பை அதிகரிக்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபோது இலட்சக்கணக்கான மரக்கன்றுகளை நடும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்த ஆண்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் 70–வது பிறந்த நாளினை முன்னிட்டு, தமிழகத்திலே இலட்சக்கணக்கான மரங்கள் நடப்படும் என்ற திட்டத்தை அறிவித்து, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரிலே அழைத்துவந்து, இந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். காடுகளைப் பாதுகாக்க வேண்டும். அடர் குறைந்த காப்புக் காடுகளைப் புதுப்பித்து அடர்காடுகளாக மாற்றும் திட்டம், மிகப் புதுமையான திட்டமாகும். இளைஞர்கள் தங்கள் பகுதியில் மரம் வளர்ப்பதுடன், மக்களை மரம் வளர்ப்புப் பணிகளில் ஈடுபடுத்தவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதி கொண்டுள்ளது.

மனிதனில்லாமல் மரம் இருக்கும். ஆனால், மரமில்லாமல் மனிதன் வாழ முடியாது. 10 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சுரபாலரின் விருட்ச ஆயுர்வேதம் என்ற நூலில்,

"பத்து கிணறுகள் ஒரு குளத்துக்கு சமம்;
பத்து குளங்கள் ஒரு ஏரிக்கு சமம்;
பத்து ஏரிகள் ஒரு புத்திரனை தருவதற்கு சமம்;
பத்து புத்திரர்கள் ஒரு மரத்துக்கு சமம்"

என அதிலே குறிப்பிடப்பட்டிருக்கும். காடுகள் இருந்தால்தான் பூமி குளிர்ச்சியாக இருக்கும். நாம் சுவாசிக்கும் காற்று மரங்களினால் சுத்தம் செய்யப்படுகின்றது. விலையில்லா ஆக்சிஜனை மரங்கள் வழங்குகின்றன. ஓசோன் மண்டலம் பொத்தலாவதால் புற்றுநோய், தோல் வியாதி, கண் எரிச்சல், கண்பார்வை இழப்பு போன்ற நோய்கள் மனிதர்களைத் தாக்கும் வாய்ப்பு உள்ளது.

காடுகள் மண் அரிப்பைத் தடுக்கின்றன. காற்றிலுள்ள மாசை அகற்றுகின்றன. பிராணிகள், பறவைகளுக்கு புகலிடம் அளிக்கின்றன. இவற்றினுடைய பயன்களை நாம் பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம்.



2018 மார்ச் 19] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நீராதாரங்களை வளப்படுத்த முன்னுரிமை அளிக்கக்கூடிய அரசாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பாக கரிகாலன், மணல்மீது கல்வைத்து கட்டிய அணை, கல்லணை. இன்றளவும் மக்களால் நினைத்துப் பார்க்கப்படுகிறது, கல்லணை. தமிழனின் சாதனையாக, உலகின் பழமையான அணை என்று சொல்லக்கூடிய கல்லணை தமிழகத்திலே பெருமையான ஓர் அணையாக இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1–30

பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வரும்வரை, பல்லவர், சோழர் காலத்திலிருந்து குடிமராமத்து முறை தமிழ்நாட்டில் இருந்து வந்தது. மழை பொய்த்தாலும் குடிமராமத்தால் விவசாயிகள் பயன் பெற்றனர்; மக்கள் குடிநீர் பெற்றனர். தமிழர்களுக்கு நீராதாரத்தை சேமிக்கும் பழக்கம் இன்றைக்கு ஏற்பட்ட பழக்கம் இல்லை. 'தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும், தரத்தினில் குறைவதுண்டோ' என்று சொல்வதைப்போல பொன்மனச் செல்வியின் வழியிலே ஆட்சி செய்துவரும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாரம்பரிய குடிமராமத்து முறையை தமிழ்நாட்டிலே உயிர்ப்பித்துத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வண்டல் மண்ணும் விவசாயத்துக்குப் பயன்படக்கூடிய வகையில் ஒரு மாற்றத்தை தமிழகத்திலே அவர் ஏற்படுத்தியிருக்கிறார். குளம், குட்டைகள் தமிழ்நாட்டிலே தூர்வாரப்படுகின்றன. ஒரே கல்லிலே இரண்டு மாங்காய். இதனால் நிலத்தடி நீர் செறிவூட்டப்படுகிறது. வரும் நிதி ஆண்டில் இதற்காக ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது விவசாயிகளிடத்திலே மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 200 கோடி ரூபாய் செலவில் தடுப்பணைகளைக் கட்டவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியினுடைய அங்கீகாரத்திற்கு சான்றாக மக்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இராஜஸ்தானில் சிறு தடுப்பணைகள் மூலமாக பாலைவனமாக இருந்த கிராமத்தையும், சுற்றுவட்டாரத்தையும் சோலைவனமாக மாற்றியதுபோல, தமிழ்நாட்டிலும் திட்டங்களின் மூலமாகப் பெரிய அளவிலே செயல்படுத்துகிறபொழுது பெரும் நன்மை தமிழக விவசாயிகளுக்கு ஏற்படக்கூடும். தமிழ்நாட்டினுடைய அதிசயமாகவும் இது எதிர்காலத்திலே மாறும் என்பதை நான் அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** சிறப்பாக இடையூறின்றி பேசிக்கொண்டிருக்கிறீர்கள். அந்தச் சிறப்போடு முடிக்கலாம். முடிவுரைக்கு வாருங்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி இருப்பதே தமிழகத்திற்கு சிறப்பு. அந்த ஆட்சிக்கு சிறப்பாக இங்கு நின்று பேசக்கூடிய வாய்ப்பை எனக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்தது என்னுடைய குடும்பத்திற்குக் கிடைத்த சிறப்பு. ஆகவே, அம்மாவினுடைய புகழ் பாடுகிற வானம்பாடியாக இந்த இடத்திலே நான் பேசக்கூடிய வாய்ப்பைத் தந்திருக்கிற உங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்று தலைமுறைகளின் கனவு அத்திக்கடவு–அவிநாசி திட்டம். கொங்கு மண்டல மக்களுடைய கனவுத் திட்டமான அத்திக்கடவு–அவிநாசி திட்டத்திற்காக, இந்தச் சட்டமன்றப் பேரவையில் நிதிநிலை அறிக்கையில் அத்திக்கடவு–அவிநாசி திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் எங்கள் பகுதியைச் சார்ந்த விவசாயிகளின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பது உள்ளிட்ட காவேரி பிரச்சனையில் அம்மாவின் அரசு மிகக் கவனத்துடன் அனைவரையும் ஒருங்கிணைத்துச் செயல்படுகிறது. எல்லோரையும் அரவணைத்துச் செயல்படுகிறது. இதற்கு அத்தாட்சியாகத்தான் எந்தவிதப் பாகுபாடும் ஜீவாதாரப் பிரச்சினையில் இருந்துவிடக் கூடாது என்ற அடிப்படையிலே அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி இந்தியாவிற்கே முன்மாதிரி மாநிலமாகத் தமிழகத்தை வழிநடத்திச் செல்கிற ஒரு நல்ல அரசு தமிழ்நாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

புதிதாக திருமணமான ஒரு பெண்ணிடம் அவரது தோழி கேட்டாள், 'ஏம்மா! தீயணைப்பு வீரரைக் கல்யாணம் செய்து கொண்டாயே, எப்படி இருக்கிறார் உன் கணவர்' என்று. அதற்கு அப்பெண் சொன்னார், 'அதையேன் கேட்கிறாய், தீயணைப்பு வீரரைக் கல்யாணம் செய்து கொண்டது தப்பாகப் போய்விட்டது.





வீட்டில் அடுப்பை பற்ற வைத்தால் தண்ணீர் ஊற்றி அணைத்து விடுகிறார்' என்று சொன்னார். அதைப்போல நாங்கள் செய்யும் நல்ல காரியங்களையும் விமர்சனம் செய்யும் போக்கு எங்களுக்கு வருத்தத்தை அளிக்கிறது என்பதை அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக நிதி நிலை அறிக்கையில் கைத்தறி, விசைத்தறி பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை தொழில்களை ஊக்குவித்து, ஒரு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையினை அரசு வெளியிடும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் அறிவித்திருக்கிறார்கள். இது எங்களுக்கு ஊக்கத்தை அளித்திருக்கிறது. ஈரோடு மாவட்டம், விசைத்தறி மற்றும் கைத்தறித் துணிகளுக்கு புகழ் பெற்றது. பாரம்பரியமாக நேர்த்தியாக உழைக்கும் தொழிலாளர்கள் மிகுந்த மாவட்டம், ஈரோடு மாவட்டம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** Conclusion–க்கு வாருங்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இத்தொழிலை நம்பி இலட்சக்கணக்கான குடும்பங்கள் உள்ளன. தந்தை பெரியார் தோளில் சுமந்து விற்ற பெருமை உடையது கதரும், கைத்தறியும். கதரை ஆங்கிலேயரை எதிர்க்கும் போர் வாளாக உருவாக்கினார் மகாத்மா காந்தியடிகள். பெருந்துறை சிப்காட் அருகில் தாட்கோ சார்பில் ஆதி திராவிடர்கள் பனியன் கம்பெனி துவங்க 50 ஏக்கரில் 200 நவீன தொழிற்கூடங்களில் தொழில் துவங்கப்படாமல் 25 ஆண்டுகளாக வீணாகிக் கொண்டிருக்கிறது. இதனால் மக்கள் வரிப்பணம் வீணடிக்கப்பட்டுள்ளது. பனியன் தொழில், நிதி பெறுதல், விற்பனை என சிக்கல் நிறைந்த தொழில். ஆதலால் ஆதி திராவிட மக்கள் பயன்பெறும் வகையில் அவர்களை உறுப்பினர்களாக்கி ஜவுளி சார்ந்த கூட்டுறவு தொழிற்கூடங்கள் உருவாக்கப்பட வேண்டும் என ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** இன்னும் நான்கு உறுப்பினர்கள் பேச வேண்டும். உரையின் இறுதிக்கு வாருங்கள்.

[2018 மார்ச் 19

பிற்பகல் 1–35

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கான "உழவன்" அலைபேசி செயலியும், தோவாளையில் மலர்களை அறுவடைக்குப் பின் பதப்படுத்தும் அலகு அமைக்கும் செய்தியும் விவசாயிகளை மற்றொரு தளத்துக்கு எடுத்துச் செல்லும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது.

உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன மானியத் திட்டத்தின்கீழ் வரும் ஆண்டில் ஒரு இலட்சம் பயனாளிகளுக்கு இருசக்கர வாகனம் வழங்கப்பட உள்ளது. பெருந்துறையில் தேர்தல் அறிக்கையில் அம்மா அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட திட்டம், இந்திய அளவில் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது என்பதை அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து சாலைகள். "தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்", "ஊரக சாலைகள் மேம்படுத்தும் திட்டம்" ஆகியன செயல்படுத்தப்பட உள்ளன. மண் சாலைகளே இல்லாத தமிழகம் என்ற பாதையை நோக்கி அம்மாவின் அரசு சென்று கொண்டிருக்கிறது என்பதை இங்கே ஆணித்தரமாக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொது விநியோகக் கடைகள்மூலம் இன்றைக்கு தமிழ்நாட்டில் ஒரு கோடியே 83 இலட்சம் அரிசி அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி வழங்கப்படுகிறது. ஏழையெளிய மக்களைப் பாதிக்கின்ற வகையில் உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை காங்கிரஸ் அரசாங்கம் கொண்டு வந்த போதும், தமிழகத்தில் உணவுப் பாதுகாப்பை அம்மாவினுடைய அரசு உறுதி செய்திருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், அதிக நேரம் நீங்கள் பேசிவிட்டீர்கள். நன்றி சொல்லி உங்கள் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** "ஒரு சாண் வயிறே இல்லாட்டா உலகில் ஏது கலாட்டா? உணவுப் பஞ்சமே வராட்டா உயிரை வாங்குமா பரோட்டா" என்று ஒரு பாடலில் வரும். உணவுப் பஞ்சம் பல தருணங்களில் தமிழகத்தில் வந்ததுண்டு. தமிழ்நாட்டில் உணவின்றி யாரும் உறங்கச் செல்லக் கூடாது என்ற வகையில் விலையில்லாத அரிசியும் அம்மா உணவகங்களும் துவக்கிச் சென்றவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.



2018 மார்ச் 19] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

"பிறர் பசிப் பிணி போக்குவதே கடவுளை அடையும் வழி" என்று சொன்னவர் வள்ளலார். 150 ஆண்டுகளுக்கு முன்பாகவே, சத்திய தர்மசாலையில் வள்ளலார் மூட்டிய நெருப்பு இன்று வரை அணையாமல் எரிந்து பசிப் பிணியைப் போக்கிக் கொண்டிருக்கிறது. பசி என்னும் தீமையை தீயினால் அடக்கினார் வள்ளலார். அதுபோல் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூட்டிய அம்மா உணவகம், இலவச அரிசி ஆகியன பசிப் பிணி போக்கும் நிலையை காலம்தோறும் போக்கும், அம்மாவின் பெயரைச் சொல்லும் என்பதை இங்கு ஆணித்தரமாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அம்மா அவர்கள் மறைந்தபோது ஒரு நில நடுக்கத்தைப் போல உணர்ந்தோம். மெதுவாக பழைய நிலைக்கு நாங்கள் வந்து கொண்டிருக்கிறாம். நாங்கள் ஆட்சி என்னும் கண்ணாடிப் பாத்திரத்தை கையில் வைத்துக் கொண்டிருப்பதால், கவனமாக நாங்கள் அடி எடுத்து வைத்துக்கொண்டு இருக்கிறோம். எதிர்க்கட்சிகள் பேசும் குறைகளைப் பொறுத்துக்கொள்கிறோம். "பொறுத்தார் பூமி ஆள்வார்" என்பதைப்போல நாங்கள் ஆண்டுக்கொண்டிருக்கிறோம். எங்களால் 16 அடி வேங்கையாக பாயவும் முடியும்.

தானத்தில் பலவகை உண்டு; ரத்ததானம், பூமிதானம், அன்னதானம், கோதானம், விஷயதானம் என்று பல்வேறு தானங்களைச் சொல்வார்கள். அந்தத் தானங்களைவிட பெரிய தானம் "நிதானம்". அப்படிப்பட்ட நிதானத்தை நாங்கள் கடைப்பிடித்து வருகிறோம். "வீரியம் பெரியதல்ல. காரியமே பெரியது". கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு என்ன செய்யும் என்ற வகையில் அம்மாவினுடைய ஆட்சி இன்று சீரோடும், சிறப்போடும் செயல்பட்டு வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புத்தர் ஒரு நாள் தனது சீடர்களிடம் கேட்டார். சீடர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறீர்களா எனக் கேட்டார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை சுருக்கமாக இரண்டு வரியில் சொல்லி முடியுங்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, புத்தர் ஒரு நாள் தனது சீடர்களிடம் கேட்டார்.

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2018 மார்ச் 19

சீடர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறீர்களா எனக் கேட்டார். அதற்கு அவர்கள் நாங்கள் "நாக்கும் பல்லும்போல" ஒற்றுமையாக இருக்கிறோம் என்று கூறினார்கள். அப்போது புத்தர் ஒரு கதை கூறினார். ஒரு முறை பல், நாக்கைப் பார்த்து கூறியதாம் "நான் நினைத்தால் உன்னை துண்டு, துண்டாக்கி விடுவேன்" என்று. அதற்கு நாக்கு சொன்னதாம், "நான் ஒரு வார்த்தை மாற்றிப் பேசினால் உங்கள் 32 பேரையும் கழற்றி விடுவார்கள்" என்று கூறியதாம். அதுபோல் ஒற்றுமையாக இருந்தால் அனைவருக்கும் நல்லது என்று கூறினார்கள். மகாபாரதத்திலே ஒரு நிகழ்வு. குருகுலத்திலே துரோணாச்சாரியார் வில்வித்தை கற்றுக்கொண்ட அனைவரையும் அழைத்தார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், உதாரணம் ஒன்று போதும், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். மகிழ்ச்சியாக உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் சீக்கிரம் தனது உரையை முடித்து விடுவார்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சீக்கிரம் எனது உரையை முடித்து விடுகிறேன். மகாபாரதத்திலே ஒரு நிகழ்வு. குருகுலத்திலே துரோணாச்சாரியார் வில்வித்தை கற்றுக்கொண்ட அனைவரையும் அழைத்தார். தூரத்தில் இருந்த மரத்தில் அமர்ந்திருந்த பறவையை வீழ்த்தக் கூறியபோது யாராலும் அந்தப் பறவையை வீழ்த்த முடியவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் தனது உரையை முடித்து விடுவார்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** கடைசியாக அர்ஜுனனை அழைத்து மரம் தெரிகிறதா, கிளை தெரிகிறதா, குருவி தெரிகிறதா எனக் கேட்டார். அர்ஜுனன் சொன்னான், "மரம் தெரியவில்லை, கிளை தெரியவில்லை, குருவி தெரியவில்லை, ஆனால், குருவியினுடைய கழுத்தும், அம்பின் நுனியும் தெரிகிறது" என்று கூறினான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** இல்லை, மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் தனது உரையை முடித்து விடுவார். உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரேயொரு பக்கம்தான் இருக்கிறது. இடையில்



2018 மார்ச் 19] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

குறுக்கீடுகளிலேயே இரண்டு நிமிடங்கள் போய்விட்டன. அமைதியாக இருந்தால் ஒரு பக்கத்தை நான் எளிதாகப் பேசி முடித்துவிடுவேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** இல்லை, மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உங்கள் உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) இல்லை, உறுப்பினர் தனது உரையை சீக்கிரம் முடித்து விடுவார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி, உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடுகள்) இதற்குள் உறுப்பினர் முடித்திருப்பார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், இந்த வரியோடு உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். உறுப்பினர் உரையை முடித்து விடுவார். உரையை முடிக்கப் பாருங்கள்.

பிற்பகல் 1–40

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மகாபாரதத்திலே, துரோணாச்சாரியார் அவர்கள். . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், கடைசி இரண்டு வரிக்கு வாருங்கள். நான் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட வேண்டி வரும். (குறுக்கீடுகள்) இல்லை, அவர் உரையை முடித்துவிடுவார். (குறுக்கீடுகள்) இதற்குள் அவர் உரையை முடித்து விட்டிருப்பார். நீங்கள் அமருங்கள். அமைதியாக இருங்கள். இரண்டு வரியில் உரையை முடித்து விடுவார்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் யாருக்கும் குறுக்கீடு இல்லாமல் பேசிக் கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடித்து விடுங்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** நான் யாருக்கும் குறுக்கீடு இல்லாமல் பேசிக் கொண்டிருக்கிறேன். தயவுகூர்ந்து. . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடித்து விடுங்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** நான் உரையை இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மகாபாரதத்திலே ஒரு நிகழ்வு, குருகுலத்திலே

துரோணாச்சாரியார் அவர்கள் வில்வித்தை கற்றுக் கொண்ட அனைவரையும் அழைத்தார்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடாச்சலம் அவர்கள் ஒரு குறுக்கீடும் இல்லாமல்தான் பேசிக் கொண்டிருக்கிறார். அதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், உங்களுக்கு 3 பேர், எங்களுக்கு 2 பேர் கொடுத்திருக்கிறீர்கள். இவர் ஒரே ஒருவர் மட்டும் பேசிக் கொண்டிருந்தால் எப்படி? எல்லோருக்கும் 10 நிமிடம், 15 நிமிடம் நேரம் கொடுத்தீர்களென்றால் சீக்கிரமாக சாப்பாட்டிற்குப் போகலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், பேசி முடித்து விடுவார்.

**திரு. துரைமுருகன்:** அநாவசியமாக நீங்கள் சபையை நீட்டுகிறீர்கள். 4 மணி வரைக்கும் சபை போகிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், பேசி உரையை முடித்து விடுவார்.

**திரு. துரைமுருகன்:** சபை மாதிரியாகவா இருக்கிறது?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், கடைசி 2 வரியை மட்டும் சொல்லுங்கள். இரண்டே வரிகளில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், உரையை முடித்து விடுவார். கடைசி இரண்டு வரியை மட்டும் பேசுங்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மகாபாரதத்தைப் பற்றி பேசினாலே எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குக் கோபம் வருகிறது.

> "ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;
> சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;
> வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
> நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
> ஒளிருவாள் அருஞ்சமம் முருக்கிக்,
> களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"





என புறநானூறிலே கூறுவது உண்டு. உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவி; சட்டமன்றப் பேரவையில் ஜான்சி ராணியாக, வீரத்தோடு ஆட்சி செய்த அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மதுரையை மீட்ட ராணி மங்கம்மா போல செய்த சபதம் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலே எட்டுத் திக்கும் எதிரொலிக்கிற அந்தச் சபதம் எனக்குப் பின்னாலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 100 ஆண்டுகள் இந்தத் தமிழகத்தை ஆளும் என்கிற சபதம்; (மேசையைத் தட்டும் ஒலி) தாயின் சபதத்தை நாங்கள் தலைமேல் தாங்கி அம்மா அவர்களுடைய சபதத்தை என்றைக்கும் நாங்கள் உறுதிப்படுத்துவோம். என்றைக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்திலே ஆட்சிக் கட்டிலிலே இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு அத்தாட்சியாக இந்த ஆட்சி சிறப்பான ஆட்சியாக செயல்படுகிறது என்று மக்கள் எங்களுக்கு அங்கீகாரம் தந்திருக்கிறார்கள். வாழ்க புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், வாழ்க புரட்சித் தலைவி அம்மா அவர்கள். வெல்க முதல்வர் அவர்களும், துணை முதல்வர் அவர்களுடைய பணியும் எனக் கூறி, இதுவரை எனக்கு வாய்ப்பு வழங்கிய மாற்றுத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 2018–2019 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக திரு. ராகுல் காந்தி அவர்கள் பொறுப்பேற்று, எங்கள் அகில இந்திய 84–வது மாநாடு வெற்றிகரமாக நிறைவு பெற்ற இந்தச் சூழ்நிலையில் எங்கள் தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவராகத் திகழ்ந்து கொண்டிருக்கும் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும் என் நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் 2018–2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட இந்தச் சூழ்நிலையில், முதலாவதாக என் கருத்தாகவும், எங்கள் கட்சியின் கருத்தாகவும் 2017–2018 ஆம் நிதியாண்டில் நிதிப் பற்றாக்குறை ரூபாய் 15 ஆயிரத்து 930

கோடியாக நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில் ரூபாய் 18 ஆயிரத்து 370 கோடியாக அது அதிகரித்திருக்கிறது. நிதிப் பற்றாக்குறை மற்றும் கடன் அதிகரித்து காணப்படுகிறது. அதுமட்டுமல்ல, பல்வேறு வரி வருவாய் இனங்களில் வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதையும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–45

குறிப்பாக நிதிப் பற்றாக்குறை குறித்து என்னுடைய மனதில் நான் ஆழமாகப் பதிய வைத்த கருத்து இது. நிதிப் பற்றாக்குறை என்பது நிச்சயமாக நாட்டின் கட்டமைப்பை உயர்த்துவதால் ஏற்படக்கூடிய பற்றாக்குறை; அதில் மாற்றுக் கருத்து இல்லை. அதனால், நிகர கட்டமைப்புகள் உயருகின்றன. எனினும், வருவாய் பற்றாக்குறை என்பதை நாட்டிற்கு ஆபத்தான ஒன்றாக நான் நிச்சயம் பார்க்கிறேன். இந்த வருவாய் பற்றாக்குறையை சரி செய்யுமிடத்தில் தமிழகம் இருக்கிறது. பல்வேறு புதிய யுக்திகளைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது என்பதை என்னால் உணர முடிகிறது.

2018–2019 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை என்பது 44,480 கோடி ரூபாயாக இருக்கிறது என்றும், அதனைச் சமாளிக்க 43,962 கோடி ரூபாய் கடன் வாங்கப்படும் என்றும் நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கடன் வாங்குவதை முக்கியத்துவப்படுத்துவது ஒரு பக்கம் இருந்தாலும்கூட, வருவாய் இனங்களில் வருவாயை அதிகப்படுத்துகிற, வரி வருவாயை அதிகப்படுத்துகிற யுக்திகள் உயர்த்தப்பட வேண்டும். யுக்திகள் உயர்த்தப்பட்டால்தான், வரி வருவாய் உயரும். நிதிப் பற்றாக்குறை எவ்வளவு இருக்கிறேதோ கிட்டத்தட்ட அதே அளவுக்கு கடன் வாங்குகிறோம். கட்டமைப்பை உயர்த்துவதற்காக கடன் வாங்கினாலும்கூட, தினந்தோறும் ஏற்படும் செலவினங்கள், சம்பளங்கள், ஓய்வூதியங்கள் வழங்குவதற்கான செலவுதான் அதிகமான செலவாக உள்ளது. நிதிச் சுமை அதில்தான் அதிகமாக இருக்கிறது என்பதை என்னைப் போன்றவர்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். அந்த நிதிச் சுமையைத் தாங்குவதற்கு வரி இனங்களில் உள்ள வரி வருவாயையும், பிற வருமானங்களையும் உயர்த்தக்கூடிய அரசின் திட்டங்கள் என்னென்ன என்பது குறித்த விவரங்கள் நிதிநிலை அறிக்கையில் இடம் பெறவில்லை என்கிற வருத்தம் இருக்கிறது.





புதிய திட்டங்களை, தொடர்ந்து வரி வருவாய்க்கான, பிற வருமானங்களுக்கான புதிய திட்டங்களை நாம் உருவாக்க வேண்டும்; மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். அதற்குரிய நிதி ஆதாரங்களைத் தேடும் வகையில் நம்முடைய செயல்பாடுகள் அமைய வேண்டுமென்பதை இந்த இடத்தில் நான் பதிவு செய்ய விழைகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

2018–2019 ஆம் ஆண்டில் தமிழக அரசின் மொத்தக் கடன் 3,55,845 கோடி ரூபாயாக அதிகரித்து இருக்கிறது என்ற விவரத்தை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். இது, மென்மேலும் 4 இலட்சம் கோடி ரூபாயாகவும், 5 இலட்சம் கோடி ரூபாயாகவும் உயர்ந்து செல்லக்கூடிய சூழ்நிலையைத்தான் பார்க்க முடிகிறது. இதை மிகவும் ஆபத்தான ஒரு போக்காக நான் பார்க்கிறேன். கிட்டத்தட்ட 25 சதவிகிதத்திற்கும் கீழாக கிட்டத்தட்ட 22.29 சதவிகிதமாக கட்டுக்குள்தான் இருக்கிறது என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டாலும், சென்ற 5 ஆண்டு கால ஆட்சிக் காலங்களில், இதே அவையில் நான் இருந்தபோது, 18 சதவிகிதமாகக் கட்டுக்குள் இருக்கிறது என்று கூறப்பட்டது. 25 சதகிவிதத்திற்குக் கீழே, 18 சதவிகிதமாக, அதாவது, 7 சதவிகித இடைவெளியில் இருந்தது. 7 சதவிகிதம் இடைவெளி இருக்கிறது என்ற 'comfort zone' இருந்தது. ஆனால், அது தற்போது படிப்படியாக உயர்ந்து 22.29 சதவிகிதமாக உள்ளது. இது 25 சதவிகிதம் என்ற அளவை எட்டுவதற்கு வெகு தூரம் இல்லை. அதை மேலும் கட்டுக்குள், முந்தைய காலங்களைப் போன்று, 18 சதவிகிதம், 17 சதவிகிதம் என்று கட்டுக்குள் கொண்டுவர வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். இதற்கு நமக்கு எங்கே உதவி கிடைக்கிறது என்பதை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையாக இருக்கிறது.

கிட்டத்தட்ட 3.55 இலட்சம் கோடி ரூபாய் அரசின் கடனாக இருக்கக்கூடிய சூழ்நிலையில், பொதுத் துறை நிறுவனங்களுடைய 3½ இலட்சம் கோடி ரூபாய் கடனும் பூதாகரமாகப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. அது, நம்முடைய பட்ஜெட் உரையில் இல்லாத ஒன்று; அது வெளியில் இருக்கக்கூடிய ஒன்று. இருந்தாலும்கூட, இந்த இரண்டையும் இணைத்துப் பார்க்கும்போது, தமிழக அரசின் ஒட்டுமொத்தக் கடன் கிட்டத்தட்ட 7 இலட்சம்

கோடி ரூபாயைத் தாண்டி இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்க்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இது எதைக் குறிக்கிறது என்றால், அடிப்படையில் ஒரு சாமானிய மனிதனின் பார்வையிலிருந்து இதைப் பார்த்தோமானால், தமிழகத்தில் ஒவ்வொரு தனிநபரின் தலையில் அல்லது பிறக்கும் ஒரு குழந்தையின் தலையில் 1 இலட்சம் ரூபாய் கடன் சுமை உள்ளதைக் குறிக்கிறது. ஒவ்வொருவரும் அந்தக் கடன் சுமையைத் தாங்கி நிற்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இதை நாம் ஒரு பேச்சுக்காக கூறினாலும்கூட, உண்மை நிலையை நிச்சயமாக வெளிப்படுத்த வேண்டிய ஒரு கட்டாயம் இருக்கிறது. இதிலிருந்து நாம் எப்படி சூழ்நிலைகளை மாற்றியமைக்கப் போகிறோம் என்ற ஒரு சிறப்புத் திட்டம் நிதிநிலை அறிக்கையில் இல்லையே என்ற வருத்தம் இருக்கிறது. நான் உங்கள் நிலையிலிருந்தும் இதைப் பார்க்கிறேன். நான் உங்கள் நிலையிலிருந்தும், அந்தப் பார்வையிலிருந்தும், ஒரு சரியான நேர்ப் பார்வையில் பார்க்க வேண்டுமானால், இங்கு மத்திய அரசு பெரியளவில் நிதிகள் வழங்குவதில் சுணக்கம் காண்பிப்பதைச் சுட்டிக் காண்பிக்கும் இடத்தில் நிச்சயமாக நாங்களும் இருக்கிறோம் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. நீங்கள் பட்ஜெட் உரையில் அதைச் சுட்டிக் காண்பித்திருக்கிறீர்கள். ஆனால், அதேநேரம் அதை வலியுறுத்திப் பெறவேண்டிய இடத்தில் எதிர்க்கட்சிகளாகிய நாங்களும் உங்களோடு இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் உறுதி செய்கிறோம்.

*பிற்பகல் 1–50*

குறிப்பாக, காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பதிலும், முறைப்படுத்தும் குழு அமைப்பதிலும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆறு வாரத்திற்குள் நிறைவேற்ற வேண்டும் என்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்தக்கூடிய இடத்தில் அரசினர் தனித் தீர்மானம் அரசால் கொண்டுவரப்பட்டாலும்கூட, எதிர்க்கட்சிகளின் கோரிக்கையின் அடிப்படையில், அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தரக்கூடிய இடத்தில் ஒட்டுமொத்த அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் தீர்மானமாக இந்தச் சட்டமன்றப் பேரவையின் தீர்மானமாக மத்திய அரசுக்கு ஒரு வலிமையான தீர்மானத்தை நிறைவேற்றி நாம் அழுத்தம் கொடுத்திருக்கிறோம்.

அதேபோல, இன்றைக்கு நிதி நெருக்கடியில் தவித்துக் கொண்டிருக்கும் தமிழக அரசின் பிரச்சினைக்காக ஒட்டுமொத்த சட்டசபையும் ஒருங்கிணைய வேண்டும் என்பது என்னுடைய





கோரிக்கை. மத்தியில் ஆளும் அரசு நமக்கு செவிமடுப்பதற்கு ஒருபோதும் ஓர் அவகாசத்தைக்கூட காண்பிப்பதில்லை என்பது பல விஷயங்களில் புரிந்த ஒன்று.

பல காரணங்களுக்காக நீங்கள் அவர்களை விரோதித்துக்கொள்ளாமல், நல்லமுறையில் இந்த நிதிகளைப் பெற வேண்டும், பெற வேண்டுமென்ற ஆதங்கத்தோடு, நீங்கள் ஒவ்வொரு முறையும், துறை ரீதியான கோரிக்கைகளை முன்வைத்து வருகிறீர்கள். டெல்லிக்குச் செல்கிறீர்கள், பார்க்கிறீர்கள், எல்லாம் செய்கிறீர்கள். ஆனால், அங்கு கொஞ்சம்கூட அசையாத மத்திய அரசும் அவர்களுடைய அமைச்சர்களும்தான் இருந்து கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பது தெள்ளத்தெளிவான ஒன்று. ஆகையால், நம் சட்டசபையில் ஒட்டுமொத்த அவையும் இதற்காக இணைந்து குரல் கொடுக்க வேண்டும். தமிழக அரசு ரூபாய் ஒன்றரை இலட்சம் கோடிக்குமேல் இன்னும் பெறவேண்டிய நிதி நிலுவையில் இருந்து கொண்டிருக்கிறது. அனைத்து இனங்களையும் சேர்த்துப் பார்த்தால் பல்வேறு இனங்களில் தமிழகத்திற்கு துரோகம் அளிக்கக்கூடிய அளவிற்கு இந்த நிதி மறுக்கப்பட்டதாக இருக்கிறது. எனவே, மத்திய அரசை எதிர்த்து, நிதி தராத இந்தத் தன்மையை எதிர்த்து போராடும் விதத்தில், இந்த அவையின் ஒரு சிறப்புக் கூட்டத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அழுத்தம் கொடுக்கக்கூடிய அளவிற்கு நம்முடைய செயல்பாடுகள் அமைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் இன்றைக்கு ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, வலிமையான ஒரு தீர்மானத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து அதற்காகப் போராடுகிறார். தன்னுடைய மாநிலத்தின் நிதிகள், தன்னுடைய மாநிலத்தின் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதை அவர் வெளியில் வந்து இன்றைக்குக் குரல் கொடுத்திருக்கிறார். அதுபோல், இந்த நிதியைத் தராத மத்திய அரசைக் கண்டிக்கும் விதத்தில், நாம் வெளியில் வந்து அதற்குக் குரல் கொடுக்க வேண்டும். அதற்கு நாம் தயங்கக் கூடாது. ஒட்டுமொத்த அவையையும்கூட நீங்கள் சேர்த்துக்கொண்டு குரல் கொடுங்கள். எதிர்க்கட்சிகள் நாங்கள் அனைவரும் இதில் உங்களை ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். நிச்சயமாக நாம் மத்திய அரசை எதிர்த்துப் போராட வேண்டிய இடத்தில் இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திருமதி எஸ். விஜயதரணி] [2018 மார்ச் 19

பாராளுமன்றத்தில் இதற்குண்டான முன்னெடுப்புகளை ஆளுங்கட்சி எம்.பி.–க்களும், எதிர்க்கட்சி எம்.பி.–க்களும், செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் பதிவு செய்கிறேன். (குறுக்கீடு) எம்.பி.–க்கள் இருக்கிறீர்கள் இல்லையா? எல்லோரும் சேர்ந்து சென்று, இங்கு தீர்மானம் நிறைவேற்றிவிட்டு, அழுத்தம் கொடுப்போம். அதையாவது செய்வோம். (குறுக்கீடு) அமைச்சரவையில் இல்லை; பரவாயில்லை. (குறுக்கீடு) அமைச்சரவையில் இருக்கிறீர்கள் என்று நான் சொல்லவில்லையே? நாம் எல்லோரும் சேர்ந்து அந்த அழுத்தத்தைக் கொடுப்போம். எம்.பி.–க்கள் இருக்கிறார்கள். திரு. சந்திரபாபு நாயுடு அவர்களால் கொடுக்க முடிந்ததை ஏன் நம்மால் கொடுக்க முடியாதா? நாமும்தான் அழுத்தம் கொடுக்கலாம். ஆகையால், அதையும் செய்வோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பட்ஜெட்டில் பேசுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** இது என்னுடைய ஆலோசனை. அதாவது நிதி பெறவேண்டுமென்றால், இந்த ஆலோசனையை முன்னெடுக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2011 ஐந்து ஆண்டுகாலம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, அப்போதைய நிதியமைச்சர் மத்திய அரசு நிதி தர மறுத்தது என்று சொன்னார். அங்கே மத்தியிலே காங்கிரஸ் அரசுதான் இருந்தது. இங்கிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா செய்தார்களா, இல்லை சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து, நிதியை வாங்கிக் கொடுத்தார்களா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவைக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜினாமா செய்வது, அது உங்களுடைய முடிவு. அதிலே நாங்கள் தலையிடவில்லை. அதுகுறித்து ஆளும் கட்சி,



2018 மார்ச் 19] [திருமதி எஸ். விஜயதரணி]

எதிர்க்கட்சி முடிவு எடுத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால், எங்களிடம் எம்.பி–க்கள் யாரும் கிடையாது. அது உங்களுக்குத் தெரியும். அதனால், பிரச்சினை ஒன்றும் இல்லை. அந்த முடிவை எல்லாம் நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். என்னைப் பொறுத்தவரை நீங்கள் அழுத்தம் கொடுக்கிற விஷயத்தில் உறுதியாக, அதாவது, No confidence motion–ஐக் கொண்டு வாருங்கள்; move பண்ணுங்கள். அதற்கு ஆதரவாக எதிர்க்கட்சியினர் நாங்களெல்லாம் இருக்கிறோம். எங்களுடைய எம்.பி.–க்கள் டெல்லியில் இருக்கிறார்களல்லவா! எல்லோரும் ஆதரிக்கிறோம். அதைச் செய்யுங்கள். அதுதான் எங்களது கோரிக்கை.

*பிற்பகல் 1–55*

அடுத்து, நல்லதைச் செய்தால், அதையும் நாம் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். சுகாதாரத் துறையைப் பொறுத்தவரைக்கும் பார்த்தீர்களென்றால், "அம்மா தாய்–சேய் நல ஊட்டச்சத்துப் பெட்டகம்" வழங்குவதை நான் ஒரு நல்ல விஷயமாகப் பார்க்கிறேன். ஒரு பெட்டகத்திற்கு 4,000 ரூபாய் நிதி செலவாகக்கூடிய பொருட்களைக் கொடுக்கின்ற கர்ப்பிணிப் பெண்களுக்கான திட்டம்; அதைத்தவிர, 12,000 ரூபாய் நிதியுதவியிலிருந்து 6,000 ரூபாயை உயர்த்தி 18,000 ரூபாயாக, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் வழங்குகிற திட்டம்; 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்துவது; தரமுயர்த்துவதற்கும் செலவு இருக்கிறது. அதைப்போன்று, நிறைய செலவு ஏற்படக்கூடிய பல்வேறு இனங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இல்லையென்று நான் சொல்லவில்லை. அரசுப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட நபார்டு வங்கியின் மூலமாக ரூ.200 கோடி; அதைப்போல, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு 758 கோடி ரூபாய் செலவில் மடிக்கணினி வழங்கும் திட்டம்; அதைப்போன்று பள்ளிக் கல்வித் துறைக்கு 27,205.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு கல்வி வளர்ச்சிக்கான மேம்பாடு திட்டம், தொழில் முனைவோருக்கான திட்டம். இதுபோன்று, நிறைய திட்டங்கள். தொழில் முனைவோருக்கான திட்டத்தில் ஒரு கோடி ரூபாயிலிருந்து ஐந்து கோடி ரூபாயாக உயர்த்துவது; முதல் தலைமுறை தொழில் முனைவோர் திட்டம்; இதுமாதிரி நிறைய திட்டங்களெல்லாம் அறிவித்திருக்கிறீர்கள். இவ்வளவு திட்டங்களில், சில திட்டங்கள் முன்னோடித் திட்டங்கள். 'அம்மா தாய்–சேய் நல ஊட்டச்சத்துப்

[திருமதி எஸ். விஜயதரணி] [2018 மார்ச் 19

பெட்டகம்' வழங்கும் திட்டம் ஒரு முன்னோடித் திட்டம். அதில் மாற்றுக் கருத்து இல்லை. அது, வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. இவற்றையெல்லாம் அறிவிக்கிறீர்கள். என்னுடைய கேள்வி என்னவென்றால், இதற்கெல்லாம் நிதி எங்கே இருக்கிறது? அதாவது, இவையெல்லாம் popular திட்டங்கள். Populist Government–னுடைய popular திட்டங்கள் போன்று பார்க்க வேண்டும். அந்த popular திட்டங்களை எப்படி நாம் நிறைவேற்றுவோம்? அவற்றை நிறைவேற்றுவதற்கான நிதி எங்கே இருக்கிறது? அந்த நிதி ஆதாரங்களை நாம் எங்கிருந்து கொண்டு வருவோம்? மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற ஒரு நல்ல எண்ணத்தோடுதான் திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. தினந்தோறும் செலவிற்கே வருவாயைத் தேட வேண்டிய கஷ்டங்கள் நமக்கு இங்கு இருந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், மத்திய அரசும் எந்த உதவியும் செய்யாத ஒரு சூழ்நிலையில் இதுபோன்ற திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றக்கூடிய இடத்தில், சிரமங்கள் ஏற்படும். அதற்காகத்தான் நான் சொல்கிறேன். மத்திய அரசை வலியுறுத்த வேண்டிய இடத்தில் நாம் கட்டாயமாக இருக்கிறோம். மீண்டும் நீங்கள் ஆலோசித்து அந்த முடிவுக்குள் செல்லுங்கள் என்று உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது, தொழில்முனைவோருக்கான திட்டத்தில் ஒரு கோடி ரூபாயிலிருந்து ஐந்து கோடி ரூபாயாக நிதியினை உயர்த்தியிருக்கிறீர்கள். அதில், முதல் தலைமுறை தொழில் முனைவோருக்கான திட்டத்தில் 25 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கக்கூடிய ஓர் அறிவிப்பு ஏற்கெனவே இருக்கிறது. அந்த 25 இலட்சம் ரூபாய் என்பது 25 சதவிகிதம். அப்படியிருக்கும்போது, ரூ.5 கோடியாக அதை உயர்த்தும்போது, அதே 25 இலட்சம் மானியம்தான் தொடரும் என்று சொல்கிறீர்கள். அதை ஏன் 25 சதவிகிதமாக தொடரக்கூடாது என்பது எனது கேள்வி. ஏற்கெனவே இருந்தது 25 சதவிகிதம், அதே 25 சதவிகிதம் என்றால், குறைந்தது ஒரு கோடி ரூபாய் மானியமாக அது இருக்கும். 5 கோடி ரூபாய்க்கு குறைந்தது ஒரு கோடி ரூபாய் மானியமாகவாவது இருக்கும். முதல் தலைமுறை தொழில் முனைவோருக்கு அதுவொரு நல்ல விஷயமாக இருக்கும் என்பது என்னுடைய ஆலோசனை. அதை ஏற்றுக்கொண்டு, அந்த மாற்றங்களைக் கொண்டு வருவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

அதேபோல, பண மதிப்பிழப்பு மற்றும் G.S.T.–யினால் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மிகவும்



2018 மார்ச் 19] [திருமதி எஸ். விஜயதரணி]

பாதிக்கப்பட்டு, வளர்ச்சி, தொழிலாளர் நலன், இலாபம் போன்ற எல்லாமுமே அதலபாதாளத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இவை மத்திய அரசினுடைய most infamous திட்டங்கள். இது அனைத்தும் எல்லோருக்கும் தெரியும். Demonetisation–காரணமாக எந்த அளவுக்கு நாடே சீரழிந்துப் போனது என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். அதைப்போல, G.S.T. காங்கிரஸ் கொண்டு வந்த ஒரு சட்டம். அதை நாங்கள் கொண்டு வந்தவடிவில் நிறைவேற்றவில்லை. அதை வேறு மாதிரி கொண்டு சென்று, தப்பு தப்பாக அதை நடைமுறைப்படுத்தி, இன்றைக்கு மக்களுக்கு எதிரான ஒரு திட்டமாக மாற்றிவிட்டார்கள். அப்படி ஒரு unpopular திட்டமாக அந்த G.S.T. மாறிவிட்டது. இந்தத் திட்டங்களால் பாதிக்கப்பட்டவர்கள் யாரென்றால், Micro, Small and Medium Enterprises–ல் இருந்தவர்கள்தான். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு, பல்வேறு நிறுவனங்கள் மூடப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் மீட்டெடுக்கக்கூடிய வகையில், தமிழக அரசின் 'தொலைநோக்குத் திட்டத்தில்' ஏற்கெனவே வழிவகை இருக்கிறது. முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் இருந்தபோதே, தொலைநோக்குத் திட்டத்தில் ஒரு பகுதியாக இந்த MSME–ஐ பற்றி அவர்கள் பேசியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், அந்தத் திட்டங்கள் தொடர வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை.

அதைப்போல வேளாண்மையைப் பொறுத்தவரை, நெல் கொள்முதல் பணியைத் துரிதப்படுத்திட, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,500/– வீதம் சாதாரண நெல்லுக்கும், சன்ன ரக நெல்லுக்கு ரூ.2,600/– வீதமும் கொள்முதல் செய்தால் சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். வேளாண் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயம் செய்யக்கூடிய மாநில அளவிலான விவசாயிகளை உள்ளடக்கிய ஒரு விலை நிர்ணய கமிட்டியை உருவாக்குவதற்கு அரசு திட்டமிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** இப்போதுதான் உரையை ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதுதான் ஆரம்பித்தேன் என்கிறீர்கள். ஆனால், நீங்கள் பாராளுமன்றம் உட்பட வேறு எந்தெந்த subjects எல்லாமோ பேசிவிட்டு இப்போதுதான் ஆரம்பித்தேன் என்கிறீர்கள். அதற்கு நான் என்ன செய்ய முடியும்?

**திருமதி எஸ். விஜயதரணி:** இல்லை, இல்லை, அவையெல்லாம் முக்கியமான விஷயங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களை பட்ஜெட் மீது பேசச் சொன்னால், நீங்கள் வேறு எங்கெங்கோ சென்றால் நான் என்ன செய்ய முடியும்?

**திருமதி எஸ். விஜயதரணி:** அதாவது, மாநில அளவிலான விலை நிர்ணய கமிட்டியை ஏற்படுத்தும்போது உள்ளீட்டுச் செலவினங்கள், குறிப்பாக கிடங்கு மற்றும் போக்குவரத்துச் செலவினங்களை உள்ளடக்கிய குறைந்தபட்ச ஆதார விலையை MSP–ஐ நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, இந்தக் குறைந்தபட்ச ஆதரவு விலை மத்திய அரசால் நிர்ணயிக்கப்படுவதைவிட. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கு ஆதரவு விலையை நிர்ணயிப்பது மத்திய அரசுதானே தவிர, மாநில அரசு இல்லையென்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் மாநில அளவிலான ஒரு விலை நிர்ணயக் கமிட்டியை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஹரியானா, இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் எங்கள் காங்கிரஸ் கட்சி ஆட்சிபுரிந்த காலத்தில் இந்த MSP–ல் ஏற்படும் difference–க்காக தனியே கிட்டத்தட்ட 3 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, விலை வித்தியாசத்தை விவசாயிகளுக்குக் கொடுத்தோம். அதேபோல, இந்த ஆதார



விலையில் மத்திய அரசுக்கும் மாநில அரசின் கொள்முதல் விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகையை மாநில அரசே ஏற்றுக்கொண்டு, இந்த கமிட்டி மூலமாக அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். துவரை, உளுந்து, பயறு வகைகள் மற்றும் பழங்குடி மக்கள் உற்பத்தி செய்யும் வன விவசாயப் பொருட்களையெல்லாம் தமிழக அரசு கொள்முதல் செய்வது நல்லது என்று கருதுகிறேன்.

2009 ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் மத்திய அரசு 3.2 கோடி விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி வழங்கி விவசாயிகளை ஆதரித்தது. தற்போது சிறு, குறு விவசாயிகள், குத்தகை விவசாயிகள், பங்கீட்டு முறையில் பயிரிடும் விவசாயிகள், 2 ஹெக்டேர் சொந்த நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் ஆகியோருக்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் ஒரு திட்டத்தை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதேபோன்ற திட்டம் ஹரியானா, இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சிபுரிந்த காலத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கர்நாடக மாநிலமும் MSP–ஐ நிர்ணயிப்பது குறித்த கமிட்டியை அமைத்திருக்கிறது. அதேபோன்று தமிழகத்திலும் உங்கள் பார்வையைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காய்கறி, பழங்கள் போன்ற அழுகும் பொருட்களுக்கான விநியோகத் தொடரமைப்பு மேலாண்மைத் திட்டம்மூலம் உற்பத்தி மையங்கள், பதப்படுத்தும் மையங்கள், சேகரிப்பு மையங்கள் ஆகியவற்றை வலுப்படுத்தி, உயர் தொழில்நுட்பம்மூலம் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதை நல்ல விஷயமாகப் பார்க்கிறேன். சிறப்பு உணவு பதப்படுத்தும் தொழில் சிறப்படையும் வகையிலும், விவசாயிகள், தொழிலாளர்கள் வாழ்வு மேம்படவும் உணவு பதப்படுத்தும் பூங்காக்களை எல்லா மாவட்டங்களிலும் உருவாக்கினால் நன்றாக இருக்கும். ஏனென்றால், பதப்படுத்துதல் என்பது இன்றைக்குக் கட்டாயமாகி வருகிறது.

மாநில பேரிடர் மேலாண்மை மற்றும் நிவாரணம் சிறப்பாகச் செயல்பட கூடுதல் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 2017, நவம்பர் 30 ஆம் தேதி தாக்கிய 'ஒகி' புயல் நிவாரண நிதி குறைவாக உள்ளது. தமிழகம் முழுவதும் நிவாரண நிதியாக ரூ.124.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது மிக மிகக் குறைவு. 'ஒகி' புயல் பாதிப்பால் இறந்த மீனவர்களுக்கு

[திருமதி எஸ். விஜயதரணி] [2018 மார்ச் 19

மட்டுமல்லாமல், விவசாயிகளுக்கும் 20 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கி, குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து சாதி, மத மக்களும் ஒன்றாக வழிபடக்கூடிய சமத்துவ பொது ஆலயமாக பாரத மாதா ஆலயம், தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் கட்டப்பட வேண்டுமென்று காந்தி பேரவை வாயிலாக எங்கள் காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் 1977 முதல் தொடர்ந்து 6 முறை பாதயாத்திரையும், உண்ணாவிரதங்களும் இருந்து, இதற்கான கோரிக்கையை முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்களிடம் 2012–ல் வைத்ததன் அடிப்படையில், அவர்கள் இந்த ஆலயத்தை எழுப்புவதற்கு ஆணை பிறப்பித்தார்கள். தற்பொழுது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் அந்தக் கோரிக்கையை எங்கள் காங்கிரஸ் மூத்த தலைவர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று, அந்த ஆலயத்தை அமைத்துத் தர இந்த ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு அவர் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** உரையை முடித்துவிடுகிறேன். மதுரையில் தமிழ்த் தாய்க்கு சிலை அமைக்கக்கூடிய திட்டத்தை மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். அந்தச் சிலையைத் துரிதமாக அமைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 2018–2019 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டவும், விளவங்கோடு வட்டத்தை நிருவாக வசதிக்காக இரண்டாகப் பிரிக்கவும், கல்குளம் வட்டத்தை நிருவாக வசதிக்காகப் பிரிக்கவும் கோரிக்கை விடுத்திருந்தோம். அதை உடனடியாக செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். வருவாய்க் கிராமங்களை 188 ஆகப் பிரித்தது போன்று, குறு வட்டங்கள், பிர்க்காக்களையும் 18–லிருந்து 36 ஆகப் பிரிக்க வேண்டும்.



2018 மார்ச் 19] [திருமதி எஸ். விஜயதரணி]

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்காக 545.21 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், தகுதியுள்ள அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் ஸ்கூட்டர் இலவசமாக வழங்கப்பட வேண்டும். எம்.எல்.ஏ.–க்கள் பரிந்துரை செய்வதன் அடிப்படையிலும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாததால், Central Aid, மத்திய அரசின் நிதி சுமார் 50 ஆயிரம் கோடி ரூபாய் தமிழகத்திற்குக் கிடைக்கப் பெறாமல் உள்ளது. ஊரகப் பகுதி, நகர்ப் பகுதிகளில் வசிக்கும் ஏழைகள், வீடு இல்லாதவர்கள், வாடகை வீடுகளில் வசிக்கும் ஏழைகள், குறைந்த நடுத்தர வருவாய் வர்க்கத்தினர் அனைவருக்கும், அவர்களுக்கு 5 சென்ட் நிலம் இருந்தாலும் தகுதியின் அடிப்படையில் இலவச வீடுகள் வழங்கப்பட வேண்டும்.

நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகளில் சுமார் 10, 15, 20 ஆண்டுகளாகச் செப்பனிடாமல் உள்ள சாலைகள் கண்டறியப்பட்டு, சாலைகள் செப்பனிடுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். எனது விளவங்கோடு தொகுதியில் ஒட்டுமொத்தச் சாலைகளும் உடைந்து, சுக்குநூறாகி மிக மோசமான சூழ்நிலையில் உள்ளன. அதன் பட்டியல் இருக்கின்றன. அதையெல்லாம் விளக்கமாகப் படிக்கவில்லை. அதை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசியது போதும். பதிவு செய்துகொள்கிறேன், கொடுங்கள். உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** உரையை முடித்துவிடுகிறேன். ஒரேயொரு முக்கியமான கோரிக்கை. எங்களுடைய தொகுதியைச் சார்ந்தது. அதாவது, மார்த்தாண்டம்–குழித்துறை மேம்பாலப் பணிகளால் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டது. அதிக கனரகப் பேருந்துகள் மற்றும் பிற வாகனப் போக்குவரத்தால் பெரிதும் சேதமுற்ற சாலைகளாக, மார்த்தாண்டம், கருங்கல், தொடுவட்டி, பல்லன்விளை, ஐரேணிபுரம், குழித்துறை, மேல்புறம், முத்திரங்கோடு, அருமனை, பாளையன்கட்டி, ஞாறான்விளை, திக்குறிச்சி, சிதறால், பயணம், உண்ணாமலைக்கடை, பெரும்புளி, சிராயன்குழி, இரவிபுதூர்க்கடை, மார்த்தாண்டம் வடக்குத் தெரு, ஆலுவிளை, மேல்புறம், உத்திரங்கோடு, மூடோடு, மஞ்சாலுமூடு, மருதங்கோடு, செட்டிக்குழி, புத்தன்சந்தை, மலையடி சாலைகள்

மரணக்குழிகளாக உள்ளன. போர்க்கால அடிப்படையில் இந்தச் சாலைகளைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பு விவசாயிகளைப் பொறுத்தவரையில் ஒரேயொரு கோரிக்கை. கரும்பு விவசாயிகள் ஓரளவுக்கு திருப்தியுடன் வாழ வேண்டுமானால் கரும்பு விலை நிர்ணயத்தை அரசே நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரங்கராஜன் குழுவின் பரிந்துரையின்படி வருவாய் பங்கீட்டு முறையில் கரும்புக்கு விலை தீர்மானிக்கப்படும் என்ற பட்ஜெட் அறிவிப்பை திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விலை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, உரையை முடியுங்கள். நேரமாகிவிட்டது. இன்னும் மூன்று பேர் பேச வேண்டும். உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மணியைப் பாருங்கள். உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** உரையை முடித்துவிடுகிறேன். இந்த விலை நிர்ணய முறை சர்க்கரை ஆலை நிருவாகிகளுக்கு சாதகமாகவே உள்ளது. இதனால் கரும்பு ஆலையில் உற்பத்தியாகும் சர்க்கரை பகாஸ், மொலாசஸ் ஆகியவற்றை விற்று 70 சதவிகிதம் கரும்புக்கு விலை நிர்ணயிப்பதால், கரும்பு விலை மத்திய அரசு அறிவிக்கும் ஆதார விலையை விடக் குறைவாகவே இருக்கும். ஏனெனில், தமிழ்நாட்டில் கரும்பு பிழிதிறன் 9 சதவிகிதம் மட்டுமே. மேலும், கரும்பு விவசாயிகளுக்குத் தனியார் சர்க்கரை ஆலைகள் தரவேண்டிய பாக்கி ரூபாய் 1,350 கோடி குறித்தும், கூட்டுறவு, பொதுத் துறை ஆலைகள் தர வேண்டிய பாக்கி ரூபாய் 215 கோடி குறித்தும் பட்ஜெட்டில் குறிப்பிடாதது கவலை அளிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் தொகுதிக் கோரிக்கைகள் பல்வேறு இருக்கின்றன. அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிகூறி அமைகிறேன்.

**தொகுதிக் கோரிக்கைகள்**

விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாகோடு பேரூராட்சியில், வட்டவிளை–கோட்டவிளை–ஆலுவிளை–பேரை–ஆலம்பாறை–வெரிக்கல் சாலை; நல்லூர் பேரூராட்சியில்,





சென்னித்தோட்டம்–பல்லன்விளை சாலை; இடைக்கோடு பேரூராட்சியில், இலவங்குழி–மொட்டக்காலை, இளஞ்சிறை சாலை, முதப்பன்கோடு–பிலாவிளை சாலை, கல்லுப்பாலம்–செம்மன்காலை சாலை, அண்டுகோடு–ஈந்திக்காலை–குடுக்கச்சிவிளை சாலை, குழிஞ்ஞுவிளை–பாங்கோட்டுவிளை சாலை, புன்னத்தானம்–பண்டாரவிளை சாலை ஆகியவற்றைச் செப்பனிட வேண்டுகிறேன்.

பள்ளி உட்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் விளவங்கோடு அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு திட்டத்தின்கீழ் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், ஆய்வக தொழில்நுட்ப சாதனங்கள், பள்ளியின் சுற்றுச்சுவர் ஆகியன கட்டப்பட வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம், விளவங்கோடு வட்டங்களைப் பிரித்து திருவட்டாறு, மண்டைக்காடு, கிள்ளியூர் என மூன்று வட்டங்களாகப் பிரிக்க அரசாணை வெளியிட வேண்டும்.

மார்த்தாண்டத்தில் ரூ.149 கோடி மதிப்பீட்டில் இரும்பிலான மேம்பாலப் பணிகள் நடைபெறுவதால், ஞாறான்விளை நேசமணி பாலம் தற்போது பலமிழந்து விரிசல் ஏற்பட்டுள்ளது. பாலத்தைப் பலப்படுத்த கான்கிரீட் கலவையைக் கொட்டி சீரமைக்க வேண்டும்.

ஒகி புயல் பாதிப்பால் சேதமடைந்த மலையோர கோதையார் லோயர் கேம்ப் சாலையை விரைந்து செப்பனிடக் கேட்டுக்கொள்கிறேன்.

பேச்சிப்பாறை மறுகால் மதகு சீரமைப்புப் பணிகள் நடைபெறுவதால், 45 வீடுகளை காலி செய்யச் சொல்லி நோட்டீஸ் அனுப்பியிருப்பதை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, கோதையார் நீர் மின் நிலையத்தை நவீனமயமாக்கி புதிய propeller நிறுவி மின் உற்பத்தி தொடங்கப்பட வேண்டும்.

விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி, மாங்கோடு வருவாய் கிராமத்திலிருந்து பிரிக்கப்பட்டு புலியூர் சாலை வருவாய் கிராமத்தில் இணைக்கப்பட்ட புல எண்கள் 490 முதல் 512 வரை மாங்கோடு வருவாய் கிராமத்தோடு இணைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

[திருமதி எஸ். விஜயதரணி] [2018 மார்ச் 19

கன்னியாகுமரி மாவட்டம், இயற்கை பீச், தெக்குறிச்சி, ராஜாக்கமங்கலம், திற்பரப்பு அருவி, சுசீந்திரம் போன்ற ஆன்மீகத் தலங்களை இணைத்து ஒருங்கிணைந்த சுற்றுலா மேம்பாடு ஏற்படுத்திட அரசு முன்வர வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம், சாலைகளை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை செப்பனிடும் முறையை மாற்றி, விதிகளைத் தளர்த்தி 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை சாலைகளைச் செப்பனிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம், சாலைகளின் இருமருங்கிலும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு சாலை வடிகால் பாலங்கள் அமைத்து சீராகப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்கள் கட்டுவதற்கு சிறப்புக் குழு அமைத்து, அதில் சட்டமன்ற உறுப்பினர்களையும் உறுப்பினர்களாக இணைத்து, சிறப்புக் குழுவின் செயல்பாடுகளை வகுக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் சாலைகள், பிளாஸ்டிக் சாலைகள் அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம், தனியார் வன நிலங்களில் வகைமாற்றம் செய்யமுடியாமல் உள்ள நிலங்களில், பட்டா நில உரிமையாளர்களை பயன்பெற அரசாணை வெளியிட வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம், கஸ்தூரி ரங்கன் பரிந்துரையின் அடிப்படையில் சூழியியல் பாதுகாப்பு மண்டல எல்லையை உருவாக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம், முந்திரிக்கு இறக்குமதி வரியைக் குறைத்து, ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம், அரசு இரப்பர் கழகத் தொழிலாளர்களின் சம்பளப் பேச்சுவார்த்தையில் அரசு முத்தரப்பு ஒப்பந்தம் உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம், இரப்பருக்கு உரிய விலையை நிர்ணயம் செய்து, அரசே கொள்முதல் செய்ய வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம், தேனுக்கு உரிய விலையை அரசே நிர்ணயம் செய்து, தேனீ வாரியம் அமைக்க வேண்டும். பள்ளிக் குழந்தைகளுக்கான சத்துணவில் தேனை மதிய உணவிற்கு சத்துணவாக வழங்க வேண்டும்.



2018 மார்ச் 19] [திருமதி எஸ். விஜயதரணி]

மீனவர்களைக் காப்பாற்ற கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டணத்தில் Coast Guard-ஐ நிறுவ வேண்டும். அவர்களுக்கு Satellite phone-ஐ இலவசமாக வழங்க வேண்டும். ஆழ்கடல் மீன்பிடி பயிற்சி மையம் அமைக்கப்பட வேண்டும். கன்னியாகுமரி, குளச்சல், தூத்தூர் பகுதிகளில் ஹெலிகாப்டர் தளம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–10

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்கு, சர்க்கரை உற்பத்தி செலவுக்கும், சர்க்கரை விற்பனை விலைக்கும் ஏகப்பட்ட இடைவெளி இருக்கிறது. அதனால், சர்க்கரை ஆலைகள் கடந்த நான்கு பருவங்களாக ஏற்றத்தாழ்வை சந்தித்து வருகின்றன. கரும்பு இரகங்களில் வீரியக் குறைபாடுகள் இருக்கின்றன. சர்க்கரை கட்டுமான விகிதம் 9 சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் இருக்கிறது; 8 சதவிகிதம் பிழிதிறன். கரும்பு சர்க்கரையினுடைய கட்டுமானம் 7, 8 சதவிகிதம்தான் இருக்கிறது. மேலும், கரும்பு சாகுபடிப் பரப்பளவும் குறைந்திருக்கிறது. இதுபோன்ற இடர்பாடுகளால் தொழில் நலிவடைந்த சூழ்நிலையில், சர்க்கரை ஆலைகளின் செயல் திறன் குறைந்து வருகிறது. இதனால், விவசாயிகளுக்குக் குறித்த காலத்தில் பணம் வழங்குவதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதிக அளவு உற்பத்தி செய்கின்ற மகாராஷ்டிரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் திரு. ரங்கராஜன் அறிக்கையின் formula–ன்படி கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்தில்தான் நியாயமான மற்றும் ஆதாய விலைக்குக் கூடுதலாக மாநில அரசின் பரிந்துரை விலை நிர்ணயிக்கும் முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், இந்தப் பருவம் முதல் வருவாய் பகிர்வு விலை நிர்ணய முறைக்கு மாற அரசு முடிவு செய்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் கூட்டம் நடத்தி, கரும்பு விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, கரும்பு ஆலை அதிபர்களுடைய கோரிக்கையையும் ஏற்று, நமது

[திரு. எம்.சி. சம்பத்] [2018 மார்ச் 19

அரசு இந்த முடிவிற்கு வந்திருக்கிறது. ஆதாய விலை பெறுவதை உறுதி செய்வதுடன், இந்த மாற்றத்தினால் கூடுதலாக சர்க்கரை ஆலைகளின் இலாபத்தில் ஒரு பகிர்வு விவசாயிகளுக்கும் கிடைக்கும். இந்த மாற்றத்தினைக் கொண்டு வர, மெட்ரிக் டன் ஒன்றுக்கு போக்குவரத்துச் செலவினமாக ரூ.100/–ஐ தொடர்ந்து சர்க்கரை ஆலைகளே ஏற்கும். மேலும், போக்குவரத்துச் செலவு போக, இப்போது விவசாயிகள் பெற்றுவரும் மாநில அரசின் பரிந்துரை விலையான SAP Rate ரூ.2,750/– அனைத்து விவசாயிகளும் பெறுவதை உறுதி செய்யத்தான் இந்த முடிவிற்கு அரசு வந்திருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய வருவாய் பகிர்வு முறையில் பெறப்படும் விலையாக தற்பொழுது ரூ.2,750/– கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தொடர்ச்சியாக கரும்பு ஆலை அதிபர்களுடன் 5–1–2018 அன்று ஒரு கூட்டம் நடத்தியிருக்கிறோம். அவர்களே விவசாயிகளுடன் நேரடியாகப் பேசி, இருக்கின்ற நிலுவைத் தொகையைப் பற்றி நாங்களே பேசி முடிவெடுக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்கள். ஆனால், அது இறுதி செய்யப்பட்ட முடிவு அல்ல. தனியார் சர்க்கரை ஆலை அதிபர்களிடம் நிலுவைத் தொகையைக் கொடுக்க வேண்டும் என்று அரசு தொடர்ந்து வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கிறது. மேலும், பொதுத் துறை, கூட்டுறவுத் துறையில் ரூ.357.45 கோடி பாக்கி இருக்கிறது. இது அரசின் வழிவகைக் கடனாகக் கோரப்பட்டுள்ளது. நிச்சயமாக இந்தத் தொகையை வாங்கித் தருவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசத் தொடங்குகின்றபோது தமிழகத்தின் வருவாயைப் பற்றி comment செய்தார்கள். இதுவரை தமிழகத்தில் இல்லாத அளவிற்கு சொந்த வருவாய் 13 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. முதன்முறையாக தமிழக வரலாற்றில் ரூ.14,458 கோடி உயர்ந்திருக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம், ஜி.எஸ்.டி., மற்றும் ஜி.எஸ்.டி.–ஐ உள்ளடக்கிய 7 வரிகளும் 14



2018 மார்ச் 19] [திரு. க. பாண்டியராஜன்]

சதவிகிதம் வளர்ந்தால் எவ்வளவு இருந்திருக்குமோ அதைக் கணக்காக வைத்து அதற்கான இழப்பீடைப் பெற்றிருக்கிறோம். மத்திய அரசாங்கத்திலிருந்து ரூ.600/– கோடிக்குமேல் இழப்பீட்டுத் தொகை கிடைத்திருக்கிறது. இந்தக் காரணம் மட்டுமல்லாமல், 8 சதவிகிதம் நமது G.D.P. உயர்ந்திருக்கிறது. இந்தியாவின் வளர்ச்சி 7 சதவிகிதமாக இருக்கிறபோது, தமிழகத்தின் வளர்ச்சி சென்ற வருடம் 8.03 சதவிகிதம்; இந்த வருடம் இந்திய பொருளாதார வளர்ச்சி 7.3 சதவிகிதம் இருக்கும் என்று estimate செய்திருக்கும்போது, தமிழகத்தின் வளர்ச்சி 9 சதவிகிதம் இருக்கும் என்று estimate செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதை வைத்துத்தான் இந்த அளவிற்கு அதிகமான வரி வருவாய் மற்றும் வரி அல்லாத வருவாய் இரண்டுமே கிடைத்திருக்கிறது. மேலும், திரு. ரங்கநாதன் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில், G.D.P. பற்றிய விவரங்கள் தெள்ளத் தெளிவாக நிதிநிலை அறிக்கையின் கடைசி பக்கத்தில் அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பதினைந்தரை இலட்சம் கோடி ரூபாயை முதன்முறையாக தமிழகத்தின் பொருளாதாரம் தாண்டப்போகிறது.

இரண்டாவதாக, தமிழ்த் தாய் சிலையைப் பற்றிக் கேட்டார்கள். தமிழ்த் தாய் சிலை உலக தமிழ்ச் சங்கத்தில், தற்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.50/– கோடிக்கு அறிவித்திருக்கின்ற பழந்தமிழர் பண்பாட்டு மையத்தில் வடிவமைக்கப்பட்டு, ஐரோப்பாவினுடைய Trevi Fountain model–ல் அதை conceive செய்து, தமிழ்த் தாய் சிலை வெகு விரைவில், வருகின்ற ஆண்டிலே நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரு சின்னப் பறவை அன்னையைத் தேடி வானில் பறக்கிறது, அதன் சிந்தனை எல்லாம் தாயவள் அன்புத் தேனில் குளிக்கிறது."

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

[*2018 மார்ச் 19*

*பிற்பகல் 2–15*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் பேசும்பொழுது உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படாததால் மத்திய அரசாங்கத்திலிருந்து வரவேண்டிய ரூ.*50,000* கோடி வரப்பெறவில்லை என்று குறிப்பிட்டார்; அவ்வாறு இல்லை. *2017–2018* ஆம் ஆண்டுக்கான *14*–வது நிதிக் குழு பங்கீட்டின் முதல் கட்ட நிதியை நாம் வாங்கிவிட்டோம். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று வலியுறுத்தி வாங்கிவிட்டார்கள். நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் தீர்ப்பு வந்த பிறகுதான் தேர்தல் நடத்த முடியும் என்று சொல்லி வாங்கிவிட்டோம். இரண்டாவது கட்ட அடிப்படை மானியமாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.*431.92* கோடியும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.*788.06* கோடியும், செயலாக்க மானியமாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.*365.37* கோடியும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.*194.78* கோடியும் விடுவிக்குமாறு சமீபத்தில், அதாவது *10* நாட்களுக்கு முன்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க டெல்லிக்குச் சென்று மத்திய அமைச்சர் அவர்களைச் சந்தித்து, அதை விடுவிக்கச் சொல்லி முதல் தவணை மானியம் வாங்கி விட்டோம். தேர்தல் நடைபெறும் முன்பே வாங்கி விட்டோம். மேலும், இரண்டாம் கட்ட தவணையையும் விடுவிக்கச் சொல்லியிருக்கிறோம். அதையும் கண்டிப்பாக விடுவிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்; அவ்வளவுதான். *50,000* கோடி ரூபாய் என்று குறிப்பிட்டது சரியல்ல.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். சரவணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அடுப்பு விளக்கு, அன்பு விளக்கு, அமைதி விளக்கு, அறிவு விளக்கு என பல்விளக்கை ஏற்றி வைத்த ஒளிச் சுடரே, இந்த மண் கண்ட மாதவமே, மறை கண்ட சாதகமே, எங்கள் கண் கண்ட தெய்வமே, இருக்கும் தலைமுறை மட்டுமல்ல பிறக்கும் தலைமுறைக்கும் பயன் அளித்த தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) “மக்களால் நான், மக்களுக்காகவே நான்” என தவ வாழ்வு மேற்கொண்டு வாழ்ந்த தங்கத் தலைவியே, காரிருளில் என் கண்களில் தெரிந்த கலங்கரை விளக்கே, மகத்தில் மலர்ந்த முத்தே,



*2018 மார்ச் 19*] [திரு. எஸ்.எஸ். சரவணன்]

தமிழகம் காக்க தன்னையே தந்த வீரத்தின் வித்தே! உம்மோடு நான் கொண்ட பந்தம் அது கண்ணோடு இமை கொண்ட சொந்தம், அம்மா, நீங்கள் எனக்குக் கிழக்கு, உமக்கு என்றும் இல்லை மேற்கு, உண்மையைச் சொன்னால், நீங்கள் வடக்கும் வழிபட்ட தெற்கு.

அமைதி, வளம், வளர்ச்சியை இங்கே முத்தமிழாய்க் கண்ட என் முதன்மைத் தாயே, கருவிழி மலரால் முதற்கண் கண் ஒற்றி வணங்குகிறேன். சுவரில் உள்ள ஓவியம் அழிந்து போகலாம். உயிரில் உள்ள ஓவியம் அழிந்து போகுமா? இறைவன் எனக்குத் தந்த முதல் முகவரி உம் முகம்தான் அம்மா. வேதங்கள் போதாது உம் புகழ் பாட, யுகங்கள் கூடாது உம் தியாகம் மறக்க.

“ஆழி சூழும் உலகாளும் அரசனாக வேண்டுமெனில் வாழும் வாழ்வில் உன்னையும் நீ மறந்து வாழ வேண்டுமடா” என்ற கவிமணியின் கவிச்சொல்லுக்குத் தன்னைக் காணிக்கையாக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களே, ‘ஊருக்காக நாம் வாழ்ந்தால் நமக்கு மட்டும் பரிவட்டம், உலகுக்காக நாம் வாழ்ந்தால் நம்மைச் சுற்றி ஒளிவட்டம்’ என்று கருக்கல் பொழுதிலிருந்து காரிருள் பொழுதுவரை உழைப்பில் சுருங்காத எங்கள் முதல்வரே! தன்னைச் செதுக்கும் உயர் திறமை தன்னில் உண்டு; இன்னோர் உளி எதற்கு என்று இன்னொரு உளி தேடா இனச் சிற்பியே, தங்களை வணங்கிப் போற்றுகிறேன். கட்சிக்காரர்களுக்கு மலிவுப் பதிப்பு, நிதித் துறைக்குப் பரிசுப் பதிப்பு எனப் பதிப்பிக்கப்பட்ட எங்கள் பண்பாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, காலம் அளித்த கொடையே, கழகத்தின் ஞான நடமே, தங்களையும் வணங்கிப் போற்றி, *2018–19* ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முதலீடுகளை ஈர்த்து, அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், விவசாய உற்பத்தித் திறனையும், விவசாயிகளின் வருவாயையும் பெருக்குதல், ‘அனைவருக்கும் வீட்டு வசதி’ என்ற இலக்கை அடைய ஏழைகளுக்கு வீட்டு வசதி வழங்குதல், நகர்ப்புறங்களிலும், ஊரகப் பகுதிகளிலும் வறுமை ஒழிப்பு, கல்வி, சுகாதாரம், மருத்துவ வசதிகளின் தரத்தை மேம்படுத்தி, அவற்றை அனைவரும் எளிதாகப் பெற வழிவகை செய்தல் போன்ற முக்கிய சவால்களை எதிர்கொண்டு, இந்தியாவிலேயே ஒரு வளமான மாநிலமாக இந்தத் தமிழகத்தை மாற்றச் செய்வதற்கான உத்திகளை உள்ளடக்கி, இந்த

நிதியாண்டில் நமது பொருளாதார வளர்ச்சி 9 சதவிகிதமாக உயரும் என்கிற அவாவோடு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை இங்கே அளித்திருக்கிறார்கள்.

"தக்க வழியில் பிறருக்குக் கொடுக்கும் அளவு அறிந்து கொடுக்க வேண்டும்; அதுவே பொருளைப் போற்றி வாழும் வழியாகும்" என்பதை உணர்த்தும் குறளான,

"ஆற்றின் அளவறிந்து ஈக; அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி"

என்ற குறளின் கருத்தைப் பயன்படுத்தி, அதைப் பாத்தி கட்டி, ஒவ்வொரு துறைக்கும் தேவையான நிதியை அழகாக ஒதுக்கீடு செய்த அந்தப் பாங்கு இருக்கிறதே, அதை நான் பாராட்டியே ஆக வேண்டும். கருணையின் வெள்ளம் நிறைந்தோட இந்த நிதிநிலை அறிக்கையானது இங்கே நேர்த்தியாக நெய்யப்பட்டிருக்கிறது. சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பொழிந்த மாதிரி என்பார்களே, அதுமாதிரி உள்ளது இந்த அறிக்கை.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்ட, 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023' ஆவணமானது, நமது மாநில வளர்ச்சி மற்றும் சமூகநலத் திட்டங்களை உருவாக்குவதற்கு இங்கே நல்லதோர் வழிகாட்டியாக விளங்குவதை நல்லோர்கள் பாராட்டுகிறார்கள்.

பிற்பகல் 2—20

மண்ணில் ஏற்றத்தாழ்வு இருக்கலாம், அது பூகோளம். ஆனால், மனிதரில் ஏற்றத்தாழ்வு இருக்கலாமா! இருந்தால் அது புரட்சி யுகம். அந்த யுகத்தைக் காணக் கூடாது என்பதற்காக மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியத்திற்கு வரும் நிதியாண்டில் நூறு கோடி ரூபாயும், மலைவாழ் மக்களின் தேவைகளை நிறைவு செய்ய சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு 75 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தைத் தாக்கிய 'ஒகி' புயலின்போது 3,506 மீனவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டதுடன், 288 மீன்பிடிப் படகுகளும் மீட்கப்பட்டன. மாநிலப் பேரிடர் நிவாரண நிதியத்திற்காக 786 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வட சென்னை மற்றும் தென் சென்னைப் பகுதிகளுக்கான விரிவான வெள்ளத் தடுப்பு மேலாண்மைத் திட்டம் முறையே





2,055.67 கோடி ரூபாய் மற்றும் 1,243.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில், வறுமையை அறவே அகற்றும் புதுவாழ்வுத் திட்டத்தின் பயன்களை நிலைப்படுத்தும் வகையில், 920.63 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு கிராமப்புற புத்தாக்கத் திட்டத்தினை, உலக வங்கி நிதியுதவியுடன் அரசு செயல்படுத்தவுள்ளது. அனைத்து ஊரக வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கும் மொத்தமாக 519.81 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களின் வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் வகையில், 20 தொழிற்பயிற்சி நிறுவனங்களில், 38 கோடி ரூபாய் செலவில் மருத்துவ மின்னணுவியல் மற்றும் கட்டட வடிவமைப்பு ஆகிய புதிய தொழிற்பிரிவுகளை இந்த அரசு தொடங்கவுள்ளது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின்கீழ், இதுவரை 4.32 இலட்சம் இளைஞர்கள் திறன் வளர் பயிற்சி பெற்றுள்ளனர். வரும் நிதியாண்டில், கூடுதலாக இரண்டு இலட்சம் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில், தமிழ் இருக்கையினை நிறுவிட 10 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியுள்ளது. இதைக்கண்டு தமிழறிஞர்கள் நெஞ்சம் நெகிழப் பாராட்டுகிறார்கள். தமிழர்களின் பண்பாட்டைப் பரப்புவதற்காக, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ் மொழி விரிவாக்க மையம் ஒன்று உருவாக்கப்பட உள்ளது. நலிந்த கலைஞர்களுக்கான மாத நிதியுதவியினை 1,500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். தமிழ் வளர்ச்சித் துறைக்காக வரும் நிதியாண்டில் 52.56 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவைப் போற்றும்விதமாய், மெரினா கடற்கரையில் நினைவு மண்டபம் கட்ட 50.80 கோடி ரூபாயும், மாண்புமிகு அம்மா அவர்களின் இல்லத்தை நினைவிடமாக்க 20 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு செயல்களும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களிடம் நாம் கொண்ட பற்றுதலை வான்வரையில் பரப்பும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எஸ்.எஸ். சரவணன்] [2018 மார்ச் 19

காவல் துறையை நவீனமயமாக்க வரும் நிதியாண்டில் 7,877.58 கோடி ரூபாயும், சிறைத் துறைக்கு 306.80 கோடி ரூபாயும், நீதி நிருவாகத்திற்கு 1,197.95 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.

மக்கள் தங்களுக்குத் தொடர்பான தரவுத் தகவல்களைத் தாங்களே திருத்தம் செய்ய ஏதுவாக, மக்கள் நலனை முன்னிட்டு 'Tamil Nadu Makkal Portal' என்ற பெயரில் ஓர் இணையதளம் துவக்கப்படவுள்ளது. இத்தளத்தை மக்கள், ஒரு தலமாகவே வழிபட இருக்கிறார்கள்.

கடந்த நிதியாண்டில் இதுவரை 3.80 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை இந்த அரசு வழங்கியுள்ளது. வரும் நிதியாண்டில், 3 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கவிருக்கிறார்கள்.

உழவர் பாதுகாப்புத் திட்டத்திற்காக வரும் நிதியாண்டில் 269.82 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. வருவாய் துறைக்கு மட்டும் 6,144.58 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பசிப்பிணி போக்கிய அம்மா அவர்களின் இந்த அரசில், நெல் உற்பத்திக்கான ஊக்கத் தொகையாக 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில், 110 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு உணவு தானிய உற்பத்தியை அடைய இந்த அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

திண்டிவனம் அருகில் சுமார் 450 ஏக்கர் பரப்பளவில் மிகப் பெரிய உணவு பதப்படுத்தும் பூங்கா ஒன்று அமைக்கப்படவுள்ளது. அதுபோல், 10 மாவட்டங்களில் ஒருங்கிணைந்த உணவு பதப்படுத்தும் பூங்காக்கள் உருவாக்கப்படவுள்ளன.

நீடித்த நிலையான மானாவாரி வேளாண்மைக்கான சிறப்புத் திட்டத்தில், ஏற்கெனவே உள்ள 400 மானாவாரி தொகுப்புகளுடன், மேலும் 400 மானாவாரி தொகுப்புகளை ஏற்படுத்த 321.16 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு புதுமை முயற்சியாக வரும் நிதியாண்டில் வேளாண் சார்ந்த நடவடிக்கைகளை விவசாயிகள் ஒருங்கிணைத்துச் செயல்படுத்த, 'ஒருங்கிணைந்த பண்ணைய திட்டம்' ஒன்று துவக்கப்பட உள்ளது.



2018 மார்ச் 19] [திரு. எஸ்.எஸ். சரவணன்]

பிற்பகல் 2–25

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் மாநில அரசின் காப்பீட்டுக் கட்டண மானியப் பங்குத் தொகையை வழங்க 632 கோடி ரூபாயும், வேளாண் இயந்திரமயமாக்கலை ஊக்குவிக்க 150 கோடி ரூபாயும், நுண்ணீர்ப் பாசனத்தை மேம்படுத்த 715 கோடி ரூபாயும் வரும் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் 'உழவன்' என்ற அலைபேசி செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

கிண்டியில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'அம்மா பசுமைப் பூங்கா' என்ற பெயரில் ஒரு பசுமைப் பூங்கா அமைக்கப்பட உள்ளது. வேளாண்மைத் துறைக்கு ஒட்டுமொத்தமாக வரும் நிதியாண்டில் 8,916.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக 248.58 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்.

100 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட உள்ளன. கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத் துறைக்கு முறையே 1,227.69 கோடி ரூபாயும், 130.82 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மீன்பிடி தடைக்காலத்திலும், மீன்பிடி குறைவாக உள்ள காலத்திலும் மீனவர் குடும்பங்கள் கண்ணியமாக வாழ்வதற்கு வழங்கப்பட்டு வரும் குடும்பத்திற்கு தலா 5,000 ரூபாய் உதவித் தொகையானது தொடர்ந்து வழங்கப்படும். மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மூக்கையூரில் 113.90 கோடி ரூபாய் செலவில் புதிய துறைமுகம் அமைக்கும் பணி ஒன்றும் நடைபெற்று வருகிறது.

வரும் நிதியாண்டில் கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் விவசாயிகளுக்கு 8,000 கோடி ரூபாய் அளவிற்குப் புதிய பயிர்க் கடன்கள் வழங்கப்படும். உணவு மானியத்திற்காக மட்டும் வரும் நிதியாண்டில் 6,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் செறிவூட்டுதல்மூலம் நீர்வளத்தை மேம்படுத்த வரும் நிதியாண்டில் 250 கோடி ரூபாய் செலவில் தடுப்பணைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது.

[திரு. எஸ்.எஸ். சரவணன்] [2018 மார்ச் 19

அத்திக்கடவு—அவிநாசி குடிநீர் வழங்குதல் மற்றும் நீர்ப்பாசனத் திட்டத்தை 1,789 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரைவில் செயல்படுத்த இந்த அரசு அனுமதி வழங்கி உள்ளது. இதன்மூலம் திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள 32 பொதுப் பணித் துறை ஏரிகள், 42 ஊராட்சி ஒன்றிய ஏரிகள் மற்றும் 971 குளங்கள் நிரப்பப்படும். நீர்வள ஆதாரத் துறைக்காக, வரும் நிதியாண்டில் 5,127.57 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநில நெடுஞ்சாலைகளின் தரத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு, வரும் நிதியாண்டில் 3,800 கோடி ரூபாயும், ஊரக சாலைப் பணிகளை மேற்கொள்ள 675 கோடி ரூபாயும் வரும் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு வரும் நிதியாண்டில் 482.84 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன் 12,301 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படவுள்ள சென்னை சுற்றுவட்டச் சாலைத் திட்டத்தின் திருத்திய விரிவான திட்ட அறிக்கைக்கு மத்திய அரசானது ஒப்புதல் அளித்துள்ளது.

இரயில்வே பணிகள் திட்டத்திற்காக 513.66 கோடி ரூபாயும், நபார்டு திட்டப் பணிகளுக்காக 250 கோடி ரூபாயும் வரும் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறைக்கு மொத்தமாக 11,073.66 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்துத் துறை ஓய்வூதியதாரர்களுக்கான நிலுவைகளையும், பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைகளையும், சாலை விபத்துகளால் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீடுகளையும் வழங்க 2,519.25 கோடி ரூபாயை சிறப்பு வழிவகை முன்பணமாக வழங்கி, அக்குடும்பங்களின் கண்ணீரை அம்மாவின் அரசு துடைத்துள்ளது. இதனால் பல குடும்பங்கள் இப்போது நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றன. வரும் நிதியாண்டில் புதிதாக 3,000 பேருந்துகள் வாங்கப்பட உள்ளன. இந்த நிதிநிலை அறிக்கையில், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு 750 கோடி ரூபாயை பங்கு மூலதன உதவியாகவும், 1,000 கோடி ரூபாயை துணைக் கடனாகவும் வழங்க நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.



2018 மார்ச் 19] [திரு. எஸ்.எஸ். சரவணன்]

நாட்டிலேயே உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் தொடர்ந்து நான்காவது ஆண்டாக முதலிடத்திலும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடத்திலும் நமது மாநிலம் உள்ளது. இந்த வரவு—செலவுத் திட்டத்தில், சுற்றுலா மேம்பாட்டிற்காக 173.42 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத் தலைமையிடத்தை மாவட்டத் தலைமையிடங்களுடனும், வட்டாரத் தலைமையிடங்களுடனும் கண்ணாடி இழை வட வலையமைப்பு, Fibre மூலமாக இணைக்க இந்த அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

பிற்பகல் 2—30

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எந்தவொரு மங்கல நிகழ்ச்சி துவங்கினாலும், முதலில் அங்கே பந்தக்கால் நட்டு, அதிலே சில மாவிலைகளைச் செருகுவார்கள். அந்த மாவிலைகள்தாம் அந்த நிகழ்ச்சிக்கு ஒரு மங்கல அறிகுறி. அதுபோல், இந்த நிதிநிலை அறிக்கைக்கும் சில மாவிலைகளைக் கட்ட எண்ணுகிறேன். அதாவது, எனது தொகுதிப் பிரச்சினைகள்தான் என்னைப் பொறுத்தவரை அந்த மாவிலைகள். அவை இருந்தால்தான், இருந்தால் மட்டுமல்ல, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருணைக் கண்களால் அவை வசீகரிக்கப்பட்டால்தான், எனது கன்னிப் பேச்சே எனக்கு மங்கலம். என் தொகுதி மக்களுக்கும் அதுதான் மங்கலம் என்று சொல்லிக்கொண்டு, அவற்றை இங்கே நிரல்பட வைக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தக் கோரிக்கைகள்மீது கருணை புரிய வேண்டுமென கனிவோடு வேண்டுகிறேன்.

எனது மதுரை தெற்கு தொகுதிக்குட்பட்ட மதுரை வைகையாற்றின் குறுக்கே P.T.R. பாலத்தின் கிழக்கே தடுப்பணை கட்டி, இத்தடுப்பணையில் மழைக் காலங்களில் சேகரிக்கப்படும் நீரினை மாரியம்மன் தெப்பக்குளத்திற்கு குழாய்மூலம் கொண்டு செல்வதால் குளத்தில் நீரினைத் தேக்கி வைக்க இயலும். அவ்வாறு தேக்கி வைப்பதன்மூலம் மாரியம்மன் தெப்பக்குளத்தினைச் சுற்றி ஒரு கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் உயரும். மேலும், மாரியம்மன் தெப்பக்குளத்தில் ஆண்டு முழுவதும் நீரினைத் தேக்கி வைக்க இயலும். தற்போது P.T.R. பாலத்திற்கென அமைக்கப்பட்ட அடித்தளம், ஆற்றுப் படுகையில்

[திரு. எஸ்.எஸ். சரவணன்] [2018 மார்ச் 19

ஏற்பட்ட அரிப்பின் காரணமாக 6 அடி உயரத்திற்கு அரிப்பு ஏற்பட்டு, அடித்தளம் பூமிக்கு வெளியே தெரியும் வகையில் உள்ளது. மேலும், இப்பாலத்திற்கான உறுதித்தன்மையினை, Structural instability–ஐ மாற்றும் வகையில் உள்ளது. வைகையாற்றின் குறுக்கே P.T.R. பாலத்தின் கிழக்கே தடுப்பணை கட்டுவதன் மூலமாக ஆற்றுப் படுகையில் ஏற்படும் அரிப்பினைத் தடுக்க இயலும்.

குடிநீர்த் தேவைக்காக தாமிரபரணி ஆற்று நீரை விருதுநகர் வரை குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் விருதுநகரிலிருந்து மதுரை வரை குழாய் பதித்து தாமிரபரணி ஆற்று நீரை மதுரைக்குக் கொண்டு வருவதன்மூலம் மதுரையில் குடிநீர்ப் பற்றாக்குறையை நிரந்தரமாகப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெரியார் அணை Lower Camp பகுதியிலிருந்து குழாய் பதித்து மதுரைக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டத்திற்காக தமிழக அரசினால் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தை விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தெற்கு தொகுதியில் உள்ள பாலரெங்கபுரம் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தி கூடுதல் கட்டடம் கட்டி மருத்துவமனையை விரிவுபடுத்தி சுற்றுவட்டாரத்திலுள்ள பல இலட்சம் மக்கள் பயன்பெறுமாறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கைநெசவுத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு கைநெசவு சம்பந்தப்பட்ட மூலப்பொருட்களுக்கு ஜி.எஸ்.டி. வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும்.

மதுரை மாநகரத்திலுள்ள நான்கு வெளிவீதிகளையும் சுற்றி மேம்பாலம் அமைப்பதன்மூலம் மிகப் பெரிய போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கலாம்.

மதுரையில் இருக்கும் வாய்க்கால்கள் அனைத்தையும் சுத்தப்படுத்த வேண்டும். குறிப்பாக, உலக வங்கியின் உதவியுடன் சிமெண்ட் சுற்றுச் சுவர் மற்றும் தளம் அமைக்கப்பட்டுள்ள பனையூர்–அனுப்பானடி வாய்க்கால், மதுரை முனிச்சாலை மேம்பாலத்தின் அடியிலிருந்து ஆரம்பித்து, முனிச்சாலை, பழைய இராமநாதபுரம் சாலை மற்றும் அனுப்பானடி வழியாக பனையூர் கண்மாயை அடைகிறது. இந்த வாய்க்காலுக்கும் வைகை ஆற்றுக்கும் இடையே



2018 மார்ச் 19] [திரு. எஸ்.எஸ். சரவணன்]

இணைப்பாக இருந்த வாய்க்கால் தூர்ந்துபோய் விட்டதால், மேற்படி வாய்க்காலுக்கும் ஆற்றுக்கும் இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. மேற்படி இணைப்பு வாய்க்காலை சரிசெய்து, நிரந்தரமாக வைகை ஆற்றுநீர் மேற்படி வாய்க்கால்மூலம் பனையூர் கண்மாயைச் சென்றடைந்தால் பனையூரைச் சுற்றியுள்ள சுமார் 1,000 ஏக்கர் விவசாய நிலங்கள் நிரந்தரப் பாசன வசதி பெறும். மேலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயரும். குடிநீர்ப் பிரச்சினை தீரும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர், திரு. சரவணன், மீதமுள்ள தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்து விடுங்கள். பதிவு செய்துகொள்ளலாம்.

**திரு. எஸ்.எஸ். சரவணன்:** இன்னும் இரண்டே இரண்டு பாயின்ட்டுகள்தான். கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை 10 சதவிகிதம் அகவிலைப்படி உயர்த்தி வழங்கி வந்தனர். சென்ற ஆண்டு 1–9–2016 அன்று அகவிலைப்படி 10 சதவிகிதம் வழங்கப்பட்டது. 1–9–2017 அன்று வழங்க வேண்டிய அகவிலைப்படியை வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், வில்லாபுரத்தில் மக்கள்தொகை அதிகமாக இருப்பதால், airport செல்வதற்கு வில்லாபுரம் பாலம் வழியாகச் செல்ல வேண்டும். ஆகையால், தெற்கு வாசலில் உள்ள வில்லாபுரம் பாலத்தை அகலப்படுத்த வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனது தொகுதி சம்பந்தப்பட்ட மேலும் சில கோரிக்கைகளை தங்களிடம் எழுதிக் கொடுத்து விடுகிறேன். அவற்றை நான் படித்ததாகக் கருதி, அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

### தொகுதிக் கோரிக்கைகள்:

பனகல் ரோடு முதல் கருப்பாயூரணி நான்கு வழிச் சாலை சந்திப்பு வரை மேம்பாலம் அமைத்து போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க ஆவன செய்ய வேண்டும்.

கீழவாசல் பகுதியிலிருந்து விரகனூர் நான்கு வழிச் சாலை வரை மேம்பாலம் அமைத்து போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க ஆவன செய்ய வேண்டும்.

[திரு. எஸ்.எஸ். சரவணன்] [2018 மார்ச் 19

ஆல்பர்ட் விக்டர் (AV) பாலம் முதல் இராவதநல்லூர்–விரகனூர் மதகு வரை வைகை ஆற்றின் தென் கரை ஓரத்தில் உள்ள சாலை தடுப்புச் சுவர் இல்லாமல் இருக்கிறது. இதனால் இந்தச் சாலையில் செல்லும் பயணிகளுக்குப் பாதுகாப்பில்லை. ஆகையால், சிம்மக்கல் முதல் தெப்பக்குளம் வரை வைகை ஆற்றின் தென் கரை ஓரத்தில் 15 அடி உயரத்தில் தடுப்புச் சுவர் கட்ட வேண்டும். இதேபோல் ஆல்பர்ட் விக்டர் பாலம் முதல் வண்டியூர் வரை வைகை ஆற்றின் வடகரை ஓரத்தில் 15 அடி உயரத்தில் தடுப்புச் சுவர், Retaining concrete wall கட்ட ஆவன செய்ய வேண்டும்.

அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு கோச்சடையிலிருந்து தனியாக புதிய சாலை அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

மதுரை திருமலை நாயக்கர் மகாலைச் சீரமைக்க ஆவன செய்ய வேண்டும்.

ராமராயர் மண்டபம், ஆழ்வார்புரம், வாழைத்தோப்பு (51 மற்றும் 52–வது வார்டு) பகுதியில் அம்மா திருமண மண்டபம் (சமுதாயக் கூடம்) அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

52–வது வார்டில் உள்ள வண்ணான் காலனியில் ஏழைகளுக்குக் கட்டடம் கட்ட ஆவன செய்ய வேண்டும்.

சின்னக் கண்மாய் (71–வது வார்டு) முனியாண்டி கோவில் தெருவில் உள்ள வீடுகளுக்குப் பட்டா வழங்க ஆவன செய்ய வேண்டும்.

பல கல்லூரி மற்றும் பள்ளி வாகனங்கள் அதிகமாக சிந்தாமணி சாலை வழியாகச் செல்வதால், சிந்தாமணி சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இல்லாமை அறியாத தமிழ்நாடு வாழ்க! இரவாமை அறமென்னும் தமிழ்நாடு வாழ்க! என்பதைக் கொஞ்சம் உள்வாங்கி, நமக்கு அளித்திருக்கிறார். நானும் அதனை உள்வாங்கி,

‘எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்’



2018 மார்ச் 19] [திரு. எஸ்.எஸ். சரவணன்]

என்ற வள்ளுவரின் வாக்கை மனதிலே இருத்தி, இங்கே வழங்கப்பெற்றுள்ள இந்த நிதிநிலை அறிக்கையின் முத்துக்களையே ஒரு முத்துமணி மாலையாய் கோர்த்திருக்கிறேன் என்று சொல்லி பெருமைப்பட்டு, இந்த அளவிலே இந்த நிதிநிலை அறிக்கையை உளமார வாழ்த்தி, வரவேற்கிறேன். எனது கன்னிப் பேச்சை கனிவோடு நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.

பிற்பகல் 2–35

**திரு. பி.வி. பாரதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ‘மக்களால் நான், மக்களுக்காகவே நான்’ என வாழ்ந்து, இனம், மதம், மொழி மற்றும் நாட்டின் உரிமைக்காக இம்மாமன்றத்தில் தன் வலிமையான குரலை ஓங்கி ஒலித்திட்ட எங்கள் அம்மா இல்லாத இம்மாமன்றத்தில் நாங்கள் பேசுகிறோம் என்பதை எண்ணும்போது எங்களின் நெஞ்சம் கனக்கிறது. கண்ணீர் வடிகிறது. எங்கள் அம்மா துயில் கொள்ளும் திசை நோக்கி வணங்கி, எங்கள் அம்மா அமர்ந்த இடத்தில் எளிமையாக, அதோடு மிக வலிமையாக முதல்வர் பணிகளை நாடுபோற்ற செய்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நிதியினை அனைவருக்கும் பகிர்ந்து கொடுப்பேன், அம்மா வழியில் அனைவரையும் அரவணைத்துச் செல்வேன் என்று செயல்படுகின்ற எங்களின் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எங்களுக்கு அண்ணனாய், தோழனாய் எங்களோடு தோள்கொடுக்கும் அண்ணன் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மற்றும் என்னுடைய சீர்காழி தொகுதிவாழ் மக்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கம்.

நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு அரியதொரு வாய்ப்பினை எனக்கு வழங்கிட்ட எளியராய், துணிவு உள்ளவராய், போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரி தூற்றுவோர் தூற்றட்டும் என்பதற்கு ஒப்பாக மலை குலைந்தாலும், நிலை குலையாத எங்கள் மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியை காணிக்கையாக்குகின்றேன்.

[திரு. பி.வி. பாரதி] [2018 மார்ச் 19

2018–2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் இது சிப்பிக்குள் முத்து ஆகும். இருப்பதை வைத்து சிறப்புடன் உருவாக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை. 'தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச் சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே தனித்த நறுத் தேன்பெய்து பசும்பாலுந் தேங்கின் தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி இனித்த நறுநெய் அளந்தே இளஞ்சூட்டின் இறக்கி எடுத்த சுவைக் கட்டியின் இனத்திடுந் தெள்ளமுது', இப்பேரவைக்கு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அளித்துள்ள நிதிநிலை அறிக்கை.

தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயர்த்த வேண்டுமென்ற மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை நனவாக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசு செயல்பட்டு வருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியத்திற்கு 2018–2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 100 கோடியும், அரசு நிருவாகத்தில் புதுமை முயற்சிகளை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்திற்கு ரூபாய் 100 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, பாராட்டுக்குரியது.

தமிழ்நாட்டில் சுனாமி புயல் தாக்கியபோது, மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த போர்க்கால நடவடிக்கைகளை உலகமே வியந்து பாராட்டியது. அந்த வகையில், மாநில பேரிடர் நிவாரண நிதியத்திற்கு நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 786 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது போற்றுதலுக்குரியது. என் மக்கள் எதற்காகவும், யாரிடத்திலும், எப்போதும் கையேந்தி நிற்காத நிலையை என் வாழ்நாளில் காண வேண்டும் என்பதே எனது இலட்சியம் என வாழ்ந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இந்த வரவு–செலவுத் திட்ட அறிக்கையில் ஊரக வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக ரூபாய் 519.81 கோடியும், நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டத்திற்காக ரூபாய் 300 கோடியும் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு இது என்பதை நிருபித்துக் காட்டியிருக்கிறது. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டத்தைத் தொடங்கியவர் பொன்மனச் செம்மல்



2018 மார்ச் 19] [திரு. பி.வி. பாரதி]

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். இத்திட்டத்திற்கான உதவித்தொகையை உயர்த்தி வழங்கியவர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள். தற்போது வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையை இருமடங்காக உயர்த்தி வழங்கியவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

புதுடில்லி பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கையை நிறுவிட ரூ.50 இலட்சத்தை வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோல், ஹார்வர்டு பல்கலைக்கழகத்திற்கு தமிழ் இருக்கையை நிறுவிட ரூ.10 கோடியை வழங்கியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை மதுரையில் நடத்தி தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியவர் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள். எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்திக் காட்டி, நான்காம் தமிழாம் அறிவியல் தமிழை அறிமுகப்படுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

ரூபாய் இரண்டு கோடி செலவில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி விரிவாக்க மையம் ஒன்றையும், ஒரு கோடி ரூபாய் மானியத்தில் தமிழ்ப் பண்பாட்டு மையம் ஒன்றையும் உருவாக்கித் தந்துள்ளவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். நலிந்த கலைஞர்களுக்கான மாதாந்திர நிதியுதவி 1,500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுமென்பது பாராட்டுக்குரியது.

மறைந்தும் மறையாமல் நம் உள்ளங்களில் என்றென்றும் தெய்வமாக வீற்றிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், சென்னை மெரினா கடற்கரையில் அம்மா அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்க ரூபாய் 50 கோடியே 80 இலட்சத்தையும், மாண்புமிகு அம்மா அவர்கள் வாழ்ந்த வேதா இல்லத்தை நினைவிடமாக மாற்றுவதற்காக ரூபாய் 20 கோடியையும் ஒதுக்கீடு செய்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் ஒன்றரைக்கோடி கழகத் தொண்டர்கள் சார்பாக எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பி.வி. பாரதி] [2018 மார்ச் 19

பிற்பகல் 2–40

சட்டம்–ஒழுங்கைப் பாதுகாத்து, காவல் துறையை நவீனமயமாக்கி, மாநிலத்தை அமைதிப் பூங்காவாகத் திகழச் செய்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவரது வழியில் முதலமைச்சரின் காவலர் விருதுகளின் எண்ணிக்கை 1,500–லிருந்து 3,000 ஆக உயர்த்தப்படும் எனவும், அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு இணையவழி குற்றத்தடுப்புக் காவல் நிலையம் ஏற்படுத்தப்படும் எனவும் இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது, பாராட்டுதலுக்குரியது.

தமிழகத்தின் காவல் துறை உலக அரங்கில் புகழ்பெற்ற பெருமை படைத்த காவல் துறை. எனவேதான், யார், யாரோ வந்து முயன்று, முடியாது போன வீரப்பனை தமிழகக் காவல் துறை சம்ஹாரம் செய்தது. இதன்மூலம் மாண்புமிகு அம்மாவின் அரசில் காவல் துறையின் ஈரல் நன்றாக, செம்மையாக இருந்தது.

'மக்களைத் தேடி அரசு' என்ற மகத்தான தத்துவத்தை முன்வைத்து மக்களுக்காகவே திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவரது வழியில் மக்கள் தங்களுக்கு தொடர்பான தரவுத் தகவல்களை தாங்களே திருத்தம் செய்ய ஏதுவாக, 'ஒருங்கிணைந்த மக்கள் இணையதளம்' ஒன்று தொடங்கப்படும் எனவும், அனைத்து அரசுத் துறைகளுக்குமான பொது மின்ஆளுமை வடிவமைப்பு உருவாக்கப்பட்டு, செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

ஏழை, எளிய குடும்பத்தினருக்கு 11 இலட்சத்திற்கும் மேற்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களை கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில் வழங்கி சாதனை படைத்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

2018–2019 ஆம் ஆண்டில் 3 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கப்படும் எனவும், விதிமுறைகளுக்குட்பட்டு, அவர்களுக்கு வீட்டு வசதி வழங்கப்படும் எனவும் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது.

'உழவர் பாதுகாப்புத் திட்டம்' என்ற உன்னதமான திட்டத்தைத் தந்து, விவசாயிகளின் துயர் துடைத்தவர் மாண்புமிகு



2018 மார்ச் 19] [திரு. பி.வி. பாரதி]

அம்மா அவர்கள். 2018–2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்திற்கு ரூ.269.82 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மனதார வரவேற்கிறேன்.

மழை நீரைச் சேகரித்து மண்ணின் வளம் காத்து, சுற்றுச்சூழலை மேம்படுத்த 'மழை நீர் சேகரிப்புத் திட்டம்' என்ற தொலைநோக்குத் திட்டத்தைச் செயல்படுத்தி வெற்றி கண்டவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவரது வழியில் அனைத்து ஏரிகள், குளங்கள், ஆறுகள், நீர்நிலைகளை அரசு பணத்தில் ஒரு ரூபாய்கூட செலவழிக்காமல், குடிமராமத்துத் திட்டத்தின்கீழ் தூர் வாரி சாதனை படைத்த அரசு மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிதிநிலை அறிக்கையில் 10,000 பண்ணைக் குட்டைகள் ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் எனவும், விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில், 'உழவன்' என்ற அலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளதை வரவேற்று மகிழ்கிறேன். கடை மடைப் பகுதிக்கு பெரும்பான்மையான எண்ணிக்கையில் பண்ணைக் குட்டைகளை ஒதுக்கீடு செய்து தர அன்புடன் வேண்டுகிறேன்.

மீனவ மக்களுக்கு மீன்பிடித் தடைக்கால நிவாரணம், டீசல் மானியம், அதிநவீன தகவல் தொடர்பு கருவிகள் ஆகியவற்றை வழங்கியதோடு, மீனவ மக்களுக்குப் பாதுகாப்பை உறுதி செய்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் எங்களது நாகப்பட்டினம் மாவட்டத்தில் வெள்ளப்பள்ளம் மற்றும் தரங்கம்பாடி ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதற்கு எனது சார்பாகவும், மீனவ மக்களின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகிலேயே விவசாயத்திற்கு வறட்சிக்கான நிவாரணம் வழங்கியதோடு, சிறு, குறு விவசாயிகளின் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்து விவசாயிகளின் நலன் காத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவரது வழியில் 2018–2019 ஆம் நிதியாண்டில் கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் விவசாயிகளுக்கு 8,000 கோடி ரூபாய் அளவிற்கு புதிய பயிர்க்கடன்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதற்கு டெல்டா மாவட்ட விவசாயிகள் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பி.வி. பாரதி] [2018 மார்ச் 19

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், 20 கிலோ விலையில்லா அரிசி வழங்கிய அன்னபூரணி மாண்புமிகு அம்மா அவர்கள். அனைத்து குடும்ப அட்டைகளையும் 'smart card' ஆக மாற்றி வழங்கி சாதனை படைத்த அரசு மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் தலைமையிலான அரசு.

2018–2019 ஆம் ஆண்டில் உணவு மானியத்திற்காக 6,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அனைத்து மக்களின் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்துள்ள இந்த அரசினை நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

காவேரியில் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடச் செய்து வரலாற்றுச் சாதனை படைத்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவர்களது வழியில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவையும் மத்திய அரசு ஆறு வார காலத்திற்குள் அமைக்க வேண்டுமென இம்மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியதற்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–45

இருண்டு கிடந்த தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றி அனைத்து குடும்பங்களுக்கும் 100 யூனிட் மின்சாரத்தை விலையில்லாமல் வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவரது வழியில் எரிசக்தித் துறைக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் 13,964.08 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை வரவேற்கிறேன்.

அனைத்து மாணவ, மாணவியருக்கு விலையில்லா பேருந்து பயண அட்டையும், மூத்த குடிமக்களுக்கு பேருந்து பயணச் சலுகையும் வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இத்திட்டத்தை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்துவதோடு, 2018–2019 ஆம் நிதியாண்டில் போக்குவரத்துக் கழகங்களுக்கு 3,000 புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை 2015 ஆம் ஆண்டு நடத்தி வெற்றி கண்டவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவரது வழியில் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 மற்றும் 24 ஆம் தேதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.



2018 மார்ச் 19] [திரு. பி.வி. பாரதி]

பொங்கல் பண்டிகைக்கு விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தவர் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி செம்மைப்படுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்திற்கு 490.45 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும், கைத்தறித் துணி விற்பனை மீதான தள்ளுபடி மானியத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை 80 கோடி ரூபாயிலிருந்து 150 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கியும், கைத்தறி உதவித் திட்டம் என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும் எனவும், புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

ஏழை, எளிய மக்களுக்கு தொகுப்பு வீடுகளைக் கட்டித் தந்தவர் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகளைக் கட்டித் தந்தவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவரது வழியில் 2018–2019 ஆம் நிதியாண்டில் பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 1.30 இலட்சம் வீடுகளும் மற்றும் முதலமைச்சர் சூரிய ஒளி மின்வசதி கொண்ட பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் 20 ஆயிரம் வீடுகளும் கட்டித் தரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே கிடைக்கக்கூடிய மருத்துவ வசதிகள் ஏழை, எளிய மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இத்திட்டத்திற்கு 2018–2019 ஆம் நிதியாண்டில் ரூ.1,361.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம், அம்மா மகப்பேறு சஞ்சீவி, விலையில்லா சானிடரி நாப்கின்கள் வழங்கி சுகாதாரத்தைப் பேணிக் காத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவரது வழியில் அம்மா தாய்–சேய் நல ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும்.

[திரு. பி.வி. பாரதி] [2018 மார்ச் 19

அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வி அளிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தில் மாணவ, மாணவியருக்கு 4 இணை சீருடைகள், புத்தகப் பைகள், காலணிகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், வடிவியல் பெட்டிகள் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள், மிதிவண்டிகள் மற்றும் பேருந்து கட்டணச் சலுகைகளை விலையில்லாமல் வழங்கியவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த இந்த நிதியாண்டில் 1,653.89 கோடி ரூபாயும், மடிக்கணினி வழங்க 758 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மனதார வரவேற்கிறேன்.

பத்தாம் பகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு படித்த பெண்களின் திருமணத்திற்கு தாலிக்கு 8 கிராம் தங்கத்துடன் முறையே ரூ.25,000 மற்றும் ரூ.50,000 வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி பெண்ணினத்திற்குப் பெருமை சேர்த்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 2018–2019 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு 724 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை வரவேற்கிறேன்.

மாற்றுத் திறனாளிகளுக்கான நிதியம் ஒன்று 10 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும் எனவும், மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் விளிம்புத் தொகை ரூ.10,000/–லிருந்து ரூ.25,000/– ஆகவும், பயனாளிகளின் எண்ணிக்கையை 1,000–லிருந்து 2,000 ஆக உயர்த்தியும் அறிவித்துள்ளதை வரவேற்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை வணிகர்கள் வரவேற்கிறார்கள், விவசாயிகள் பாராட்டுகிறார்கள், நடுநிலையாளர்கள் போற்றுகிறார்கள், பொருளாதார வல்லுநர்கள் வியந்து பார்க்கின்றனர். பார்த்தாலும், நினைத்தாலும், படித்தாலும், படிக்க பக்கம் நின்று கேட்டாலும், பரிந்துள் உணர்ந்தாலும், தித்திக்கும் இனித்த சுவைக் கரும்பாய் அற்புதமான நிதிநிலை அறிக்கை. இது மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு என்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கையே சான்றாகும்.

பிற்பகல் 2–50

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எல்லோரும் ஒன்றென்ற காலம் வந்ததே, பொய்யும், ஏமாற்றும் தொலைகின்ற காலம் வந்ததே, இனி நல்லோர் பெரியர் என்னும் காலம் வந்ததே, கெட்ட நயவஞ்சகக்காரருக்கு மோசம் வந்ததே, இனி விழலுக்கு



2018 மார்ச் 19] [திரு. பி.வி. பாரதி]

நீர் பாய்ச்சி மாயமாட்டோம், வெறும் வீணருக்கு உழைத்துடலும் ஓயமாட்டோம். நாம் இருக்கும் கழகம் நமதென்பதறிந்தோம் இது நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம். ‘இந்த பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்; எங்கள் அம்மா அவர்களுக்கு மட்டுமே அடிமை செய்து வாழ்வோம்’ என்று கூறி, இந்த நிதிநிலை அறிக்கையை மனதாரப் பாராட்டி, நான் சார்ந்திருக்கின்ற சீர்காழி சட்டமன்றத் தொகுதிக் கோரிக்கைகளை இந்த மாமன்றத்திலே பதிய வைப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

சீர்காழி சட்டமன்றத் தொகுதி, சீர்காழி நகரத்திலே வாழ்ந்து மறைந்தவர் நூலகத் தந்தை திரு. அரங்கநாதன் அவர்கள். அவர் வாழ்ந்த சீர்காழியில் அவரது நினைவாக தாலுகா அளவில் அனைத்து அம்சங்களை உள்ளடக்கிய நூலகக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்குத் தேவைப்படும் 6,000 சதுரடி அரசு நிலம், சீர்காழி நகரின் மையப் பகுதியில் உள்ளது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரதி, தொகுதிக் கோரிக்கைகளை எல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவற்றைப் பதிவு செய்துகொள்ளலாம்.

**திரு. பி.வி. பாரதி:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். சீர்காழி நகருக்கு பாதாள சாக்கடைத் திட்டமும், வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சிக்குப் பாதாள சாக்கடைத் திட்டமும் செயல்படுத்த வேண்டுமென பணிவன்போடு வேண்டுகிறேன். காவேரி பாசனப் பகுதியும், சீர்காழி தொகுதியைச் சேர்ந்த வெள்ளப்பள்ளம் வடிகால் ஆறும், தெற்கு ராஜன் பாசன வாய்க்காலும், திருநகரி வாய்க்காலும் தூர் வாரப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

திருவெண்காடு அருள்மிகு ஸ்வேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயில் கட்டுப்பாட்டின்கீழ், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைமூலம் நிருவகிக்கப்படும் பெண்கள் உயர்நிலைப் பள்ளியினை, வரும் நிதியாண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென கோருகிறேன். அதேபோல, வைத்தீஸ்வரன்கோவில் பகுதியில் அமைந்துள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை, வரும் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென கோருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

[திரு. பி.வி. பாரதி] [2018 மார்ச் 19

எங்களது தலையாயக் கோரிக்கையான கொள்ளிடம் ஆறு மற்றும் வெள்ளப்பள்ளம் உப்பனாறு ஆகிய ஆறுகளில் கடல்நீர் உட்புகுந்து, நிலத்தடி நீர் முழுவதும் பாதிக்கப்படுகிறது. ஏறத்தாழ கடலிலிருந்து 18 கிலோ மீட்டர் தூரம் கடல்நீர் உட்புகுந்துவிட்டது என்ற நிலையினை இந்த மாமன்றத்திலே மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு துணை முதல்வர் ஆகியோரின் கவனத்திற்கு எடுத்துச் சொல்வது எனது கடமை என கருதுகிறேன்.

எங்களுடைய சீர்காழி பகுதி மக்களுடைய மிக நீண்ட, நெடிய நாள் கோரிக்கையான கொள்ளிடம் ஆற்றுக்குத் தடுப்பணையும், வெள்ளப்பள்ளம் உப்பனாறுக்கு தடுப்பணையும் கட்டித் தர நீங்கள் உரிய நடவடிக்கையை விரைந்து எடுக்க வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பாக, ஏழை எளிய மக்களின் சார்பாக, விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சீர்காழியில் உள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் இசைக் கல்லூரிக்கும், போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகத்திற்கும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கும், அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கும் சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வைத்தீஸ்வரன்கோவில் பகுதியில் புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டுமென்றும், சீர்காழி நகரில் இரயில்வே மேம்பாலம் கட்டித் தர வேண்டுமென்றும் இந்த மாமன்றத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இரண்டாம் பாகம்–295 திட்டத்தை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

***திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தான் மருத்துவமனையிலே தங்கி சிகிச்சை பெற்று வந்த நேரத்திலே, தனக்குக் கிடைத்த உயர் மருத்துவ சிகிச்சை, தமிழகத்தினுடைய ஓலை குடிசையிலே வாழ்கின்ற ஏழை குடிமகனுக்கும் கிடைக்க வேண்டுமென்கிற உன்னத இலட்சியத்தால், 'கலைஞர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்' தந்த எங்களுடைய தலைவர், கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய



2018 மார்ச் 19] [திரு. எஸ். ரகுபதி]

உலகில், தானத்திலே சிறந்த தானம் உடலுறுப்பு தானம் என்று சொல்வார்கள். அதைச் செய்வதற்கு தியாக உள்ளமும் வேண்டும்; பெரிய மனமும் வேண்டும். 'செத்தும் கொடுத்தான், சீதக்காதி வள்ளல்' என்று சொல்வார்கள். அந்த சீதக்காதி வள்ளலிலும் மேன்மையானவராக, அகில இந்திய அரசியல் தலைவர்களிலே தன் உடலுறுப்பைத் தானம் செய்திருக்கிற ஒரே அரசியல் தலைவராக விளங்கிக் கொண்டிருக்கிற, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய செயல் தலைவர் தளபதி அவர்களையும், துணைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

என்னுடைய உரையை 2-53 மணிக்கு ஆரம்பித்திருக்கிறேன். நான் பேசுவதற்கு ஒரு மணி நேரம் நிச்சயம் நீங்கள் தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு என் உரையைத் தொடங்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் எல்லாம் tired ஆகிவிட்டார்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** யாரும் tired ஆக இருக்க மாட்டார்கள். படித்துக் கொண்டிருக்கிறார்கள். 84 பக்கங்கள் கொண்ட நிதிநிலை அறிக்கை, 154 நிமிடங்கள் வாசிக்கப்பட்டது. ** என்பதற்கு இது மிக, மிக சாதாரணமான ஒன்றாக அமைந்திருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, controversy இல்லாமல் பேசுங்கள். (குறுக்கீடு) அது தேவையில்லாத வார்த்தை. அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ். ரகுபதி:** 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்பார்கள். அதுபோல, நம்முடைய பட்ஜெட் அறிவிப்புகள், வெறும் அறிவிப்புகளாகத்தான் இருக்கின்றன. 'வரியில்லாத பட்ஜெட்' என்று பெருமையோடு இன்றைக்கு நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், அதில் மறைமுகமாக வரி இருக்கிறது.

பிற்பகல் 2–55

உதாரணமாக, நிதிநிலை அறிக்கை பக்கம் 16–ல் 11–வது வரியை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டுமென்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கேட்டுக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கை வெறும் வெள்ளை பேப்பரில் அடிக்கப்பட்டிருந்தாலும், அதிலே உள்ளே வரி இருக்கிறது என்பதற்கு அது ஓர் எடுத்துக்காட்டாகும். எனவே, இங்கே மறைமுகமாக வரிகள் திணிக்கப்பட்டிருக்கின்றன. நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே, பேருந்து கட்டணம் உயர்த்தியதன் மூலமாகவும், பால் விலையை உயர்த்தியதன் மூலமாகவும், மின் கட்டணத்தை உயர்த்தியதன் மூலமாகவும், ரேஷன் பொருட்களில் சர்க்கரை விலையை உயர்த்தியதன் மூலமாகவும், இப்படி எல்லாவற்றையும் உயர்த்திவிட்டு, நாங்கள் வரியில்லாத நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் அது நிச்சயமாக மக்களை ஏமாற்றுகின்ற செயலாகத்தான் இருக்கும். இதனை வள்ளுவருடைய திருக்குறள் மூலமாக சொல்ல வேண்டுமென்று சொன்னால்,

"வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு"

இதனுடைய பொருள் என்னவென்றால், நடு இரவில் ஆயுதத்தைக் காட்டி, மக்களிடம் கொள்ளையடிப்பது எவ்வளவு கொடுமையானதோ, அதைவிடக் கொடுமையானது ஆட்சியாளர்கள் கடுமையான சட்டம் இயற்றி, மக்களிடம் அதிக வரிகள் வசூலிப்பதாகும். நடு இரவில்தான் பேருந்துக் கட்டணம் பல மடங்கு உயர்த்தப்பட்டது என்பதை இங்கே கோடிட்டுக் காட்டுவதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். நிதிநிலை அறிக்கையில் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள். அவையெல்லாம் கடந்த ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டவையாகத்தான் இருக்கின்றன.

தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகத்தை நிறுவி, அதை SEBI–ல் பதிவு செய்து, 6,000 கோடி ரூபாய் நிதி திரட்ட இருப்பதாகவும், முதற்கட்டமாக 1,200 கோடி ரூபாய் நிதியைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், 2017–2018 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், 2018–2019 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் நிதியைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. 2017–2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிதி திரட்டப்பட்டதா? அதைப்பற்றி 2018–2019 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.



மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில் இதுகுறித்து தெரிவித்தால் நன்றாக இருக்கும். இந்த மொத்த நிதியில், முதலில் ஈடுசெய்யப்படும் ஊக்க மூலதனமாக மாநில அரசு வழங்க வேண்டிய 5 சதவிகிதமான 300 கோடி ரூபாயில் ஒரு பகுதியை, அதாவது 30 கோடி ரூபாயை மாநில அரசு ஏற்கெனவே விடுவித்துள்ளது என 2017–2018 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்போது, 2018–2019 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையிலும் ஊக்க மூலதனமாக வழங்கப்பட வேண்டிய 300 கோடி ரூபாயில், 30 கோடி ரூபாயை மாநில அரசு விடுவித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்படியென்றால், கடந்த ஆண்டு விடுவிக்கப்பட்டது உண்மையா அல்லது இப்போது விடுவிக்கப்பட்டுள்ளது உண்மையா? இல்லை, 2017–2018 ஆம் ஆண்டு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் வாசிக்கப்பட்டதையே இந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையிலும் வாசித்திருக்கிறீர்களா என்பதை நீங்கள் நன்றாகப் பார்க்க வேண்டும். 300 கோடி ரூபாயில் 30 கோடி ரூபாய் விடுவித்ததுபோக, மீதமுள்ள 270 கோடி ரூபாய் உட்பட உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் திட்டத் தயாரிப்பு நிதிக்காக 2,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக 2017–2018 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது, 2018–2019 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையிலும் அதே 270 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வாசிக்கப்பட்டதைப்போன்றே, இந்த ஆண்டும் வாசிக்கப்பட்டுள்ளது என்பதுபோல் இல்லையா? சென்ற வருடம் 270 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக சொல்லியிருக்கிறீர்கள். 2018–2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் 270 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறீர்கள். உண்மையிலேயே, 2017–2018 ஆம் ஆண்டு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில், ஊக்க மூலதனத்திற்காக 270 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டிருந்தால், தற்போது மீண்டும் ஊக்க மூலதனத்திற்காக 270 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டிய அவசியம் என்ன?

அடுத்ததாக, திட்ட தயாரிப்பு நிதி பற்றி நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2017–2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின்

[திரு. எஸ். ரகுபதி] [2018 மார்ச் 19

திட்டத் தயாரிப்பு நிதிக்காக 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. 2018–2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் திட்டத் தயாரிப்பு நிதிக்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2017–2018 ஆம் ஆண்டைய நிதிநிலை அறிக்கையில் திட்டம் தயாரிப்பதற்காக மட்டும்தான் 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2018–2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் திட்டம் தயாரிப்பதற்காக மட்டும்தான் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. திட்டம் தயாரிப்பதற்கு எவ்வளவு நிதி செலவாகும் என்பது தெரியாமல், திட்டம் தயாரிக்கும் பணிக்காக மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதைத்தான் இந்த அரசினுடைய ** என்று சொன்னால், மற்றவர்கள் எல்லோரும் உடனடியாக கோபித்துக்கொள்கிறார்கள். அதற்காகத்தான் சொல்கிறேன், இன்னும் திட்டம் தயாரிப்பதற்கான நிதியைத்தான் ஒதுக்கிக் கொண்டிருக்கிறீர்கள். புதிதாக எதையும் செய்யவில்லை.

பிற்பகல் 3–00

அதைப்போல, மற்றொன்று மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியம். தமிழகத்தினுடைய சமூகப் பொருளாதார மேம்பாட்டினை மாநிலம் முழுவதும் கொண்டு வருவதற்காக மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சரி. அதற்கு 2017–2018 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 100 கோடி ரூபாய் சிறப்பு நிதியும், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக 70 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். 2018–2019 ஆம் ஆண்டிலும் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியத்திற்கு 100 கோடி ரூபாயும், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு 70 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். எது உண்மை? சென்ற வருடம் வாசித்ததைத்தான் திருப்பி வாசிக்கிறீர்கள். அப்படியென்றால் கடந்த ஆண்டு சொன்னதை நீங்கள் செய்யவில்லை. எனவேதான் ** நாங்கள் சொல்கிறோமே தவிர, வேறு எதுவும் கிடையாது. அப்படியில்லையென்றால் அச்சுப் பிழை என்று சொல்லுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2018 மார்ச் 19] [திரு. எஸ். ரகுபதி]

அடுத்து, பொருளாதார வளர்ச்சி. நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியைப் பற்றிச் சொல்கிறபொழுது 2017–2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 9 சதவிகிதம் வரையிலும் பொருளாதார வளர்ச்சி இருக்கும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அடைந்தது 8.03 சதவிகிதம் ஆகும். இப்பொழுது இந்த வருடத்திற்கான இலக்கு 9 சதவிகிதம் என்று சொல்கிறீர்கள். ஆனால், நிச்சயமாக உங்களால் 9 சதவிகித இலக்கை அடைய முடியாது. அதே 8 சதவிகிதம்தான். பேருக்குத்தான் அதைச் சொல்லிக் கொண்டேயிருக்கிறீர்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

அடுத்ததாக, கிராமப்புற புத்தாக்கத் திட்டம் என்று அறிவித்துள்ளீர்கள். இது வருடாவருடம் repeat ஆகிக்கொண்டே வருகிறது. கிராமப்புற வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு 2017–2018 ஆம் நிதியாண்டில் 469 கோடி ரூபாயும், 2018–2019 ஆம் நிதியாண்டில் 519.81 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். புதுவாழ்வுத் திட்டம் 2017 ஜூன் மாதத்துடன் நிறைவடைந்துவிட்டதால் உலக வங்கி உதவியோடு இது செயல்படுத்தப்படுகிறது என்று சொல்கிறீர்கள். 120 வட்டாரங்களில் 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், 1,000 கோடி ரூபாயைக்கூட கிராமப்புற புத்தாக்கத் திட்டத்திற்கு செலவு செய்யவில்லை. இப்பொழுது 920.63 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கிராமப்புற புத்தாக்கத் திட்டத்தினை உலக வங்கி நிதி உதவியுடன் இந்த அரசு செயல்படுத்த உள்ளது என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படியென்றால் சென்ற வருடம் 1,000 கோடி ரூபாய் உலக வங்கியின் நிதி உதவியோடு செயல்படுத்தப்படும் என்று சொன்னது உண்மையா அல்லது இப்பொழுது 920 கோடி ரூபாய் செலவிலே செயல்படுத்த உள்ளோம் என்று சொல்வது உண்மையா? அப்படியென்றால் அந்தத் திட்டமும் ஆரம்பிக்கப்படவில்லை என்பதுதானே உண்மை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றொன்று வரி வருவாய். வரி வருவாயைப் பொறுத்தவரையில் 2017–2018 ஆம் ஆண்டில் வணிக வரியின்கீழ் 77 ஆயிரத்து 234 கோடி ரூபாய் வரி வருவாயாகப் பெறப்படும் என கணக்கிட்டுள்ளீர்கள். ஆனால், திருத்த மதிப்பீட்டில் 75 ஆயிரத்து 264 கோடி ரூபாய் என்றுள்ளது. 1,970 கோடி ரூபாய்

[திரு. எஸ். ரகுபதி] [2018 மார்ச் 19

குறைவாக வந்துள்ளது. இப்பொழுது 2018–2019–ல் 86 ஆயிரத்து 858 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். திருத்த மதிப்பீட்டில் என்ன வரும் என்று தெரியாது, நிச்சயமாகக் குறையும். ஆனால், இப்பொழுது குறைவதற்கு TASMAC வருமானத்தை ஒரு காரணமாகச் சொல்கிறீர்கள். இன்னொன்றைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்பொழுது தமிழ்நாட்டில் TASMAC கடைகள் குறைந்திருக்கின்றன. TASMAC bar எல்லா கடைகளிலும் உள்ளது. ஆனால், எந்த TASMAC bar–ஐயாவது ஏலம் விட்டிருக்கிறீர்களா? உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் 123 TASMAC கடைகள் இருக்கின்றன. அந்த 123 TASMAC கடைகளுக்கும் 123 TASMAC bar இருக்கின்றன. இதற்கு முன்பெல்லாம் ஒரு bar 2 இலட்சம் ரூபாய் வரையிலும் ஏலம் போகும். அதன் மூலமாக எங்கள் மாவட்டத்தில் மாதம் 25 கோடி ரூபாய், தமிழ்நாடு முழுவதும் 900 கோடி ரூபாயிலிருந்து 1,000 கோடி ரூபாய் வரும். ஏலம் மூலமாக, நேரடியாக அரசினுடைய கருவூலத்திற்கு வர வேண்டிய பணம் இன்றைக்கு எங்கே போகிறது? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3–05

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அமைச்சராக இருந்தவர், சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றார். அவர் ஏலமே விடவில்லையென்று ஒரு தவறான தகவலை சட்டமன்றத்திலே சொல்கின்றார். ஏனென்று சொன்னால் ஏலத் தொகை அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தினால் கிராமப்புறங்களில் உள்ள கடைகள் ஏலம் போகாமல் இருந்தன. மீண்டும் இரண்டாவது முறை அதை ஏலத்திற்கு விட்டோம். அப்போதும் போகவில்லை. அதற்குப் பின்னால், சிறிது தொகையைக் குறைத்தோம். குறைத்ததற்குப் பிறகு, கிட்டத்தட்ட 1,500 கடைகளுக்குமேல் ஏலம் போய் இருக்கின்றது. போகாத கடைகளுக்கு மீண்டும் ஏலத்தை நடத்துவோம். அதற்காக, அந்தப் பணம் எங்கே போனது என்று சொன்னால், நீங்கள்தான் புதுக்கோட்டையில் இருக்கிறீர்கள். பணம் எங்கே போனது என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும்.



2018 மார்ச் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ், ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் 123 கடைகள் இருக்கின்றன. எந்த TASMAC கடைகளிலும், bar ஏலம் விடுவதில்லை. எல்லாக் கடைகளிலும் bar நடந்து கொண்டிருக்கின்றன. இப்போதுகூட நீங்கள் காவல் துறையை அனுப்பிப் பார்வையிடலாம். கலால் துறை, மதுவிலக்குத் துறை அல்லது வருவாய் துறை ஆகிய துறைகளை அனுப்பி நீங்கள் பார்த்தீர்கள் என்றால், bar நடப்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் bar–ஐ நடத்திக் கொண்டிருக்கிறார்கள். Bar இல்லாமல் எந்த TASMAC கடையும் இயங்குவதில்லை. அப்படி இருக்கும்போது, bar நடத்த யார் அனுமதித்தார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செய்தித் தாள்களை எல்லாம் படிப்பார்களா, இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. எத்தனை TASMAC கடைகளில் காவல் துறை ரெய்டு செய்து, ஊழியர்களை கைது செய்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் படித்திருப்பீர்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில் எத்தனை கடைகளில் ரெய்டு செய்து, ஊழியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரம் என்னிடம் இருக்கின்றது. அனுமதியின்றி bar நடத்திக்கொண்டிருந்தால், அரசு எப்போதும் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது. எப்போதுமே illegal–ஆக bar நடத்த மாண்புமிகு அம்மாவின் அரசு தயாராக இல்லை. ஒளிவு மறைவு இல்லாமல் டெண்டர் விட்டுக்கொண்டிருக்கின்றோம். தொகை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், ஒரு சில கடைகள் ஏலம் போகாமல் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியில் அப்படி நடந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு) அதுதான் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** புதுக்கோட்டை மாவட்டத்தில் எந்தக் கடையும் ஏலம் விடப்படவில்லை. அறிவிப்பும் தரப்படவில்லை.

தந்தால், நீங்கள் சொல்லுங்கள். குறிப்பிட்ட விலையில் கடைகளை எடுத்துக்கொள்ள எங்கள் கட்சி ஆட்கள் தயாராக இருக்கிறார்கள். அதனால் நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் உண்மையை ஒத்துக்கொண்டார். அவருடைய தலைவர் எல்லாம் பூரண மதுவிலக்கு வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், இவர் கடைகளை எடுத்து நடத்துவோம் என்று சொன்னால், அவருக்கு பூரண மதுவிலக்கில் உடன்பாடு இல்லை என்பதை அவரே தெரிவித்துவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் TASMAC கடைகளை மூட வேண்டும் என்றுதான் சொல்கிறேன். அதில் மாறுபட்ட கருத்துகள் எதுவும் கிடையாது. Bar நடத்தி யாரோ ஒருவர் சம்பாதிக்கிறார். ஏலத்தில் கலந்துகொள்ள விடாமல் ஒருதலைபட்சமாக முன்பு நடந்துகொண்டீர்கள். இப்போது அதையும் கொடுக்காமல் தானாக கடையை அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு வர வேண்டிய தொகை வராமல் போய்க் கொண்டிருக்கிறது என்பதனால்தான் சொல்கிறேன். மாதம் 25 கோடி ரூபாய், வருடத்திற்கு 200 கோடி ரூபாய், மொத்தமாக தமிழ்நாடு முழுவதும் 900 கோடி ரூபாய் உங்கள் துறைக்கு வராமல் நட்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், நீங்கள், 25 கோடி ரூபாய் உங்கள் மாவட்டத்திலிருந்து மட்டும் வருகிறது என்று சொல்கிறீர்களா? (குறுக்கீடு) உங்கள் மாவட்டத்தில் மட்டுமா? மொத்தமே TASMAC கடைகளை டெண்டர் விட்டால் 436 கோடி ரூபாய்தான் தமிழக அரசிற்கு வருமானம். 6,000 கடைகளிலுமே bar





இருக்கின்றபோது, இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாதம் 25 கோடி ரூபாய், 900 கோடி ரூபாய் என்று ஏதோ அவர் ஒரு கணக்கை சொல்லிக் கொண்டிருக்கின்றார். தவறாகச் சொல்கிறீர்கள். அதை நீங்கள் திருத்திக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ், ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** அதிலே ஒருதலைபட்சமாக இல்லாமல், பகிரங்கமாக ஏலம் விட்டால் நிச்சயமாக இலாபம் கிடைக்கும். அதில் தவறு எதுவும் கிடையாது. யாரும் எடுக்க வரவில்லை என்று சொன்னால், எங்கள் கட்சிக்காரர்கள் எடுத்துக்கொள்ளத் தயாராக இருப்பார்கள் என்பதற்காகச் சொல்கிறோம். மதுவிலக்கைப் பொறுத்தவரையில் இரண்டு விதமான கருத்துகள் கிடையாது. எங்கள் கட்சிக்கு ஒரே கருத்துதான். பூரண மதுவிலக்கு வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையே தவிர, வேறு எதுவும் கிடையாது. நாங்கள் டாஸ்மாக் கடைகள் வேண்டாமென்று சொல்கிறோம். டாஸ்மாக் பக்கத்தில் bar–ஐ நடத்தும்போது, அதை ஒரு தொழிலாகத்தான் நாங்கள் பார்க்கிறோம். டாஸ்மாக்கிற்கு வருகின்றவர்கள் பொருட்களை வாங்கிச் சாப்பிடுகின்றபோது, அவர்களுக்கு வேண்டிய பொருட்களைக் கொடுக்கின்ற இடம்தான் bar. எனவே, அந்தத் தொழில் அவனுக்குக் கிடைக்கும் என்கின்ற காரணத்தினால்தான் சொல்கின்றோமே தவிர, நாங்கள் ஒன்றும் டாஸ்மாக்கிற்கு support செய்து இங்கே பேசவில்லை. ஆனால், நீங்கள்தான் அரசாங்கத்தினுடைய பணத்தை, உங்கள் கட்சிக்காரர்களுக்காக ஏலம் விடாமல் வைத்திருக்கிறீர்கள் என்று நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள், சென்ற பட்ஜெட் உரைக்கும்,இந்த பட்ஜெட் உரைக்கும் 3 முரண்பாடுகள் இருப்பதாகப் பதிவு செய்திருக்கிறார். அது எதுவுமே முரண்பாடு கிடையாது. (குறுக்கீடுகள்) முதலில் அவர்கள் சொன்னது. . . (குறுக்கீடுகள்) எந்த அமைச்சரும் பதில் சொல்லலாம். (குறுக்கீடுகள்) முதலில் சொன்னது Rural Transformation Project. சென்ற பட்ஜெட் உரையில், 2017–2018–க்குள் உலக வங்கி உதவியுடன் இந்த ஊரக மறுமலர்ச்சி திட்டம், Rural Transformation Project ஆயிரம் கோடி ரூபாயில்

[திரு. க. பாண்டியராஜன்] [2018 மார்ச் 19

செயல்படுத்தப்படும் என்று குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். ஆனால், இந்த முறை என்ன அறிவித்திருக்கிறார்கள் என்றால், 100 மில்லியன் டாலர்—திரு. அன்பழகன் அவர்களும் இதே கேள்வியைக் கேட்டார். 100 மில்லியன் டாலர்—உலக வங்கியின் உதவியாக இன்று கிடைத்திருக்கிறது. 6,450 கோடி ரூபாயில் நாம் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தப் போகின்றோம். அதில் 920 கோடி ரூபாய் இந்த வருடம் வரப் போகின்றது. (குறுக்கீடு)

பிற்பகல் 3–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, பேசுங்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017–2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 2016–2017 ஆம் ஆண்டு வரை 2 இலட்சத்து 72,000 இலவச வீட்டுமனைப் பட்டாக்களை அரசு வழங்கியுள்ளதாகவும், 2017–2018 ஆம் ஆண்டில் 3.50 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குமென்றும் சொல்லியுள்ளீர்கள். ஆனால், 2018–2019 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் 2017–2018 ஆம் ஆண்டு வரையில் 3.80 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். அப்படியென்றால், 2017–2018 ஆம் ஆண்டில் வழங்கியது ஒரு இலட்சத்து 8 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள்தான் என்பதை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் சொன்னதில் மூன்றில் ஒரு பங்குதான் வழங்கியிருக்கிறீர்கள். 3 இலட்சத்து 80 ஆயிரம் என்று சொல்லிவிட்டு ஒரு இலட்சத்து 8 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள்தான் வழங்கியுள்ளீர்கள். இந்த இலக்கைக்கூட உங்களால் தொட முடியவில்லை. மூன்றில் ஒரு பங்கைத்தான் நீங்கள் தொட்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டுமென்று தேடித்தேடி அலைந்து, அதைப் படித்து, அதை முழுமையாகப் புரிந்துகொள்ளாமல் பேசுகிறார்கள். இன்றைக்கு இந்தியாவிலேயே பட்டா கொடுப்பதற்கு இலக்கை நிர்ணயித்திருக்கிற ஒரே அரசு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி)



2018 மார்ச் 19] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

இலக்கு நிர்ணயித்தோம்; முதலிலே, 2011 ஆம் ஆண்டிலே ஒரு இலட்சம். அதற்குப் பிறகு படிப்படியாக மூன்றரை இலட்சம். மொத்தமாக 14 இலட்சம் இலக்கை நிர்ணயித்து, 16½ இலட்சம் பட்டாக்களை வழங்கி இருக்கிற ஒரே அரசு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்டவாரியாக, எத்தனை பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற புள்ளிவிவரத்தை இதே அவையிலே நாம் விவாதம் செய்திருக்கிறோம். ஆகவே, குற்றச்சாட்டைத் தேட வேண்டுமென்ற அடிப்படையிலேதான் அந்தப் புள்ளிவிவரங்களை அவர் சொல்லியிருக்கிறாரே தவிர, இலக்கை விஞ்சி ஏழையெளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியிருக்கிற ஒரே அரசு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு. 14 இலட்சம் இலக்கு, ஆனால், 16½ இலட்சம் கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அந்த இலக்கை நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு, நாங்கள் நன்றாகப் புரிந்து கொண்டுதான் பேசுகிறோம். புரியாமல் எதையும் பேசவில்லை. மீண்டும் ஒருமுறை நான் படிக்கிறேன். அதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் செவிகொடுத்துக் கேட்கட்டும். 2017–2018 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், 2016–2017 ஆம் ஆண்டு வரை 2.72 இலட்சம், அதாவது இரண்டு இலட்சத்து 72 ஆயிரம் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை அரசு வழங்கியுள்ளது என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். 2017–2018 ஆம் ஆண்டில் 3 இலட்சத்து 50 ஆயிரம் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவும் நீங்கள் சொல்லியுள்ளது. 2018–2019 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் நீங்கள் சொல்லியுள்ளது, 2017–2018 ஆம் ஆண்டு வரையில் 3.80 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியுள்ளோம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள் என்று சொன்னால் நீங்கள் உங்கள் இலக்கை அடையவில்லையென்கிற என்னுடைய

[திரு. எஸ். ரகுபதி] [2018 மார்ச் 19

குற்றச்சாட்டு எந்தவகையிலே தவறாகும்? உங்களால்தான் மூன்றிலே ஒரு பங்கு இலக்கைக்கூட அடைய முடியவில்லையே தவிர, நாங்கள் கூறியிருக்கிற குற்றச்சாட்டு நியாயமான ஒன்றாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விளக்கம் கேட்டதனாலே நான் அதைச் சொல்ல விரும்புகிறேன். 2011–2012–ல் ஒரு இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதுவரை நாங்கள் 3 திட்டங்கள் வழியாகத்தான் பட்டா கொடுக்கிறோம். வளமையான திட்டம், அதாவது Regular Scheme என்று சொல்லக்கூடியது. அதிலே, ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 416, வரன்முறைப்படுத்துதல் Regularisation Scheme; அதிலே, 7,388. பிறகு, நத்தம் நகர்ப்புற நிலவரித் திட்டம், அந்த ஆண்டு எதுவும் கொடுக்கவில்லை. ஆகவே, 2011–ல் இலக்கு ஒரு இலட்சம். அடைந்தது ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 804 பட்டாக்கள். அதேபோல, 2012–2013 ஆம் ஆண்டிலே இலக்கு ஒரு இலட்சம். அடைந்தது ஒரு இலட்சத்து 31 ஆயிரம்; இந்த மூன்று திட்டத்தையும் சேர்த்து. அதேபோல, 2013–2014 ஆம் ஆண்டிலே இலக்கு 2 இலட்சம். இலக்கை விஞ்சி 2 இலட்சத்து 17 ஆயிரத்து 723. 2014–2015 ஆம் ஆண்டிலே இலக்கு 3 இலட்சம். இலக்கை விஞ்சி 3 இலட்சத்து 81 ஆயிரத்து 708. அதேபோல, 2015–2016 ஆம் ஆண்டிலே இலக்கு 3½ இலட்சம். அடைந்தது 4 இலட்சத்து 5 ஆயிரத்து 111. அதேபோல, 2016–2017 ஆம் ஆண்டில் 3 இலட்சம் இலக்கு. அடைந்தது 3 இலட்சத்து 54 ஆயிரத்து 745. ஆக, 14 இலட்சம் என்ற இலக்கை விஞ்சி 16,12,391 இலவச வீட்டுமனைப் பட்டாக்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வரன்முறைப்படுத்துவதில், நத்தம் நகர்ப்புற நில வரித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பட்டாக்கள் இல்லாமல், regular scheme–ன்கீழ் வழங்கப்படும் பட்டாக்களின் விவரங்களை மட்டும் எடுத்துக்கொண்டு அவர்கள் சொல்கிறார்கள். இந்த மூன்று திட்டங்களையும் சேர்த்துத்தான் பட்டாக்கள் வழங்கியதற்கான புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு புள்ளிவிவரங்களை நாங்கள் தருகிறோம். ஆகவே, இந்தியாவிலேயே, முதன்முதலாக ஒவ்வோராண்டும் இலக்கை நிர்ணயித்து, இலக்கை விஞ்சி ஏழையெளிய மக்களுக்கு பட்டா வழங்கிய ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை புள்ளிவிவரத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



2018 மார்ச் 19] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

பிற்பகல் 3–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘வீட்டுமனை’ என்கிற தலைப்பில் நீங்கள் கொடுத்ததைத்தான் நான் படித்திருக்கிறேனேதவிர, வேறொன்றுமில்லை. கடந்த ஆண்டு, அதற்கு முந்தைய ஆண்டு, இந்த ஆண்டு என மூன்றாண்டுகளில் நீங்கள் என்ன சொல்லியிருக்கிறீர்களோ அதைத்தான் நான் சொல்கிறேன். நான் எந்த figures–ஐயும் புதிதாகக் கொண்டுவர முடியாது. நீங்கள் வேண்டுமானால், அந்தத் திட்டம், இந்தத் திட்டம் என்று சேர்த்துச் சொல்ல முடியும். நான் எந்தத் திட்டத்தையும் சேர்த்துச் சொல்ல முடியாது. நீங்கள் சொல்லியிருப்பது இதுதான். இலக்கை அடையவில்லை என்பது எங்களுடைய குற்றச்சாட்டு. அதை நான் ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறேன். நீங்கள் வேறு ஏதாவது scheme–ஐ கொண்டுபோய் சேர்த்துக்கொண்டால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த வருடம்கூட, 2018–2019 ஆம் ஆண்டில் 3 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை அரசு இலவசமாக வழங்கும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த இலக்கையாவது, முடிந்தால் நீங்கள் அடைய வேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பம். அது ஏழைகளுக்கு உதவுவதாக அமையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களாகவே எதையும் சேர்த்துக்கொள்வதில்லை. வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்து ஏற்கெனவே நாம் இந்த மாமன்றத்தில் விவாதங்களை எடுத்து வைத்திருக்கிறோம். முதலாவதாக, ஆக்கிரமிப்பாளர்கள் வைத்திருக்கிற, அதாவது ஏற்கெனவே ஓர் இடத்தைத் தேர்வு செய்து மக்கள் அவர்களாகவே வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்பவர்களுக்கு பட்டாக்கள் அளிப்பதை regularisation scheme என்று சொல்கிறோம். இரண்டாவதாக, அரசாக இடத்தைத்

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2018 மார்ச் 19

தேர்வு செய்து, அந்த இடத்தில் மக்களுக்கு வழங்குகிற பட்டா, வீட்டுமனைப் பட்டா. மூன்றாவதாக, நகர்ப்புற நில வரித் திட்டத்தின்கீழ், settlement என்று சொல்லக்கூடிய பட்டா வழங்கப்படுகிறது. இந்த மூன்று வழிமுறைகளில்தான் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. இதைத்தான் நாங்கள் சொல்லியிருக்கிறோம். நாங்களாகவே எதையும் சொல்லவில்லை. மேலும், இந்த regularisation scheme–ல்கூட, one time special scheme முடிந்த பிறகு, RSO என்று சொல்லப்படும் Revenue Standing Order, 21(6)–ல், இன்றைக்கு regularisation செய்துகொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, இது நாங்களாகவே சொல்லிக்கொள்கிற புள்ளிவிவரங்கள் அல்ல. ஏற்கெனவே மாவட்ட வாரியாக புள்ளிவிவரங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் மீண்டும் சொல்கிறேன், குறிப்பிட்ட இலக்கையும் விஞ்சி ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரத்தில் ஒளியேற்றுகிற வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் பட்டாக்களை வழங்கியிருக்கிறது. அதுமட்டுமல்ல, நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. கடந்த காலங்களில் பட்டா என்பது வெறும் பேப்பரில்தான் இருந்தது. தற்போதுதான் layout ஆக அமைக்கப்பட்டு, குறிப்பாக இடத்தை அடையாளம் காட்டித்தான் பட்டா வழங்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது, நான் அவையில் இல்லை. புதுவாழ்வு திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொடர் முயற்சியின் விளைவாக, உலக வங்கி கடனுதவியுடன் சுமார் 918 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம், புதுவாழ்வு II விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது. உலக வங்கியும், தமிழக அரசும் 70:30 என்ற விகிதத்தில் நிதி வழங்கும். உலக வங்கி கடனுதவி 100 மில்லியன் அமெரிக்க டாலர்கள், இந்திய மதிப்பின்படி, சுமார் 640 கோடி ரூபாய். தமிழக அரசின் நிதியுதவி 42.85 மில்லியன் அமெரிக்க டாலர்கள், இந்திய மதிப்பில் சுமார் 278 கோடி ரூபாய்,



2018 மார்ச் 19] [திரு. எஸ்.பி. வேலுமணி]

மொத்தம் 142.85 மில்லியன் அமெரிக்க டாலர்கள், இந்திய மதிப்பில் சுமார் 918 கோடி ரூபாய். மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள், சென்ற முறை பேசியபோதுகூட, அமெரிக்க டாலரில் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று கூறினார்கள். மதிப்பு வேறுபடும் என்ற காரணத்தால் அமெரிக்க டாலரில் சொல்லப்பட்டிருக்கிறது.

அதேபோன்று, ஊரகத் தொழில்களை மேம்படுத்தி, நிதி சேவை மற்றும் வேலைவாய்ப்புகளுக்கு வழிவகுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாட்டில் 26 மாவட்டங்களில், அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், தருமபுரி மற்றும் கன்னியாகுமரி நீங்கலாக 120 வட்டாரங்களில், 3,994 கிராம ஊராட்சிகளில் சுமார் 750 பணியாளர்களைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும். மத்திய அரசின் அனுமதியும், உலக வங்கியின் அனுமதியும் கிடைப்பதற்குத் தாமதமான காரணத்தினால்தான் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் கொஞ்சம் இடைவெளி ஏற்பட்டுவிட்டது. தற்போது, இதற்கான ஒப்பந்தம் பிப்ரவரி 2018–ல் பெறப்பட்டுள்ளது. ஆரம்பகட்ட ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை விரைவில் துவங்க உத்தரவிட்டிருக்கிறார்கள். இத்திட்டம் விரைவில் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** நான் என்ன சொன்னேன் என்றால், கடந்த ஆண்டு 1,000 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள், இந்த ஆண்டு 920 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படியென்றால், இத்திட்டம் கடந்த ஆண்டு செயல்படுத்தப்படவில்லையா என்று கேட்டேனேதவிர, வேறொன்றுமில்லை.

பிற்பகல் 3–20

கடந்த ஆண்டு ஆயிரம் கோடி ரூபாய் என்று புதுவாழ்வுத் திட்டத்திற்கு சொல்லியிருக்கிறீர்கள். இந்த ஆண்டு ரூ.920 கோடி என்று சொல்லியிருக்கிறீர்கள்; அதைத்தான் சொல்கிறேன். அடுத்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கடந்த 2017–2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பக்கம் 17–ல், 2018–2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பக்கம் 16, இது இரண்டிலேயும் தெளிவாக. . . (குறுக்கீடு)

[2018 மார்ச் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2017–ல் 3½ இலட்சம் இலக்கு. அதைத்தான் அவர் சொல்லியிருக்கிறார். ஆனால், நாம் அடைந்தது 2.72 இலட்சம் என்று புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது பட்ஜெட் தாக்கல் செய்கிறபோது இருக்கக்கூடிய accurate figure. அந்த முழு ஆண்டையும் எடுக்கிறபோது, 2016–2017–ல் 3½ இலட்சத்திற்கு, 3 இலட்சத்து 54 ஆயிரத்து 745 என முழுமையாக அடையப்பட்டிருக்கிறது. அதேபோல, 2017–2018–லேயும் 3 இலட்சம் இலக்காக வைத்து, 3 இலட்சத்து 80 ஆயிரம் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. கடந்த காலங்களில் எல்லாம் வெறும் பேப்பர் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருந்தேன். பொதுவாக பட்டா கொடுப்பதை A–பதிவேட்டிலே பதிவதே இல்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வந்ததற்குப் பிறகுதான் வீட்டுமனைப் பட்டாக்களைக் கொடுத்து, அது A–பதிவேட்டிலே பதிவு செய்யப்பட்டது. எத்தனை ஆண்டுகள் ஆனாலும், இந்தத் தாய் மண்ணிலே, இந்தத் தமிழ் மண்ணிலே சொந்தமாக எனக்கு இடமில்லை என்று ஏங்குபவர்களுக்கு எனக்கும் இந்தத் தமிழ் மண்ணிலே சொந்தமாக இடம் இருக்கிறது என்ற நிலையை உருவாக்கிக் கொடுத்த தலைவி புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த arithmetic–ஐ வைத்துக்கொண்டு குழம்பிக் கொண்டிருக்கிறார். இதுதான் உண்மையான கணக்கு. ஆகவே, பட்ஜெட் தாக்கல் வரை இருக்கிற 2.72 இலட்சம் என்ற புள்ளிவிவரத்தை வைத்துக்கொண்டு அவர் ஏதோ இலக்கை அடையவில்லை என்கிற ஒரு தோற்றத்தை ஏற்படுத்த முயல்கிறார். இதுதான் உண்மையான புள்ளிவிவரம். ஏற்கெனவே அமைச்சராக இருந்தவர். அவருக்கு நன்றாகத் தெரியும். அதுவும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசிலே அவர் அமைச்சராக இருந்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு நன்றாகத் தெரியும். இப்போது ஏதோ இருக்கிற இடத்தை திருப்திபடுத்துவதற்காக ஏதோ குற்றச்சாட்டைச் சொல்வதற்கு தேடி அலைகிறார். கண்டிப்பாக அவருடைய கண்ணிற்குக் கிடைக்காது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2018 மார்ச் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமங்களிலே வறுமையை ஒழிக்க வேண்டுமென்பதற்காக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினார்கள். 10 புதுவாழ்வுத் திட்டங்களிலே பல மாவட்டங்கள் cover ஆகிவிட்டன. மீதம் உள்ளதை புது வாழ்வுத் திட்டம் 2–ல் எடுத்திருக்கிறோம். இதிலே வருடா வருடம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிதி ஒதுக்கியிருக்கிறது. அதேபோல, உலக வங்கியிலே அனுமதி பெறுவதற்குத்தான் தாமதமாகிவிட்டது. வருடா வருடம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு வறுமையை ஒழிக்க வேண்டுமென்பதற்காகத்தான் நிதி ஒதுக்கி வருகிறோம். ஆகவே, கடந்த முறையும் தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கியிருக்கிறது. இந்த முறையும் நிதி ஒதுக்கி இருக்கிறது. உலக வங்கியிலே சில queries கேட்கிறார்கள், அதற்கு நாம் பதில் அளிக்கிறோம். அதேபோல மத்திய அரசினுடைய அனுமதியும் தேவைப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேருந்துக் கட்டண உயர்வைப் பற்றி பேசும்போது நான் அவையிலே இல்லை. பேருந்துக் கட்டண உயர்விற்குக் காரணம் என்ன என்பது பல்வேறு கட்டங்களிலே இதே அவையிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

2011–க்குப் பிறகு சுமார் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, டீசல் விலை உயர்வு மற்றும் ஊழியர்களுடைய சம்பள உயர்வின் காரணமாக பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பல்வேறு கட்டங்களிலே விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

டீசல் விலை உயர்வு 52 சதவிகிதமும், சம்பள உயர்வு 90 சதவிகிதமுமாக ஆனது. (குறுக்கீடு) ஆமாம். உயர்த்தினீர்கள் என்று கேட்டால், அதற்குப் பதில் சொல்ல வேண்டும் இல்லையா? 1997–ல்

[திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்] [2018 மார்ச் 19

8–9–1997–ல் 58 சதவிகித அளவில் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தியது தி.மு.க. அரசு. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பதில் சொல்லி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** பேருந்துக் கட்டண உயர்வுக்குக் காரணம் என்ன என்று கேட்கும்போது, அதற்குண்டான காரணத்தைச் சொல்லியாக வேண்டும். (குறுக்கீடு)

**திரு. மு.க. ஸ்டாலின்:** அவர் காரணத்தைக் கேட்கவே இல்லை. அவர், ஏற்கெனவே எல்லாவற்றையும் உயர்த்திவிட்டு, வரி இல்லாத பட்ஜெட் என்று சொல்லியிருக்கிறீர்கள் என்றுதான் சொல்கிறாரே தவிர, ஏன் பேருந்துக் கட்டணத்தை ஏற்றினீர்கள், என்ன காரணம் என்பதைக் கேட்கவே இல்லை. ஆக, அமைச்சர் அவர்கள் அவையில் இல்லாத காரணத்தினால் தெரிந்துகொள்ள முடியவில்லை; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரியாமல் சொல்கிறார். அதனால் நேரம்தான் வீணடிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்ன விதம் குற்றச்சாட்டு சொல்வதுபோல் இருக்கிறது. (குறுக்கீடு) அதாவது குற்றச்சாட்டு சொல்வதுபோல் சொன்னார். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார். என்ன காரணத்திற்காகப் பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்டது என்பதற்கு விளக்கத்தை அவர் சொல்கிறார். நீங்கள் கேட்கிற கேள்விக்கு அவர் விளக்கம் சொல்கிறார், அவ்வளவுதான்.

பிற்பகல் 3–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துக் கட்டண உயர்வு என்பது தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயும் இருந்திருக்கிறது. 1997–ல் 58 சதவிகித பேருந்துக் கட்டண உயர்வு இருந்திருக்கிறது. புள்ளிவிவரம்



2018 மார்ச் 19] [திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்]

இருக்கிறது. (குறுக்கீடுகள்) பேருந்துக் கட்டண உயர்வு இல்லாமல் எந்த மாநில அரசும் பேருந்துகளை இயக்க முடியாது என்பது அனைவருக்குமே தெரிந்த ஒன்றுதான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** அதைப்போல, 13–வது ஊதிய ஒப்பந்தத்தில் ஏற்பட்ட ஊதிய ஒப்பந்தப்படி ஆண்டுக்கு 1,000 கோடி ரூபாய் அளவுக்கு ஊதிய உயர்வை வழங்கிய அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, போக்குவரத்துத் துறையினுடைய வரலாற்றிலேயே இந்த அளவு ஊதிய உயர்வை எப்போதுமே வழங்கியதில்லை. அந்த அளவிற்கு ஊதிய உயர்வை வழங்கியிருப்பவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள். அதேபோல, ஓய்வு பெற்றவர்களுடைய நிலுவைத் தொகை 1,500 கோடி ரூபாய் இருந்தது. அதைக் கேட்டபோதெல்லாம் கொடுத்து, சென்ற ஆண்டு நவம்பர் மாதம் இறுதி வரை நிலுவையில்லாமல் சுமார் 60,000 ஓய்வு பெற்ற தொழிலாளர்களுடைய நிலுவைத் தொகையை முழுவதுமாக வழங்கிய அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு; (மேசையைத் தட்டும் ஒலி) அதை வழங்கியவர் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஊதிய உயர்வு, டீசல் விலை உயர்வு, உதிரிப் பாகங்களுடைய விலை உயர்வு போன்றவற்றின் காரணமாகத்தான் தமிழகத்தில் பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. கர்நாடகாவில் 2000 ஆம் ஆண்டிற்குப் பிறகு 16 முறை பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆந்திராவில் 8 முறையும், கேரளாவில் 8 முறையும் உயர்த்தப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு 58 பைசா புறநகர் பேருந்துக் கட்டணத்திற்கு என நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது ஆனால், கம்யூனிஸ்டு கட்சி ஆளுகின்ற கேரளாவில் ஒரு கிலோ மீட்டருக்கு 70 பைசா என்ற அளவில் இருக்கிறது. இப்போதும், இந்தியாவிலேயே குறைவான பேருந்துக் கட்டணம் இருக்கக்கூடிய அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்கிறேன். (குறுக்கீடு) உலகத்திலேயேவா? நீங்கள் சொல்லிக்கொள்ளுங்கள் உலகத்திலே என்று; நாங்கள்

[திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்] [2018 மார்ச் 19

சொல்கிறோம் இந்தியாவிலே என்று. (குறுக்கீடு) உலகத்திலே என்று சொல்கிறார், அதற்காகச் சொல்கின்றேன். இன்றுவரை, குறைந்த கட்டணத்தில் நிறைவான சேவையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, சொல்லுங்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை சுமத்தினார். நான் இருக்கும் இடத்தை திருப்திப்படுத்துவதற்காக குற்றச்சாட்டுகளைத் தேடி அலைகிறேன் என்று. நிச்சயமாக எங்களுடைய தலைமையை நாங்கள் திருப்திப்படுத்த வேண்டிய தேவையே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைச் சுதந்திரமாக செயல்பட விடுகிற தலைமைதான் எங்களுடைய தலைமை. எனவே, அவர்களை திருப்திப்படுத்துவதற்காக நாங்கள் எதையும் சொல்லவில்லை. ஆதாரத்தோடு இங்கே சொல்கிறேனே தவிர, வேறொன்றுமில்லை.

அடுத்த கட்டத்திற்கு வருகிறேன். இலவச வீடுகள். 2017–2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ.3,502.39 கோடியில் 1.96 இலட்சம், அதாவது ஒரு இலட்சத்து 96 ஆயிரம் வீடுகள் கட்ட இந்த அரசு அனுமதி வழங்கியுள்ளது என்று வீட்டு வசதித் துறையில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், 2018–2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 2017–2018–ல் இந்த அரசு 1.30 இலட்சம் வீடுகள் கட்ட அனுமதி வழங்கியுள்ளது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, இது நீங்கள் சொன்னதுதான். 1.96 இலட்சம் வீடுகள்; ஆனால், அனுமதி வழங்கியது 1.30 இலட்சம் வீடுகள் என்று சொன்னால் 66,000 பயனாளிகள் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர் அல்லது இந்த அரசு ஏமாற்றியுள்ளது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தற்போது, இந்த ஆண்டில் பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய



2018 மார்ச் 19] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கருத்து தவறானது. ஒவ்வோராண்டும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, வீடுகள் கட்டுவதற்கு ஆணை வழங்கப்படுகிறது. அதன்படி வீடுகள் கட்டிக்கொண்டே இருக்கின்றோம். இந்த வருடம் அதனுடைய இலக்கை நாங்கள் சொல்லியிருக்கின்றோம். உறுதியாக, சென்ற ஆண்டு சொன்ன இலக்கின்படியும், இந்த ஆண்டு சொன்ன இலக்கின்படியும் ஏழையெளிய மக்களுக்கு, உறுதியான, தரமான வீடுகள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** இலக்கை நிர்ணயித்துவிட்டு, அந்த இலக்கை நீங்கள் அடையவில்லை. அதாவது, இலக்கை நிர்ணயித்து, அதைவிடக் கூடுதலாக achieve செய்யலாம் அல்லது குறைவாக இருப்பதற்குக் காரணங்களைச் சொல்லலாம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் ஏற்கெனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் வீட்டு வசதித் துறை அமைச்சராக இருந்திருக்கிறார்கள். அவருக்குத் தெரியும்; வீடு கட்ட வேண்டுமென்றால் அதனுடைய process, long process; போய்க் கொண்டேயிருக்கும். நான் உறுதியாகச் சொல்கிறேன், சென்ற ஆண்டு சொன்ன இலக்கின்படியும், இந்த ஆண்டு சொன்ன இலக்கின்படியும், அடுத்த ஆண்டு சொல்லப் போகின்ற இலக்கின்படியும் உறுதியான, தரமான வீடுகள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) புள்ளிவிவரங்களை நான் என்னுடைய பதிலுரையில் விவரமாகத் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** 2017–2018 ஆம் நிதியாண்டில் 3,707 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஏற்கெனவே கட்டப்பட்டு வரும் 22,178 குடியிருப்புப் பணிகளை முடிப்பதுடன், கூடுதலாக 808 கோடி ரூபாய் செலவில் 3,300 வீடுகள் என ஆக மொத்தம் 25,478 வீடுகளுக்கான பணிகள் நடைபெற்று

[திரு. எஸ். ரகுபதி] [2018 மார்ச் 19

வருவதாக 2017–2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சொல்லியுள்ளீர்கள்.

பிற்பகல் 3–30

2018–2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், 2017–2018 ஆம் ஆண்டில் 1,278.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4,746 வீடுகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ளீர்கள். வித்தியாசம் மிகப் பெரியதாக உள்ளதா, இல்லையா? இதில் எது உண்மை? இது முன்னேற்றமா, வீழ்ச்சியா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களில் வாழ்கின்ற வீடற்ற ஏழையெளிய மக்கள் விவரம் கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு 13.5 இலட்சம் வீடுகள் வழங்கப்பட இருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 'தொலைநோக்குத் திட்டம், 2023'–ன்படி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இந்த 13.5 இலட்சம் நபர்களுக்கும் 2023 ஆம் ஆண்டுக்குள் வீடுகள் கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள். அந்தத் திட்டத்தின் தொடர் நடவடிக்கையாக தற்போது ஒவ்வோராண்டும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ஏழையெளிய மக்களுக்கு வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, எங்களுடைய இலக்கை நாங்கள் உறுதியாக அடைவோம். திட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து இப்போதுவரை எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டுள்ளன, எவ்வளவு இலட்சம், கோடி செலவிடப்பட்டுள்ளது என்ற விவரங்களை என்னுடைய பதிலுரையில் நான் விளக்கமாகச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் என்பது தனி. அவ்வாரியத்தின் நிதிநிலைக்கேற்ப ஒவ்வோராண்டும் இலக்கு நிர்ணயித்து, அதன்படி வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.



2018 மார்ச் 19]

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியஆம்
சொல்லிய வண்ணம் செயல்'

என்று வள்ளுவர் அவர்கள் சொல்லியிருக்கிறார். சொல்வது எளிது, ஆனால் அதைச் செய்து முடிப்பது கடினம். இந்த அரசு சொல்வது அதிகம், ஆனால் அதைச் செய்து முடிப்பது கடினமான செயலாக இருக்கிறது என்று சொல்லி, என்னுடைய தொகுதியினுடைய கோரிக்கைகளை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும் சொல்லியபடியே செய்து முடிப்போம் என்பதை நான் இங்கே உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்கெனவே, சென்னை மாநகருக்கு குடிநீர்த் திட்டம் கொண்டு வருவதற்காக கடந்த தி.மு.க. அரசால் ஏற்கெனவே போடப்பட்ட வீராணம் திட்டம் முடிவடையாமல் போனது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் புதிய வீராணம் திட்டத்தினைத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமன்றத்தில்கூட புதிய வீராணம் திட்டம் நிறைவேறாது என்று எதிர்க்கட்சியினர் வாக்கு தந்தார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், புதிய வீராணம் திட்டத்தை நான் நிறைவேற்றி சென்னை மாநகருக்கு குடிநீர் தருவேன் என்று உறுதியாகச் சொன்னதன் அடிப்படையில், 24 மாதங்களுக்குள் முடிக்க வேண்டிய அந்தத் திட்டத்தை பதினெட்டே மாதங்களில் முடித்து மாண்புமிகு அம்மா அவர்கள் சாதனை படைத்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. உறுப்பினர் திரு. ரகுபதி அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்ட கருத்துகளுக்கு, அவர் பேசி முடித்தபிறகு

[திரு. ஓ.எஸ். மணியன்] [2018 மார்ச் 19

எனது கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று காத்திருந்தேன். கிட்டத்தட்ட அவர் உரையாற்றி முடித்துவிட்டார். (குறுக்கீடுகள்) அதாவது, அவர் இங்கே பேசுகிறபோது, 'புதிய வரிகள் எதுவும் இல்லையென்று இந்த பட்ஜெட்டிலே கூறியிருப்பது தவறானது; புதிய வரிகளை நீங்கள் உள்ளே புகுத்தியிருக்கிறீர்கள்' என்று பேசினார். அதாவது, இந்த பட்ஜெட் புதிய வரிகள் எதுவும் இல்லாத பட்ஜெட் என்பதை நான் இங்கேயும் சொல்வேன், எங்கேயும் சொல்வேன், இப்பொழுதும் சொல்வேன், எப்பொழுதும் சொல்வேன், இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரை அதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, 'பேருந்துக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறீர்கள்' என்று அவர் சொன்னார். ஒரு பொருளுக்கு விலையை உயர்த்துவது என்பது வேறு, ஒரு பொருளுக்கு வரி போடுவது என்பது வேறு. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அமைச்சராக இருந்திருக்கிற ஒருவர், இந்த வேறுபாடு தெரியாமல் பேசுவது தவறு. அதாவது, பேருந்துக் கட்டணம் என்பது உயர்த்துகிற மதிப்பு. ஆனால், வரி என்பது அந்தப் பணத்திற்கு, கட்டணத்தினுடைய தொகைக்கு வருகின்ற சதவிகிதம்தான். ஆக, மதிப்பு கூடுவது என்பது வேறு. (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள், அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மதிப்பு கூடுவது என்பது வேறு, வரி விதிப்பது என்பது வேறு. ஆக, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் தலைமையில், மாண்புமிகு அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்கள் தந்திருக்கிற இந்த பட்ஜெட்டிலே வரிகள் என்கிற பேச்சுக்கே இடமில்லை. இது வரியில்லாத பட்ஜெட் என்பதுதான் உண்மை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 3–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரியில்லாத பட்ஜெட் என்று சொல்வதே தவறு. புதிய வரியில்லாத பட்ஜெட் என்றுதான் அவர்கள் சொல்லலாமே தவிர, வரியில்லாத பட்ஜெட்டா இது? வரி இருக்கிறது. அதைத்தான் நான் சொல்கிறேன். புதிய வரி விதிக்கப்படவில்லை. அவ்வளவுதான்.



2018 மார்ச் 19] [திரு. எஸ். ரகுபதி]

புதிய வரிகள் இல்லாத பட்ஜெட் என்று சொல்லுங்கள். வரி இல்லாத பட்ஜெட் என்று எதற்குச் சொல்கிறீர்கள்? அதைத்தான் நான் இங்கு கோடிட்டுக் காண்பித்தேனே தவிர வேறில்லை. ஏற்கெனவே வரி இருப்பது இருக்கத்தானே செய்கிறது. வரியே வாங்காமல் இருக்கப் போகிறோமா? வரி வாங்குகிறோம்.

என்னுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கையை உங்களிடத்திலே தந்துவிடுகிறேன். அதை சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள். தொகுதி குறித்த கோரிக்கைகளைப் பதிவு செய்துகொள்கிறேன்.

**திரு. எஸ். ரகுபதி:** அடுத்ததாக, இலவச வீட்டுமனைப் பட்டாக்களை தருகிற திட்டத்தைத் தந்ததே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் தந்த திட்டம்தான். அதற்குப் பிறகு தொடர்ந்து மற்றவர்கள் நடத்திக் கொண்டு வருகிறார்கள். எனவே, மக்களுக்குப் பயன்படுகிற திட்டங்கள் எதுவாக இருந்தாலும் அதிலே அங்கம் வகிப்பது திராவிட முன்னேற்றக் கழகமாகத்தான் இருக்கும் என்பதை வலியுறுத்திச் சொல்லி இந்த வாய்ப்பைத் தந்த தங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

புதுக்கோட்டை மாவட்டம், விவசாயத்துக்கான நீர்ப்பாசன வசதியை அதிகரிக்க காவேரி, வைகை, குண்டாறு பாசனக் கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். விவசாயத்துக்கான நீராதாரத்தைப் பெருக்கும்வண்ணம் காவேரி கொள்ளிடம் உபரி நீர் கால்வாய்த் திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

நிலத்தடி நீர் அதல பாதாளத்திற்குச் சென்றுவிட்ட சூழ்நிலையில் குடிநீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்காக புதிய திட்டங்களை அறிவிக்க வேண்டும். கடற்கரைப் பகுதியில் உள்ள கோட்டைப்பட்டினம், மணமேல்குடி பகுதியில் கடல்நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம் குறித்து அறிவிக்க வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அரசு ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள கட்டடங்களைப் பழுது பார்ப்பதற்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

[திரு. எஸ். ரகுபதி] [2018 மார்ச் 19

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசுப் பள்ளிகளுக்குப் போதிய இடவசதி இல்லாததைக் கருத்தில்கொண்டு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மாநில நெடுஞ் சாலைகள், மாவட்டச் சாலைகள், மாவட்ட பிற சாலைகள் ஆகியவை பல்லாண்டு காலமாக புதுப்பிக்கப்படாமல் உள்ளன. இச்சாலைகளைப் புதுப்பிப்பதற்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மின்தடையை சரிசெய்யும் வண்ணம் போதிய மின்மாற்றிகளை வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஒவ்வோர் ஊராட்சிக்கும் உரிய நிதியை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஏரி, குளம், கண்மாய்களைத் தூர் வார நடவடிக்கை எடுக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். கிராம ஊராட்சிக் கட்டடமான சேவை மையம் கட்டப்பட்டு, திறக்கப்படாமல் உள்ளதைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி மற்றும் இலுப்பூர் பேரூராட்சிகளை நகராட்சிகளாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டம், திருவப்பூர் ரயில்வே கேட் மற்றும் ஐ.டி.ஐ. ரயில்வே கேட் ஆகிய பகுதிகளில் மேம்பாலம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். புதுக்கோட்டை மாவட்டம், சுற்றுலாத் தலங்களான திருமயம், சித்தன்னவாசல், ஆவுடையார்கோவில், விராலிமலை ஆகிய பகுதிகளில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேம்படுத்த வேண்டும். புதுக்கோட்டை மாவட்டம், திருமயம், கந்தர்வக்கோட்டை, ஆலங்குடி, மணமேல்குடி, ஆவுடையார்கோவில், கொத்தமங்கலம், வடகாடு, வடவாளம் ஆகிய ஊராட்சிகளை பேரூராட்சிகளாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதிக்குத் தனியாக உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டம், அரிமளத்தில் பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதிக்குட்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கு போதிய நிதி ஒதுக்கீடு



2018 மார்ச் 19] [திரு. எஸ். ரகுபதி]

செய்யப்பட வேண்டும். புதுக்கோட்டை மாவட்டம், அரசு மருத்துவக் கல்லூரியில் நகர்ப்புற சுகாதார மையம் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருமயம் தொகுதி, அரசு புறம்போக்கு நிலங்களில் பல்லாண்டு காலமாக வசித்து வருகிற மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். திருமயம் தொகுதி, பல்வேறு வழித்தடங்களில் நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்கியும், பழுதடைந்த பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை இயக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

திருமயம் தொகுதிக்குட்பட்ட பொன்னமராவதி பேருந்து நிலையத்தை இட நெருக்கடி காரணமாக விரிவுபடுத்துவது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். திருமயம் தொகுதிக்குட்பட்ட பொன்னமராவதி மையப்பகுதியில் கொட்டப்படுகின்ற குப்பைகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். திருமயம் தொகுதிக்குட்பட்ட பொன்னமராவதி, அமரகண்டான் ஊரணி கரையைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் எழுப்பி நடைபாதைத் தளம் அமைத்து, நடைப்பயிற்சிக்கு உதவுவதற்கு தகுந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

திருமயம் சத்தியமூர்த்தி பெருமாள் திருமெய்யர் சத்தியகிரீஸ்வரர் ஆலய குடமுழுக்கு விழாவினை நடத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டத்தை இலுப்பூர் வருவாய் கோட்டத்தோடு இணைத்ததை மறுபரிசீலனை செய்து புதுக்கோட்டை வருவாய் கோட்டத்தோடு இணைக்க வேண்டும். அரிமளத்தை தனி வட்டமாக அறிவிக்க வேண்டும்.

பொன்னமராவதி வட்டம், திருக்களம்பூர், நல்லூர், திருமயம் வட்டம், லெம்பலக்குடி ஆகிய இடங்களிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தித் தர உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். திருமயம் சட்டமன்றத் தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினையை சமாளிக்க காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைந்து செயல்படுத்தவும், தற்போதைய வறட்சியை சமாளிக்கவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

[திரு. எஸ். ரகுபதி] [2018 மார்ச் 19

திருமயம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஆயிரக்கணக்கானவர்களுக்கு நியாய விலை அட்டை வழங்க போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். திருமயம் சட்டமன்றத் தொகுதியில் தமிழக அரசின் முதியோர் உதவித் தொகையினை ஏற்கெனவே வழங்கப்பட்ட அனைவருக்கும் மீண்டும் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சட்டமன்றத் தொகுதியில் மனு செய்து ரேஷன் அட்டை கிடைக்கப் பெறாதவர்களுக்கு ரேஷன் அட்டை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். திருமயத்திலிருந்து சென்னைக்கு நேரடியாக இயங்கிவந்த அரசுப் பேருந்தினை மீண்டும் இயக்க வேண்டும்.

பொன்னமராவதி வீட்டு வசதி வாரிய குடியிருப்புப் பகுதியில் சாலை வசதி, குடிநீர் வசதி, மின் வசதி போன்றவற்றை பொன்னமராவதி பேரூராட்சி நிருவாகம் ஏற்பாடு செய்ய உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *20–3–2018* (செவ்வாய்க்கிழமை), காலை *10–00* மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 3–36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*14. 2018–2019 ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரை மற்றும் வரவு–செலவுத் திட்ட வெளியீடு எண்கள் 56 முதல் 59 வரை (58 புத்தகங்கள்).*

*15. 2018–2019 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள்.*

*16. 2018–2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை.*



2018 மார்ச் 19]

*17. 2018–2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு–பகுதி–I.*

*18. 2018–2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு–பகுதி–II.*

*19. 2018–2019 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.*

*20. 2018–2019 ஆம் ஆண்டிற்கான நலத் திட்டச் செலவினங்கள் குறித்த அறிக்கை.*

*21. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு புதுமை முயற்சிகளின்கீழ் புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி–II திட்டங்கள்).*

*22. 2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.*

*23. வரவு–செலவுத் திட்ட விளக்க நூல், 2018–2019.*

*24. 2018–2019 ஆம் ஆண்டு செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.*

*25. 2018–2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*26. அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2016–2018)*

*27. அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கை. (2016–2018)*

- - -